1223

Tamil Nadu Legislative
Assembly Debates.
Official report,

V 8. No. 2. 7th April 1989

144821

வெளியீடு 14-9-1989 Issued 14-9-1989

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 7, 1989—தொகுதி 8—எண் 2
Friday, the 7th April, 1989—Volume 8-No. 2

**சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009**
**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras-600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

## உள்ளடக்கம்.

**7—4—1989**


பக்கங்கள்.

1. வினாக்கள்-விடைகள்.—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 157—184

2. தகவல் கோரல்——

(அ) வீட்டு வசதி வாரிய மனைகள் ஒதுக்கீடு பற்றி எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அளித்த தன்னிலை விளக்கம் குறித்து.. 185—186

(ஆ) சென்னை உயர்நீதி மன்றத்திற்கு நீதிபதிகள் நியமனம் செய்தல் குறித்து 186—192

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் .. .. .. 193

(ஈ) பேரவை ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துதல் பற்றிய மரபு .. .. 193—200

3. கவன ஈர்ப்பு—

(அ) இராமேஸ்வரத்திலுள்ள அன்னை இந்திரா பாலத்தைப் பயன்படுத்தும் வாகன உரிமையாளர்களிடமிருந்து கட்டணம் வசூல் .. .. .. 194—198

(ஆ) சிறிய அரிசி ஆலைகளுக்கு உரிமம் வழங்கும் அதிகாரத்தை மாவட்ட அதிகாரிகளுக்கு வழங்குதல் .. .. 198—200

4. மானியக் கோரிக்கைகள்—1989-90.—
விவாதமும் வாக்கெடுப்பும்.—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 17—கல்வி .. .. 200—278

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் .. 200, 201, 220, 221, 225, 229, 239, 241, 243, 249, 250, 254, 255, 266, 267

*பேராசிரியர் க. பொன்னுசாமி .. . 202—214

*திரு. கே. அண்ணாதுரை .. .. .. 214—220

திரு. [illegible] ஆர். பாலசுப்பிரமணியம் .. 221—231, 232—233

| | பக்கங்கள் |
|---|---|
| திரு. ந. இராமச்சந்திரன் .. .. | 234—239 |
| *திரு. சி. கோவிந்தராஜன்.. .. .. | 241—251 |
| *திரு. சோ. அழகர்சாமி .. .. .. | 251—259 |
| திரு. த. ஆறுமுகம் .. .. .. | 259—262 |
| திரு. கே. ஏ. செங்கோட்டையன் .. | 263—268 |
| *திரு. எச். எம். ராஜு .. .. .. | 268—274 |
| திரு. ஆ. அதியமான் .. .. .. | 274—278 |
| 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். .. | 279 |


144831

D

V2'',31 (...)

N89.2

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989 ஏப்ரல் 7, வெள்ளிக்கிழமை

பங்குனி 25, விபவ—திருவள்ளுவர் ஆண்டு 2020

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.''

கல்வியானது கேடு என்பதை அறவே தாராத விழுமிய செல்வமாகும். இந்தக் கல்விச் செல்வத்தோடு ஒப்பிடும்போது ஏனைய எவையும் செல்வங்களாக மாட்டா.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண். 38 இறுதியாக எடுத்துக்கொள்ளப்பெறும்.

ஓட்டல் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்துதல்

39—(*வினா எண் 10) திரு. என். பழனிவேல் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓட்டல் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஓட்டல் உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளோடு அரசு பேச்சு வார்த்தை நடத்தியதில், மக்கள் விரும்பிச் சாப்பிடும் உணவுப் பண்டங்களின் விலைகளைக் குறைக்க, சங்கப் பிரதிநிதிகள் ஒப்புக்கொண்டனர். அப்போது விலைக் குறைப்பு என்று கூறிவிட்டு உணவுப் பண்டங்களின் தரத்தையோ, அளவையோ குறைக்கக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 8

[1989 ஏப்ரல் 7

சதவீதம் முதல் 28 சதவீதம் வரை விலைக் குறைப்புச் செய்யப் பட்டுள்ளது. இதுகுறித்து 28—2—89ஆம் நாளன்று பத்திரிகைச் செய்தி ஒன்றும் முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டல் பண்டங்களின் விலையைக் குறைப்பது சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஓட்டல் பிரதிநிதிகளோடு பேசி சுமார் 8 சதவீதம் முதல் 28 சதவிகிதம் வரை விலையைக் குறைக்க ஒத்துக் கொண்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இங்கே நடைமுறையைப் பார்த்தால் அவர்கள் எதையும் குறைத்ததாகத் தெரியவில்லை. இப்போது கூட நாங்கள் இங்கே ஓட்டல்களில் சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறோம். எந்த ஓட்டலிலும் அந்த மாதிரி விலையைக் குறைத்ததாகத் தெரியவில்லை. இன்னும் சொல்லப்போனால் ஓட்டல் அதிபர்கள் * * * * * * கொண்டிருப்பதைப் போல் தெரிகிறது. அந்த அளவுக்கு இன்றைக்கு அவர்கள் உற்பத்தி செய்கிற பொருளுக்கும்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திரவிடுகிறேன். அருள்கூர்ந்து இந்த அவைக்குப் பொருத்தமான, நாகரீகமான சொற்களாலேயே பிறரைத் தாக்கலாம். அதற்கு வசதி இருக்கிறது.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பண்டங்களை உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களின் விலைக்கும், அவர்கள் வினியோகிக்கக்கூடிய பொருள்களின் விலைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை....

(திரு. ஒய். வெங்கடேஸ்வரதீட்சிதர் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஐயா, வினா நேரத்தின் போது எழுந்திருக்கக்கூடாது ஐயா, மரபு ஐயா அது.

திரு. என். பழனிவேல் : ஆகவே கறாராக அவர்களைக் கூப்பிட்டு வைத்து விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1989 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஓட்டல்களில் நட்சத்திர ஓட்டல்கள் என்ற ஒரு குரூப் இருக்கிறது. அதைப் போலவே ஏ, பி, சி என்று 3 வகையான ஓட்டல்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த 3 குரூப் ஓட்டல்களின் உரிமையாளர்களையும் சந்தித்து பலமுறை பேசி 'சி' குரூப்பிலே 2 இட்லி ஒரு ரூபாய் என்று இருந்ததை 80 பைசாவாகவும், மெதுவடை 1 ரூபாய் என்று இருந்ததை 80 பைசாவாகவும், பொங்கல் 2.00 ரூபாய் என்று இருந்ததை ரூ. 1.60 ஆகவும், உப்புமா ரூ. 1.60 என்று இருந்ததை ரூ. 1.25 ஆகவும், சாதா தோசை ரூ. 1.75 என்று இருந்ததை ரூ. 1.50 ஆகவும், காப்பி ரூ. 1.00 என்று இருந்ததை 90 பைசா ஆகவும், அளவு சாப்பாடு 4 ரூபாய் 75 பைசா என்று இருந்ததை 4 ரூபாய் ஆகவும் குறைத்து இருக்கிறார்கள். 'பி' குரூப்பிலும் அதைப்போலவே குறைத்து இருக்கிறார்கள். 'ஏ' குரூப்பிலும் அந்த மாதிரி குறைத்து இருக்கிறார்கள். ஏ, பி, சி. மூன்றிலும் இப்படிக் குறைத்து இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா நேரம் நடைபெறும்போது எந்த உறுப்பினரும் தன்னுடைய இருக்கையை விட்டு எழுந்து வரக்கூடாது என்பதை முதலில் திரு. ஏ. எம். இராமசாமி அவர்களுக்குச் சொல்லவேண்டும்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படி விலையைக் குறைக்கவில்லை என்று எங்கேயாவது குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். ஏன் என்றால் ஓட்டல் சங்கத்தினுடைய நிர்வாகத்தினர்கள் அரசிடத்தில் எழுத்துமூலமாக எழுதி கொடுத்து இருக்கிறார்கள்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் ஒரு சில பொருட்களின் விலைப்பட்டியலை மட்டும் சொன்னார்கள். ஓட்டல்களில் இன்றைக்கு மிக அதிகமான அளவில் 30, 35 வகையான உபயோகப் பண்டங்கள் அங்கே இருக்கிறது. அதில் ஏதோ ஒன்று இரண்டு இட்லி, தோசையை மட்டும் சொல்லிவிட்டு மற்றப் பொருட்களின் விலையை அவர்கள் 2 பங்கு கூட்டிவிடுகிறார்கள். ஆகவே இது சம்பந்தமாக அரசு மீண்டும் அவர்களோடு பரிசீலித்து எல்லாப் பொருட்களுக்கும் ஒரு விலையை நிர்ணயம் செய்து விலைப் பட்டியலை ஒவ்வொரு ஓட்டலிலும் எல்லோருக்கும் தெரியும்படி அங்கே வைக்கவேண்டும் என்று சொல்லி ஆணையிடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டல்களிலே தயாராகும் எல்லாப் பொருள்களுடைய விலையையும் குறைக்கவேண்டுமென்று

நாம் சொல்ல முடியாது. அத்தியாவசியமான உணவுப் பண்டங்கள், பொதுவாக, காலையிலே இட்லி, வடை, தோசை, உப்புமா, பொங்கல்—இவைகளைத்தான் பெரும்பாலானவர்கள் உண்கிறார்கள். எனவே அவைகளுடைய விலையைக் குறைக்க வேண்டுமென்று அரசாங்கம் முயற்சி எடுத்தது. ஓரளவிற்கு வெற்றியும் கண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விலைப் பட்டியல் போடவேண்டுமென்று சொன்னார்கள். கண்டிப்பாக எல்லா ஓட்டல்களிலேயும் எல்லாப் பண்டங்களினுடைய விலைப் பட்டியலைப் போடவேண்டுமென்று ஏற்கனவே அரசு உத்தரவு பிறப்பித்து இருக்கிறது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் ஓட்டல்களிலே விலையைக் குறைப்பதற்கு ஏதேனும் மானியமாக விலையைக் குறைத்து பொருள்களை அரசு மூலம் வினியோகிக்கப்படுகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடந்த 3 ஆண்டுக் காலத்தில் ஓட்டல் அதிபர்கள் பண்டங்களினுடைய விலையை இரண்டு மடங்காக ஏற்றியிருந்தார்கள். அது உண்மையிலேயே வரவேற்கத் தக்கதல்ல. ஓட்டல்களை ஏழை எளியவர்கள் அதிகமாக நம்பி வாழ்கிறார்கள். எனவே, அவர்களுடைய நன்மையைக் கருதி இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டவுடனே, ஓட்டல் உரிமையாளர்களை அழைத்து, விலைகளைக் குறைக்க வேண்டுமென்று சொன்னபோதுதான் 8 சதவீதத்திலேயிருந்து 28 சதவீதம் வரையில் குறைத்து இருக்கிறார்கள். குறிப்பாக, சாப்பாடு ஏ, பி, சி—எந்த குரூப்பாக இருந்தாலும் 0.50 பைசா விலை குறைக்கப்பட்டிருக்கிறது. அது தொழிலாளர்கள் மத்தியிலே வரவேற்கப்பட்டிருக்கிறது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஓட்டல் பண்டங்களுடைய விலை நிர்ணயம் செய்த பிறகு ஏற்கெனவே இதைவிடக் குறைவாகக் கொடுத்துக் கொண்டிருந்த சில ஓட்டல்களிலே விலையை நாம் நிர்ணயித்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள். மதுரையிலே இரண்டு ஓட்டல்களிலே இதை நேரிலேயே பார்க்கின்ற வாய்ப்பு கிடைத்தது. அதையும் அரசாங்கம் ஏதாவது ஒரு வகையிலே மக்கள் நன்மை பெறுகின்ற வகையிலே கட்டுப்படுத்துமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன மூன்று வகையான ஓட்டல்களைத் தவிர, இதர ஓட்டல்களும், குறிப்பாக கிராமப் பகுதிகளிலேயுள்ள தண்ணீர்ப் பந்தல் போன்ற ஓட்டல்களும் நடந்து வருகின்றன. அந்த ஓட்டல்களில் எல்லாம் ஏற்கெனவே என்ன விலைக்கு பண்டங்களை விற்றுக் கொண்டிருக்கிறார்களோ அதைவிட அதிகப்படுத்தக் கூடாது என்றும்



கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிடுவதைப் போல எங்கேயாவது குறிப்பிட்ட புகார்கள் இருக்குமானால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. வி. கே. [illegible] : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் விலையை நிர்ணயம் செய்திருப்பதைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இட்லி விலை, சாப்பாடு விலையெல்லாம் குறைக்கப்பட்டிருக்கிறது. வரி உயர்த்தப்பட்ட ஓட்டல்களிலே, நான் கோவையிலே இரண்டு தினங்களுக்கு முன்பு சாப்பிட்ட நேரத்தில் 8 ரூபாயாக இருந்த உணவின் விலை 10 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். 0.75 பைசாவுக்கு விற்கப்பட்ட இட்லி விலையை 1¼ ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். நானே பில் வாங்கி சாப்பிட்டுவிட்டு வந்திருக்கிறேன். எனவே, அந்த ஓட்டல்களுக்கு எந்த அளவிற்கு விலைகளை நிர்ணயிப்பார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற ஓட்டல் ஸ்டார் ஓட்டலா என்பது எனக்குத் தெரியாது. சாதாரண ஓட்டல்களைப் போன்று, நான் சொன்ன ஏ, பி, சி. குரூப்பிலே—உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ஓட்டல் வருமானால் நிச்சயமாக அவர்கள் அப்படி விலையை உயர்த்தியிருப்பார்களானால்—அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கும். வரி போட்டிருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம் நடைபெற்றபோது பதில் அளிக்கின்ற நேரத்தில் 5 சதவீதம் வரி அல்லது காம்பௌண்டிங் இரண்டில் எதை ஓட்டல் உரிமையாளர்கள் விரும்புகிறார்களோ அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளலாம் என்று அறிவித்து இருக்கிறார்கள். எனவே அரசுக்கு இப்படிப்பட்ட புகார்கள் வருமானால் அதைப் பற்றியும் பரிசீலிக்கும்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஓட்டல் சொந்தக்காரர்களை அழைத்து, அவர்களுடன் பேசி சாதாரண மக்கள் உண்ணும்படியான பல்வேறு உணவுப் பண்டங்களின் விலையைக் குறைத்திருப்பது என்பது ஒரு நல்ல நடவடிக்கையாகும். ஆனால் இந்த விலையை மேற்கொண்டு சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் அவர்கள் ஏற்றிக் கொண்டே போகிறார்கள். பல சந்தர்ப்பங்களில் இப்படி அவர்களைக் கூப்பிட்டுப் பேசுவதும், விலையைக் குறைப்பதும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அப்புறம் விலை ஏறிவிடும். ஆகவே விலையை இனிமேல் ஏற்றுவது

என்று சொன்னால், அரசாங்கத்தோடு கலந்து
தான் விலையை ஏற்ற வேண்டுமென்பதற்கான ஒரு ஏற்பாட்டை
அரசு செய்ய வேண்டியது மிக மிக அவசியம்.
மாவட்டங்களிலுள்ள மாவட்ட ஆட்சித்தலைவர்களுடைய
பாட்டின்படி அரசு ஒரு குழுவை ஏற்பாடு செய்து
மாதிரியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்வருமா
அறிய விரும்புகிறேன்.

பேசித்
அந்தந்த
ஏற்
இந்த
என்று

மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது
துறையிலேயிருந்து மாவட்டங்களிலேயுள்ள உணவுத்
உரிமையாளர்களுடன் மாவட்ட ஆட்சித் ஓட்டல்
கலந்து பேசி இந்த விலைகளைச் கட்டுப்படுத்துவதற்கான தலைவர்களே
நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று
உத்தரவு பிறப்பித்து இருக்கிறது. அரசாங்கம்
அவர்கள் சொன்னதைப் போல மாண்புமிகு உறுப்பினர்
போது எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை நடத்திய
போது, சில குறிப்பிட்ட பண்டங்கள் விலையை உயர்த்தும்
இருந்தால் காரணங்களினால் உயர்த்துவதாக
கூடாது என்று அரசாங்கத்தோடு கலந்து பேசாமல் உயர்த்தக்
யாளர்கள் சொல்வதெல்லாம் பேசப்பட்டது. ஆனால் ஓட்டல் உரிமை
மார்க்கெட்டில் அதிக பல பொருள்கள் வெளி
விலையை உயர்த்துவது விலைக்கு விற்கப்படுகிறது. எனவே
சொல்கிறார்கள். எது எப்படி இன்றியமையாதது
நடத்துகிறவர்களுக்கு ஏதாவது இருந்தாலும் என்று
வேண்டுமென்றால் நாங்கள் உதவி அரசாங்கம் ஓட்டல்
என்றும் சொல்லியிருக்கிறோம். பரிசீலனை செய்ய
தந்திருக்கிறார்கள் உயர்த்த அவர்கள் செய்கிறோம்
மீறி உயர்த்தினால் அரசாங்கம் மாட்டோம் என்று. வாக்குறுதி
நடவடிக்கை எடுக்கும். அதையும்

(முற்பகல் 9.10)

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, சென்னையில் பெரும்பாலான ஓட்டல்களில் சுகாதாரக்
கேடுபாடுகள் அதிகமாக உள்ளன. அது மட்டுமல்லாமல்
“ஈட்டிங் லைசென்ஸ்” இல்லாமலே பெரும்பாலான
ஓட்டல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இது அரசுக்குத்
தெரியுமா? அப்படியானால் அது பற்றி அரசாங்கம்
நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி : தலைவரவர்
களே, ஒருசில இடங்களில் ஓட்டல் உரிமையாளர்கள்
அப்படி நடத்துவது அரசாங்கத்தின் கவனத்திற்கும்
வந்திருக்கிறது. சென்னை மாநகராட்சி ஆணையாளர்
அதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்.



திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஓட்டல் பண்டங்கள் விலையைக்
குறைப்பது சம்பந்தமாக ஏற்கெனவே நடவடிக்கை
எடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இப்போது காலை
டிபன் சாப்பிட 6 ரூபாயும், மதியம் உணவு சாப்பிட
8 ரூபாயும் ஆகிறது. அரசாங்கம் போட்ட வரியின்
காரணமாக 30 பைசா, 40 பைசா ஒவ்வொரு பொருளின்
மீதும் கூடிவிட்டது. வரி போட்டதினால் விலையே
உயர்த்தக்கூடாது என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த
விலையைக் குறைத்து, இன்ன விலைக்குத்தான் விற்க
வேண்டுமென்று சொல்ல அரசாங்கத்திற்கு அதிகாரம்
இருக்கிறதா? இந்த குறிப்பிட்ட இலாபத்தில் தான்
பொருள்களை விற்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்து,
அரசாங்கம் ஆணை பிறப்பிக்க முடியுமா? அது மட்டு
மல்லாமல், அரசாங்கமே ‘மாடல் ஓட்டல்களை,’ நடத்தி,
குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் நம்முடைய
ஆஸ்டல் இருக்கிறது; அதைப் போன்று வேறு இடங்கள்
இருக்கின்றன; அங்கே எல்லாம் மாதிரி ஓட்டல்களை
நடத்தி, இப்படி குறைந்த இலாபத்தில் மக்களுக்கு உணவு,
டிபன் சப்ளை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி : தலைவரவர்
களே, காலையிலே டிபன் சாப்பிட 6 ரூபாயும், உணவு
சாப்பிட 8 ரூபாயும் ஆகிறது என்று மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது சாப்பிடுகிறவர்
களைப் பொறுத்தது. என்னைப் பொறுத்தவரையில்
இரண்டு இட்லி, ஒரு வடை—மூன்று ரூபாயோடு முடிந்து
விடுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சாப்பிடுகிற
அளவைப் பொறுத்துதான் விலை இருக்கிறது. 6 ரூபாய்
முதல் 8 ரூபாய் வரை என்பது அவரவர் சாப்பிடுகிற
உணவைப் பொறுத்தது. அடுத்து அரசாங்கம் ஓட்டல்
நடத்தி, விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்குமா
என்று கேட்டார்கள். ஏற்கெனவே ‘டூரிசம் டிபார்ட்மென்ட்’
பல இடங்களில் ஓட்டல்களை நடத்தி வருகிறது.
அரசாங்கத்திற்கு நிறைய வேலை இருப்பதால், ஓட்டல்
நடத்துவதில் இப்போது கவனம் செலுத்தவில்லை.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஓட்டல், பண்டங்களின் விலை உயருவதற்குக்
காரணம் இன்றைக்கு இருக்கிற அத்தியாவசியப் பொருள்
களுடைய விலை ஏற்றமே என்று ஓட்டல் அதிபர்கள் கூறு
கிறார்கள். இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்
கள் கோழித் தீவனம், மாட்டுத் தீவனம் போன்றவற்றிற்கு
வரிவிலக்கு அளித்ததால் 60 பைசா முட்டை 35 பைசாவுக்குக்
கிடைக்கிறது. அதைப்போன்று மிளகாய், மல்லி போன்ற

பொருள்களுக்கு வரி விலக்கு அளித்தால் விலைவாசி நிச்சயமாகக் குறைய நல்ல சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அரசு இதைக் கவனித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஓட்டல் உரிமையாளர்களின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய இந்த வினாவை அரசு பரிசீலிக்கும்.

திரு. எஸ். ஆர்.. பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டல் பண்டங்களின் விலை குறைக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில ஓட்டல்களில் காப்பி ஒரு ரூபாய், ஸ்பெஷல் காப்பி ரூ. 1.30 என்று பல இடங்களில் விலைப் பட்டியல் போட்டிருக்கிறார்கள். உள்ளே போய் சாப்பிட்டுவிட்டு வந்தால் பில் ரூ. 1.30 போடுகிறார்கள். கேட்டால் ஸ்பெஷல் காப்பி என்கிறார்கள். நான் சாதாரண காப்பிதானே கேட்டேன் என்றால், சாதாரண காப்பி இல்லை என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட ஓட்டல்கள் மீது நடவடிக்கை எடுத்து குறிப்பிட்ட விலைக்குத் தர ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பார்த்தவுடனே ஸ்பெஷலாக காபி போட வேண்டுமென்று ஹோட்டல் முதலாளிகள் நினைத்து இருக்கக்கூடும். (சிரிப்பு) இருந்தாலும் இந்தக் கேள்வியின் மூலமாக தமிழ்நாட்டில் ஹோட்டல் நடத்துகிறவர்கள் சாதாரண காபி இல்லை என்று யாருக்காவது சொன்னால், நிச்சயமாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விலைக் கட்டுப்பாடு அசைவ ஹோட்டல்களைக் கட்டுப்படுத்துமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பெரும்பாலும் காலையிலே சிற்றுண்டி சாப்பிடுகிறவர்கள் எல்லாம் சைவமே சாப்பிடுகிறார்கள். அசைவம் சாப்பிடக்கூடியவர்கள் கூட காலையிலே யாரும் ஒரு சூப்போ, பிரியாணியோ சாப்பிடுவதில்லை. இருந்தாலும் அசைவ ஹோட்டல்களிலே விலையைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அதற்குக் காரணம் பல சிக்கல்கள் இருக்கின்றன. கோழி ஒரு நாளைக்கு ஒரு விலை விற்கிறது ; ஆட்டின் விலை இன்றிருப்பதுபோல் நாளை இருப்பதில்லை.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே சிக்கல்களும் இருக்கின்றன ; சிக்கன்களும் இருக்கின்றன. (சிரிப்பு)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : எனவே இரண்டும் இருக்கின்ற காரணத்தால் அரசாங்கம் பரிசீலிக்க வில்லை. (சிரிப்பு).

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைவ உணவில் கவனம் செலுத்துகிற உணவு அமைச்சர் அசைவ உணவில் அதிகமாகக் கவனம் செலுத்தாமல் இருப்பதற்கு அவர் ஒரு சைவர் என்பதுதான் காரணமா ? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : : தலைவர் அவர்களே, நான் சைவமாக இருந்தாலும் அமைச்சரவையில் இருக்கக்கூடிய அத்தனைபேரும் அசைவமாக இருக்கக்கூடிய காரணத்தால் அரசாங்கம் அதையும் பரிசீலிக்கும். (சிரிப்பு) ஆனால் அதில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதால் அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

மதுரா கிராமங்களுக்கு நியாய விலைக் கடைகள் திறத்தல்.

40.—(*வினா எண். 136.) திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ரெவின்யூ கிராமங்களுக்கு ஓர் நியாய விலைக்கடை என்கிற முறையை மாற்றி, மதுரா கிராமங்களுக்கும் (உட்கடை கிராமம்) ஜனத்தொகை 200 என்கிற அடிப்படையில் புதிய நியாயவிலைக் கடைகளை திறக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தற்போது சாத்தியமில்லை.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ரெவின்யூ கிராமங்களில் வைத்திருக்கிற கடைகளுக்குச் செல்ல வேண்டுமென்றால், அந்த ரெவின்யூ கிராமங்கள் உள்ளடக்கிய இதர கிராமங்களைச் சேர்ந்தவர்கள் நான்கைந்து கிலோ மீட்டர் தூரத்திற்கு நடந்து சென்றுதான் வாங்குகிற நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அரசு இந்த நியாய விலைக் கடைகளில் ஒட்டுமொத்தமாகப் பொருட்களைக் கொடுக்கவேண்டுமென்று சொன்னாலும்கூட நான்கைந்து கிலோ மீட்டர் தூரம் சென்று வாங்குவதை மாற்றுகின்ற வகையில் 200 ரேஷன் கார்டுகளுக்கு ஒரு நியாய விலைக் கடை திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1989 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்போதே 21,134 ரேஷன் கடைகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. பொதுவாக மூன்று கிலோ மீட்டருக்கு அதிகமாக ஏதாவது ஒரு ஊர் இருக்குமேயானால், அங்கே புதிதாக ஒரு ரேஷன் கடை திறப்பதற்கான வழிமுறைகள் இப்போதே இருக்கின்றன. ஆனால் ஒரு ரேஷன் கடையை அனுமதித்தாலே, அதாவது பார்ட் டைம் ரேஷன் கடையை அனுமதித்தால் அரசாங்கம் 2,700 ரூபாய் மானியம் கொடுக்க வேண்டியிருக்கிறது. முழு நேரக் கடையாக இருந்தால் 4,200 ரூபாய் மானியம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்படி இந்தக் கடைகளை நடத்துவதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 5 கோடி ரூபாய் மானியமாக அரசாங்கம் வழங்கிக் கொண்டிருக்கிறது. எனவே தற்போதுள்ள நிதிநிலைமையில் மேலும் புதிய ரேஷன் கடைகளைத் தொடங்குவது என்பது இயலாத ஒன்றாக இருக்கிறது.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 கிலோ மீட்டருக்கு அதிகமாக இருந்தால் ஒரு நியாய விலைக் கடை திறப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் எனது தொகுதியில் மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் பல இடங்களில் இரண்டு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு நியாய விலைக் கடை என்ற நிலைமை இருக்கிறது. அரசு அதைப் பரிசீலித்து 500 ரேஷன் கார்டுகளுக்கு ஒரு கடை திறக்குமா ? அதற்கு அரசு உத்தரவு வழங்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஒரு கடைக்கு எத்தனை ரேஷன் கார்டுகள் என்று அரசு பார்ப்பதில்லை. மக்களின் வசதியைப் பொறுத்தவரையில் ரேஷன் கடைகள் திறக்கப்படுகின்றன. உதாரணமாக 100 கார்டுகள் வைத்திருக்கக்கூடிய நிலையில் 739 ரேஷன் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. 100 கார்டிலேயிருந்து 200 கார்டுகள் வைத்திருக்கக்கூடிய நிலையில் 2,514 ரேஷன் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. 201-லேயிருந்து 300 ரேஷன் கார்டுகள் வைத்திருக்கின்ற நிலையில் 4,937 ரேஷன் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இப்படி 100 ரேஷன் கார்டிலேயிருந்து 2,500 ரேஷன் கார்டுகள் வரையில் ஆங்காங்கே உள்ள நிலைமைகளுக்கேற்ப கடைகள் திறக்கப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 9-20)

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட கார்டுகள் உள்ள கிராமங்களிலும் ஒரு கடைதான் திறக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி அதிகமான கார்டுகள் இருக்கக்கூடிய இடங்களில், இன்னும் அதிகமான கடைகளைத் திறக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ? ஒரு கார்டுக்கு



1989 ஏப்ரல் 7]

கிராமங்களிலே சர்க்கரை எத்தனை கிலோ வழங்கப்படுகிறது ? மத்திய சர்க்காரிலிருந்து நம் மாநிலத்திற்கு எவ்வளவு சர்க்கரை மாதத்திற்கு அனுமதிக்கிறார்கள் என்பதை தங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாயிரத்திற்கும் அதிகமான கார்டுகள் உள்ள கடைகளே, மொத்தமே தமிழ்நாட்டில் 17 கடைகள் தான். அதையும் அரசாங்கம் இப்போது ஆயிரம் கார்டுகள் உள்ள கடைகளாகப் பிரிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறது. சர்க்கரை மத்திய அரசாங்கம் வழங்குவது பற்றி கேட்டார்கள். 22,500 டன் மாதம் ஒன்றுக்கு மத்திய அரசாங்கம் நமக்கு லெவி சர்க்கரை கொடுக்கிறது. ஆனால் ஒரு கார்டுக்கு ஒரு குடும்பத்திலே ஒருவருக்கு 425 கிராம் சர்க்கரைதான் வழங்க வேண்டுமென்று மத்திய அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது. நாம் 500 கிராமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதனாலே நம்முடைய அரசைப் பொறுத்த வரையில் சர்க்கரைப் பற்றாக் குறை இருக்கிறது. மத்திய அமைச்சர் அவர்களிடத்திலே வற்புறுத்தியிருக்கிறோம். ஆனால் அவர்கள் இந்தியா முழுவதும் ஒரே கொள்கைதான் கடைபிடிக்கப்படுகிறது, உங்களை யார் 425 கிராம் என்று கொடுப்பதற்குப் பதிலாக 500 கிராம் என்று கொடுக்கச் சொன்னது, முடியாது என்று சொல்லி இருக்கிறார்கள். இருந்தாலும் டெல்லி பட்டினத்திலே இருக்கக் கூடியவர்களுக்கு 800 கிராம் கொடுக்கிறார்கள். அதைச் சுட்டிக் காட்டி தமிழ் நாட்டிலே 500 கிராமாவது வழங்க வேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்திக் கொண்டு இருக்கிறது.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல கிராமங்களில் 5 கிலோ மீட்டர், 6 கிலோ மீட்டர் தூரம் சென்று ரேஷன் வாங்குகின்ற நிலைமைகள் இருக்கின்றன. அதை மாற்றி கிராமப் புறத்திலே இருக்கக்கூடிய ஏழை விவசாயிகளுக்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கக்கூடிய இடங்களில் வேறு ஒரு ரேஷன் கடையை வைக்க வேண்டும் என்று எங்களிடத்திலே சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அந்த வகையில் ஏழையெளிய விவசாயிகளுக்கும் அரிஜனங்களுக்கும் தொந்தரவு இல்லாத வகையில் 2 கிலோ மீட்டர் தூரத்திலேயாவது ரேஷன் கடைகளை அமைத்து அவர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். இப்போதைய நிதிநிலைமையில் மேலும் புதிய ரேஷன் கடைகளை அதிகமாகத் திறப்பதற்கு வாய்ப்பு இல்லை.

ஆனால் எங்கேயாவது ஓடை, மலைகள், நதிகள் போன்ற இயற்கைத் தடைகள் இருக்குமானால், அந்த இடங்களிலே புதிய ரேஷன் கடைகளைத் தொடங்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கும்.

திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகமான நியாய விலைக் கடைகள் திறப்பதற்கு பொருளாதாரம் இடம் கொடுக்காத காரணத்தினாலே திறக்க வாய்ப்பு இல்லை என்று தெரிவித்தார்கள். ஒவ்வொரு ரேஷன் கடையும் 4, 5 பஞ்சாயத்துக்கள் கொண்ட ஒரு கடையாக இருக்கிறது. அதே கடையிலே 'சர்வீஸ் செண்டர்' என்ற முறையில் ஒரு நாளைக்கு ஒரு கிராமத்திற்கு அல்லது பஞ்சாயத்துக்கு என்பதை, அதே சிப்பந்திகளை வைத்து அந்த உணவு விநியோகம் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதைக்கு இயலாது.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருப்பதைவிட அதிகமான கடைகளைத் திறப்பதற்கு இப்போது வாய்ப்பில்லை, சாத்தியம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நகரங்களில் இருக்கக் கூடிய கூட்டுறவுக் கடைகள் எல்லாம் முழு நேரக் கடைகளாக இருக்கின்றன. கிராமங்களில் இருக்கக் கூடிய கூட்டுறவுக் கடைகள் எல்லாம் பகுதி நேரக் கடைகளாக இருக்கின்றன. எனவே, புதிய கடைகள் திறக்கா விட்டாலும், கிராமப் புறங்களில் இருக்கக் கூடிய கூட்டுறவுக் கடைகளின் மூலமாக அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்தும் கிராம மக்களுக்கு கிடைக்கக் கூடிய வகையிலே ஏற்பாடு செய்து முழு நேரக் கடைகளாக கிராமப் புற கூட்டுறவுக் கடைகளை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, 100 கார்டுகள், 200 கார்டுகள் இருக்கக்கூடிய அந்தப் பகுதியில் முழுநேரம் திறந்து வைப்பது பயன் இல்லை. அரசாங்கத்துக்குத் தான் வீணாக செலவு ஆகும். எனவே பகுதி நேரக் கடைகள் எங்கெங்கே அனுமதிப்பது? எங்கெங்கே முழு நேரக் கடைகள் அனுமதிப்பது என்பதை அரசாங்கம் அங்கே இருக்கக் கூடிய கார்டுகளின் அடிப்படையிலே பரிசீலிக்கிறது.



திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மொரப்பூர் தொகுதியில் சித்தேரி மலை வாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியில் ரேஷன் கடையிலே ஒரு கிலோ அரிசி ரூ. 1.40-க்குக் கொடுக்கிறார்கள். ஆனால் பக்கத்திலே இருக்கின்ற மலை வாழ் மக்கள் கூட்டுறவு அங்காடி என்ற பெயரில் ரூ. 5-க்கு பப்ளிக் மார்க்கெட்டிலே அரிசி விற்கப்படுகிறது. அப்படி மலை வாழ் மக்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகை, கீழ்ப்பகுதி நிலப்பரப்பிலே வாழ்கின்ற மலை வாழ் மக்களுக்கும் குறைந்த விலையில் அரிசி போடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்கு மட்டும் தான் இப்படிப்பட்ட சலுகைகளை வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது. மலைக்குக் கீழே வாழ்கின்ற பகுதிகளில் யார் மலைவாழ் மக்கள், யார் பிற மக்கள் என்று தனியாகக் கண்டு பிடித்தாக வேண்டும். எனவே மலையில் இருப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகையை கீழே வாழ்பவர்களுக்குக் கொடுக்க முடியாது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் இருந்து மாதத்தில் இரண்டே நாட்களில் அங்கு விற்கப்படுகிற அனைத்துப் பொருள்களையும் வாங்க வேண்டுமென்று அரசு அறிவுரை வழங்கியிருக்கிற காரணத்தால் ஒரே நாளில் அனைத்துப் பொருள்களையும் வாங்கும் சக்தி மக்களிடம் இல்லாததால் அவர்கள் கஷ்டப்படுகின்ற நிலையில் இருப்பதை அரசு உணருமா? ஆகவே, முன்பு இருந்தது போல எப்போது வேண்டுமானாலும் ஏழையெளிய மக்கள் விரும்பும் பொருளை வாங்கிக் கொள்ளலாம் என்று இந்த அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு இருந்தது ஒரு நாளைக்கு அரிசி, ஒரு நாளைக்கு சர்க்கரை, ஒரு நாளைக்கு மண்ணெண்ணெய், ஒரு நாளைக்கு கோதுமை என்று ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு குடும்பத்தில் இருப்பவர்கள், தினந்தோறும் ரேஷன் கடைக்குப் போவது என்பது ஒரு தொழிலாக இருந்தது. அதை மாற்றி எந்தத் தேதியில், என்ன வேண்டுமானாலும், எந்த நேரத்திலும் எல்லாப் பொருள்களையும் கேட்கும்போது கொடுக்க வேண்டுமென்றுதான் இந்த அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொன்னது போல காசு இல்லாதவர்கள், வசதியில்லாதவர்கள் ஒரே நேரத்தில் எல்லாப் பொருள்களையும் வாங்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. அவர்கள் என்றைக்கு வேண்டுமானாலும், பழைய முறையில் வாங்கலாம்.

அதை மாற்றவில்லை. ஆனால் வசதி படைத்தவர்கள், அலுவலகம் போகின்றவர்கள், தினந்தோறும் போய் வாங்க முடியாதவர்கள் இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் ஒரே நாளில் கேட்டால் கொடுக்க வேண்டுமென்றுதான் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஊரிலுள்ள ரேஷன் கடைகளில் உணவுப் பொருள் வாங்கச் சென்றால் கடைகளை மூடிவிட்டுச் சென்று விடுவதால் அங்கே போகிற பொதுமக்களுக்கு அரிசி, சர்க்கரை போன்ற உணவுப் பொருள்களை வாங்க முடியாத நிலைமை இருப்பதால் இது குறித்து அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ரேஷன் கடைகள் எந்தெந்த நேரங்களில் இயங்க வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. காலையில் 8 மணியிலிருந்து 12 மணி வரையிலும், மாலையில் 3 மணியிலிருந்து 7 மணி வரையிலும் கடைகள் திறந்திருக்கும். அந்த வகையில்தான் அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. ஆகவே, உணவுப் பொருள் வாங்கச் செல்பவர்கள் மாலை 7 மணிக்குள் சென்றால் கடைகள் மூடப்படாமல் இருக்கும். குறிப்பிட்ட கால நேரத்திற்குள் குடும்ப அட்டைக் கார்டுடன் போனால் நிச்சயமாக அவர்கள் தேவைப்படும் பொருள்களை வாங்கிக் கொள்ளலாம்.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியிலுள்ள மீரான்குட்டி தெருவில் உள்ள ஒரே எண் உள்ள வீட்டில் இரண்டு நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன. இதன் காரணமாக நெருக்கடியான சூழ்நிலை அந்தப் பகுதியில் அடிக்கடி ஏற்படுவதால், அந்தக் கடைகளில் ஒன்று வேறு இடத்திற்கு மாற்றப்படுமா? அடுத்து சென்னை நகரில் புதிய கார்டுகள் எப்போது வழங்கப்படும் ? அடுத்து, காணாமல் போய்விடுகின்ற கார்டுகளுக்காக . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொன்றாக அறிய விரும்பினால் நன்றாக இருக்கும். ஒரேயடியாக அடைய விரும்புவது அவ்வளவு பொருத்தமா ? (சிரிப்பு).

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த வாய்ப்பைத் தாங்கள் தருவீர்களோ, மாட்டீர்களோ என்ற சந்தேகத்தில் மொத்தமாக அத்தனையும் கேட்டுவிடுகிறேன். ஆகவே, காணாமல் போன கார்டுகளுக்கு பதிலாக கார்டுகள் வேண்டுமென்று கேட்பவர்களுக்குத் தரப்படுமா ?



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனிமேல் வாய்ப்பு தேவைப்படாது என்று கருதுகிறீர்களா ? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே இடத்தில் இரண்டு ரேஷன் கடைகள் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அக்கறை எடுத்து வேறு இடம் பார்த்துக் கொடுத்தால் அது அங்கே மாற்றப்படும். காணாமல் போன கார்டுதாரர்களைப் பொறுத்த வரையில் காணாமல் போன கார்டுகள் என்கிற பெயரில் போலிக் கார்டுதாரர்கள் பலர் வருகிறார்கள். ஆனால் உண்மையிலேயே கார்டுகள் காணாமல் போனால், அத்தகையவர்களுக்கு ரேஷன் கார்டு வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாநகராட்சித் தேர்தலில் வாக்காளர்களுக்கு புகைப் படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்குதல்.

41—(*வினா எண். 614) திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநகராட்சித் தேர்தலில் வாக்காளர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு சாதகமான சூழ்நிலை இல்லை என்கிற காரணத்தால் தான் மாநகராட்சிகளுக்கான தேர்தல்கள் தள்ளி வைக்கப்படுகின்றன என்று சொல்கிறார்களே, அது பற்றி அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே மன்றத்தில், மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் விரைவிலே 18 வயது ஆனவர்களை எல்லாம் வாக்காளர் பட்டியலில் சேர்த்துவிடும் பணி முடிவடைந்துவிடும், எனவே அதற்குப் பிறகு தேர்தல் நடத்தப்படுமா என்று கேட்டபோது, மே மாதத்திற்குள்ளாக அந்தப் பணி முடிந்து விட்டால் அதை வைத்துத் தேர்தல் நடத்தப்படும் என்று முன்பே இதே அவையில் அறிவித்திருந்தேன். இப்போது மே மாதத்திற்குள் அந்தப் பணி முடிந்துவிடும் நிலை உள்ளதால் ஜூன் மாதத்தில் தேர்தல் நடத்தப்படும் என்று மாண்புமிகு திரு. ரமணி அவர்கள் எழுப்பிய வினாவுக்கு நான் ஏற்கெனவே பதில் அளித்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1989 ஏப்ரல் 7

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தேர்தல்களைச் சற்றுத் தள்ளி வைக்கின்ற காரணத்தால், சேலம், திருச்சி போன்ற மாநகராட்சிகளை ஏற்படுத்தி, அவற்றுக்கும் சேர்த்து தேர்தல்களை நடத்த அரசு முயற்சிக்குமா ?

(முற்பகல் 9-30.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை ஏற்றுக் கொண்டால், அவர் சொன்னது போல மாநகராட்சித் தேர்தல்களை நடத்தத் தயங்கி, அதன் காரணமாக சேலம், திருச்சியையும் சேர்த்து நடத்துகிறதென்று கூறி, மேலும் தாமதப்படுத்துவதற்கு அரசு காரணம் கூறுகிறது என்று இன்னொரு நாள் கேள்வி கேட்பார். ஆகையால அத்தகைய உத்தேசம் இப்போதில்லை.

திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகராட்சியை மாநகராட்சியாக்கிய பெருமை கழக அரசுக்கு உண்டு. மீண்டும் மாண்புமிகு முதல்வரவர்கள் விரைவில் மாநகராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு உறுதி அளித்திருக்கிறார்கள். ஆனால் மதுரை மாநகராட்சியினுடைய எல்லை அளவை இன்னும் விரிவாக்கம் செய்யாமல் இருப்பதால், மதுரை மாநகராட்சித் தேர்தலை நடத்துவதற்கு முன்பு மதுரை மாநகராட்சி எல்லையை விரிவாக்கம் செய்து, பின்பு தேர்தலை நடத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவரவர்களே, மாநகராட்சியாக மதுரை அறிவிக்கபபடும் போதே எந்தெந்தப் பகுதிகளைச் சேர்த்து மாநகராட்சிப் பகுதியாக அறிவிக்கலாமென்று முடிவு செய்துதான் அறிவித்திருக்கிறார்கள். தற்போது வேறு பகுதிகளைச் சேர்க்கும் உத்தேசம் இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மத்தியிலே இருக்கின்ற தேர்தல் கமிஷனானது வாக்காளர்களுக்கு புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்க வேண்டுமென்று அதற்காக ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். கள்ள வாக்கைத் தடுக்க வேண்டுமென்ற முறையில் அதற்கு முக்கியத்துவம் அளிக்கின்ற வகையிலே, நடைபெற இருக்கின்ற மாநகராட்சித் தேர்தல்களிலே புகைப்படம் ஒட்டிய அடையாளக் கார்டை வழங்குகின்ற ஒரு முறையை ஏற்படுத்தி, அதற்குப் பிறகு தேர்தலை நடத்தினால் அது நியாயமான தேர்தலாக இருக்குமென்பதை அரசு அறியுமா ? அதற்கு வேண்டிய உத்தரவுகளை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்,



1989 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1984 ஆம் ஆண்டு சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற மாநகராட்சிகளில் இதுபோன்ற புகைப்படம் ஒட்டிய அடையாளக் கார்டுகளை வழங்க வேண்டுமென்று முந்தைய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. பிறகு 9–10–1984-ல் அந்த நடவடிக்கையை நிறுத்தி வைத்தார்கள். பொதுத் தேர்தல் என்றால், ஆகின்ற செலவை, மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் சரி பாதியாக ஏற்றுக்கொள்கிறார்கள். இப்போது மாநகராட்சித் தேர்தல்களை நடத்துகிறபோது, முழுச் செலவையும் மாநில அரசே ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், நிறையச் செலவு ஏற்படும். ஆகவே தற்போது அந்த உத்தேசமில்லை.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிகளிலே புதிய வாக்காளர்களைச் சேர்க்கிறபோது, தற்போது சில அரசியல் கட்சிகள் புற நகரங்களில், மாவட்டங்களில் வாழும் வாக்காளர்களை, குறிப்பாக கோவை, மதுரை போன்ற மாநகராட்சிகளிலே கொண்டு வந்து, அந்த வாக்காளர்களைச் சேர்க்கும் முயற்சி நடைபெறுகிறது. மதுரையில் சுமார் 1-1/2 இலட்சம் வாக்காளர்களை புதிதாக புறநகர்களிலிருந்து கொண்டு வந்து, சேர்க்கப்படுவதாக அறிகிறோம். இது அரசுக்குத் தெரியுமா ? இப்படி முறைகேடுகள் இல்லாமல் இருக்க, அந்த மாநகராட்சிகளிலே உள்ளவர்கள் மாத்திரம் வாக்களிக்கும் முறையில், ஒரு தேதியை அறிவித்து, அந்தத் தேதியில் அந்த மாநகரங்களில் வாழ்ந்து, வீட்டு ரசீது வைத்திருப்பவர்களை மாநகராட்சியில் வாக்காளர்களாகச் சேர்க்க அரசு உத்திரவிடுமா ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியின்போது குற்றச்சாட்டு சுமத்தக்கூடாது. இருப்பினும் அது போன்ற விவரங்களை ஆதாரத்தோடு தெரிவிப்பார்களானால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. எந்தக் கட்சி என்றுகூட நான் சொல்லவில்லை. பொதுவாகக் கிடைத்த தகவலைச் சொன்னேன். இதை எல்லாக் கட்சிகளும் செய்யலாம். எனவே, நான் என்ன கேட்டேன் என்றால், அந்தந்த மாநகராட்சிகளில் வாழ்கிற வாக்காளர்கள் மட்டும் வாக்களிக்கிற விதத்திலே அந்தந்த மாநகராட்சிகளின் எல்லைக்குள்ளே வாழ்கிற வீட்டு ரசீது வைத்திருப்பவர்களை மட்டும்தான் வாக்காளர்களாகச் சேர்க்க வேண்டும்—புறநகரிலிருந்து சேர்க்கக் கூடாது என்று அரசு ஆணையிடுமா என்றுதான் கேட்டிருக்கிறேன். இது குற்றச்சாட்டு அல்ல. அரசு அதைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதற்கென்று தனியாக ஆணை விதிக்க வேண்டிய அவசியமில்லை. வாக்காளர்களாகச் சேர விருப்பப் படக்கூடியவர்கள் அதற்கான நமூனாவைப் பெற்று, அதிலே எழுதிக் கொடுக்கிறார்கள். பிறகு ஒவ்வொரு வீடுதோறும் சென்று அந்த வாக்காளர்கள் அந்த விலாசத்தில்தான் குடியிருக்கிறார்களா என்பதைப் பரிசீலனை செய்து, அதற்குப் பின்னால்தான் அவர்கள் வாக்காளர் பட்டியலில் இடம் பெறுகிறார்கள்.

திரு. பெ. சீனிவாசன் : கடந்த ஆட்சிக் காலத்திலே இந்த மாநகராட்சித் தேர்தல்கள் தொடர்ந்து தள்ளி வைக்கப்பட்டதற்கான காரணங்கள் என்ன என்பதை இப்போதைய அரசாங்கம் கண்டுபிடித்து இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, முன்பிருந்த அரசால் பலமுறை இந்தத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. அப்படித் தள்ளி வைத்துவிட்டவர்களுக்குத்தான் அதனுடைய காரணங்கள் என்னவென்று தெரியும். ஆனால், இந்த அரசைப் பொறுத்தவரையில் தமிழக முதல்வர் அவர்கள் இங்கே சொன்னதைப்போல், விரைவில் தேர்தல் நடத்த எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்குவதாக இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். சில சமயங்களில் உண்மையான முகத்திற்கும், புகைப்படத்திற்குமிடையே வேறுபாடு ஏற்பட்டு, குழப்பங்கள் ஏற்படுவதால், அப்படிப்பட்ட முடிவு எடுக்கப்பட்டதா அல்லது செலவினத்தைக் கருதி அந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். செலவினமும் ஒரு முக்கியக் காரணம். ஏனென்றால் மக்களுக்கு அடிப்படையான வசதிகளை மாநகராட்சிகள் செய்ய வேண்டியிருக்கிறது. இதற்கு வீணாகச் செலவு செய்ய வேண்டிய அவசியமில்லை என்பது ஒன்று. அப்படி நாம் அடையாள அட்டை கொடுக்க வேண்டும் என்றால், அதற்காகப் புதிதாகச் சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டியிருக்கும். எனவே, இவைகளையெல்லாம் நடைமுறைப்படுத்த வேண்டுமானால் நீண்ட காலமாகும் என்ற காரணத்தால்தான் தற்போது அத்தகைய உத்தேசம் இல்லை என்று பதில் சொன்னேன்.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு விளக்கம்—மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியின் அடிப்படையில் —தரவிரும்புகிறேன். சில நேரங்களில் தேர்தலை நடத்துவதாகச் சொல்லி புகைப் படங்களையெல்லாம் எடுத்துவிட்டு பிறகு 5 அல்லது 6 ஆண்டுக் காலம் தேர்தலையே நடத்தாமலேயே விட்டுவிட்டால், முகங்கள் மாறிவிடக் கூடும் என்ற அந்தப் பிரச்சினையும் ஏற்படக் கூடும். (சிரிப்பு).

ஆதிதிராவிட தனி தாசில்தார் அலுவலகம்.

42—(*வினா எண். 57) திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை-அண்ணா மாவட்டம் செய்யூர் தாலுகாவிற்கென ஆதி திராவிட தனி தாசில்தார் அலுவலகம் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்:: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) செய்யூர் வட்டத்தைக் கொண்ட தனி வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கும் சாத்தியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் செய்யூர் தாலுக்காலை தலைமையிடமாகக் கொண்டு ஆதி திராவிடர் தனித் தாசில்தார் அலுவலகம் துவக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். மதுராந்தகம் வட்டமானது 1985-ஆம் ஆண்டில் பிரிக்கப்பட்டு, அதற்குப் பிறகு செய்யூர் வட்டம் என்று தனி வட்டம் உருவானது. தமிழகத்திலேயே பெரிய வட்டமாக அன்றைக்கு மதுராந்தகம் வட்டம் விளங்கியது. ஒரு நகராட்சியும், இரண்டு பேரூராட்சிகளும் அதோடு சுமார் 400-க்கும் மேற்பட்ட கிராமங்களையும் உள்ளடக்கிய வட்டமாக மதுராந்தகம் வட்டம் விளங்கியது. தற்போது தனித் தாலுகாவாக செய்யூர் விளங்குகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தொகுதியும் செய்யூர் வட்டத்தில்தான் வருகிறது. எனவே அதன் காரணமாக அரசு இதைப் பரிசீலனை செய்து ஆதி திராவிட மக்களுக்கு நன்மை வழங்கும் வகையில் தனி அலுவலகம் அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, செங்கை—அண்ணா மாவட்டம் 12 வட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு 2 வட்டங்களுக்கும் ஒரு தனி வட்டாட்சியர் அலுவலகம் என்ற அமைப்பில் தற்போது இயங்கி வருகிறது. அதனால் இந்த அமைப்புக்குச் சாத்தியமில்லை என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு வேலை வாய்ப்பிலே 18 சதவீதம் முன்னுரிமை வழங்கி வருகிறார்கள். ஆனால் அதே போன்று அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படுகின்றபோது, ஆதிதிராவிட அதிகாரிகளுக்கும். 18 சதவீதம் வழங்குவதில்லை என்று அறிகிறேன். மைய அரசைப் பொறுத்தவரையில் அங்கு எந்தப் பதவி உயர்வு வழங்கும்போதும் ஆதிதிராவிடர்களுக்கு 18 சதவீத ஜி.ஓ.வை அமல்படுத்துகிறார்கள். அதுபோல் அவர்களுக்கு தமிழகத்திலும் அமல் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவரவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு 18 சதவீதம் என்பதை அரசு அமல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆதிதிராவிடர் நலனுக்கென்று, தாசில்தார் அலுவலகத்திலேயே தனித் தாசில்தார் அலுவலகங்கள் செயல்படுவதற்கு அரசின் குறிப்பில் ஏதாவது ஆய்வில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவரவர்களே, அப்படி ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் 6 தாலுகாக்கள் இருக்கின்றன. அந்த 6 தாலுகாக்களுக்கும் இரண்டு ஆதிதிராவிட தாசில்தார் அலுவலகங்கள் மட்டும் தான் வள்ளன. ஆனால் தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த தரையில் ஒவ்வொரு தாலுகாவுக்கும் ஒரு ஆதிதிராவிட தாசில்தார் அலுவலகம் உள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 3 தாலுகாக்களுக்கு ஒரு ஆதிதிராவிட நல தாசில்தார் அலுவலகம் இருக்கிறது. அவருக்குக் கூட எந்தவிதமான ஜீப்பும் கொடுக்கப்படவில்லை. அந்த அலுவலகத்திற்கு அரசு ஊர்தி வழங்கவும், ஒரு தாலுகாவுக்கு ஒரு ஆதிதிராவிட நல தாசில்தார் அலுவலகம் அமைக்கவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு தனி வினா எழுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. மாரிமுத்து : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதுபோல் தென் ஆற்காடு மாவட்டத்தில் திண்டிவனம், செஞ்சி, வானூர் ஆகிய மூன்று வட்டங்களுக்கு என்று ஒரு தனி ஆதிதிராவிட நல அலுவலகம் இருக்கிறது. வானூருக்கு என்று ஒரு தனி வட்டாட்சியர் அலுவலகத்தை அரசு அமைத்து தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவரவர்களே, தனி வட்டாட்சியர்கள் எந்தெந்த வட்டங்களில் அதிக வேலை வாய்ப்புகள் இருக்கின்றனவோ, அங்கங்குள்ள மக்களைத் தொடர்பு கொண்டு அந்தந்த வட்டாட்சியர்கள் அந்தப் பணியை செய்துகொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், இதுபற்றிய விடைக்கு தனிக் கேள்வி எழுப்பும்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

புதிய கால் நடை மருந்தகம்

43—(*வினா எண் 130) திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஆண்டியப்பனூர் அல்லது மாட்டூர் என்னும் இடத்தில் புதிய கால்நடை மருந்தகம் திறக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் புதிதாக இரண்டாகப் பிரிக்கப்பட்டு இருக்கிற ஊராட்சி ஒன்றியம். அந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஒரே ஒரு கால்நடை மருந்தகம் இருந்தது. அதுவும் 30 கிலோ மீட்டர் தொலைவிலே இருந்தது. அது இப்போது ஜோலார் பேட்டை ஒன்றியத்திலே போய்விட்ட காரணத்தால், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலே ஆண்டியப்பனூர் என்ற இடத்திலோ அல்லது மிட்டூர் என்ற இடத்திலோ ஒரு கால்நடை மருந்தகம் ஆரம்பிக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மற்ற ஒன்றியத்தில் ஏற்கெனவே இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருப்பத்தூர் மற்றும் மாடபள்ளி ஆகிய இரண்டு இடங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்படுவதாக என்னிடம் குறிப்பு உள்ளது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கால்நடை மருந்தகம் ஒரு இடத்தில்கூட இல்லை என்று குறிப்பிடுகிறார். அவருடைய கோரிக்கைகள், தொகுதிக்கு ஏற்ப, புதிய மருந்தகம் திறக்கப்படும்போது கருத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு தலைவரவர்களே, திருப்பத்தூர் என்பது நகரம். நான் சொல்வது, ஊராட்சி ஒன்றியத்திலே சொல்கிறேன். மாடபள்ளி என்னும் இடத்திலே இப்போது தான் 2 மாதங்களுக்கு முன்னாலே நான் சட்டமன்ற உறுப்பினராக ஆனதாலே ஒரு மருந்தகம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்குக்கூட இன்னும் கட்டிடம் இல்லை. சரியான டாக்டர் வசதிகளும் இல்லை. இருந்தாலும் திருப்பத்தூரிலேயிருந்து ஐந்து கிலோ மீட்டரிலே மாடபள்ளி இருக்கின்ற காரணத்தால், திருப்பத்தூர் ஒன்றியம் ஏறக்குறைய 32 கிலோ மீட்டர் இருக்கின்ற காரணத்தால், திருப்பத்தூர் பகுதியிலே கோடியில் இருக்கின்ற ஆண்டியப்பனூர் என்ற இடத்திலே கால்நடை மருந்தகம் ஆரம்பிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன். அதோடு ஊராட்சி ஒன்றியத்திலே ஏதாவது இதுபோன்ற மருந்தகத்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற தீர்மானம் போடப்பட்டிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் மாடபள்ளி கிராமத்தில் தற்போது கால்நடை மருந்தகம் திறக்கப்பட்டிருக்கின்றது என்று கூறியிருக்கின்றார்கள். இன்னும் ஏராளமான இடங்களில் கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை தமிழகம் முழுவதுமிருந்து வந்து கொண்டிருக்கின்றன. ஆனால், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்த அளவில் வேறு எந்த இடத்திலும் கால்நடை மருந்தகம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையோ, தீர்மானமோ அரசிடம் தற்சமயம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. தனராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது எல்லாப் பகுதிகளிலும் வறட்சி நிலவிக் கொண்டிருக்கிறது. கால்நடைகளுக்கு மேய்வதற்குக்கூட எந்த இடத்திலும் புல்வெளியோ மற்ற எதுவுமோ இல்லை. ஆகவே, இந்த வறட்சி நிலவும் நேரத்தில் கால்நடைகளுக்குக் குடிநீர் வசதியும் அல்லது தீவனங்களும் இந்த அரசு இந்த இடைக்காலத்தில் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்சமயம் அது இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





## நடைபாதைவாசிகளுக்கு வீடு கட்டும் திட்டம்

44—(*வினா எண் 220)—திரு. துரை சந்திரசேகரன்: மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தமிழகத்தில் நடைபாதை வாசிகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை :

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,(அ) ஆம். சென்னை மாநகரில் நடைபாதையில் வசிக்கும் நடைபாதைவாசிகள் (Pavement dwellers) அவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட மனைகளில் குடியமர்த்தும் திட்டம் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) சென்னை நகர்ப்புற முக்கியமான சாலைகளில் நடைபாதையில் வசிக்கின்ற மக்களைக் கணக்கெடுக்கின்ற பொழுது 18,228 குடும்பங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த மக்களுக்குக் குடியமர்த்தும் திட்டம் தற்போது அரசினுடைய பரிசீலனையில் உள்ளது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பம்பாய், டெல்லி போன்ற பெருநகரங்களில் இப்பிரச்சினை எந்த அடிப்படையில் தீர்த்து வைக்கப்பட்டது என்பதை அரசு ஆராய்ந்து, அத்தகைய வழிமுறைகளை சென்னையிலும், மதுரை, கோவை, திருச்சி போன்ற நகரங்களிலும் மேற்கொண்டு நடைபாதைக் குடியிருப்புகளை அகற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் எழுப்பிய வினாவிற்கு, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களுக்குக் குடிசை மேம்பாட்டுக்காக ஐம்பது கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது, தமிழகத்திற்கு அந்தத் தொகை வழங்கப்படவில்லை. மத்திய அரசுக்கு இந்தத் தொகை வழங்கப்பட வேண்டுமென்று நம்முடைய அரசின் மூலமாக வலியுறுத்தியுள்ளோம் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசையிலே வாழக்கூடிய மக்களுக்காக வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய இந்தத் திட்டம் எந்த அரசு காலத்தில் கொண்டுவரப்பட்டது ? அந்தத் திட்டம் கொண்டு

வரக்கூடிய அந்தக் காலத்தில் குடிசைவாசிகள் எத்தனை பேர் இருந்தார்கள்? தற்போது எத்தனை குடிசைகள் தமிழகத்திலே இருக்கின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் இந்தியாவிலே முதன்முதலாக மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால் இந்தக் குடிசை மாற்று வாரிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த நேரத்தில் கணக்குப்படி 1,202 குடியிருப்புகள் இருப்பதாகவும், 1,63,000 குடும்பங்கள் இருப்பதாகவும் கணக்கிடப்பட்டது. அந்தக் காலகட்டங்களிலே 421 குடியிருப்புகளை அகற்றி, குடிசையில் வாழ்ந்த மக்களைக் கோபுரம் போல கட்டப்பட்ட வீடுகளில் 1,14,000 குடும்பங்கள் அன்றைய தினம் குடியமர்த்தப்பட்டது. தற்போதைய கணக்குப்படி சென்னை நகரத்தில் மட்டும் 1,411 குடியிருப்புகள் இருப்பதாகவும், மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருப்பதாகவும் கணக்கிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9–50)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டிற்கு இமயமலைத் தொடர்ச்சி எப்படி எல்லையாக இருக்கிறதோ, அதைப்போல எழும்பூர் தொகுதிக்கு கூவம் ஆறு எல்லையாக இருக்கிறது. அங்கே வசிக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதன் ஆற்றோரம் அடுக்கு மாடி வீடுகளை கட்டித்தரும் திட்டம் ஏதேனும் அரசிடம் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லையாக மட்டும் தான் இருக்கிறதா, தொல்லையாகவும் இருக்கிறதா? (சிரிப்பு)

திரு. இளம்வழுதி: தொல்லையாகவும் இருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: தலைவர் அவர்களே, குடிசைப் பகுதிகளில் மிகவும் பின்தங்கிய பகுதிகளை முதலில் அகற்றி மாடி வீடுகள் கட்டுகிற திட்டம் தற்போது இருக்கிறது. உறுப்பினர் அவர்களுடைய பகுதியை நேரில் ஆய்வுசெய்து அதற்குத் தக்க நடவடிக்கையெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்குக் குடியிருப்பு கட்டுதல்.

45—(*வினா எண். 542) திரு. ஆர். மூக்கன்: மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) உப்பிலியாபுரம் தொகுதி, துறையூர் நகரில் கைத்தறி நெசவாளருக்கென்று குடியிருப்பு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திரு. ஆர். மூக்கன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எனது உப்பிலியாபுரம் தொகுதியில் நெசவாளர்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். எனவே, அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு கடனுதவியாவது அளிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிற திட்டத்தில் 1988–89-ம் ஆண்டிற்கு 2,000 வீடுகள் கட்டித் தருவதாக குறிப்பில் உள்ளது. நெசவாளர்களுடைய நிலைமையை ஆய்வு செய்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். மூக்கன்: தலைவர் அவர்களே, அதனை அரசு பரிசீலனை செய்து தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 1960-ம் ஆண்டு காமராஜர் அவர்கள் காலத்தில் நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிறபோது 60-க்கு 40 என்ற அளவு இடத்தில் சமையலயலறை, படுக்கை அறை, தறிக்கூடம், பின்பு கொல்லைப்புறம் என்று கட்டிக் கொடுக்கப் பட்டது. இப்பொழுது அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த ஆய்விற்குப் பின்னால் இப்படிப்பட்ட வீ களை கட்டிக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியாதாரத்தைப் பொறுத்து அதற்கு ஏற்றாற்போல் வசதியான வீடுகளை அரசு சுட்டிக் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. ரா. மாசிலாமணி: தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக உள்ள, செங்கை —அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த காஞ்சிபுரம், குன்றத்தூர் திருமழிசை ஆகிய பகுதிகளில் கைத்தறி நெசவாளர்களுக்கு விடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[1989 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. ச தங்கவேலு : தலைவர் அவர்களே, தற்போது அப்படி வீடு கட்டிக் கொடுக்கிற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கழுக்குன்றம் கோவில் தேர் புதுப்பித்தல்.

38—(*வினா எண். 125—திரு. வி. தமிழ்மணி : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைசசர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்றம் கோவிலில் தீ விபத்தில் எரிந்து போன தேரை புதுப்பிப்பதற்கான செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில், வேலை எப்போது தொடங்கும் ?

மாண்புமிகு திரு. கே. பி.கந்தசாமி : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) திருப்பணிக்குழு அமைக்கப்பட்டு அறநிலையத் துறையின் ஏற்பளிப்பு தரப்பட்டுள்ளது. விரைவில் வேலை தொடங்கும்.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றத்திற்கு அந்தத் தேர்தான் மிகவும் பெருமை சேர்ப்பதாக அமைந்திருந்தது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இதைவிட பெரிய தேர் ஒன்று எரிந்துவிட்டது. கடந்த 1987-ல் இந்தத் தேருடன், சண்டிகேஸ்வரர் ஸ்வாமிக்கான சிறிய தேரும் எரிந்து போய்விட்டது. எனவே இந்த இரண்டு தேர்களையும் உடனடியாகப்புதுப்பிப்பதற்காக எந்த அளவிற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அரசிடம் வந்துள்ளது என்பதையும், அது எப்போது நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இந்த இரண்டு தேர்களையும் புதிதாகச் செய்வதற்கு ரூபாய் 7,23,818 மதிப்பீட்டிலே கோவிந்தராஜ் என்ற ஸ்தபதி அந்த மதிப்பீட்டைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான அனுமதியும் அறநிலையத் துறை வழங்கியிருக்கிறது. விரைவிலே வேலை தொடங்கப்படும்.

திரு. வீ. தமிழ்மணி : தலைவர் அவர்களே, இந்தத் தேரைப் புதுப்பிப்பதற்காக அரசு மானியமாக எவ்வளவு ஒதுக்குகிறது ? அந்த ஊரிலே இருக்கின்ற கோயிலின் சார்பாகவும், பக்தர்கள் சார்பாகவும், எவ்வளவு விழுக்காடு ஒதுக்க வேண்டும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கோவிலினுடைய திருப்பணிக்காக ஏறத்தாழ 44 லட்சம் ரூபாயிலே மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக ஸ்ரீனிவாசராவ் என்பவருடைய தலைமையிலே 18 பேர்களைக் கொண்ட திருப்பணிக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள ஒவ்வொன்றாக அந்தப் பணிகளை எடுத்து செய்து கொண்டு வருகிறார்கள்.



1989 ஏப்ரல் 7]

ஏற்கெனவே 1 லட்சம் ரூபாய் அரசு மானியமாகக்கொடுத்திருக்
கிறது. அந்தத் தொகையைக் கொண்டு, மலையிலே இருக்கிற
சுவாமி, அம்மன், மற்றும் விமானப் பணிகள் நடந்து கொண்டு
இருக்கின்றன. அடுத்த கட்டமாக இந்தத் தேரைப் புதுப்
பிக்கிற பணியும் எடுக்கப்படும். தற்போது தேருக்கு எவ்
வளவு மானியம் கொடுக்கப்பட இருக்கிறது என்பது பற்றி
இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. விரைவிலே அதைப் பற்றி
முடிவு எடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா
நாயகர் அவர்களே, தமிழ் நாட்டிலே பெரிய பெரிய தேர்கள்
எல்லாம் இன்றைக்கு சரியான பந்தோபஸ்து இல்லாமல் இருக்
கின்றன. இங்கே தேர் எரிந்து விட்டது என்று உறுப்பினர்
தமிழ்மணி அவர்கள் தகவல் கொடுத்திருக்கிறார்கள். எரியாமல்
வெய்ய, மழை, வெயில் போன்றவைகளினால், பல தேர்கள்
இன்றைக்கு எரிந்த மாதிரி சீர்கெட்டுக் கிடக்கின்றன.
இதைத் தவிர்த்து, தேரைச் சுற்றி என்க்ரோச் பண்ணியிருக்கிறார்
கள். கீற்றுக்கொட்டகை போன்ற எளிதில் எரியக்கூடிய பொருட்
களை வைத்து, கடைகளைக் கட்டியிருக்கிறார்கள். இது மாதிரி
இருப்பதால், பல கோவில்களில் தேர்கள் எரிவதற்குக் காரணமாக
இருக்கின்றது. எனவே அங்குள்ள கடைகளை அப்புறப்படுத்தி,
இதுமாதிரி சேதம் ஏற்படாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை
எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,
ஏற்கெனவே திருக்கழுக்குன்றத்திலே இந்தத் தேர் எரிந்தபோது,
அதைச் சுற்றியிருந்த 10 கடைகளும் எரிந்து நாசமாகியிருக்
கின்றன. அந்தத் தேர் மண்டபமும் பழுதடைந்து இருக்கிறது.
தேரைச் சேர்ந்த அந்த மண்டபத்திலே இருந்த சாமான்களும்
எரிந்து நாசமாகிவிட்டன. இது தவிர, ஒரு ஆளும், ஒரு சிறுமி
யும் அங்கே விபத்துக்கு உள்ளாகி மாண்டிருக்கிறார்கள்.
ஆகவே தேருக்குப் பக்கத்திலே—தேரை எரியாதபடி பார்க்க
வேண்டுமே தவிர—இருக்கிற கடைகளை அகற்ற வேண்டும்
என்று சொல்வதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, வைண
வத் தலங்களிலே—சைவத் தலம் மற்றும் வைணவத் தலம்,
இந்த இரண்டு நம்பிக்கைகளுக்கும்—மிகுந்த முக்கியமான கேந்
திரமாக விளங்குவது திருக்கழுக்குன்றத்திலே உள்ள வேதகிரீஸ
வரர் கோயில். அந்தக் கோயில் மலை உச்சியிலே இருக்கின்ற
காரணத்தால், கீழேயிருக்கிற இந்தத் தேருக்கு மிகப் பெரிய
மகத்துவம் உண்டு. அது ஏன் எரிந்தது ? என்ன காரணத்தாலே
எரிந்தது? எப்போது எரிந்தது ? இதுவரையில் இடைவெளி ஏன்
ஏன் இதுவரையில் முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை
என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தீப் பிடித்ததால் எரிந்தது. (சிரிப்பு).

(முற்பகல் 13-00)

**திரு. என். கணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல திருக்கோயில்களில் கடவுளர்கள் சவாரி செய்து வந்த தேர்கள் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பிரிக்கப்பட்டு விட்டன. பிரித்து விற்கப்பட்டு விட்டன. கலை பொக்கிஷங்களாக மற்ற நாடுகளில் கருதப்பெற்று, கொள்ளை விலைக்கு விற்கப்பட்டு, கொள்ளை லாபம் அடிக்கப்பட்டு வந்தன. இப்போது தமிழ்நாட்டில் தேர்கள் வேலை செய்யும் ஸ்தபதிகளுக்குப் பஞ்சம் இல்லை. அரசின் கருணைக்கும் பஞ்சம் இல்லை. எனவே புதிய தேர்களை செய்து, இழந்த கடவுளர்களுக்கு தேர்களை வழங்க இந்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நான் எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவராக 1962-ஆம் ஆண்டில இருந்தபோதே அப்போது முதலமைச்சராக இருந்த பெரியவர் பக்தவச்சலனார் அவர்களிடத்திலே இப்போது கணபதி அவர்கள் வெளியிட்ட இதே கருத்தை எடுத்துக் கூறியிருந்தேன். தமிழ்நாட்டில் பல தேர்கள் பழமை அடைந்துவிட்டன என்ற காரணம் சொல்லப்பட்டு, ஏலம் விடப்பட்டு, ஏலத்தில் ரூ. 10,000 ரூ. 20,000 என்று கூட்டாகச் சேர்ந்து பல பேர் எடுத்து, ரூ. 20,000-க்கு எடுக்கப்பட்ட தேரை, பம்பாய்க்குக் கொண்டுபோய், ரூபாய் 50,000, ரூபாய் 60,000 என்று அங்கேயுள்ள வணிகர்களிடம் அந்த சிற்பங்களை எல்லாம் விற்று, பம்பாயிலுள்ளவர்கள் வெளிநாடுகளில் லட்சக் கணக்கில், அந்தத் தொன்மையான சிற்பங்களை விற்று, ஒரு பெரிய கொள்ளை நடைபெறுகிறது. எனவே அந்தத் தேர்களை ஏலத்தில் விடுவதை நிறுத்தவேண்டுமென்று நான் அப்போதே பெரியவர் பக்தவச்சலம் அவர்களிடத்திலே கேட்டிருந்தேன். அப்போதெல்லாம் அறநிலையத் துறைக்கென தனி மானியம்கூட விவாதிக்கப்படாத காலம். மிஸ்ஸலேனியஸ் என்பதிலே அறநிலையத் துறைக்கான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இப்போது புதிய தேர்கள் உருவாக்குவதற்குப் பதிலாக பழைய தொன்மையான வேலைப்பாடுகள் அமைந்த சிற்பங்களோடு கூடிய அந்தத் தேர்களைப் பாதுகாப்பதுதான் முக்கியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேர்கள் பெரும்பாலும் மரங்களால் செய்யப்பட்டவை. ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான இந்தத் தேர் புராதனமானது. இப்படிப்பட்ட தேர்களுக்கு எந்தவிதமான கண்காணிப்பும், பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறது. எனவே ஆலய நிர்வாகத்தினர், அதற்காக ஒரு இரவுக் காவலரை நியமிக்க வேண்டுமென்று சொல்லும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** தலைவர் அவர்களே, மதிப்புமிகு உறுப்பினருடைய கருத்து நல்ல கருத்து. ஏற்றுக் கொள்கிறோம்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தேர்களிலே எல்லாம் தெய்வங்களை வைத்து எடுத்துச் செல்வார்கள். அதிலிருந்து அதற்கு ஒரு விதி விலக்காக, ஏன் தமிழ்நாட்டிலே, உலகத்திலே, ஒரேயொரு தேரிலேதான் தெய்வத்தை வைத்து எடுத்துச் செல்லாமல் ஒரு தமிழ்ப் புலவரை வைத்து தேரை இழுத்துச் சென்றது புராதனம் மிக்க புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஆவுடையார் கோயிலில் இருக்கிற தேராகும். ' திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் ' என்பார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இது பற்றி எல்லாம் மிக நன்றாகத் தெரியும். அந்த மாணிக்கவாசகரை வைத்துத்தான் அந்தத் தேரை இழுப்பது வழக்கம். அந்தத் தேர் திருப்பணி துவங்க முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் ரூ. 2 இலட்சத்தை நன்கொடையாக அரசின் சார்பிலே தந்தார்கள். அந்தப் பகுதி வறட்சியான பகுதி. மக்களிடத்திலேயிருந்து நன்கொடை வசூல் செய்ய முடியாது. எனவே மேலும் அதற்கு மானியம் தந்து அந்தத் தமிழறிஞரை சிறப்பிக்கின்ற நேரத்திலே, திருவாசகத்திற்கு சிறப்பு ஊட்டுகின்ற நேரத்திலே அந்தத் தேரை, திருப்பணிகளை முடிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி தந்து உதவுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஆவுடையார் கோவில், குதிரை வாங்குவதற்காக கொடுக்கப்பட்ட பணத்திலே கட்டப்பட்ட கோவில் என்று சொல்வார்கள். நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படி பணம் வேறு ஒன்றிற்காகச் செலவழிக்க விடாமல், நேரடியாக நல்ல முறையில் அரசின் சார்பில் அந்த ஆலயத்தின் நிர்வாகத்திற்காகவோ அல்லது அந்தத் தேரை அழகுபடுத்துவதற்காகவோ செலவிடப்பட அரசு ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு).—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 2. தகவல் கோரல்

**(அ) வீட்டுவசதி வாரிய மனைகள் ஒதுக்கீடு பற்றி எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அளித்த தன்னிலை விளக்கம் குறித்து.**

**திரு. கோ. பூவராகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம், நம்முடைய முதலமைச்சர்

அவர்கள் 110-வது விதியின் கீழ் ஒரு அறிக்கையை வாசித்தார்கள். அதையொட்டி நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு அறிக்கையை, தன்னிலை விளக்கம் என்ற பெயரால் சொல்லியிருக்கிறார்கள். அதிலே மொத்தமாக இந்த மனைகளை வழங்கியது முன்னாள் அமைச்சர்கள், இந்நாள் அமைச்சர்கள், அரசாங்க அதிகாரிகள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் என்று எல்லாம் மொத்தமாக குறித்திருக்கின்றார்கள். இந்தச் சமயத்தில் நான் சொல்லிக்கொள்வது முதலமைச்சர் அவர்களிடத்திலே, யார் யாருக்கு எல்லாம் இந்த ஓராண்டு காலத்திலே மனை வழங்கி இருக்கிறார்கள். அதிலே யார், எத்தனை பேர் முன்னாள் அமைச்சர்கள், இன்னாள் அமைச்சர்கள் இருக்கிறார்கள் ? அரசாங்கத்திலே சிறந்த சேவை செய்தவர்களுக்கு பொது இடங்களை கொடுத்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிறந்த சேவை செய்த அதிகாரிகள் யார் யார் என்ற நான் அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் சில இடங்களுக்கு குறிப்பாக......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பூவராகன் அவர்கள் இதை கவனத்தில் கொள்ள வேண்டும். இன்று அலுவலில் உள்ள தொடர்பானவற்றை மட்டும் தான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப முடியுமே தவிர, இது ஒழுங்குப் பிரச்சினையில் வராது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அருள் கூர்ந்து உட்காரவும்.

திரு. கோ. பூவராகன் ; தலைவர் அவர்களே, இது என்னைப் பொறுத்த பிரச்சினை அல்ல........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி எழுப்புவதாக இருந்தால் என்னிடத்தில் இசைவு கேட்டிருக்க வேண்டும்.

திரு. கோ. பூவராகன் : தலைவர் அவர்களே, நீங்கள் அன்றைய தினம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய தினம் கேட்டிருக்கலாமே.

(ஆ) சென்னை உயர் நீதிமன்றத்திற்கு நீதிபதிகள் நியமனம் செய்தல் குறித்து.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்பாக செய்தித்தாளில் பார்க்கின்ற நேரத்தில் சென்னை உயர்நீதிமன்றத்தில் நான்கு நீதிபதிகள் இடம் காலியாக உள்ளன என்று மத்திய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் 4—4—1989 அன்று ராஜ்ய சபாவில் அறிவித்துள்ளார்கள். அதன் காரணமாக சென்னையிலே உயர்நீதி மன்றத்தில் தற்போது தேங்கிக் கிடக்கும் வழக்குகள் எண்ணிக்கை சுமார் 1,95,200 ஆகும். இப்படி நிறைய வழக்குகள் இருக்கின்ற நேரத்தில் அரசாங்கம் அந்த இடங்களுக்கு நான்கு நீதிபதிகளுடைய பெயரை பரிந்துரை செய்து, விரைவிலே நீதிபதிகளை



அமைத்து அந்த வழக்குகளை விரைவாக முடிப்பதற்கு அரசிடம் ஏதாவது பரிந்துரை இருக்கிறதா ? ஏன் இன்னும் பரிந்துரை செய்யாமல் இருக்கிறார்கள் என்பதைக் கேட்கக் விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை குறித்து விளக்க விரும்புகிறேன். அந்த நீதிபதி பதவிகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்பதற்கான முயற்சிகள் முறைப்படி மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, உங்களிடம் இசைவு பெற்று நான் இந்தச் செய்தியினை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கைத்தறி நெசவாளர்கள் பல்லாயிரம் பேர் அதனை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கைத்தறி நெசவாளர்கள் இங்கிருந்து உற்பத்தி செய்து அமெரிக்க நாட்டிற்கு அனுப்பிய துணிகள் பலவகை அங்குள்ள துறைமுகங்களில் தேங்கிக் கிடப்பதாகவும், அமெரிக்க அரசாங்கம் அதை ஏற்க மறுப்பதாகவும், கரூரிலிருந்து இப்படிச் சென்றிருப்பது மட்டும் ரூ. 80 கோடி மதிப்புடையது என்றும், இந்தியாவினுடைய பல பகுதிகளிலிருந்து சென்றிருப்பதைப் பார்க்கும்போது பல கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடப்பதாகவும் அதனால் கைத்தறி நெசவாளர்கள், சாயப்பட்டறையிலே வேலை செய்கின்றவர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் மிகப் பதைப்போடு செய்தியினைத் தந்து இருக்கிறார்கள். நாளேட்டிலே வந்திருக்கிறது. நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக மத்திய அமைச்சோடு அல்லது பிரதமர் அவர்களோடு தொடர்பு கொண்டு, இங்கு இருக்கின்ற கைத்தறி நெசவாளர்களுடைய துயரைத் துடைக்க வேண்டுமென்று நான் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒரு மிக முக்கியமான பிரச்சினை இது. மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமாகவோ, கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ கொடுத்திருப்பார்களானால் நான் அதை விசாரித்து விவரங்களைச் சேகரித்து இந்த அவைக்கு அளிக்கும்போது அது அவருக்கும், அவைக்கும், பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ, ஒத்திவைப்புத் தீர்மானமாகவோ முறைப்படி தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[1989 ஏப்ரல் 7

திரு. எஸ். டி. உம்மர்சந்த் : பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற நேரத்தில்,
இதைப்பற்றிக் கவன ஈர்ப்புத் தீர்மானமோ, ஒத்திவைப்புத்
தீர்மானமோ கொண்டுவர வேண்டுமென்று சொல்கிறார்கள்.
ஏற்கெனவே, கவன ஈர்ப்புத் தீர்மானம் நான் அளித்திருக்
கிறேன். அது மறுக்கப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் மறு
பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அலுவல்
தொடர்பானவற்றை அவையிலே பேசக்கூடாது. அறையிலே
வந்து பேசினால் உங்களையும் நான் கவனிப்பேன்.

(ஆ) சென்னை உயர்நீதிமன்றத்திற்கு நீதிபதிகள் நியமனம்
செய்தல் குறித்து—தொடர்ச்சி.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, உயர்
நீதிமன்ற நீதிபதி நியமனம் குறித்து எழுப்பப்பட்ட ஒழுங்
குப் பிரச்சினையை ஒட்டியது என்னுடைய பிரச்சினை.
சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் விகிதாச்
சாரப்படி அதாவது மாவட்ட நீதிபதிகளிலிருந்து நியமிக்கப்
படக்கூடியவர்கள் இத்தனை பேர், வழக்கறிஞர்களி
லிருந்து இத்தனை பேர் நீதிபதியாக நியமிக்கப்பட வேண்டும்
என்ற விகிதாச்சாரப்படி ஒரு தீர்மானத்தை அரசாங்கத்திற்கு
அனுப்பியிருக்கிறார்கள். அதன்படி நியமிக்கப்படுவார்களா
என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஒன்று,
இன்னொன்று நீதிபதிகளைப் பற்றி நாம் இந்தச் சட்டமன்
றத்தில் விவாதிப்பது கிடையாது. காரணம் நம்முடைய
அரசியல் சட்டம் குறுக்கே நிற்கிறது. நியமனத்திற்கு முன்பே
யாவது யார் யாருடைய பெயர்களை அரசாங்கம் பரிந்துரை
செய்கின்றதோ அவை இந்த அவையின் முன் னால்வைக்கப்படுமா
என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். வைத்து
விவாதிக்கப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்பு
கிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,
சென்னை வழக்கறிஞர் சங்கத்தினுடைய உணர்வு
களை நான் மதிக்கிறேன். மறுக்கவில்லை. ஆனால் சில
நேரங்களில் விகிதாச்சாரம் என்பது ஒவ்வொரு முறையும் நீதி
பதிகளை நியமிக்கும்போது, மூன்று பேரை நியமிப்பது என்
றால், 2 : 1 என்கின்ற முறையிலே வரவேண்டும் என்பது
இயலாது. மொத்தமாக இருக்கின்ற காலி இடங்களில், இந்த
ஆண்டு நிரப்பப்படுகிற இடங்களில் அந்த விகிதாச்சார முறை
வருகிறதா, இல்லையா என்பதைப் பார்த்துக்கொள்ள
வேண்டும். இல்லையேல் விகிதாச்சார முறைக்காக சில
நேரங்களில் நாம் ஒரு குறிப்பிட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச்



1989 ஏப்ரல் 7] [டாக்டர் மு. கருணாநிதி]

அல்லது பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச்
சேர்ந்தவர் நீதிபதியாக ஆக வேண்டும் என்கின்ற ஒரு நோக்
சேர்ந்தவர் நீதிபதியாக ஆக வேண்டும் என்கின்ற ஒரு நோக்
கத்திற்குக் கூட, சில நேரங்களில் இந்த விகிதாச்சார முறையை
நாம் கடுமையாகப் பின்பற்றினால் இடையூறு வந்துவிடக்
கூடும் என்பதையும் நான் இந்த அவைக்கு நினைவூட்டக்
கடமைப்பட்டிருக்கின்றேன். நீதிபதிகளை நியமிப்பதற்கு
முன்பு அதை அவையிலே வைத்து விவாதித்து அவையினு
டைய முடிவை ஏற்று, பிறகு நியமிக்கப்படுவார்களா என்று
திரு. பாண்டியன் அவர்கள் கேட்டார்கள். அவர்கள் இந்த
அவையை நடத்திச் சென்றபோது, அப்படி ஒரு வழக்கத்தை
அவர் மேற்கொண்டிருந்திருப்பாரேயானால், அப்படி ஏதாவது
அவைக் குறிப்பு இருக்குமேயானால் அதை எல்லாம் பரிசீலித்
துப் பார்த்து ஆவன செய்யப்படும்.

திரு. பி. எச். பாண்டியன் : மாநில சுயாட்சி பற்றிப்
பரிந்துரைக்க அமைக்கப்பட்ட குழு அறிக்கையில் இந்த மன்றமே,
நீதிபதிகள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்ற பரிந்துரை
எழுதப்பட்டு இருக்கிறது, 3 பேர் எழுதியது. அப்
படி நடவடிக்கை எடுக்கலாம் என்று அந்தப் பரிந்துரையில்
சொல்லும்போது, ஏன் நியமிக்கும்போது இங்கே விவாதிக்க
முடியாது? காரணம், நம்முடைய அரசியல் சட்டத்தில்
எங்கெல்லாம் கவர்னர் என்று எழுதப்பட்டிருக்கிறதோ
அது அமைச்சரவையைத் தான் குறிக்கும். கவர்னருக்கு
இரண்டே இரண்டு பணிகள்தான். ஒன்று அமைச்சரவைக்குப்
பதவிப் பிரமாணம் செய்வது; இன்னொன்று பிரிவு 356-
இன் கீழ் ரிப்போர்டை அனுப்புவது. இது தவிர, மற்ற
இடங்களில் கவர்னர் என்று வரக்கூடிய அந்த இடங்களில்
எல்லாம் அது அமைச்சரவையைத் தான் குறிக்கும். அமெரிக்க
நாட்டில் எல்லாம் அந்தப் பாராளுமன்றத்தில் பெயர்களைப்
பரிசீலித்து விட்டுத்தான் அவர்கள் நியமிக்கின்றார்கள். நாம்
நியமித்த பிறகு அவர்களைப் பற்றி விவாதிக்க முடியாது.
நியமிப்பதற்கு முன்பாவது இந்த அவையில் விவாதிக்கலாம்.
இந்த அரசு ஒரு புதிய முன் மாதிரியை, இந்தியாவுக்குத் தமிழ்
நாடு வழிகாட்டலாம் என்பதை இங்கே நான் தெரிவித்துக்
கொள்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒரு சட்ட
நிபுணர் என்கின்ற முறையிலே திரு. பி. எச். பாண்டியன்
அவர்கள் இந்தக் கருத்தைத் தெரிவித்து இருக்
கின்றார்கள். எப்போதுமே நிபுணர்களுடைய கருத்துக்களில்
ஒருவருடைய கருத்தை மாத்திரம் ஆராயாமல் மற்றவர்
களுடைய கருத்து என்ன என்பதைப் பரிசீலித்து முடிவு எடுப்
பதுதான் நல்லது. எனவே, இதுபற்றிப் பரிசீலிப்பதற்கு இந்த
அரசு மற்ற சட்ட நிபுணர்களோடும், கலந்து திரு. பாண்டியன்
அவர்கள் சொன்ன கருத்து சரியானதுதானா, ஏற்றதுதானா,
இயலுமா என்பது குறித்து யோசிக்கும்.

[1989 ஏப்ரல் 7]

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
சொன்னதைப் போல, உயர்நீதிமன்றத்திலே நீதிபதிகளை
நியமிக்கிறபோது, ஸ்ட்ரிக்ட்டாக ரிசர்வேஷன் முறையை பாலோ
செய்து, சட்டப்படி பிரச்சினை இருந்தாலும் எந்தெந்தப் பின்
தங்கிய அல்லது ஆதிதிராவிட சமுதாயத்தைச் சார்ந்தவர்
களுக்கு, எங்கே உயர்நீதிமன்றத்திலே பிரதிநிதித்துவம்
இல்லையோ அதை மனதிலே கொண்டு அந்தப் பின்தங்கிய
சமுதாயத்தினருக்கு வாய்ப்பு வருகிற விதத்தில் இனிமேல்
நிரப்பப்படவிருக்கிற இடங்களுக்குப் பரிந்துரை செய்யப்படுமா?
அப்படிச் செய்தால் அங்கே வாய்ப்பு இல்லாத மற்ற பின்
தங்கிய பிரிவினருக்கும் அந்த வாய்ப்பு வரும். இதை முதலமைச்
சர் அவர்கள் உணர்விலே கொள்வார்களா, அந்த அடிப்
படையிலே நியமனங்களைப் பரிந்துரை செய்வார்களா
என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எதிர்க்கட்சித்
துணைத் தலைவர் எழுப்பிய பிரச்சினையில விரிவாக ஆராய்ந்து
பேச இயலாது என்பது அவருக்கும் தெரியும், அவையிலே
உள்ள அனைவருக்கும் தெரியும். ஏனென்றால் அது நீதிமன்
றப் பிரச்சினை. நீதிபதிகளுடைய நியமனப் பிரச்சினை.
இந்த 2 : 1 என்பதிலே — குறிப்பாகச் சொல்கிறேன்.
ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன்—ஒரு தாழ்த்தப்பட்ட
சமுதாயத்தைச் சார்ந்தவர் எப்படியும் இடம் பெறவேண்டும்
என்று கருதுகிற நேரத்தில் அவர் 20ஆவது இடத்திலோ,
25ஆவது இடத்திலோ, மிக ஜூனியராக இருப்பாரேயானால்,
அது இயலாத ஒன்றாக ஆகிவிடுகிறது. எனவே, இப்படிப்
பட்ட இக்கட்டான நிலையில் எல்லாம் அந்த விகிதாச்சாரம்
2 : 1 என்பதைப் பின்பற்ற முடியாத கஷ்டம் ஏற்படுகிறது.
அதனால்தான் ஒவ்வொரு முறையும் இந்த விகிதாச்சாரத்
தைப் பின்பற்றவேண்டும் என்றில்லாமல், மொத்தமாக
இடம் பெற்றிருப்பவர்களில், அந்த விகிதாச்சாரம் ஏற்றுக்
கொள்ளப்பட்டிருக்கிறதா, பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்
பதை ஆராய்ந்தால் போதும் என்று நான் கருதுகிறேன்.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** பேரவைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு திரு. பாண்டியன் அவர்கள் மிக முக்கிய
மான அரசமைப்புத் தொடர்பான பிரச்சினையை இங்கே
எழுப்பி இருக்கிறார்கள். நீதிபதிகள் நியமனம்
செய்யப்பட்ட பிறகு, அவர்களுடைய நடைமுறைகளைப்
பற்றி, அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கைப் பற்றி,
அவர்கள் பெற்று இருக்கிற தகுதிகளைப் பற்றி, இவை
களைப் பற்றியெல்லாம் இங்கு விவாதம் செய்ய முடியாது.
ஆனால் அவர்களை நியமனம் செய்வதற்கு முந்தி



1989 ஏப்ரல் 7] [திரு. எம். அப்துல் லத்தீப்]

அரசு பரிந்துரை செய்யக்கூடிய அந்தக் கட்டத்தில் அவர்
களைப் பற்றி இந்த அவையில் விவாதம் செய்த பிறகு
அரசு ஒரு பரிந்துரை செய்தால் முறையாக இருக்குமே
என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த
அரசு பரிந்துரை செய்தாலும் குடியரசுத் தலைவர்,
மற்றும் மத்திய உள் துறை அமைச்சகத்தினுடைய சிபாரிசி
னுடைய பெயரால், தான் நம்முடைய உயர் நீதிமன்றத்தி
னுடைய நீதிபதிகள் நியமனம் செய்யப்படுகிறார்கள்.

அதேபோல் மாநில ஆளுநர்களும் அதே அளவுக்குத் தான்
வருகிறார்கள். அதுவும் அரசமைப்புச் சட்டப்படி
exclusive prerogative of the Central Government
என்ற அளவுக்கு அவர்களுடைய அந்த அதிகார வரம்பும்
வருகிறது. எனவே நீதிபதிகளை நியமனம் செய்வதற்கு முன்பு
இந்த அவையில் அவர்களுடைய தகுதி குறித்து விவாதம்
செய்யப்படவேண்டும் என்பது ஜனநாயகத்திற்கு ஏற்பு உடை
யது என்று இருந்தாலும் அது எந்த அளவுக்குச் சாத்தியக்கூறு
என்பதை அரசு ஆய்வு செய்யத்தான் வேண்டும். அதே நேரத்
திலே ஆளுநர்களைக் குறித்தும் இந்தப் பிரச்சினை என்பது
ஆளுநர் அவர்களும் ஒரு மாநிலத்திற்கு ஆளுநராக வரும்போது
அவர்கள் இந்த மன்றத்தினுடைய கருத்தை ஒட்டியும், மக்க
ளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சி அமைச்சரவையினு
டைய கருத்து எந்த அளவுக்கு ஒருவர் நியமனம் பெறுவதற்கு
தகுதி உடையவர் என்பது குறித்தும்— அது மத்திய அரசால்
நியமனம் செய்வதாக இருந்தாலும்—இந்த அவையிலே அவர்
களைக் குறித்தும் விவாதம் செய்ய இந்த அவை ஏற்றுக்
கொண்ட ஒருவரைத்தான் மத்திய உள் துறை அமைச்சகம்
பரிந்துரை செய்து ஜனாதிபதி அவர்கள் நியமிக்க வேண்டும்
என்ற ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் ஜனநாய
கத்திற்கு ஏற்பு உடைய ஒரு கருத்து தான். எனவே இந்த
இரண்டு கருத்துக்களையும்—உயர்நீதிமன்ற நீதிபதிகள், மாநில
கவர்னர்கள் ஒரே புட்டிங்கில் இந்த அரசியலமைப்புச் சட்டத்தில்
வருகிறார்கள். அவர்கள் இங்கே விவாதம் செய்யப்படக் கூடாத
வர்கள் என்று இருந்தாலும் இப்போது விவாதம் செய்யப்பட
வேண்டும் என்று வந்தால், ஒன்று மாறி இருக்கிற
சூழ்நிலையில் கவர்னர் அவர்கள் மத்தியில் இருக்கின்ற ஆளுங்
கட்சியினுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கக் கூடியவர்களாக
இருக்கிறார்கள். இங்கு இருக்கின்ற சட்ட மன்றத்தினுடைய
எண்ணத்தை அவர்கள் கருத்தில் கொள்ளுவது இல்லை. அமைச்
சரவையினுடைய கருத்தையும் அவர்கள் அடிப்படையாகக்
கொண்டு செயல்படுவது இல்லை என்ற ஒரு குற்றச்சாட்டும்
இங்கே இருக்கிறது. எனவே, இந்த இரண்டையும்— இணைத்து
அரசு செயல்படுத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

[1989 ஏப்ரல் 7

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பேசி ஒரு சிக்கலுக்கு உரிய விஷயமாக ஆக்க நான் மேலும் விரும்ப வில்லை. நீதிபதிகளை நியமிப்பதற்கு முன்பு அவர்களைப் பற்றி விவாதிக்கும்போது ஒரு 3 பேர் அல்லது 4 பேருடைய பெயர்களை எடுத்துக்கொண்டு சாதக பாதகங்களை விளக்கு கின்ற நேரத்தில் அவர்களுக்கு உயர்நீதிமன்ற நீதிபதி பதவி கிடைக்காவிட்டாலும் இருக்கிற நீதிபதி பதவியும் போய்விடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலும் ஏற்படும். இதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு தான் நாம் அதைப்பற்றி யோசிக்க வேண்டும். இப்போது திரு. லத்தீப் அவர்கள் 2 பிரச்சினைகளை எழுப்பினார்கள். ஒன்று நீதிபதி. அடுத்தது கவர்னர். நீதிபதி பற்றிய பிரச்சினைக்குப் பதில் சொல்லிவிட்டேன். கவர்னரை நியமிப்பதற்கு சட்ட மன்றம் தான் விவாதிக்க வேண்டும் என்று சொன்னார்கள். நம்முடைய கொள்கையே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை மற்றும் சில தோழமைக் கட்சிகளுடைய கொள்கையே கவர்னர் பதவியே வேண்டாம் என்பது. கவர்னர் பதவியே வேண்டாம் என்று எண்ணுகின்ற போது, அப்படிக் கொள்கை இருக்கும்போது அதைப்பற்றி விவாதிக்கத் தேவையில்லை என்றே நான் கருதுகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில கவர்னர்களை நியமிக்கும்போது அந்த இடம் காலியாக இல்லாமல் பார்த்துக் கொள்கிறார்கள். ஒரு கவர்னர் போனால் இன்னொரு கவர்னர் உடனே வந்து விடுகிறார். ஜனாதிபதி தேர்தலும் அப்படித்தான். அவருடைய காலத்தி லேயே நடைபெற்று விடுகிறது. அதேபோல் உயர்நீதிமன்ற நீதிபதிகள் என்றைக்கு அவர்கள் ஓய்வு பெறுகிறார்கள் என்ற செய்தியை இந்த அரசு முன்பே வாங்கி, ஒரு ஆண்டுக்கு முன்பே வாங்கி அப்போதே வேலையைத் தொடங்கி விட்டால் இப்படி வழக்குகள் தேக்கம் இருக்காது என்ற ஆலோசனையைச் சொல்லு கின்றேன். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, காலிகள் ஏற்படாமல் தடுப்பதற்கு திரு. பாண்டியன் அவர்கள் சொன்னது நல்ல யோசனை (சிரிப்பு) (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் கொஞ்சம் வாய்ப்புக் கொடுக்கிறார் என்றவுடன் எல்லோரும் இதையே ஒரு மணி நேரம் பேசிக்கொண்டு இருக்க முடியுமா? தயவுசெய்து உட்காருங்கள். நான் இன்னொரு வாய்ப்புத் தருகிறேன்.



1989 ஏப்ரல் 7]

(ஈ) பேரவை ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துதல் பற்றிய மரபு.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் அவருக்கு முன்னால்இருக்கின்ற ஒலிபெருக்கியில் தான் பேசவேண்டும் என்பது நம்முடைய மரபு ஆகும்; விதியும் ஆகும். இது அமைச்சர்களுக்கும் பொருந் துமா? நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதிலே எனக்கு ஒன்றும் குறையில்லை. அந்த மரபைத் தெரிந்து கொள்வதற்குத்தான் கேட்கிறேன். விதிமுறை அங்கத்தினருக்கும் அமைச்சருக்கும் ஒன்றுதானே. அவரவர் களுடைய இருக்கைக்கு முன்னால் இருக்கின்ற ஒலி பெருக்கியில்தான் பேச வேண்டும் என்பது விதிமுறைதானே என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இடம் மாறித்தான் பேசக் கூடாதே தவிர பக்கத்தில் இருப்பதைப் பார்த்து ஒட்டிப் பேச லாம்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய இருக்கையிலே இருக் கும் மைக்கிலேதான் பேச நினைத்தேன். ஆனால் இங்கே விளக்கு எரியாமல் இருந்தது. அங்கே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஆகவே அங்கே சென்று பேசினேன்.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்—தொடர்ச்சி.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று கொடுத்திருந்தேன். நான் கொடுத்து மூன்று நாட்கள் ஆகின்றன அது இருக்கிறதா அல்லது வங்காள விரிகுடாவிலே போய் விழுந்து விட்டதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், அறை யிலே பார்த்துச் சொல்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு

**(அ) இராமேஸ்வரத்திலுள்ள அன்னை இந்திராகாந்தி பாலத்தைப் பயன் படுத்தும் வாகன உரிமையாளரிடமிருந்து கட்டணம் வசூல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திருவாளர்கள் உ. ரா. வரதராசன், செ. நூர்முகமது ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவ னத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

***திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''இராமேஸ்வரத்தில் புதியதாகத் திறக்கப்பட்டுள்ள அன்னை இந்திராகாந்தி பாலத்தில் சிலர் வாகன உரிமையாளர் களிடம் முறையற்ற தீர்வை வசூலிப்பதும், பயணம் மேற்கொள் ளும் பக்தர்களிடம் முறைகேடாக நடந்து கொள்வதும் மற்றும் பேருந்து நிலையத்திலிருந்து கோவில் வரை செல்ல ஆட்டோக் களில் அதிக கட்டணம் வசூலிப்பதும் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

அன்னை இந்திராகாந்தி பாலம் பொது உபயோகத்திற்குத் திறந்து வைக்கப்பட்டபின் 1988 அக்டோபர் மாதத்திலிருந்து 31—12—1988 முடிய பாலத்தின் மீது செல்லும் வாகனங்களுக்கு பாலத்தினை உபயோகிக்கக் கட்டணம் தேசிய நெடுஞ்சாலை விதிகளின்படி தேசிய நெடுஞ்சாலைத் துறையால் வசூலிக்கப் பட்டு வந்தது. பின் 1—1—1989 முதல் டெண்டர் மற்றும் பொது ஏலத்தின் மூலம் வெற்றி பெற்ற குத்தகைதாரர் மூலம் பாலத்தினை உபயோகித்து கட்டணம் வசூலிக்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஆரம்பத்தில் அதிகமாகக் கட்டணம் வசூலிப்பதாக புகார் வரப்பெற்றதும் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), பாம்பன் பாலத்திட்டம் அவர்களால் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. வசூலிக்கப்பட்ட கட்ட ணத்திற்கான இரசீதுகள் தரப்பட்டிருந்தன. ஆயினும் சில தவறு கள் காணப்பட்டதால் குத்தகைதாரருக்கு உடனடியாக 7—1—1989 அன்று அதற்காக காரணம் காட்டி விளக்கம் அளிக் குமாறு தாக்கீது அனுப்பப்பட்டது. பிறகு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூலிக்கப்பட்டு முறையாக இரசீதும் தரப்பட்டு வருகிறது. புகார்கள் ஏதும் மேலும் தேசீய நெடுஞ்சாலைத் துறையில் பெறப்படவில்லை. மேலும் எவ்வளவு கட்டணம் வசூலிக்க வேண்டுமென்ற விபரம் அடங்கிய செய்திப் பலகையை கட்டண விவரங்களை அறிவிக்கும் விளம்பரப் பலகையை பல மொழிகளிலும் அமைக்க நடவடிக்கை எடுக்க





பட்டு வருகின்றது. கட்டண வசூலில் புகார் பெறும் அதிகாரிக்கான முகவரி தாங்கிய பலகையை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏலம் எடுத்த ஒப்பந்தக்காரர் தனது உதவியாளர்களுடன் டாக்ஸிகளுக்கு ரூ. 10.00, ஸ்கூட் டர், மோட்டார் சைக்கிளுக்கு ரூ. 2.00, பஸ், லாரி போன்ற வைகளுக்கு ரூ. 15.00, வெளியூர் சுற்றுலா பஸ்களுக்கு ரூ. 50.00, உள்ளூர் டாக்ஸிகள் ஒவ்வொரு முறை போய்வர ரூ. 3.00 என முறைகேடாக அச்சுறுத்தி அதிகமாக வசூல் செய்து இருப்பதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக இந்திய தண் டனைச் சட்டம் பிரிவு 147 மற்றும் 384 ஆகியவற்றின்கீழ் மண்டபம் காவல் நிலைய குற்ற எண் 57/89-ல் 24—1—1989-ந் தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் எதிரிகள் மீது 17—3—1989ஆம் தேதி இராமநாதபுரம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் முன்பாக குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய் யப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் நகரில் பேருந்து நிலையத்திலிருந்து கோவி லுக்குச் செல்ல பகலில் ரூ. 4-ம் இரவு நேரத்தில் ரூ. 6-ம் ஆட்டோ கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. கட்டணங்கள் சம்பந்தமாக தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் விபரம் எழுதி பேருந்து நிலையத்தில் பெரிய அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டுள்ளது. ஆட்டோ ஓட்டுநர்கள் யாரும் இந்த கட்டண நிர்ணயத்திலி ருந்து மேற்கொண்டு கட்டணம் கேட்டதாகக் காவல் நிலையத்தில் புகார் ஏதும் பெறப்படவில்லை. அவ்வாறு புகார் பெறப்பட் டால் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி இராமேஸ்வரம் ஆய்வாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இராமேஸ்வரம் ஆய் வாளரும், போக்குவரத்துப் பிரிவு சார்பு ஆய்வாளரும், ஆட் டோக்களை நிறுத்தி பலமுறை தணிக்கை செய்துள்ளனர். அப் போது அதிகமாகக் கட்டணம் வசூலித்ததாகத் தெரியவில்லை. அவ்வாறு புகார் பெறப்படின் அல்லது தணிக்கையின்போது தெரியவரின் சம்பந்தப்பட்டவரின்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வர திருத்தலத்திற்கு வெளி மாநிலங்களிலேயிருந்து ஏராளமான பக்தர்கள் வருகிறார்கள். இதுபோன்ற முறைகேடுகளிலே சில சமூக விரோத சக்திகள் ஈடுபடுவதாலே, தமிழ்நாட்டைப் பற்றி, தமிழ்நாட்டு மக்களைப் பற்றி, தமிழர்களுடைய பண் பாட்டைப் பற்றி, வெளி மாநிலங்களிலே தவறான எண்ணம் ஏற்படக்கூடிய வகைகளிலே இந்தச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. ஆகவேதான் நான் இந்தப் பிரச்சினையைப் பற்றி இங்கே எழுப்ப நேர்ந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற விளக்கத்திலே நான் எழுப்பியிருக்கக்கூடிய பிரச்சினைகளிலே, பயணி களிடம், பக்தர்களிடம் முறைகேடாக நடந்துகொள்வது பற்றி எந்த விவரமும் இல்லை, ஒன்று. இரண்டாவது

அங்கே, அந்தக் குத்தகைதாரர்கள், அவர்கள் நேரடியாக
வசூலிப்பதில்லை. அவர்கள் சில ஏஜெண்டுகளை வைத்து
வசூலிக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் சமூக விரோத
சக்திகளாக இருக்கிற காரணத்தினாலே இத்தகைய முறை
கேடுகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே,
குத்தகைதாரர்களுக்குப் பதிலாக, குறிப்பிட்ட கட்டணத்தில்
அங்கேயுள்ள உள்ளாட்சி அமைப்புகள் நியமிக்கும் பணி
யாளர்கள் மூலம் இந்தக் கட்டணத்தை வசூலிக்க
ஏற்பாடு செய்ய இயலுமா ? சென்னை நகரத்திலே கூட
பொது இடங்களில் வண்டியை நிறுத்துவதற்கு அங்கே வசூலிக்
கப்படுகின்ற கட்டணங்கள், அவர்களால் நியமிக்கச்
கூடிய அதிகாரம் பெற்றவர்களாலே வசூலிக்கப்படுவதைப்
போன்று ஒரு ஏற்பாட்டைச் செய்ய இயலுமா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தக்காரர்கள்
வைத்திருக்கின்ற உதவியாளர்கள் முறைகேடாகக் கட்டணம்
வசூலிக்கிறார்கள் என்கின்ற புகார் வந்தவுடன், அதற்கு
உடனடியாக காவல் துறையிலே புகார் செய்யப்பட்டு
நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தியத்
தண்டனைச் சட்டம் பிரிவு 147 மற்றும் 384 ஆகியவற்றின்
கீழ் மண்டபம் காவல் நிலைய குற்ற எண் 57/89,
24—1—1989 ஆம் தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.
இந்த வழக்கில் எதிரிகள்மீது 17—3—1989 ஆம் தேதி
இராமநாதபுரம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் முன்பு
குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குற்றவாளி
கள் யாராக இருந்தாலும் ஒப்பந்தக்காரராக இருந்தாலும்
கூட, நிரூபிக்கப்படுமேயானால் நிச்சயமாக அதற்குரிய
நடவடிக்கை இலாக்காவின் மூலம் மேற்கொள்ளப்படும்.
ஏற்கெனவே இந்தக் கட்டணம் வசூலிப்பதற்கு ஓராண்டுக்
காலம் அது குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. எதிர்
காலத்திலே இலாக்காவின் மூலம், நம்முடைய துறை
யினுடைய பணியாளர்களையே வைத்து வசூலிக்கலாம்
என்பதைப் பற்றி ஆராயப்படும்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இராமேஸ்வரம் போன்ற அந்தப் பகுதிகளில்
சமூக விரோதிகள் இரவு நேரங்களில் வருகின்ற பயணி
களிடம் முறைகேடாக நடப்பது சம்பந்தமாக அடிக்கடி
பல பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. குறிப்பாக
ஒரு வாராந்திரப் பத்திரிகை தன்னுடைய நிருபரை '' ஆந்தை ''
என்ற பெயரால் இரவு ரோந்துக்கு அனுப்பி இப்படிப்பட்ட
தகவல்களைக்கூட வாரா வாரம் பிரசுரித்துக் கொண்டிருக்
கிறது. ஆகவே வாரப் பத்திரிகைகள் '' ஆந்தை ''-களை
அனுப்புவதைப் போல நம்முடைய அரசும் காவலர்களை
இரவு நேரத்திலே சீருடை அணியாமல் அனுப்பி இப்படிப்



பட்ட சமூக விரோதிகளிடமிருந்து பொது மக்களை,
பயணிகளை, பக்தர்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை
எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,
இந்தக் கவன ஈர்ப்புப் பிரேரணை அங்கே பாலத்திலே,
செல்லுகிற வாகனங்களிடம் வசூல் செய்யப்படுகிற
கட்டணத்தைப் பொறுத்தது. இருந்தாலும் மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் பயணிகளுக்கு அல்லது பொது
மக்களுக்கு சமூக விரோதிகளால் ஏற்படுகிற தொல்லைகள்
பற்றி நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.
எனவே, தீவிர கண்காணிப்புக்கும் குற்றவாளிகள்
தப்பிக்காமல் இருக்கவும் காவல் துறைக்குச் சொல்லப்பட்டு
எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. உ. ரா. வரதராசன் : தலைவரவர்களே, ஏற்
கெனவே நான் பயணிகளிடம் முறைகேடாக நடந்து
கொள்வது பற்றிக் கேட்டேன். அதற்கான விளக்கம்
மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து கிடைக்கவில்லை.
அடுத்ததாக சமூக விரோத சக்திகள் அதிகக் கட்டணம்
கேட்டு டிரைவர், கண்டக்டர்களுடன் வெளியே பேசிக்
கொண்டிருக்கிறபோது சிலர் வாகனங்களின் உள்ளே
சென்று பயணிகளிடம், குறிப்பாக பெண்களிடம் தவறாக
நடந்து கொள்கிறார்கள் என்று செய்திகள் வந்தவண்ணம்
இருக்கின்றன. அதோடுகூட இங்கே தேசிய நெடுஞ்
சாலைத் துறைக்குத்தான் புகார்கள் வழங்கப்பட
வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் பெரும்
பாலான புகார்கள் காவல் துறையினரிடம் தான் போகின்றன;
அங்கேதான் மக்கள் புகார்களைக் கொடுக்கிறார்கள். காவல்
துறையினருக்கும் சமூக விரோதிகளுக்கும் இருக்கிற
உறவின் காரணமாக பெரும்பாலும் அந்தப் புகார்கள்
பதிவு செய்யப்படாமலே போய்விடுகின்றன. மூன்றாவதாக
பஸ் நிலையத்திலிருந்து கோவில் வரையில் கார்கள் செல்ல
அனுமதிக்கப்படாததால் ஆட்டோக்களில் அதிகமான
கட்டணம் வசூலிக்கிறார்கள் என்ற புகார் இருக்கிறது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் பெற
ஒரு கேள்வி கேட்கலாம். இதிலே இரண்டாவதாக,
மூன்றாவதாக என்று கேள்விகளை அடுக்கிச் செல்ல வாய்ப்பு
இருக்கிறதா ?

திரு. உ. ரா. வரதராசன் : கவன ஈர்ப்புத் தீர்மானத்தில்
இந்த விவரங்கள் எல்லாம் அடங்கியிருப்பதால் குறிப்பிட்டேன்;
சுருக்கமாகச் சொல்லி முடித்துவிடுகிறேன். ஆட்டோக்
களில் அதிகக் கட்டணம் கேட்டு பயணிகளுக்கு தொல்லைகள்
ஏற்படுவதால் பேருந்து நிலையத்திலிருந்து கோவில் வரையில்
மினி பஸ்கள் விட ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, பஸ் நிலையத்திலிருந்து கோவில் வரையில் கார்கள் சென்றால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் என்பதால் கார்கள் அனுமதிக்கப்படவில்லை. எனவே, சிறிய பேருந்து களை விடுவது என்பது இயலாத காரியம். ஆட்டோ ரிக்சா கட்டணத்தைப் பொறுத்தவரையில் கோவிலுக்குச் செல்லும் பக்தர்களிடமிருந்து பகலில் 4.00 ரூபாயும், இரவில் 6.00 ரூபாயும் மட்டும்தான் வசூல் செய்ய வேண்டு மென்று ஆட்டோரிக்சா டிரைவர்களுக்குச் சொல்லப் பட்டிருக்கிறது. அங்கே இருக்கிற பலகையில் இதுபற்றி வட இந்திய பக்தர்களும் புரிந்துகொள்ளும் வகையில் தமிழ், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு போன்ற எல்லா மொழிகளிலும் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. அதை மீறி அதிகக் கட்டணம் கேட்டால் அங்கே இருக்கிற காவல் நிலையத்தில் பயணிகள் தாராளமாக புகார் செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில சமூக விரோதிகள் செய்கின்ற தவறுகள் என்று குறிப்பிட்டதற்கான விவரம் தற்போது என்னிடம் இல்லை. இப்போதுதான் அதுபற்றித் தெரிவித்திருக்கிறார்கள். அதை எழுத்து மூலமாகத் தந்தால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) சிறிய அரிசி ஆலைகளுக்கு உரிமம் வழங்கும் அதிகாரத்தை மாவட்ட அதிகாரிகளுக்கு வழங்குதல்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சிறிய அரிசி ஆலை உரிமம் பெறவும், பெயர் மாற்றம் செய்யவும் அரசின் ஒப்புதல் பெறுவதற்கு மாறாக மாவட்ட அளவிலேயே அனுமதி பெறலாம் என்றும், அரசிற்கு வேண்டுகோள் அனுப்பக் கூடாது என்று தடை விதித்தும் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் அரசு அறிவிப்பு செய்தும், இதுநாள் வரை உரிய ஆணையை அரசு பிறப்பிக்காமை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

அரிசி அரைவைத் தொழில் (முறைப்படுத்தல்) சட்டம், 1958 மற்றும் அரிசி அரைவைத் தொழில் (முறைப்படுத்தல் மற்றும் உரிமம் வழங்குதல்) விதிகள் 1959-ன்படி, அரிசி ஆலைகளுக்கான அனுமதிகள் மற்றும் உரிமங்கள் வழங்கப்படுகின்றன. மேலே குறிப்பிட்ட சட்டமும் விதிகளும் மத்திய அரசால் இயற்றப் பட்டவை. மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அனுமதி/உரிமம் வழங்கும் அதிகாரம் அளித்துள்ளது.



மாவட்ட நிர்வாகத்தைத் துரிதப்படுத்துவதற்கு சிறப்பு ஆணை யர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் தெரிவித்த பல கருத்துக்களில் ஒன்றாக, அப்போது அரசிடம் இருந்த அரிசி ஆலை அனுமதி வழங்குதல் அதிகாரத்தை மாவட்ட ஆட்சியர், கூடுதல் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகிய வர்களுக்கு வழங்கலாம் எனத் தெரிவித்தார். இக்கருத்தை அரசு பரிசீலித்தது. பின்பு சுற்றோட்டத்தில் ஆளுநர் உட்பட ஆணைபெற்று மாவட்ட ஆட்சியர், கூடுதல் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், குடிமைப் பொருள் வழங்கல் துணை ஆணையர் (சென்னை) ஆகியவர்களுக்கு அனுமதி வழங் கும் அதிகாரத்தை அளிக்க மத்திய அரசுக்கு 3-8-1988-ல் கடிதம் எழுதப்பட்டது. மத்திய அரசு ஆணை கிடைக்கும் வரை யில் அரிசி ஆலை பெர்மிட் வழங்க கருத்துருக்களை அரசுக்கு அனுப்ப வேண்டாம் என்று மேலே கூறப்பட்ட அலுவலர்களுக்கு அரசு அறிவுரை வழங்கியது. மத்திய அரசு அரிசி ஆலை அனுமதி வழங்கும் அதிகாரத்தை குடிமைப் பொருள் வழங்கு ஆணையர்/ மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒப்படைப்பதற்கு அனுமதி அளித்து அறிவிக்கை (NOTIFICATION) வெளியிட்டுள்ளது. இந்நிலையில் தற்போதுள்ள அரசு, குடியரசுத் தலைவர் ஆட்சிப் பிரகடனத்திற்கு முன்னிருந்தபடி, அரிசி ஆலை நிறுவ அனுமதி வழங்கும் அதிகாரம் மாநில அரசிடமே இருக்கலாம் என்று முடிவு எடுத்துள்ளது. எனவே இவ்வரசு ஏற்கெனவே மைய அரசுக்கு அனுப்பிய கருத்துருவை வாபஸ் பெற்றுக் கொள்கிறது என்று மைய அரசுக்கு தெரிவித்து, மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுமதி வழங்கி மைய அரசு வெளியிட்ட அறிவிக்கையை ரத்து செய்யு மாறு மைய அரசைக் கேட்டுள்ளது. மைய அரசின் பதில் எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக அதிக அளவில் இன்றைக்கு அரிசி ஆலை உரிமம் தேக்கம் அடைந்திருக்கிற காரணத்தினால், மத்திய அரசுடன் பேசி, வற்புறுத்தி, விரைவிலே ஆணை பிறப்பித்து, அரிசி ஆலை உரிமம் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர் களே, அரிசி ஆலைக்கு அனுமதி வழங்கக் கூடிய அதிகாரம் இந்த அரசிடம்தான் இருந்தது. குடியரசுத் தலைவர் ஆட்சிப் பிரகடனத்தின்போது 1988-ல் இந்த அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அதிகாரிகளுக்கு வழங்க லாம் என்று மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது.

(முற்பகல் 10-30)

அந்த அடிப்படையில் மத்திய அரசும் அதற்கான நோட்டி பிகேஷன் வெளியிட்டுவிட்டது. இருந்தாலும் ஜனவரி மாதம் 27 ஆம் தேதி புதிய அரசு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன், குடியரசுத் தலைவர்

ஆட்சி பிரகடனப்படுத்துவதற்கு முன்பிருந்தபடி அரிசி ஆலைகளுக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் மாநில அரசிடமே இருக்கலாம் என்று முடிவு எடுத்தது. அதற்கான தகவலையும் மத்திய அரசுக்குத் தெரிவித்தது. மத்திய அரசு இப்போது அதை மறு பரிசீலனை செய்து இந்த அரசுக்கு அந்த அதிகாரத்தை வழங்கு வதற்கு உத்தரவு பிறப்பிக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்—தொடர்ச்சி.**

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு குறித்து..................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைக்கு அது எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(4) மானியக் கோரிக்கைகள், 1989–90 விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.**

**கோரிக்கை எண். 17—கல்வி.**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,99,72,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளில் மாணவர்கள் சேரும் பொருட்டு அந்த நிர்வாகங்கள் கேட்கும் அளவுகடந்த பணத்தைக் கொடுக்க இயலாத மாணவர்களும், பெற்றோர்களும் மன முடைந்து நிற்கும் நிலையைப் போக்க வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 8,99,72,57,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பேராவூரணியில ஒரு கலைக் கல்லூரியையும், ஒரு பாலிடெக்னிக்கையும் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர் மானத்தை மொழிகிறேன் :



"மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 8,99,72,57,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**திரு. ஜி. பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் அரசு அனுமதித்து நடைபெற்று வரும் பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்குப் போதிய கட்டிடங்கள் இல்லாமல் குழந்தைகள் கஷ்டப்படு வதைப் போக்க புதிய கட்டிடம் கட்ட வேண்டும் என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 8,99,72,57,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு அரசு பொறியியல் கல்லூரி துவக்கப்பட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 8,99,72,57,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சிக்காக நிதி ஒதுக்கு வதற்காக இந்த அவையிலே உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் விரிவான அறிக்கை வழங்கப்பட்டிருக்கிறது. *அதை அவைக் குறிப்பில் ஏற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அறிக்கையிலே காணப்படுகிற விவரங்களோடு தனித் தன்மை உள்ளதாக, பெரும்பாலும் சுய அதிகார வரம்புடையதாக உள்ள பல்கலைக் கழகங்கள், அப்படிப்பட்ட அமைப்புகள் ஆகியவற்றினுடைய அறிக்கைகளும் இந்த அவையிலே உள்ளவர்களுடைய கருத்துக்களுக்காக இங்கு வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே தெரிவிக்கக் கூடிய கருத்துக்களைக் குறித்து இறுதியாக அவர்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ள விடையைத் தெரிவிப்பேன் என்று கூறி இந்த அறிக்கையை அவைமுன் நான் வைக்கிறேன்.

* அறிக்கை இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

D
V2ll,31'N89
N89.8.2
600 009
144831

*பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கையின்மீது நான் சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியைக் கூறி என் உரையைத் தொடங்குகிறேன்.

1989–90 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டிலே கல்விக்கு முதன்மை இடம் தரப்பட்டிருப்பது, கடந்த ஆண்டுகளிலே தரப்பட்டிருப்பதைப்போல, 22 விழுக்காடு என்று இருக்கிறது. பள்ளிக் கல்விக்காக ரூ. 654 கோடியும், கல்லூரிக் கல்விக்காக ரூ. 125 கோடியும், இதர இனங்களுக்காக ரூ. 120 கோடியும் என்று ஏறத்தாழ ரூ.900 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதை வரவேற்று அதே நேரத்தில் ஒரு சில கருத்துக்களை இங்கே முன் வைப்பது என்னுடைய கடமை.

கல்வியின் தரம் உயர வேண்டுமென்பதிலே இந்த மாமன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் எவருக்குமே மாற்றுக் கருத்து இருக்க முடியாது என்ற சூழ்நிலையில் அந்தக் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக இந்த அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மாணவர்களுடைய எண்ணிக்கையைப் பார்ப்போமேயானால், தொடக்கப் பள்ளியிலே 75 லட்சம் மாணவர்களைச் சேர்த்து, இடைநிலைப் பள்ளிக்கு அவர்கள் வரும்போது 25 லட்சமாக குறைந்து, அது உயர்நிலைப் பள்ளிக்கு வரும்போது 10 லட்சமாகவும், மேல்நிலைப் பள்ளிக்கு வரும்போது 4 லட்சமாகவும் கல்லூரிக் கல்விக்கு வரும்போது 2 லட்சமாகவும் வந்து அந்த அளவிலேயே நின்றுவிடுகிறது. இந்த ''டிராப் அவுட்ஸ்'' என்று சொல்லப்படுகிற, படிப்பை இடையிலே நிறுத்திவிடுகின்ற நிலை ஏன் ஏற்படுகிறது என்பதை அரசு ஆய்ந்து, அதைப் போக்குவதற்கு முன்வர வேண்டும், சரியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்டிருக்கின்ற குழு இந்தப் பணியை மேற்கொண்டு இருக்கின்றது என்ற காரணத்தினால், அந்த அறிக்கையை மிக விரைவாகப் பெற்று, அதை இந்த அரசு நடைமுறைப்படுத்தி தமிழகம் கல்விக் களத்திலே முதன்மை இடத்தைப் பெற முயற்சி எடுக்க வேண்டும்.

இலவச உணவு, சீருடை, புத்தகம் இவையெல்லாம் தருவதை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில், எங்களுடைய தானைத் தலைவர், மறைந்த மாமேதை டாக்டர் புரட்சித்





தலைவர் அவர்கள் கொண்டு வந்த காலணித் திட்டத்திற்கு எந்த ஒதுக்கீடும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி, அதை இந்த அரசு ஏற்றுச் செயல்படுத்துவதற்கு முன்வரவேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சுற்றுப்புறச் சூழ்நிலைக் கல்விக்காக மத்திய அரசு முழுமையாக மானியம் அளிக்கிறது. இந்த அரசு தென்னாற்காடு மாவட்டத்தில் 6 தாலுக்காக்களை மட்டும் எடுத்துக் கொண்டிருக்கிறது. இதைத் தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தக் கேட்டுக் கொள்கிறேன்.

210 கல்லூரிகள் தமிழகத்திலே இருக்கின்றன. ''எதிலும் தமிழ், எங்கும் தமிழ்'' என்று முழங்குகிறோம். 23 ஆயிரம் மாணவர்கள் மட்டும் தமிழ் வழியிலே கற்றுக்கொண்டு இருக்கின்றார்கள் என்ற அறிக்கையைப் பார்க்கிறபோது மிக மன வேதனைப்படுகிறேன். தமிழ் வழியிலே பயில்கின்ற மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு இந்த அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுயநிதி நிறுவனங்களில் முறைகேடுகள் இருப்பதாகவும், ஊழல்கள் இருப்பதாகவும் குற்றச்சாட்டுகள் இருந்து கொண்டிருக்கின்ற நேரத்தில், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று எல்லோரும் முனைகின்ற நேரத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 'சுயநிதிக் கல்லூரிகளுக்கு இடம் அளிக்க மாட்டோம்' என்று சொல்லி இருககிறார்கள். ஒரு செய்தித்தாளிலே 'தவிர்க்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டால், தருவோம்' என்று அவர் சொல்லியிருப்பதை மறுபரிசீலனை செய்து, 'தரவே கூடாது' என்ற அளவில் முடிவை இந்த அரசு எடுக்கவேண்டும்.

கல்வித் தரத்தை உயர்த்தச் செய்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்ற வினா பல்வேறு வகைகளிலே, பல்வேறு நாட்களிலே இந்த மாமன்றத்திலே பேசப்பட்டு அதற்கான முடிவுகள் இன்னும் எடுக்கப்படவில்லை. 'வரப்புயர நெல் உயரும்' என்று சொல்வார்கள். அதைத் தொடர்ந்துதான் எல்லாமே உயரும் என்பது நமக்குத் தெரியும்.

அதைப்போலவே, ஆசிரியர்களுடைய நிலையை உயர்த்தினால்தான் கல்வியினுடைய தரத்தை உயர்த்துகின்ற அடுத்த நிலைக்கு நாம் செல்ல முடியும்.

கல்லூரிகளிலும், பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் மேல் நிலைப் பள்ளிகளிலும் கல்வியின் தரம் உயர வேண்டுமானால், தொடக்கக் காலத்திலே, தொடக்கப் பள்ளி நிலையில் இருந்தே முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

டெல்லியிலே காலை 7½ மணிக்கே பள்ளிகளைத் தொடங்கி விடுகிறார்கள். பல மாநிலங்களிலே 7½ மணிக்கே தொடங்கி விடுகிறார்கள். 7½ மணி என்பது விடியற்காலை நேரம். 'வைகறைத் துயில் எழு' என்று படித்திருக்கிறோம். 'காலையில் எழுந்தவுடன் படிப்பு' என்று பாரதியார் சொல்லியிருக்கிறார். காலை நேரத்திலே முழுமையாகப் பள்ளிக் குழந்தைகளுக்கு கல்வியைக் கற்றுத் தருகின்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். அதையும் ஆசிரியர்களோடு பேசி, ஆசிரியர்கள் இயக்கங்களோடு பேசி, சில வரன்முறைகளை வகுத்து அதைச் செயல்முறைப்படுத்துவோமானால் உள்ளபடியே கல்வித் தரம் உயரும். உளவியல் முறையிலே பார்த்தாலும் இது சரியாக வரும் என்பதும் இந்த அரசுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். Standard of Education பற்றிப் பேசுகிறோம். இப்போதெல்லாம் ஐ.ஏ.எஸ். தேர்வில் தமிழகத்திலிருந்து முன்புபோல் அதிக அளவில் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை என்கிற குறைபாடு இருக்கிறது. ஆனால் டெல்லி யுனிவர்சிட்டியிலிருந்து 12 பேர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்று பெருமையாகச் சொல்கிறார்கள். இதற்குக் காரணம் உண்மையிலேயே ஆங்கிலத்திலேயே நம்முடைய கருத்துக்களை வெளியிடுகின்ற 'எக்ஸ்பிரஸ்' செய்கின்ற வாய்ப்புகள் இல்லாத குறைதான். நாம் ஏற்கெனவே இரு மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இன்றைக்கு தனியார் பள்ளிகளில் எல்.கே.ஜி., யு.கே.ஜி., போன்ற வகுப்புகளில் எல்லாம் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்றுக் கொடுக்கின்ற நிலையில் அரசுப் பள்ளிகளில் 3-வது வகுப்பிலிருந்துதான் ஆங்கிலம் போதிக்கப்படும் என்கின்ற நிலை இருக்கிறது. இடையிலே, 1 ஆம் வகுப்பிலும், 2 ஆம் வகுப்பிலும் ஆங்கிலம் போதிக்கப் படாத நிலை இருக்கிறது. இந்நிலையைத் தவிர்த்து 1 ஆம் வகுப்பிலிருந்து அரசுப் பள்ளிகளிலும் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்றுக் கொடுக்க வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்யவில்லையென்றால் வேற்று மொழி உள்ளே நுழைந்து விடக்கூடிய நிலை ஏற்பட்டு விடும். எனக்கு அத்தகைய ஒரு அச்சம் இருக்கிறது.

[முற்பகல் 10·40]

ஒழுங்கும, கட்டுப்பாடும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்கின்ற கருத்தில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. இங்கேயும் ஆசிரியர் பெருமக்களாக இருந்து சட்டமன்ற உறுப்பினர்களாக வந்துள்ளவர்கள் பலர் இருக்கிறார்கள். இன்றைக்கு பிளஸ் 2 என்று சொல்கிற மேல் நிலைப் பள்ளிகளில் பிளஸ் 1-ல் அரசுத் தேர்வு இல்லாததால் பெரும்பாலான பள்ளிகளில் முறையாக பாடங்களைப் போதிப்பதில்லை. இதனால் முழுமையாக மாணவர்கள் பாடங்களை ஏற்றுக்கொள்கின்ற வாய்ப்பும் இல்லை. 16வது வயதில் இருக்கிற மாணவர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் adolescent age என்று



சொல்கிற இளமைப் பிராயத்தில் இருப்பவர்கள். அவர்களைத் தன்னிச்சையாக விட்டு விடுகிறார்கள். அந்நிலையைத் தவிர்க்கின்ற முயற்சியில் இந்த அரசு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில் அங்கே கல்வியின் தரம் நன்றாக இருக்கிறது என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். பல அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள்கூட தங்களுடைய பிள்ளைகளைத் தனியார் பள்ளிகளில் சேர்க்கின்ற நிலைமை இருக்கிறது. இந்நிலையைப் போக்க அரசுப் பள்ளிகளில் கல்வியின் தரத்தை மேம்படுத்த அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு கருத்தை நான் வலியுறுத்த ஆசைப்படுகிறேன். இன்றைக்கு மேல் நிலைப் பள்ளிகள் என்று இருப்பதை ஜூனியர் காலேஜ் என்று பெயர் மாற்றம் செய்து மற்ற மாநிலங்களில் இருப்பதுபோல் செய்யலாம். அவற்றிற்கு ஜூனியர் காலேஜஸ் அல்லது 'இளநிலைக் கல்லூரிகள்' என்று பெயர் வைக்கலாம். அப்படிச் செய்தால் உயர் நிலைப் பள்ளியிலிருந்து வெளிவருகின்ற மாணவன் கல்லூரியில் சேர்ந்து படிக்கின்ற நிலை வருகின்றபோது அந்த மாணவன் தன்னுடைய நிலையை உணர்ந்து, கட்டுப்பாட்டை உணர்ந்து நல்ல முறையில். படிக்க வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிவியல் பாடத் திட்டங்களுக்கு அதிகமாக நிதி ஒதுக்கப் படவில்லை. அதேபோல Faculty Improvement Programme இருக்கிறது. சான்ஸ்கிரிட் என்று சொல்கிற சமஸ்கிருதத்தின் வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை அதிகம். ஆனால் அதே சமயத்தில், சமஸ்கிருதம் இந்த நாட்டிலே எந்த அளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். ஆகவே, அவசியம் தேவையான துறைகளுக்கு அதிக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆங்கிலப் பயிற்சி நிறுவனம் பெங்களூரில் இருக்கிறது. அதற்கு அரசு 4 இலட்சம் ரூபாய் மானியமாகக் கொடுத்து அங்கே பயிற்சி பெற நம்முடைய ஆசிரியர்களுக்கு வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் நம் சார்பில், நம்முடைய ஆசிரியர்கள் அங்கே இடம் பெறுவதில்லை. ஆகவே அதற்குப் பதிலாக நாமே அந்த மாதிரி ஒரு நிறுவனத்தைத் தொடங்கி னால்—4 இலட்சம் ரூபாய் முதலீட்டில் தொடங்கினாலே போதும்—பல்கலைக் கழக மானியக் குழு அதற்காக 10 மடங்கு தொகை தரத் தயாராக இருக்கிறது. அதற்கு இந்த அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விளையாட்டுத் துறைக்கு ஊக்குவிப்பு செய்கிறோம் என்று சொல்கிற எந்த அரசும் உள்ளபடியே இதுவரை ஊக்குவிப்பு செய்யவில்லை. இன்றைக்கு நம் நாட்டை எடுத்துக் கொண்டால், பல விளையாட்டுத் துறைகளில் திறமையானவர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு செஸ் விளையாட்டை எடுத்துக் கொண்டால்கூட தமிழ்நாட்டில் முதலிடம் வகிக்கின்ற விளையாட்டு வீரர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அரசு சார்பில் எந்த உதவியும் செய்யவில்லை. விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் நல்ல மாதிரியான ஒரு திட்டத்தை இந்த அரசு வகுத்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

கல்வித் துறை அலுவலகங்களுக்குக் கட்டிடங்கள் கட்டித்தர வாய்ப்புகள் அதிகம் ஏற்படுத்தப்பட்டாக வேண்டும். இதற்கு ஒரு மாற்று ஏற்பாடாக Ownership Scheme என்று சொல்கிறபடி வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் கட்டிடங்களை கட்டித்தர ஏற்பாடு செய்யவேண்டும். இப்படிச் செய்தால் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களாக அவை ஆகிவிடும் என்கிற யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குத் தனியாருடைய கட்டிடங்களில், பல அலுவலகங்கள் இயங்குகின்ற நிலைமை இருப்பதால் அதற்காகப் பெருந்தொகை வாடகையாக அரசால் வழங்கப்படுகிறது.

அதைப்போலவே கட்டிடத்தைப் பராமரிக்கின்ற வகையிலே பொதுப் பணித் துறையிலே பில்டிங்ஸ் டிவிஷன் என்று ஒன்றை வைத்திருக்கிறார்கள். அது பள்ளிக் கட்டிடங்களைக் கவனிக்கிறது. மற்ற கட்டிடங்களைக் கவனிக்கிறது. ஆனால் கல்லூரிக் கட்டிடங்களுக்கு அப்படியில்லை. எனவே அப்படி ஒரு டிவிஷன்-ஐ கல்லூரிகளுக்கு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜவஹர்லால் நேரு அறிவியல் திறன் புத்தகத் திட்டம் சென்ற ஆண்டு இருந்தது. அது இந்த ஆண்டு ஏன் கைவிடப்பட்டதென்று தெரியவில்லை. பல்கலைக்கழகங்கள் பலவாறாகப் பெருகிக் கொண்டிருக்கும்போது, இந்த அரசு பல்கலைக் கழகங்களுக்கு மிக அதிக நிதி ஒதுக்கி இருக்கிறதென்று ஒத்துக்கொண்டாலும், அந்த ஒதுக்கீடு அங்கே நடைபெறுகிற ஆராய்ச்சிப் பணிக்கு—ப்ரொடக்டிவிட்டி இன் யூனிவர்சிட்டி—அது அடிப்படையாக இருக்கிறதா என்பதை ஆய்வு செய்யவேண்டும். இந்தப் பல்கலைக் கழகங்களில் பரவலாக ஊழல்கள், தவறுகள் நடப்பது பற்றி பொதுமக்களால் பேசப்படுகிறது. அது குறித்தும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலே டீச்சர்ஸ் சர்வீஸ் ரூல்ஸ் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. அவர்கள் தமிழ்நாடு எஜுகேஷனல் சபார்டினேட் சர்வீஸ் ரூல்ஸ்படி (பள்ளித்துணை ஆய்வர்களாகவும், உதவிக் கல்வி அலுவலர்களாகவும்) பதவி உயர்வு பெறுகின்ற அளவிலே விதிகளைத் திருத்தியும், தளர்த்தியும் ஆவன செய்ய வேண்டும். (மணி அடிக்கப்பெற்றது).



மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு மணிக்கு முன்பாக மணியடித்து, வெளியே சென்ற பழக்கம் இல்லாத காரணத்தாலே, பேசுவதிலே சற்று தாமதம் ஏற்படலாம். ஒரு பேராசிரியர், இந்தக் கல்வி மானியத்திலே பேசத் தகுதி பெற்றவன் என்ற முறையிலே, தாங்கள் தயவு செய்து கட்டுப்பாட்டைத் தளர்த்தி, பேச அனுமதிக்க வேண்டும். 5-ல் ஒரு பகுதி நிதி ஒதுக்கியுள்ள இந்த மானியக் கோரிக்கைக்குக் காலம் அதைப்போல ஒதுக்கவில்லை என்ற வருத்தத்தைத் தெரிவித்துப் பேச அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் பேராசிரியரை ஆதரிப்பார்கள்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : நன்றி, பேரவைத் தலைவரவர்களே, நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் அவர்களை இந்த அரசு, அரசு அலுவலர்களாக அறிவித்துவிட்டது. ஆனாலும்கூட, அவர்களுக்கான பணி விதிமுறைகள் இன்னும் வரையறை செய்யப்படவில்லை. ஆகவே, அதையும் செய்து, அந்த அலுவலர்களுக்கும் அரசுப் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் கிடைக்கின்ற அனைத்துச் சலுகைகளும் கிடைக்கின்ற வகையிலே விதிகளைத் திருத்த வேண்டும்.

தனியார் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கும்—"ஆசிரியர்கள்" என்ற சொல்லாலே அனைவரும் அழைக்கப்படக்கூடிய அளவிலே—அனைத்து அரசு சலுகைகளையும் தகுதிகளையும் தர அரசு முன்வர வேண்டும்.

கிராமப்புறத்திலே இருப்பவன் என்ற காரணத்தாலே அங்கேயிருக்கும் ஆசிரியர்கள் படும் அல்லல்களை இங்கே சொல்வது என்னுடைய கடமை என்பதால் சொல்கிறேன். ஜி.பி.எப். பணத்தை ஓர் ஆசிரியர் பெறுவதற்கு ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவை இந்த அரசு நிர்ணயிக்குமானால் ஆசிரியர்கள் மகிழ்வார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

நிர்வாகச் சீர்திருத்தத்தை இந்த அரசு மிக நன்றாகவே செய்ய முன்வந்திருக்கிறது என்று எண்ணும்போது மகிழ்ச்சியடைந்தாலும், ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அரசு ஆணைகளை வெளியிடும்போது 'எங்கும் தமிழ்' எதிலும் தமிழ், என்று சொல்லும்போது, அரசு ஆணைகளைத் தமிழில் வெளியிட முன்வந்தால் நிச்சயமாக நடைமுறைக் கோளாறுகள் இருக்காது. அப்படி முழுமையாக அதைச் செய்ய இயலாவிட்டாலும், அரசு ஆணையிடுகிறபோது, ஆங்கிலத்தில் ஆணை இட்டாலும், அதற்குரிய தமிழாக்கம் அதனைத் தொடர்ந்து அதன் பின்புறத்தில் வருமேயானால், அங்கே பலவாறாக மிஸ்இண்டர்பிரேடேஷன் செய்து—தவறாகப் பொருள் புரிந்துகொண்டு—நடவடிக்கை எடுப்பதில்

தாமதத்தைக் காட்டிக் கொண்டிருக்கும் அலுவலர்களுக்கு வழி காட்டி நேர்மையாகச் செயல்படச் செய்ய முடியும். ஆகவே, தமிழில் அரசு ஆணைகள் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்கலைக்கழக நிதி உதவிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஊதிய விகிதத்தை நடைமுறைப்படுத்தியிருக்கிறது இந்த அரசு. அந்த ஊதிய விகிதம் 1—1—1986 முதலே ஏற்றுக் கொள்ளப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுமென்று முந்தைய அரசால் அறிவிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த ஊதிய விகிதத்தில் ''போஸ்ட் கிராஜுவேட் டியூட்டர்ஸ் அண்டு டெமான்ஸ்டிரேட்டர்ஸ்'' ஆகியோர்களுடைய பணியைப் பணிக்காலக் கணக்கீட்டில் எடுத்துக் கொள்ளவில்லை என்று சொல்லி, கல்வித் துறை அரசு ஆணை 235-ல் கூறப்பட்டுள்ளதைத் தவறாகப் பொருள்கொண்டு, வலிந்து பொருள் கொண்டு, சில முதல்வர்கள், அங்கே இருக்கிறவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். அதற்குச் சரியான விளக்கத்தைத் தந்து, இந்த அரசு அவர்களுடைய பணிக் காலத்தையும் ஏற்று, அந்தப் பணிக் காலத்தைக் கணக்கிட்டு ஊதிய உயர்வும், ஊதிய நிர்ணயமும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், கிளாரிபிகேஷன் கேட்கிறோம் என்ற அளவிலே, விளக்கம் கேட்கிறோம் என்ற பொருளிலே, காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் முறையிலே அரசு ஆணைகளுக்குச் சரியான தமிழாக்கம் அரசே தந்தால், இந்தச் சூழ்நிலை ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

அடுத்து, அப்பீல் செய்ய வேண்டுமென்றால் 60 நாட்களுக்குள் செய்தாக வேண்டும் என்று விதி இருக்கிறது. அதைப் போல்—நான் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்—கல்வித் துறையைப் பொறுத்த அளவிலாவது ஒருவர் அப்பீல் செய்தால் அதற்கான டிஸ்போசலை ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் தர வேண்டுமென்று முடிவெடுப்பீர்களானால், உண்மையிலேயே ஆசிரியப் பெருமக்கள் மிகுந்த மகிழ்ச்சியடைவார்கள்.

தற்போது ''டீச்சர்ஸ் ரெக்ரூட்மெண்ட் போர்டு'' என்று ஒரு அமைப்பை வைத்திருக்கிறோம். அதுவும் ஒரு அரசாணையின் கீழ்தான் செயல்படுகிறது. தயவு செய்து அதை மாற்றி அதற்கு ஒரு ஸ்டேட்யூட்டரி ஸ்டேடஸ் கொடுத்து, ''ஆசிரியர் தேர்வாணைக் குழு'' என்று அதனை மாற்றி, அதற்குரிய அதிகாரம் கொடுத்து, ஆசிரியர்களைத் தேர்வு செய்வதற்கு வழிவகை செய்தால் தமிழகத்தின் கல்வி வளர்ச்சிக்கு அது உதவிடும் என்பதோடு, மாணவர்களின் கல்வித் தரமும் உயர்வதற்கு அது பயன்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



நடைபெற்ற தவறுகளைச் சுட்டிக்காட்டுகின்றபோது தயவு செய்து யாரையும் குறிப்பிட்டுச் சொல்வதாக எண்ணாமல், சொல்லப்படுகின்ற தவறுகள் களையப்பட, வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கும்பகோணம் பெண்கள் அரசு கல்லூரி தொடங்கிய 26-ஆம் ஆண்டில் அதன் 25-வது ஆண்டுக்கான வெள்ளி விழா கொண்டாடுகிறோம் என்று சொல்லி, அதற்காக ஏறத்தாழ ரூபாய் 10,000 அந்த விழாவுக்காகச் செலவழித்திருக்கிறார்கள். நாம் எதற்கெடுத்தாலும் ஏற்கெனவே இக்கட்டான நிதிநிலையில் இருப்பதாகச் சொல்லிக் கொண்டேயிருக்கிறோம். நிதித் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது என்று அரசு அடிக்கடி சொல்லுகிறது. ஆகவே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இனியாவது இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதோடு தவறுகளுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரிகளைப்பற்றிக் குறிப்பிடும்போது—அரசு கல்லூரிகளிலும் சரி, தனியார் கல்லூரிகளிலும் சரி—கல்லூரிகளுடைய முதல்வர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்யப்படுவதில் முரண்பாடு இருக்கிறது. கல்லூரி முதல்வர்கள் பணியாற்றுகிற கல்லூரிகளில்—இந்த நிலைமை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன்—இரண்டு பி. ஜி. டிபார்ட்மென்ட்கள் இருக்க வேண்டும் என்பது ஒன்று. ஆயிரம் மாணவர்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்பது மற்றொன்று ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதை மறந்து இருக்கிறேன். தாங்கள் நினைவூட்டுகிறீர்களே ! (சிரிப்பு).

பேராசிரியர் க. பொன்னுசாமி : பழையதை மறப்பது சரியில்லை என்ற தங்களுடைய கருத்தின் அடிப்படையிலேயே இதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தாங்கள் இதைப்பற்றி மிக நன்றாக, தெளிவாக, உணர்ந்தவர்கள் என்ற காரணத்தால், இதற்குப் பரிகாரம் காண உதவிட முன்வருவீர்கள் என்ற நம்பிக்கையில் இதைத் தெரிவிக்கிறேன். அப்படி முதல்வர்கள் பணியாற்றுகிற கல்லூரிகளில் இரண்டு பி. ஜி. டிபார்ட்மென்ட்கள் இருக்க வேண்டும், ஆயிரம் மாணவர்களுக்குக் குறைவில்லாமல் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட கல்லூரி முதல்வர்களுக்கு மட்டும் ரூ. 4,500 அடிப்படை ஊதியம் என்றும், இதில் ஏதேனும் ஒன்று இல்லையென்றால் கூட அத்தகைய கல்லூரி முதல்வர்களுக்கு ரூ. 4,200 தான் அடிப்படைச் சம்பளம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. முதல்வர்கள் என்கிறபோது எல்லா முதல்வர்களையும் ஒரே மாதிரியாக எண்ண வேண்டும். இங்கே இருக்கிற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு எல்லாம் துறையின் வேறுபாட்டைத்

கருதியோ அல்லது தகுதி அடிப்படையிலோ சம்பள வேறுபாடு இருப்பதில்லை என்பதைப்போல் கல்லூரி முதல்வர்கள் மரியாதைக்குரியவர்கள், ஒரு கௌரவமான நிலையில் இருப்பவர்கள் என்பதைக் கருத்தில் கொண்டு அவர்களுக்குள் பேதம் ஏதும் இருக்கக் கூடாது என்பதை இந்த அரசு ஏற்று அனைவரையும் ஒன்றாக்கும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது.)

பல்கலைக் கழக நிதி உதவிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கல்லூரி ஆசிரியர்களுக்கு புதிய ஊதிய விகிதத்தை நடைமுறைப்படுத்துவதை நான் வரவேற்கிறேன். அதில் உள்ள சில முரண்பாடுகளையும் இங்கே தெரிவிக்க வேண்டியது என் கடமை—இல்லையென்றால் வெளியே இருக்கிற பலரும் பலவாறாகப் பேசக்கூடும் என்ற அச்சத்தின்—காரணமாகவும் இதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதாவது பி.எச்.டி., எம்.பில். போன்ற மேம்பட்டப் படிப்பு பெற்றவர்களுக்கு ஊக்க ஊதியம் தற்போது வழங்கப்படுகிறது. ஆனால் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கு இது குறித்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அப்படிப் பட்டம் பெற்றவர்களுக்கு ஊக்க ஊதியம் தரப்படுவதோடு மூன்று ஆண்டு - இயர் பெனிபிட் - என்ற வகையிலும் தரப்படுகிறது. அதாவது 8 ஆண்டுகள் பணிமுடித்த ஒரு விரிவுரையாளர், 'சீனியர் லெக்சரர்' என்ற நிலைக்குச் செல்ல முடியும் என்றால், 5 ஆண்டுகளே பணி முடித்த, அவரைவிட பணி மூப்பு அடையாத பி.எச்.டி. பட்டம் பெற்ற ஒருவர் அந்த நிலைக்குப் போய்விடுகிறார். அந்த ஊதிய உயர்வை அவர்களுக்கு அளிப்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. எங்களைச் சார்ந்தவர்கள் எந்த அளவுக்கு ஊதியத்தைப் பெறுகிறார்களோ அதற்காக நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் 'இயர் பெனிபிட்' என்று தருவதன் காரணமாக பணி மூப்பை 'ஓவர் டேக்' செய்கிற வகையில் அவர் மற்றவர்களைத் தாண்டிச் செல்கிறார். இதனால் பலருக்கும் மனக் கசப்பு ஏற்படுகிறது. இவ்வாறு ஏறத்தாழ 12,000 கல்லூரிப் பேராசிரியர்கள் மனம் வருத்தப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட மேற்படிப்பு படித்து பட்டம் பெற்றவர்களுக்கு ஊக்க ஊதியம் அளிப்பதில் 3 என்பதற்கு பதிலாக 6 கூட கொடுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் 3 ஆண்டுகள் அவர்கள் மற்றவர்களைவிட தாண்டிச் செல்கிறபோது, அது உள்ளபடியே மன வருத்தத்தை உண்டாக்குகிறது என்பதால் இந்த நிலையை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

தலைவர் அவர்களே, கல்லூரிகள், மேல்நிலைப் பள்ளிகள், உயர் நிலைப்பள்ளிகள் என்று மூன்று நிலை இருக்கிறது. அவற்றை பற்றிப் பேசுவதோடு தொகுதியைப் பற்றியும் பேச வேண்டும். எனவே தயவுசெய்து 10 நிமிடங்கள் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தங்களுக்கு ஏற்கெனவே 20 மணித் துளிகள் கொடுத்திருக்கிறேன். பேராசிரியருக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன் ''பிறன் பங்கைத் திருடுதல் வேண்டாம்'' என்பது பாரதியார் வாக்கு. (சிரிப்பு)

**பேராசிரியர் க. பொன்னுசாமி:** நன்றி, பேரவைத் தலைவரவர்களே, ஒப்பந்த அடிப்படையிலே இங்கே நியமனம் பெற்ற ஆசிரியர்கள் ஏறத்தாழ 2,000 பேர் பணி வரன்முறை பெற்றுவிட்டார்கள். ஆனால் இன்னும் 3,000 பேர் வரும் நான்கு, ஐந்து நாட்களிலே வெளியேற்றப்பட இருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் அவர்களுக்கு பணி உத்திரவாதம் தரும் வகையிலே ஏதாவது செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே, இன்றைய மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள், 15-3-1983-லே இந்த அவையிலே பேசிய ஒன்றை, அதாவது, கல்லூரி மார்க்கர்கள், விளையாட்டுத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற மார்க்கர்கள் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்தின் அடிப்படையிலே நிச்சயமாக அதைச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

கல்வித் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்பதற்காக சிலவற்றை நான் இங்கே சொல்வதற்கு அனுமதிக்க வேண்டிக் கொள்கிறேன். ஆசிரியர்களின் தரம் உயர வேண்டுமென்றால், கல்வியின் தரம் உயர வேண்டுமென்று சொன்னால், ஆசிரியர்களுக்குத் தேவையான சலுகைகளை இந்த அரசு தர வேண்டும். அவர்களுடைய உரிமைகளுக்கு முதலிடம் தரவேண்டும். அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும். அவர்கள் வருத்தம் இல்லாமல் இருந்தால்தான்—மாண்புமிகு தலைவரவர்களே, ''வித்தைக்கு சத்துரு வருத்தம், தரித்திரம்'' என்று சொல்வார்கள். இந்த இரண்டும் இல்லாமல் இருந்தால்தான் ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, மாணவர்களாக இருந்தாலும் சரி, கல்வி தலையிலே ஏறும் என்ற அளவிலே ஏற்றுக்கொண்டு, அதற்கான நடைமுறைகளை நீங்கள் கொண்டுவர வேண்டும். அதற்காக அனைத்து ஆசிரியர் இயக்கங்களையும் அழைத்துப் பேசி—அவர்கள் கோரிக்கைகள் வைக்கிறார்களா, இல்லையா; அவர்கள் போராடுகிறார்களா, இல்லையா என்பதல்ல பிரச்சினை—அனைத்து ஆசிரியர் இயக்கங்களையும் தயவுசெய்து நீங்கள் அழைத்துப் பேசி, ஆண்டுதோறும் நடைபெறுகிற ஒரு நிகழ்ச்சியாக வைத்துக்கொண்டு, அவர்களுடைய எண்ணங்களைப் புரிந்துகொண்டு, அவர்களுடைய சலுகைகளைத் தெரிந்துகொண்டு, அவர்களுடைய கோரிக்கைகளை உணர்ந்துகொண்டு, அதற்கான பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றி, அதே நேரத்தில் அவர்களுக்கு என்னென்ன கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டுமோ, அவற்றையெல்லாம்

விதித்து, நீங்கள் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு முன்வர
வேண்டும். உரிமைகள், சலுகைகளைப் பெற்று, கட்டுப்பாட்டில்
ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டும். அதற்காக ஆசிரியர்களின்
''நடத்தை விதிகளை'' நீங்கள் கொண்டுவர வேண்டும். அது
தனியார் கல்லூரிகளிலே இருக்கிறவர்களையும் கட்டுப்படுத்தும்
வகையிலே வரவேண்டும். இப்போது அரசு கல்லூரிகளிலே, பள்ளி
களிலே பணியாற்றுபவர்களுக்கு ''கவர்மெண்ட் காண்டக்ட்
கோடு'' இருக்கிறது. ஆனால் தனியார் பள்ளிகளிலே பணியாற்று
பவர்களுக்கு அதுவும் இல்லை. அதை நான் குறையாகச் சொலல
வில்லை. எல்லோரும் ஓரினம் என்று சொல்கிற நேரத்திலே,
எல்லோரும் ஓர் நிலை என்று வருகிற அந்த நிலையை நீங்கள்
ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு
அமைச்சரவர்கள் அவையில் இருக்கிறார்களோ, இல்லையோ,
எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை
அமைச்சரவர்கள் கடலூரில் பேசியிருக்கிறார்கள். சங்கம் என்பது
ஊதிய உயர்வுக்காகவும், உரிமைகளுக்காகவும் மட்டுமின்றி
உழைப்பை நல்கவும் முன்வர வேண்டுமென்று அமைச்சரவர்கள்
பேசியிருக்கிறார்கள். உள்ளபடியே அது வரவேற்கத்தக்க கருத்து.
அத்தகைய மனமாற்றம் ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது
என்று இந்த நேரத்திலே சொல்லி, அந்த மனமாற்றத்தோடு
நின்றுவிடாமல், ஆசிரியர்கள் தெருவிலே இறங்கிப் போராடும்
நிலையை இந்த அரசு தடுத்திட வேண்டும். ஆசிரியர்களுடைய
போராட்டங்கள் மாணவர்களுடைய எதிர்காலத்தைப்
பாழாக்கிக் கொண்டிருக்கின்றன என்பதை உணர்ந்த நிலையிலே
நீங்கள் இருந்தவர்கள் என்பதால் இங்கே அதை நான் சுட்டிக்
காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழிற்சாலையிலே போராட்
டம் என்றால், முதலாளி மட்டும் பாதிக்கப்படுகிறார். அதைப்
போல கல்வித் துறையிலே இல்லை. ஆசிரியர்கள் போராடினால்,
ஆசிரியர்களுடைய வீட்டிலே பாதிப்பு என்றால், பரவாயில்லை;
அரசுக்கு மட்டும் பாதிப்பு என்றால்கூட இந்த அரசு அதை பெரிய
மனதோடு ஏற்றுக்கொள்ளலாம்; ஆனால் அந்த இளம் பிஞ்சுகள்,
மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதை பின்னாலே ஈடு
செய்கிறோம் என்று ஆசிரியர்கள் சொல்வது, நிச்சயமாக ஒரு
ஏமாற்று வித்தை. முதல் செமஸ்டரில் அவர்கள் போராடிவிட்டு,
வேலை நிறுத்தம் செய்துவிட்டு, மாணவர்கள் பரீட்சை எல்லாம்
எழுதியதற்குப் பின்னாலே அடுத்த செமஸ்டருக்கு போய், அதை
ஈடு செய்கிறோம் என்று சொன்னால் அதை இந்த அரசு எப்படி
ஏற்றுக்கொள்வது? ஆகவே, உரிமைகளும், சலுகைகளும் கிடைத்த
பிறகும், வேலை நிறுத்தம், போராட்டம் என்ற
பெயரிலே வருவார்களானால் அதைத் தடுத்து நிறுத்தவும்,
அத்தகைய போராட்டங்களைத் தடுக்கவும் இந்த அரசு முன்
வருமானால் நிச்சயமாக எங்களுடைய ஆதரவு உங்களுக்கு
இருக்கும். எதிர்காலச் சந்ததியினரை வாழ்த்துகிற, வரவேற்
கின்ற இந்த அரசு, கல்வி நலத்தைப் பேணுவதற்கும் முன்வர
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



என்னுடைய தொகுதியைப் பற்றி ஒருசில வார்த்தைகள்
சொல்லி முடித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில்
இருக்கிற துவரங்குறிச்சியிலே முஸ்லீம்கள் அதிகமாக இருக்
கிறார்கள். அங்கே உயர்நிலைப் பள்ளி 'கோ-எஜுகேஷனாக'
இருக்கிறது. பெண்கள் படிப்பதற்கு வாய்ப்பில்லை. ஆகவே
மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் இதைக் கருத்தில் கொண்டு
துவரங்குறிச்சியிலே பெண்களுக்காக ஒரு உயர்நிலைப் பள்ளி
தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வளநாடு, புத்தாநத்தம் ஆகிய இடங்களில் மாணவர்கள்
விடுதி அமைத்துத் தரவேண்டும்.

மணப்பாறை பகுதியில் ஏறத்தாழ 60 மைல் சுற்றளவில்
தொழில் நுட்பக் கல்லூரி இல்லை; மகளிருக்கான கல்லூரியும்
இல்லை. ஆகவே அந்த இரண்டையும் அங்கே ஏற்படுத்தித் தர
வேண்டும்.

பள்ளிக் கட்டிடங்களைப் பொறுத்தவரையில் வளநாடு,
ஆமணக்கம்பட்டி ஆகிய இரு ஊர்களிலே உயர்நிலைப் பள்ளி
களுக்கு, கட்டிடம் இல்லாத காரணத்தால், தொடக்கப் பள்ளிக்
கட்டிடத்திலேயே பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன
என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வரு
கிறேன், அதிலும் வளநாட்டிலேயே இடம் வாங்கப்பட்டிருக்
கிறது, கட்டிடம்தான் கட்டப்படவில்லை என்பதைச் சுட்டிக்
காட்டி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.00)

கோவில்பட்டியிலே இருக்கின்ற அரசு உயர்நிலைப் பள்ளியை
மேல்நிலைப் பள்ளியாக மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

கோ-எஜுகேஷன் பள்ளிகளான இந்தப் பள்ளிகளிலெல்லாம்
கழிப்பறை வசதிகள் இல்லை. ஆகவே, தயவு செய்து எல்லாப்
பள்ளிகளிலும் இதைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

மெடிகல் செக்கப்பிற்காகக் கல்லூரிகளிலே ஒரு பகுதி நேர
மருத்துவரை வைத்திருக்கிறீர்கள். அதைப்போல மேல்நிலைப்
பள்ளிகளிலும் ஆண்டுக்கு ஒருமுறை மருத்துவப் பரிசோதனை
நடத்துகிறீர்கள். அதற்காகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.
ஆனால் இடைநிலைப் பள்ளிகளிலும், தொடக்கப் பள்ளிகளிலும்
அதற்கான வாய்ப்புகள் இல்லை. ஆகவே, இந்த அரசு தயவு
செய்து (மணியடிக்கப்பெற்றது).....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் அவர்களே, சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் என்பது நன்னூல் இலக்கணம்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : முடித்து விடுகிறேன். அங்கே பிரைமரி ஹெல்த் சென்டரில் இருக்கின்ற டாக்டர்களுக்கு அந்த மருத்துவர்களுக்கு இந்தப் பணியைத் தந்து மருத்துவ பரிசோதனை செய்து, உண்மையிலேயே இந்தச் சிறு குழந்தைப் களுடைய 'பிளட் குரூப்'பை சோதனை செய்து அவர்களுக்கு ஒரு அடையாள அட்டை தருகின்ற அளவிற்குச் செய்தால் நலம் பயக்கும்.

பள்ளிகளிலே பணியாற்றுகின்ற தலைமையாசிரியர்களுக்கும் .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒருவரே 20, 25 மணித் துளிகள் வரம்பு மீறி எடுத்துக் கொள்ளக் கூடாது. பேராசிரியர் அவர்கள் இப்படித் தொடர்ந்து பேசினால் மக்கள் என்ன நினைப் பார்கள் ? இவர்கள் பிடித்தால் விட மாட்டார்கள் என்ற தவ றான கருத்துக்கு வந்து விடுவார்கள். அவ்வளவுதான். ஒரே மணித் துளி.

பேராசிரியர் க. பொன்னுசாமி : அது கூட வேண்டாம அரை மணித் துளியிலேயேகூட முடித்துவிடுகிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளிலே இருக்கின்ற பள்ளித் தலைமை யாசிரியர்களுக்கும், கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற முதல்வர் களுக்கும் அந்த வளாகத்துக்குள்ளேயே ஒரு குவார்ட்டர்ஸ் வேண்டும். அதிலே தொலைபேசி இருக்க வேண்டும். அப்பொழுது தான் மாணவர்களைக் கட்டுப்படுத்தி அவர்கள் நிர்வாகம் செய்ய முடியும் என்பதைச் சொல்லி கல்லூரி முதல்வர்களைப் பற்றிப் பேசுகின்ற பொழுது எனக்கு அனுமதி அளித்த பேரவைத் தலைவ ரவர்களுக்கு நன்றி சொல்லி, வாய்ப்புக்கும் நன்றி சொல்லி, முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. கே. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, 1989–90 ஆம் ஆண்டு கல்வி மானியக் கோரிக்கை யின்மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்கிற வாய்ப்பினை எனக்கு வழங்கியிருக்கிற மாண்புமிகு முதல்வ ரவர்களுக்கும், மாண்புமிகு கல்வித்துறை அமைச்சரவர் களுக்கும், பட்டுக்கோட்டை தொகுதி வாக்காளப் பெரு மக்களுக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.''

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப, அழிவில்லாத செல்வமாகிய கல்விக்காக 1989–90 வரவு செலவுத் திட்டத்தில் 900 கோடி





ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூபாய் 4,134 கோடியில் சுமார் 22 விழுக்காடு ஆகும். இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் நம்முடைய அரசு எந்த அளவிற்குக் கல்வியின் சிறப்புக்கு முக்கியத்துவம் தந்துள்ளது என்பதை நாம் உணர்கிறோம்.

இப்படிப்பட்ட சிறப்பான நிலைமை நம்முடைய மாநிலத் திலே இருந்தாலும், கன்கரண்ட் லிஸ்ட் என்று சொல்லப்படுகின்ற பொதுப் பட்டியலில் இருக்கின்ற கல்விக்கு மத்திய அரசு தர வேண்டிய முக்கியத்துவத்தைத் தரவில்லையோ என்கிற கவலை இன்றைக்கு நமக்கு ஏற்பட்டிருக்கிறது. நாடாளு மன்றத்தின் மதிப்பீட்டுக் கமிட்டி தெரிவித்த கருத்துதான் நம்முடைய இந்தக் கவலைக்குக் காரணமாகும். அந்தக் கமிட்டி தன்னுடைய அறிக்கையில் முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கல்விக்காக 7.2 விழுக்காடு ஒதுக்கப்பட்ட நிலை மாறி, ஏழாவது திட்டக் காலத்தில் 3.5 விழுக்காடாக நிதியை மத்திய அரசு குறைத்து விட்டது என்று தன்னுடைய ஏமாற் றத்தை அந்த அறிக்கையில் அந்த மதிப்பீட்டுக் கமிட்டி சுட்டிக் காட்டியுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்தியாவைப் பொறுத்த அளவில் 50 விழுக்காடுகளுக்கும் மேற்பட்டவர்கள் இன்னும் கல்வியறிவைப் பெற முடியாத நிலையிலுள்ள இன்றைய சூழ்நிலையில் நடுவண் அரசின் இந்தச் செயல் இந்த மன்றத்திலுள்ள நம் அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்குகிறது. எனவே, வருகின்ற காலங்களிலேயாவது நடுவண் அரசு கல்விக்குப் போதுமான நிதியை ஒதுக்க வேண்டு மென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மொழிக் கொள்கையைப் பொறுத்தவரை யில், நம்முடைய நிலை தெளிவானது, திடமானது. எந்தச் சூழ்நிலையிலும், நாம் ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, நம்முடைய மொழிக் கொள்கையில் மாற்றம் இல்லை. நம்முடைய பயணம் திசை மாறியது இல்லை என்பதைத்தான் ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் தெளிவுபடுத்தி இருக்கிறோம். அந்த வகையில் இந்தியானது நடுவண் அரசால் எந்த வகையில் நம் மீது திணிக்கப்பட்டாலும் அதைத் தடுத்து நிறுத்துவோம், அதற்கு அரணமைப்போம் என்பதைத்தான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுப் பட்டியலில் இருக்கக்கூடிய கல்வித் துறையைக் கருவியாகப் பயன்படுத்திக்கொண்டு, அந்தந்த மாநில மக்களின் தாய் மொழிப்பற்று, தாய்மொழியில் கல்வி கற்கும் அடிப்படை உரிமை, இவைகளை அழிக்க அல்லது பறிக்க தொடுக்கப்பட்ட தாக்குதல் தான் மாநிலங்களில் துவங்கப்படுகின்ற நவோதயா பள்ளி என்று சொல்லப்படுகின்ற மாதிரிப் பள்ளியாகும்.

இந்த நவோதயா பள்ளிகள், ஏழை மக்களின் கல்விக்குப் பயன்பட வேண்டிய பெரும் நிதியைக் குறைந்த எண்ணிக்கையி லான சிலருக்குச் செலவிட்டு கல்வியில் ஒரு மேட்டுக்குடி கல்வியை மத்திய அரசின் முத்திரையோடு உருவாக்குகிறது. இது, ஏழை கல்வி வேறாகவும், சீமான் கல்வி வேறாகவும் அமையும் போக் கினை வளர்ப்பதாகும். பள்ளி நிலையில் தாய் மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்ற அனைத்து நாட்டுக் கல்வி வல்லுநர்களின் ஒருமித்த கருத்திற்கு நவோதயா பள்ளிகள் உடன்படாதவை. மேற்கூறிய காரணங்களால் நவோதயா பள்ளிகளுக்கு ஒதுக்கக்கூடிய நிதியை கிராமப்புறங்களில் உள்ள ஆரம்பப் பள்ளிகள் இன்றியமையாத வசதிகளைப் பெறு வதற்கும், அவற்றை மேம்படுத்துவதற்கும் ஒதுக்க வேண்டும் என்ற நம்முடைய அரசின் நிலையை தெளிவுபடுத்தியிருக் கிறோம். இதே கருத்தை மேற்கு வங்கம் போன்ற மாநில அரசுகளும் தெரிவித்திருக்கின்றன. நடுவண் அரசும் உண்மை யான கூட்டாட்சித் தத்துவத்தைப் பேணிக் காக்கிற வகையில், போற்றுகிற வகையில், நம்முடைய மக்களின் உணர்வுகளை மதிக்கிற வகையில் மாத்திரமல்லாமல், இந்தியாவின் பல்வேறு தேசிய மக்களின் உணர்வுகளை ஏற்றுக்கொண்டு, நவோதயா பள்ளிகளில் இந்தியை மொழிச் சிறுபான்மை மக்கள்மீது திணிக்கிற முயற்சிகளைக் கைவிட வேண்டுமென்று கட்சி சார்பற்ற முறையில் இந்த மாமன்றத்தில் வற்புறுத்த, வலியுறுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

கல்வி என்பது சமுதாய மாற்றத்தை உருவாக்கக்கூடிய ஒரு கருவியாகும். எனவே தான் ஒரு செம்மை பொருந்திய சமு தாயத்தை உருவாக்குகிற வகையில், ஏற்றுக்கொள்கிற, சிந்திக்கத் தூண்டுகிற கல்வியே நமக்கு மிகவும் தேவையாகும். காரணம் நம்பமுடியாத, மூடநம்பிக்கைகளை வளர்க்கக்கூடிய பாடத் திட்டங்கள் இன்றைக்கு நம்மிடம் உள்ளன. காலத்தின் மாறுதலை ஒட்டிய கல்வி வழங்கப்படவில்லை. எனவே, இனி மேலாவது, விஞ்ஞானப்பூர்வமான பகுத்தறிவு எண்ணங்களை தூண்டக்கூடிய கல்வியறிவை நம்முடைய மாணவர்களுக்கு வழங்கவேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர் களை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தேர்தல் நேரத்தில் நாம் தந்த வாக்குறுதிகளை, போதுமான நிதியாதாரம் இல்லையென்றாலும் நிதிநிலை அறிக்கையில் நிறைவேற்றிக் காட்டியிருக்கிறோம். அந்த வகையில் கல்வித் துறையைப் பொறுத்த வரையில் மகளிருக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பட்டப் படிப்பு வரையில் இலவசமாகக் கல்வியை நாம் தந்திருக்கிறோம். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணை யான ஊதியம் மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்குவோம் என்று சொல்லி, அதை நிறைவேற்றுகிற வகையில் ஐந்தாவது



ஊதியக் குழுவின் அறிக்கையைப் பெற்று ஆசிரியர்களுக்கு பயன்படுகிற வகையில் 1-6-1988 முன்தேதியிட்டு நிறை வேற்றுவதாக உறுதி அளித்திருக்கிறோம்.

அதைப்போல மகளிர் கல்வி வளர்ச்சிக்கும் ஊக்கம் தருகிற வகையில் நாம் தேர்தல் நேரத்தில் தந்த வாக்குறுதி களை நிறைவேற்றுகிற வகையில் திருமணமாகாத பெண்கள் எட்டாவது வகுப்பும், அதற்கு மேலும் படித்திருந்தால் அவர் களின் திருமணச் செலவிற்காக ரூபாய் 5,000 வழங்குகிற வகையில் நிதியொதுக்கப்பட்டிருக்கிறது.

ஆரம்பப் பள்ளிகளுக்கு தேவையான அடிப்படை வசதி களைப் பெருக்கிக் கொள்கிற வகையில் ரூபாய் ஐந்து கோடி ஒதுக்கியிருப்பதும், 1989-90-ம் நிதியாண்டில் 50 தொடக் கப் பள்ளிகள் ஆதிதிராவிடர் பகுதிகளில் ஆரம்பிப்பதும் பாராட்டிற்குரியது. தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் ஐந்து வகுப்புகள் இருக்கிறது என்று சொன்னால் பெரும்பாலான பள்ளிகளில் இரண்டு அல்லது மூன்று ஆசிரி யர்கள் தான் இருக்கிறார்கள். கடந்த கால அரசாங்கம் காலியிடங்களை உடனுக்குடன் நிரப்பாததால் இன்றைக்கு இப்படிப்பட்ட நிலைமை உருவாகியிருக்கிறது. எனவே வருகிற காலங்களிலாவது இப்படிப்பட்ட நிலைமையை மாற்ற முயற்சி யெடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஆரம்பப் பள்ளிகளில் சத்துணவிற்கென்று தனியாக கட்டடம் இல்லாததால் வகுப்பறைகளில் சத்துணவு சம்பந்தப்பட்ட பொருள்களை வைத்துள்ளார்கள். அதன் காரணமாக இட நெருக்கடி ஏற்பட்டுள்ளதோடு, கல்வி கற்கிற சூழ்நிலையை அது பாதித்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு மாநிலம் முழுவதும் நர்சரி பள்ளிகள் புற்றீசல் போல வளர்ந்துவிட்டன. இவற்றை நாம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தாக வேண்டும். இவைகள் நம்முடைய மாநில அரசினுடைய மொழிக் கொள்கைக்குப் புறம்பாக இந்தியை கற்பித்துக் கொண்டிருக்கின்றன. இதையும் நம்முடைய அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல சுயநிதிக் கல்லூரிகள் என்று சொல்லக்கூடிய கல்லூரிகள் கடந்த கால அரசால் வரையறையின்றி வழங்கப் பட்ட காரணத்தால் கல்வியை ஒரு சேவையாகச் செய்ய வேண்டுமென்ற மனப்பான்மை போய், இன்றைக்கு வியாபார மாக மாற்றியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சுயநிதிக் கல்லூரி களை நாம் கண்காணித்து, மாணவர்களிடம் நன்கொடை பெறுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க நம்முடைய அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக நுழைவுத் தேர்வு, இதில் நம்முடைய நிலையை நாம் கடந்த காலத்தில் தெரிவித்து இருக்கிறோம். அந்த வகையில் நுழைவுத் தேர்வு இன்றைக்கு பொறியியல், மருத்துவம் ஆகிய பட்டப் படிப்புகளுக்கு வைக்கப்பட்டிருக் கிறது. அதிலே கிராமப்புறங்களில் உள்ள மாணவர்களுக்கு வெற்றி வாய்ப்புகள் குறைவு என்பதன் காரணமாக அவர்கள் அதிகமாக வெற்றி பெற முடியவில்லை. அவர்களுக்கு முன் னுரிமை அளிக்க வேண்டும்.

புதியதாக ஆரம்பிக்கப்படும் மின் கணக்கியல் பொறி பற்றிய கல்வியை கிராமங்களில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் ஆரம்பிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

நம்முடைய தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி என்று சொல்லி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற இந்தப் புத்தகத்தில், 37-38 ஆம் பக்கங்களில் ''மைய அரசு நாடெங்கும் அமல் படுத்தியுள்ள ஒரு திட்டத்தின் கீழ் மின் கணிப்புப் பொறியைப் பற்றிய கல்வியானது 1984-85 ஆம் ஆண்டிலிருந்து இம் மாநிலத்தில் சில மேல்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்பட்டு உள்ளன. 1986-87-ல் இப்பாடத்தை நடத்தி வரும் 30 பள்ளி களில் 17 பள்ளிகள் சென்னையிலும், 14 பள்ளிகள் கோயம் புத்தூரிலும் அதையொட்டியும் அமைந்துள்ளன'' என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இனிமேலாவது இப்பாடத்தைக் கிராமத்திலே இருக்கிற மேல்நிலைப் பள்ளிகளுக்கும் முக்கியத் துவம் தந்து தொடங்கவேண்டும் என்பதை என்னுடைய வேண்டுகோளாக இந்த நேரத்திலே வைக்க விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியான பட்டுக்கோட்டை தொகுதி யைப் பொறுத்தவரையில்—பட்டுக்கோட்டை நகரம் மிக வேகமாக வளர்ந்து வருகிற நகரம் என்பதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் நன்கு அறிவார்கள்—அங்கே மகளிர் கலைக் கல்லூரி இல்லை என்பது வேதனைக்குரிய விஷயமாகும். தஞ்சை மாவட்டத்தில் உள்ள எல்லா நகரங்களிலும் கல்லூரிகள் உள்ள நிலையில், பட்டுக்கோட்டை நகரத்திலே மாத்திரம் கல்லூரி இல்லை என்பது அந்தப் பகுதி மக்களின் பெரும் குறையாகும், அதைப்போக்குகிற வகையில்—இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கு மாத்திரம் இல்லாமல் இந்திய அரசுக்கே எடுத்துக்காட்டாக விளங்கக்கூடிய வகையில், மகளிருக்கு வேலைவாய்ப்பில் 30 சதவீதம் ஒதுக்கீடு செய்து, பெண்கள் நலம் பேணுகிற வகையில் நம்முடைய அரசாங்கம் சாதனை புரிந்திருக்கிறது. அந்த வகையில்—பட்டுக்கோட்டையில் ஒரு பெண்கள் கல்லூரியை நிறுவுவதற்கு ஆவன செய்யவேண்டு மென நான் கேட்டுக்கொள்கிறேன், தற்போது பெண்கள்,



கல்லூரி பட்டுக்கோட்டையிலிருந்து 50 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள தஞ்சையில்தான் இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று என்னுடைய தொகுதியில் தாமரங் கோட்டை கிராமத்திற்கு மேல்நிலைப் பள்ளிக்காகவும், ஆலந்தூர் கிராமத்தின் சார்பாக பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்காகவும், விக்கிரமம், சூரப்பள்ளம் மற்றும் ஏனாதி கிராமங்களின் சார்பில், உயர்நிலைப் பள்ளிக்காகவும். கிராம மக்களின் சார்பில் உரிய பங்குத்தொகை அரசுக்கு கட்டப்பட்டு உள்ளது. எனவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்தக் கல்வி ஆண்டிலேயே அவைகளை நிறைவேற்றித்தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் துவரங்குறிச்சி, செண்டங்காடு, நம்பிவயல், கீழ்க் குறிச்சி போன்ற கிராமங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகள் பல ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட பள்ளிக்கூடங்கள். அவைகளுக்கு போதுமான கட்டிட வசதியில்லை, குறிப்பாக துவரங்குறிச்சி கிராமத்தில் உள்ள உயர்நிலைப். பள்ளியில், 6, 7 மற்றும் 8-வது வகுப்புகள் தற்போது போதுமான கட்டிட வசதியில்லாமல் அருகில் உள்ள கோயிலில் நடக்கிறது. திரு விழா மற்றும் கோயில் விசேஷ காலங்களில் இந்த வகுப்பு களுக்கு பாடம் நடத்துவது என்பது முடியாத காரியமாக இருக்கிறது. இதையும் கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோன்று மதுக்கூர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டு 3, 4 ஆண்டுகளுக்கு மேலாகிறது. சாதாரண கீற்றுக் கொட்டகையிலே தற்போது இயங்கி வருகிறது. அதற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மதுக்கூர், ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் கம்ப்யூட்டர் சையன்ஸ் கோர்ஸ் ஆரம்பிப்பதற்கும் கரம்பயம் உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டு, 10 ஆண்டுகளுக்கு மேலாகியும், இதுவரையில் அறிவியல் விஞ் ஞானக் கூடம் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. அதற்கும் ஆவன செய்யவேண்டுமென இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த கால ஆட்சியிலே ஆசிரியர்கள் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை எல்லாம் நாம் நன்றாக அறிவோம். அந்தவகையிலே என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட ஆலத்தூரில் தலைமை ஆசிரியராக உள்ள திரு. பஞ்சாட்சரம் என்பவர் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் ஒரு கோரிக்கை மனுவை என்னிடம் அளித்திருக்கிறார்கள், அதிலே தமிழ்நாடு பள்ளிக் கல்விக்கான தனி விதிகளின்படி....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை அமைச்சரிடம் நேரிடையாகக் கொடுத்துவிடுங்கள்.

திரு. கே. அண்ணாதுரை : எனக்குப் பேச வாய்ப்பு அளித் தலைமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்பு மிகு உறுப்பினர் பேசுகின்றபோது குறுக்கிட வேண்டாம் என்று நான் அமர்ந்திருந்தேன். நவோதயா பள்ளிகளின் மூலம் மத்திய அரசாங்கம் மேட்டுக்குடியினருக்கு மட்டுமே வசதி அளிப்பதாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்டார்கள். ஏழைக் குழந்தைகளும் இன்று மேட்டுக்குடியினர் பெற்றுக்கொண்டிருக்கிற கல்வியைப் பெறவேண்டும் என்பதற் காக நவோதயா பள்ளி வந்திருக்கிறது. ஏன் என்று சொன்னால், இந்தியாவிலே இருக்கிற 256 நவோதயா பள்ளிகளிலே வருடத் திற்கு 6 ஆயிரம் ரூபாய்க்கும் குறைவான வருமானம் உடையவர் களின் பிள்ளைகள் 41 சதவீதம் பேர்கள் படிக்கிறார்கள். அதைப் போல இதுவரை படிக்காத, முதல்தடவையாக First Generation in le r ing அப்படி படிக்கிறவர்கள் 16 சதவீதம். இதுவரையில் அந்தக் குடும்பத்திலே படிக்கவில்லை என்று சொல்கிறவர்களுடைய சத வீதம் 16. அடுத்து, கல்லூரியை எட்டிப் பார்க்காத குடும்பத் தைச் சேர்ந்தவர்கள் 70 சதவீதம். கிராமப்புறங்களில் இருந்து வருகிற குழந்தைகள் 80 சதவீதம். தாழ்த்தப்பட்ட அல்லது அரிசன மக்கள் என்று சொல்லக்கூடிய வகுப்பார் 18 சதவீதம். மலைவாழ் மக்கள் 12 சதவீதம். இப்படி இருக்கின்றபோது, ஏழை எளியவர்களுக்குத்தான், இன்று மேட்டுக்குடிகள் படித்துக் கொண்டிருக்கிற படிப்பை மத்திய அரசாங்கம் நவோதயா பள்ளி களின் மூலம் கொடுக்க விரும்புகிறது. கோடிக்கணக்கானப் பணத்தை அது கொடுக்கிறது. நாம் வாங்காமல் இருக்கிற கார ணத்தால் பக்கத்திலே இருக்கிற கேரளம் போன்ற மாநிலம் அதைப் பெற்றுக்கொள்வதோடு, சில மாநிலங்கள் தமிழகத்திற்கு என்று ஒதுக்கிவைத்திருக்கின்ற பணத்தை எங்களுக்கு கொடுங் களேன் என்று கேட்கின்றன. நம்மைப் பொறுத்தவரையில், மொழிப் பிரச்சினை அதிலே இருக்கிறது என்ற வகையில், மொழிப் பற்றாளன் என்ற வகையில், தேசிய நெஞ்சன் என்ற வகையிலே நான் உணர்கிறேன். நாம் எல்லோரும் சேர்ந்து, ஒன்றைக் கேட்கலாம், பயிற்று மொழியாக தாய் மொழியாகிய தமிழை வைக்கவேண்டும் நீங்கள். விருப்பமுள்ளவர்கள் எடுத் துக்கொள்ளட்டும் என்று சொல்கின்ற கோரிக்கையை நாம் வைக்கலாமே ஒழிய, மொத்தத்தில் அதை வேண்டாம் என்று சொல்வது நலம் பயக்காது என்று நான் கருதுகிறேன்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி, காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர் கள், மத்திய அரசு எப்படியோ ஒரு திட்டம் கொண்டுவந்திருக் கிறபோது, அதற்காக கோடிக் கணக்கில் செலவிடுகிறபோது அதை



மாநில அரசு பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பை இழந்து விட லாமா என்ற எண்ணத்தில், இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கி றார்கள். ஒரு மாவட்டத்தில் ஒரு நவோதயா பள்ளி என்று எடுத்துக்கொண்டால், அதே மாவட்டத்தில் 50 உயர்நிலைப் பள்ளிகள், 20 மேல்நிலைப் பள்ளிகள், இப்படிப்பட்ட பள்ளிகள் அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றன. தனியாரும் நடத்துகிறார் கள். இந்தப் பள்ளிகளுக்கு ஆகின்ற செலவைப்போல் 8 மடங்கு, 10 மடங்கு செலவிட்டு ஒரு பள்ளிக்கூடம் மாவட்டத்தில் வரு கிறபோது, இலட்சம் பிள்ளைகளில் 500, 1,000 பேர் ஒரு தனி வாய்ப்பைப் பெறுகின்ற நிலைமை ஏற்படுகிறது. ஒரு வர்க்க உணர்வை ஏற்படுத்துகின்ற அளவிற்கு மத்திய அரசு பள்ளிக்கூடங்கள் இலட்சக்கணக்கில் செலவிடப்படக்கூடிய பள் ளிக்கூடமாக, பக்கத்திலே மாநில அரசு நடத்துகின்ற பள்ளிக் கூடம் ஆயிரக்கணக்கிலே கூட செலவிடமுடியாத பள்ளிக்கூடங்க ளாக அப்படியே 100 பள்ளிக்கூடங்களுக்கு ஒரு பள்ளிக்கூடம் மத்திய அரசின் பள்ளிக்கூடமாக, இப்படிப்பட்ட ஒரு தோற்றம் தருமேயானால், டில்லியைப் பார்க்கிறபோது எப்படி சில நேரத் திலே அது வானளாவிய உயர்வுடையதாய்த் தோன்றுகிறதோ, அதே தோற்றத்தை மாவட்டத்திற்கு மாவட்டம் இந்தப் பள்ளி கள் ஏற்படுத்தும். இன்னும் சொல்லப்போனால், மாணவர் களிலே எந்த முறையில் தேர்ந்தெடுத்து, எவ்வளவு ஏழைப் பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்தாலும், அதே நிலையில் உள்ள ஆயிரக்கணக்கான பிள்ளைகள் வேற்றுமைப்படுத்தப்பட்டவர்க ளாக, வேறு பள்ளிகளிலே படிக்க வேண்டிய நிலைமை நீடிக்கும். இந்த ஒரு தனி வழியை மத்திய அரசு மேற்கொள்வது ஏற் புடையது அல்ல. மாறாக Operation Black Board என்பது போன்ற சில திட்டங்கள் மத்திய அரசிடத்திலே இருக்கின்றன. அதுபோன்ற திட்டங்களை மத்திய அரசு கொண்டுவந்து உதவி செய்யுமேயானால் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் பரவலாக மக்க ளுக்கு நல்ல கல்வி கிடைக்க மாநில அரசு தகுந்த முறையில் ஒத்துழைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைச் சபாநாயகர் அவர்களே, 1989–90ஆம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களை சொல்வதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு என்னுடைய நன் றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வியில் சிறந்தது தமிழ்நாடு என்று சொல்வார்கள். பல துறைகளிலும் சிறந்த அறிஞர்களை தமிழகம் தந்திருக்கிறது. சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் பல அறிஞர்களை தமிழகம் இந்த நாட்டிற்கு, இந்தியாவிற்கு கொடுத்திருக்கிறது. இன்றைக் கும் நீங்கள் எடுத்துக்கொள்வீர்களேயானால், டில்லி தலைமைச் செயலகத்தில் 17 முக்கிய இலாக்காக்களினுடைய செயலாளர் கள் தமிழகத்தைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1989 ஏப்ரல் 7

அதுமட்டுமல்லாமல், இன்னும் பல மாநிலங்களில் தலைமைச்
செயலாளர்களாக தமிழகத்தைச் சார்ந்தவர்கள் இருந்திருக்கிறார்
கள். இப்போதும் இருக்கிறார்கள். ஆனால், இந்த நிலை
நீடிக்குமா, நீடிக்க முடியுமா, நீடிக்கப் போகிறதா என்று சொன்
னால், மிகுந்த வேதனையோடு நான் பதிலளிக்க இருக்கிறேன்.
இது நீடிப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு. சென்ற
ஆண்டில், இந்த ஆண்டிற்கு முந்தைய ஆண்டு ஐ.ஏ.எஸ். பரீட்
சையில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் வெற்றி பெற்றவர்கள்
இரண்டே பேர். 130-க்கு இரண்டு பேர் தமிழ்நாட்டைச் சார்ந்
தவர்களாக வெற்றி பெற்றிருக்கிறார்கள். அவர்களும் கூட
தமிழகத்திலேயிருந்து பரீட்சை எழுதினார்களா என்றால் இல்லை.
பயிற்சி பெற்றது டில்லியில். டில்லியில் பயிற்சி பெற்று, டில்லி
யிலே எழுதி, இரண்டு பேர் பாஸ் செய்திருக்கிறார்கள். இந்த
நிலை நீடிக்குமேயானால், நம்முடைய கதி என்னவாகும் என்
பதை எண்ணிப்பார்க்க வேண்டுமென்று இந்த அவையிலே நான்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதற்குக் காரணம், கல்வியி
னுடைய தரம் வெகுவாகக் குறைந்திருக்கிறது தமிழ்நாட்டைப்
பொறுத்தவரையிலும். முன்பு எந்த அளவிற்கு உயர்ந்ததாக
தமிழகத்தினுடைய கல்வித் தரம் இருந்ததோ, அந்தத் தரம்
பெருமளவில் பாதிக்கப்பட்டு குறைந்திருக்கிறது.

(முற்பகல் 11–20)

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம்
நாட்டல், அன்ன யாவினும் புண்ணியம் கோடி, ஆங்கோர்
ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்று பாரதி பாடியிருக்கிறார்.
ஆக அன்றைய தினம் செல்வந்தர்கள் தங்களுடைய செல்வத்
தினுடைய ஒரு பகுதியை பள்ளி நிறுவனங்கள், கல்வி நிறுவனங்
கள் கட்டுவதற்குக் கொடுத்தால் புண்ணியம் என்று கருதினார்
கள். இன்றைய தினம் என்ன? கல்வியை வியாபாரமாக்கிக்
கொண்டிருக்கிறார்கள். கல்வியைக் காசாக்கிக் கொண்டிருக்கி
றார்கள். இங்கே சபாநாயகர் அவர்கள் திருக்குறளை காலை
யிலே படித்தார்கள். அந்தத் திருக்குறளிலே கூட அவர் சொன்
னார், கல்வியே சிறந்த செல்வம் என்று. அந்தக் கல்வியை
அந்தச் செல்வத்தை, கல்வியின் மூலமாக ஈட்டுவதற்கு இன்றைய
தினம் தமிழகத்திலே ஏராளமான பள்ளிக்கூடங்கள் வந்திருக்
கின்றன என்பதையும் நீங்கள் அறிவீர்கள். சுய நிதிக் கல்லூரி
கள் என்ற பெயரில் பாலிடெக்னிக்குகள், அதேபோல என்ஜி
னியரிங் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள் இன்றைய தினம்
தமிழகத்தில் இருக்கின்றன. ஒவ்வொரு கல்லூரியும் முன்பு
5,000, 10,000 என்பது மாறி 15,000, 20,000, என்ஜினியரிங்
என்று சொன்னால் 50,000, 1 இலட்சம் ரூபாய், மெடிக்கல்
என்று சொன்னால் 2½ இலட்சம் ரூபாய், 3 இலட்சம் ரூபாய்
என்று வாங்கிக் கொண்டு மாணவர்களை அனுமதித்துக்கொண்
டிருக்கிறார்கள். இது முறைதானா? பட்ஜெட்டிலே சில
வாசகங்கள் அதைப்பற்றி வந்தாலும், அரசே அதை மேற்



1989 ஏப்ரல் 7] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

கொள்ளும் என்ற வாசகம் பட்ஜெட் உரையிலே எந்தப் பக்கத்
திலும் இல்லை. உடனடியாக சுய நிதிக் கல்லூரிகள் அனைத்
தையும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்று சொன்
னால் there can be no compromise on a sub-standard engineer and
a sub-standard medical practitioner.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த
உறுப்பினர் சொல்லுகின்ற அந்த ஆலோசனை குறித்து ஒரு
விளக்கம் சொன்னால், அவையிலே உள்ள அத்தனை உறுப்பினர்
களும் அதுபற்றி தங்கள் கருத்தைத் தங்கள் பேச்சிலே தெரி
விக்க முடியும். சுய நிதிக் கல்லூரி என்று தொடங்குவதற்காக
5, 6 ஆண்டுகளுக்கு முன்னாலே வேண்டுகோள் கிடைத்து அதை
அந்த அரசு பரிசீலித்தபோது, அரசு பேரளவான எண்ணிக்கை
யில் உள்ள மாணவர்கட்கு வேண்டிய இவ்வளவு கல்லூரிகளை
நடத்த முடியாது; அரசாங்கத்திலே நிதி வசதி போதுமானதாக
இல்லை என்ற அடிப்படையில் சுய நிதிக் கல்லூரி நடத்த அனு
மதித்திருக்கிறார்கள். அப்படி அனுமதிக்கப்பட்டு இப்போது
நடைபெறுகிற கல்லூரிகளில் தரமில்லாத கல்லூரி, மாணவர்
களுடைய பயிற்சித் தேவையை நிறைவு செய்யாத கல்லூரி,
அடிப்படையான பயிற்சிகூடக் கருவிகள் இல்லாத கல்லூரி என்ற
வகையிலே உள்ள அப்படிப்பட்ட பொறியியல் கல்லூரியோ அல்
லது பல தொழில் பயிற்சி நிலையமோ, பாலிடெக்னிக், எதுவாக
இருந்தாலும் அவற்றை ஆய்வு செய்து அவற்றைத் தொடர்ந்து
நடத்த அனுமதிப்பது குறித்து ஆய்வு செய்து அவசியமானால்
மறுக்கலாம் என்ற ஒரு கருத்து அரசாங்கத்திற்கு இருக்கிறது.
அவற்றையெல்லாம் அரசு எடுத்துக்கொள்ள முடியுமா என்று
கேட்டால் அவ்வளவு பெரிய அளவிலான நிதியை இந்த அரசு
இந்தக் காலக்கட்டத்திலே ஒதுக்குவதற்கான வாய்ப்பு இல்லாத
ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதையும், எனவே, முறையாக
நடக்குமேயானால், அதை நடத்த அனுமதிக்கலாம், முறையில்லா
மல் நடப்பனவற்றைக் கடுமையான நடவடிக்கைக்கு ஆளாக்க
லாம் என்னும் நோக்கத்தில் அதற்கான நிபுணர் குழு அதைப்
பரிசீலித்து அறிவிக்க வேண்டுமென்று அரசு தெரிவித்திருக்கிறது.
எனவே, இதுபற்றி மேலும் அரசு தகுந்த ஆலோசனை நடத்தும்.

திரு. எஸ். ஆர், பாலசுப்பிரமணியம் : துணை சபாநாயகர்
அவர்களே, நான் சொல்ல வருவது கொள்ளையோ கொள்ளை
என்று கொள்ளையடித்துக்கொண்டிருக்கிறார்களே தவிர,
தரமான கல்வியை அதன் மூலம் தரவேண்டுமென்று யாரும்
விரும்பிச் செய்யவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன். முடிந்த வரையில் அதைப்போன்ற
அனைத்து கல்லூரிகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும்.
அங்கே தரமான கல்வியைக் கொடுப்பதற்கு முயற்சி செய்ய
வேண்டும். ஏனென்றால் போதிய உபகரணங்கள் இருந்தால்

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1989 ஏப்ரல் 7

என்று சொன்னார்கள்—அங்கே கட்டிடம் கிடையாது, உபகரணம்
கிடையாது, ஆஸ்பத்திரி கிடையாது என்றாலும் மருத்துவக்
கல்லூரி, அதே போல என்ஜினீயரிங் கல்லூரி என்ற
நிலைமை இருக்கிறது. இந்த நிலைமை மாறவேண்டும், அரசு
மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.
குறிப்பாக, மருத்துவக் கல்லூரியிலே படிக்கின்ற ஒரு மாணவன்
அந்த வகுப்பிற்கு வந்தால் அந்தப் பேராசிரியர் என்ன பேசி
னாலும் கேட்க மாட்டேன் என்று இருப்பதைப் பார்த்து ஒரு
நாள் பேராசிரியர் அவனைத் தனியாக அழைத்துக் கேட்டிருக்
கிறார். இவ்வளவு ரூபாய் செலவு செய்து உன்னுடைய தந்தை
சீட்டு வாங்கிக் கொடுத்திருக்கிறார், ஏன் இதிலே நீ அக்கறை
செலுத்தமாட்டேன் என்கிறாய் என்று கேட்டபோது, எனக்கு
மருத்துவக் கல்வி பயில்வதிலே கொஞ்சம் கூட இஷ்டம் இல்லை,
நான் அதைப் படிக்கக் கூடாது என்பதற்காகவே குறைந்த மார்க்கு
கள் வாங்கினேன். என்றாலும் என்னுடைய தந்தை பணம்
படைத்தவர் என்ற காரணத்தினாலே 2½ இலட்சம் ரூபாய்
கொடுத்து என்னை இந்தக் கல்லூரியிலே சேர்த்திருக்கிறார்கள்
என்றான் என்றும், ஏன் அப்படிச் சேர்த்தார்கள் என்று கேட்ட
போது என்னுடைய தந்தை ஒரு பிரபலமான மருந்து தயாரிக்கும்
கம்பெனியினுடைய உரிமையாளர், எனவே, நான் டாக்டராக
இருக்க வேண்டும் என்று அவர் சொன்னதாக என்னிடத்திலே
அந்தப் பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக,
இது போன்ற குறைகளை நீக்க வேண்டுமென்று நான் பணிவோடு
கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல இன்ஸ்டன்ட் டிகிரிகோர்ஸ்—பத்திரி
கையிலே கூட அதைப்பற்றி கட்டுரைகள் வந்தன.
திடீரென்று உங்களுக்கு டாக்டர் பட்டம் வேண்டுமா என்று விளம்
பரம் செய்வதைப் போல, செய்து, ஹரிசோனா பல்கலைக்கழகம்,
அர்ஜென்டைனா பல்கலைக்கழகம், ஸ்விட்சர்லாந்து பல்கலைக்
கழகம், ஜெர்மனி பல்கலைக்கழகம் என்றெல்லாம் பேர் போட்டு
அங்கிருந்து டாக்டர் பட்டங்கள் வழங்குவதாக இரண்டாவது,
மூன்றாவது கூட படிக்காதவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்
குவதாக சில பேர்வழிகள் தமிழகத்திலே திரிந்து கொண்டிருக்கி
றார்கள். அப்படிப்பட்ட பட்டங்களை அவர்கள் இங்கே கொடுப்
பதாகச் சொல்லி, அதுபற்றிய கட்டுரை ஒரு பிரபலமான ஆங்கில
ஏட்டிலே சென்ற ஆண்டு வந்திருக்கிறது. அதேபோல, இன்
றைய தினம் சென்னையிலே கூட, 'மானேஜ்மென்ட் புரொ
பஷனல்ஸ் அசோசியேஷன் என்று தி.நகரிலே ஒரு அசோஸியேஷன்
இயங்கிக்கொண்டிருக்கிறது. யார் அதனுடைய இயக்குநர், யார்
அதனுடைய முதல்வர், அதனுடைய போர்ட் ஆஃப் மானேஜ்
மென்ட் யார் என்பது எதுவுமே கிடையாது. அந்த பிராஸ்
பெக்டஸை வாங்கிப் பார்த்தால் எதுவுமே கிடையாது. ஆனால்,
படித்தீர்களானால், யாருக்குமே ஆசை வரும். உயர் கல்வி
கிடைக்கிறது, பெரிய கல்வி கிடைக்கிறது, பல வெளிநாடு



1989 ஏப்ரல் 7] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

களிலே நமக்கு கல்வி கிடைக்கிறது என்று நினைத்துக்கொண்டு
அவர்கள் கேட்கிற பணத்தை எல்லாம் கொடுத்துவிட்டு ஏமாந்த
வர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், ஓய்வுபெற்றவர்களுக்கு
வேலை தருவதாகச் சொல்லி, அவர்களிடத்தில் 5,000, 10,000
என்று வசூல் செய்துகொண்டு, திரும்பக் கேட்கச் செல்கின்ற
நேரத்தில், அவர்களுக்கு பணம் திரும்பத் தராமல் அங்கே பெரிய
மோசடி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அவர்கள் மீதெல்
லாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு கல்வி
அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், நர்சரி பள்ளிக்கூடங்களிலேயிருந்து ஒவ்வொரு
வகுப்பிற்கும் இன்றையதினம் கட்டணம் வசூல் செய்யப்படு
கிறது. நன்கொடை வசூல் செய்யப்படுகிறது. ஆயிரம்,
இரண்டாயிரம், ஐயாயிரம், பத்தாயிரம் என்று ஒவ்வொரு
வகுப்பிற்கும் வசூல் செய்கின்ற அந்தப் பழக்கம் அதிகரித்து
வருகிறது. நிச்சயமாக அந்தப் பழக்கத்தை நிறுத்தியாக
வேண்டும் என்று நான் கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்
கொள்வேன்.

சென்ற ஆண்டு, உதாரணமாக, பி.காம். வகுப்பிற்கு என்னி
டம் ஏராளமான பரிந்துரைகள் செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொண்டு வந்தார்கள். நான் சொன்னேன், 80 சத
விகிதத்திற்குக் குறைவாக மார்க் இருந்தால் கிடைக்காது என்று
சொன்னேன். அதேபோல் கணக்கு படிக்காவிட்டால், என்ன
தான் காமர்ஸ் படித்து இருந்தாலும்கூட, கொடுக்கக்கூடாது
என்று அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது, எனவே அங்கு
கிடைக்காது என்று சொன்னபோது அந்த மாணவர்கள் எல்லாம்
சிரித்துக்கொண்டே என்னிடம் சொன்னார்கள்—பணம் கொடுத்
தால், கணக்கு என்ன, காமர்ஸ் கூட படிக்காமல் பி.காம்-இலே
சீட் கிடைக்கிறது என்று சொன்னார்கள். எங்களுடைய மாவட்
டத்திலேயே அதிக மார்க் வாங்கி காமர்ஸிலே பாஸ் செய்த மாண
வனுக்கு பி. காமிலே இடம் கிடைக்கவில்லை. திருப்பத்தூரிலே
போய் டி.பி.எம்.-இலே தான் அவனாலே சீட் வாங்க முடிந்தது.
இந்த நிலமைகளையெல்லாம் நிச்சயமாக மாற்றியமைக்க
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.........

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் சொல்கிற, அப்படி ஒரு குற்றம் நடைபெற்றிருந்
தால் அந்த விவரத்தை அவர்கள் எனக்குத் தருவார்களேயானால்,
அதுபற்றி நடவடிக்கை எடுக்கும்படி துறையினருக்கு நான் தெரி
விக்க முடியும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : துணை சபாநாயகர்
அவர்களே, நிச்சயமாக அதைப்பற்றிய விவரங்களை நான்
அவரிடம் கொடுக்கிறேன். அதைப்போல, இன்றையதினம்
பள்ளிக்கூடங்கள் பலவற்றிலே போதிய வகுப்பறைகள் இல்லா

மல், கட்டிடங்கள் இல்லாமல் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பது பேராசிரியர் அவர்களுக்குத் தெரியும். 50 சதவிகிதம் பள்ளிகள் அதைப்போல் இருக்கின்றன. அதற்காக ஒதுக்கியிருக்கிற தொகை 5 கோடி ரூபாய் போதாது என்பது என்னுடைய எண்ணம். அதற்காக அதிகமாக, தொகையை ஒதுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், பல பள்ளிக்கூடங்களில் போதிய ஆசிரியர்கள் இல்லை. ஓராசிரியர், இரண்டாசிரியர் பள்ளியிலே ஓராசிரியர் இருக்கிறார். 5 வகுப்புகள் இருந்தால், 3 ஆசிரியர், 2 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். உதாரணமாக, என்னுடைய தொகுதியில், பொங்கலூர் தொகுதியில், சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் ஜே. கிருஷ்ணாபுரத்தில் ஒரு இடைநிலைப் பள்ளி இருக்கிறது. சென்ற ஆண்டு அதுஹைஸ்கூலாக அப்கிரேட் செய்யப்பட்டது, உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. உயர்த்தப்பட்ட நேரத்தில் அங்கே ஐந்து ஆசிரியர்களைப் போட்டார்கள். ஒரு மாதம் கழித்து, இரண்டு மாதம் கழித்து 5 ஆசிரியர்கள் தேவை இல்லை, நான்கு ஆசிரியர்கள் போதும் என்று ஒரு ஆசிரியரைக் குறைத்து இருக்கிறார்கள். ஏன் குறைத்திருக்கிறார்கள், குறைக்க வேண்டிய அவசியம் என்ன, அங்கே போதிய மாணவர்கள் இல்லையா என்று கேட்டால் நிச்சயமாக போதிய அளவு மாணவர்கள் இருக்கிறார்கள், போதிய அளவு வகுப்புகள் இருக்கின்றன.

என்றாலும், வேண்டுமென்றே ஒரு ஆசிரியர் குறைக்கப்பட்டு இருக்கிறார். அவர்கள் மீது அதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், திருவாடானை தொகுதியில் கண்ணன்குடி, அனுமந்தகுடி என்ற இடங்களில் ஒரு வகுப்புக்கு 120 பேர் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவற்றை இரண்டு வகுப்புகளாக, மூன்று வகுப்புகளாக மாற்றி அதிக ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், நீண்ட நாட்களாக ஆசிரியர்களுடைய கோரிக்கைகள் இருந்து கொண்டிருக்கின்றன.

ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் மத்திய அரசிற்கு இணையான சம்பளம் அவர்களுக்கு வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு ஆளுநர் ஆட்சியில் 70 ரூபாய் அதிகரிக்கப்பட்டது, வரலாறே காணாத வகையில் என்றாலும் கூட, மத்திய அரசிற்கு இணையான ஊதியம் இன்னும் அவர்களுக்குத் தரப்படவில்லை. கமிஷனுடைய ரிப்போர்ட் வர வேண்டும் என்று சொல்கிறார்கள். அதற்காகக் காத்திராமல், இன்றையதினம் கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதைப் போல, யு.ஜி.சி. ஸ்கேல் வழங்கப்படுவதைப் போல, மத்திய அரசுக்கு இணையான சம்பளம் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு உடனடியாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)





முக்கியமான விஷயத்திற்கு வருகிறேன். தயவுசெய்து இன்
னும் சில மணித்துளிகள் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
விளையாட்டுகளில் நம்முடைய மாநில அரசாங்கம் அதிக
அக்கறை செலுத்துவது இல்லை. அதிக ஊக்கம் அளிப்பதில்லை
என்கிற குற்றச்சாட்டு பலமாகவே, நீண்ட நாட்களாக இருந்து
வருகிறது. குறிப்பாக, கேரளாவைப்போல, கேரளத்தில் இன்
றையதினம் பி.டி. உஷா, வலசம்மா, ஷைனி ஆப்ரகாம் என்று
வரிசையாக விளையாட்டு வீராங்கனைகள் வருகிறார்கள் என்று
சொன்னால், அவர்களுக்கு போதிய ஊக்குவிப்பு இருக்கிறது. உட
னடியாக ஊக்குவிக்கிறார்கள், தேவையான பணம், நிதி ஒதுக்கு
கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் அந்த நிலைமை இல்லை.
சென்ற ஆண்டு நாம் ரஞ்சித் டிராபியில் வெற்றி பெற்றோம்.
கிரிக்கெட்டில். அதேபோல் இன்றையதினம் மேற்கு இந்தியத்
தீவுக்குச் சென்ற டீமில் நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த
3 பேர் இடம் பெற்று இருக்கிறார்கள். அதனுடைய மேலாளர்
நம்முடைய தமிழகத்தைத் சேர்ந்தவராக இருக்கிறார். இன்
றையதினம் ஒருவர் கையில் அடிபட்டு திரும்பி வருகிற நிலையில்
அவருக்குப் பதிலாக சென்று இருப்பவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த
வர். இவர்களுக்கு எல்லாம் நாம் என்ன ஊக்கம் தந்து இருக்
கிறோம், என்ன ஊக்கம் தரப் போகிறோம் என்று நான் அறிந்து
கொள்ள ஆசைப்படுகிறேன்.

[முற்பகல் 11-30]

அதேபோல் கோவையில் இப்போது பெடரேஷன் கப் 'ஃபுட்
பால் டோர்னமெண்ட்' நேரு ஸ்டேடியத்தில் நடைபெற்றுக்
கொண்டிருக்கிறது. அந்த ஸ்டேடியத்தை சில நாட்களுக்கு முன்
னால் நான் போய்ப் பார்த்தேன். பரிதாபகரமாக இருக்கிறது.
10 ஆண்டுகளுக்கு முன்னால் 3-ஆவது பெடரேஷன் கப் நடத்திய
பெருமை கோவைக்கு உண்டு. அன்றைய தினம் அந்த ஸ்டேடியம்
கம்பீரமாக இருந்தது. விளக்கொளி கம்பீரமாக இருந்தது. இன்
றையதினம் அந்த விளக்குகள் எல்லாம், பிளக், லைட்டுகள்
எல்லாம் பழுதடைந்து அவைகள் பயன்படாத ஒரு நிலை ஏற்பட்
டிருக்கிறது. அதேபோல் மைதானத்தில் புல் இல்லை. புல்லை
அவர்கள் வாங்கி வந்து வளர்த்து இன்று நடத்திக்கொண்டு இருக்
கிறார்கள். அதற்கு முன்பு அந்த அறைக்கு 500 ரூபாய் வாடகை
வாங்கிக்கொண்டு இருந்தார்கள். ஃபுட் பால் சங்கத்திடமிருந்து
500 ரூபாய் வாடகை அப்போது பெறப்பட்டது. திடீரென்று
இன்றைய தினம் 10 ஆயிரம் ரூபாய் வாடகை வேண்டும் என்று
கேட்டு இருக்கிறார்கள். இப்படி இருந்தால் அங்கே விளையாட்
டுக்கு ஊக்கம் அளிப்பதாக கருதப்படுமா என நான் கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன். அதைக் குறைக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கவிஞர் கண்ணதாசன் அவர்களுக்கு இந்த ஆண்டு
நினைவு மண்டபம் ஏற்படுத்தப்படும் என்று மாண்புமிகு கலைஞர்
அவர்கள் இங்கே சொன்னார்கள். நான் உள்ளபடியே வரவேற்

கிறேன், நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் சில
நாட்களுக்கு முன்னால் அவர் பிறந்த ஊருக்கு நான் சென்றிருந்
தேன். சிறுகோடல்பட்டிக்கு அவர் பிறந்த வீட்டிற்குச் சென்
றிருந்தேன், அது பாழடைந்து இருக்கிறது. அந்த வீட்டின்
நடுவில் மரம் முளைத்து கூரையை பொத்துக்கொண்டு மேலே
வந்திருக்கிறது. அந்த வீட்டை அரசு வாங்கி அவருடைய நினை
வுச் சின்னமாக மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

அதேபோல் முன்பு அவர் இறந்த நேரத்தில் நினைவு மண்ட
பம் மட்டும் ஏற்படுத்துவதாக சொல்லவில்லை, அவருடைய
பெயரால் ஒரு நூலகம் ஏற்படுத்துவோம் என்று அன்றையதினம்
இருந்த அன்றைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
எனவே கவிஞர் கண்ணதாசன் அவர்கள் பெயரால்—அவர்
காரைக்குடிக்கு மட்டும் சொந்தம் அல்ல, தமிழகம் முழுமைக்கும்
சொந்தம்—முடிந்தால் சென்னையில் புதிய ஒரு நூலகம் அவரு
டைய பெயரால் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

அதேபோல் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் மத்திய
அரசினுடைய பல திட்டங்கள் நல்லபடியாக செயல்படுத்த நான்
தயாராக இருக்கிறேன். Operation Black Board
என்று சொன்னார்கள். அதை நல்லமுறையில் பயன்படுத்தி
கொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்
கிறேன். குறைந்தபட்சம் 2 வகுப்பறை இருக்க வேண்டும்.
ஓர் ஆசிரியர் பள்ளி என்று சொன்னால் 2 ஆசிரியர்களாக அதை
மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பாட நூல்கள், தேசப் படங்கள், குளோப்புகள்,
விளையாட்டு சாதனங்கள்; இசைக்கருவிகள், கரும் பலகைகள்
போன்ற கற்பிப்புச் சாதனங்கள் வாங்குவதற்கு சென்ற ஆண்டு
1987–88 ஆம் ஆண்டு 5,995 ஆரம்பப் பள்ளிகளுக்கு 428 லட்சம்
பெற்று இருக்கிறார்கள் என்று இங்கே அறிக்கையில் சொல்லி
யிருக்கிறீர்கள். 1988–89 ஆம் ஆண்டில் 619 ஓர் ஆசிரியர்
பள்ளிகளுக்கும், 8,212 ஆரம்பப் பள்ளிகளுக்கும் கட்டுமானப்
பணிகள் நடைபெறுவதாக சொல்லியிருக்கிறீர்கள். இன்னும்
அதிலே அதிகமான தொகை, நிதி பெறுவதற்கு முயற்சிக்க
வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மத்திய அரசு நடத்துகின்ற பள்ளிகளை நம்மு
டைய மாநிலத்திலே இன்றைக்கு கொண்டுவருவதிலே நிச்சயமாக
ஒரு குறையும் வராது. 5-ஆவது வகுப்புவரை படித்தவர்கள்
அவர்கள் தேர்வு எழுதி ஒரு மாவட்டத்திற்கு 80 பேர் தேர்ந்
தெடுக்கப்படுகிறார்கள். ஏழை வீட்டு பிள்ளைகள், தாழ்த்தப்
பட்ட மக்கள், பழங்குடி மக்கள் இவர்களுக்கு எல்லாம் தரமான,
சீரான உயர் கல்வி கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.
அனைத்தும் இலவசம், தங்குவதற்கு இடம் இலவசம், உணவு



இலவசம், சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகிறது. அவர்கள்
எல்லாம் பணக்கார வீட்டுப் பிள்ளைகள், அல்லர் இன்றைய
தினம் கான்வெண்டில் படிக்கிறார்களே அதுபோல அதற்குச்
சமமான கல்வி அல்லது அதைவிட உயர்ந்த கல்வி கிடைப்ப
தற்கு அதில் வழியிருக்கிறது என்று சொன்னால், இந்த மத்திய
அரசினுடைய பள்ளிகளை ஏற்றுக்கொள்வதில் தவறு இல்லை.
நிச்சயமாக மொழித்திணிப்புக்கு காங்கிரஸ் கட்சி ஒருபோதும்
அங்கீகாரம் தராது என்பதை நான் உறுதியாக சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். காரணம் மும்மொழியை கற்பதே
மொழித் திணிப்பு என்று சொன்னால் ஏற்கெனவே Central
Board of Secondary Education அவர்களுடைய பள்ளிகள்
150 பள்ளிகள் அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் தமிழகத்
தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அத்தனை பள்ளிகளிலும்
மும்மொழித் திட்டம் தான் இருக்கிறது. தமிழ், ஆங்கிலம்,
இந்தி கற்பிக்கப்படுகிறது. அந்த 150 பள்ளிகளிலும் கற்பிக்கப்
படுவது இந்தி திணிப்பு அல்ல, ஆனால் இந்த 20 பள்ளிகளில்
கற்பிக்கப்படுகின்ற கல்வி தான் திணிப்பு என்று சொன்னால்
அதை நிச்சயமாக நான் ஏற்றுக்கொள்ள முடியாது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் Central Board of Secondary Education அந்தக்
குழுவினுடைய அடிப்படையில் நடைபெறுகின்ற கல்வி நிலையங்
களையும், நவோதயா பள்ளிகளும் ஒரேமாதிரியானவை என்ற
எண்ணத்தில் அவர்கள் இங்கே விளக்கங்கள் பேசுகிறார்கள்.
அந்தப் பள்ளிகளில் இந்தி பயிற்சி மொழியாக இடம் பெறாது.
ஆனால் நவோதயா பள்ளிகளில் இந்தி அல்லது ஆங்கிலம் பயிற்சி
மொழி. எனவே அந்த அளவுக்கு இந்திக்கு முக்கியத்துவம்
தருகின்ற ஒருமுறை கிராமப் பகுதிகளில் புகுத்தப்பட வேண்டு
டுமா ? மத்திய அரசு அலுவலர்களுக்காக ஒரு மாநிலத்தி
லிருந்து இன்னொரு மாநிலத்திற்கு மாறுதல் பெறுகிறவர்களுக்
காக என்ற அந்த அடிப்படையிலே தொடங்கப்பட்ட
Central Board of Secondary Education அதனுடைய
பாடத்திட்டத்தின் அடிப்படையிலே நடைபெறுகின்ற பள்ளி
களைப்போல கிராமப்பகுதிகளிலே, உள்ளூரிலே வாழுகின்ற
மக்களுக்கு இப்படி வேறு மாநில மொழி, மத்திய அரசினுடைய
ஆட்சி மொழி என்னும் பெயரில் தாய்மொழியின் இடத்தில்
புகுத்தப்படவேண்டுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** மாண்புமிகு துணைச்
சபாநாயகர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் சொல்கின்ற
தத்துவத்தை ஏற்றுக்கொள்வோமேயானால், இங்கிலாந்திலே
பிறந்த ஒருவர், இங்கிலாந்திலே கல்வி கற்பதானால், ஆங்கிலம்
மட்டுமே கற்றால் போதும். நிலைமை அதுவா என்றால்,
கிடையாது. மூன்று மொழிகளைக் கற்கிறான். ஒன்று தாய்
மொழி, ஆங்கிலம். அடுத்தது, ஒரு ஐரோப்பிய மொழி, எந்த

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1989 ஏப்ரல் 7

ஐரோப்பிய மொழியானாலும் சரி, கற்கிறான். முன்பெல்லாம்
'ஃபிரென்ச்' மொழி படித்துக் கொண்டிருந்தார்கள். 1962-ஆம்
ஆண்டுக்குப் பின்னாலே அதிகமாக ருஷ்ய மொழி கற்றார்கள்.
விண்வெளி ஆராய்ச்சி வந்த காரணத்தினாலே அதைக் கற்றார்
கள். 'ஸ்பேஸ் டெக்னாலாஜி''-க்காக ருஷ்ய மொழி கற்றார்
கள். இன்று வேறு மொழி கற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது
போக ஒரு பண்டைய மொழி, பெரும்பாலும் லத்தீன் கற்
கிறார்கள். இல்லாவிட்டால் கிரேக்கம் கற்கிறார்கள். ஆகவே
மும்மொழித் திட்டம் என்பது ஏதோ நம்முடைய ஊரிலே திணி
கப்படுகின்ற ஒரு திட்டமாக நாம் நினைக்கவேண்டியதில்லை.
என்றாலும்கூட தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நம்மு
டைய கல்வி நிலையங்களிலே மும்மொழி வேண்டாம் என்றால்
நாம் விட்டு விடலாம். ஆனால், படிக்க விரும்புகிறேன்,
படிக்க ஆசைப்படுகிறேன் என்று சொல்பவர்களுக்குத் தடை
போடுவது முறைதானா, நியாயந்தானா ? இவ்வளவு உயர் கல்வி
கிராமப்புறங்களிலே வாழுகின்ற பிள்ளைகள் 75 சதவீதம் பேர்,
அந்தப் பள்ளிக்கூடங்களிலே படிக்கப் போகிறார்கள். நகர்ப்
புறங்களிலே பிறந்தவர்கள் மட்டுமல்ல, கிராமத்திலே பிறந்து
நகரத்திற்கு போய் படித்து இருந்து அந்தப் பள்ளிக் கூடத்து
சர்டிபிகேட்டை வாங்கி வந்தால் அந்தப் பிள்ளை நகரத்திலே
பிறந்தவனாகக் கருதப்படுவானே தவிர, கிராமப்புறத்திலே
பிறந்த குழந்தையாகக் கருதப்பட மாட்டான். ஆக, 75 சத
வீதம் சாதாரணமான கிராமப்புறத்திலே பிறந்து வளர்ந்த
குழந்தைகளுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம்
இடமும், அப்படி ஓர் உயர் கல்வி இலவசமாகக் கல்வி கிடைப்
பதை ஏன் நாம் தடுக்க வேண்டும். அப்படி நாம் தடுத்தால்
நிச்சயமாக எதிர்காலத்தில் சமுதாயம் நம்மைச் சபிக்கும் என்று
நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல சட்டக் கல்லூரியைப் பொறுத்தவரையில்
இங்கே ஒரு University for Law தனியாக
ஏற்படுத்த வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்
கிறேன். அப்படிக் கேட்டுக்கொள்வதோடு மட்டுமல்லாமல்
சட்டக் கல்வியிலே இங்கே எந்தவிதமான ஆராய்ச்சிகளும்
செய்யப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன். Harward School ஐப்-போல, மற்ற இடங்களிலும் சட்டக்
கல்வியிலே ஆராய்ச்சிகளைச் செய்வதற்கு வழி செய்யவேண்டு
மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, டி.வி. யைப் பயன்படுத்த வேண்டும். கல்விக்
காக நாம் டி.வி.யைப் பயன் படுத்தவேண்டும், டி.வி.யின் மீது
தயவுசெய்து கோபம் காட்டவேண்டாம் என்று நான் பணிவன்
போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களை, ஆங்கிலத்தை தாய்மொழியாகவும் இலத்



1989 ஏப்ரல் 7] [திரு. மா. மணிமாறன்]

தீனை இலக்கியத்திற்காகவும், ருஷ்யமொழியை ஆராய்ச்சிக்காக
வும் படிக்கிறார்கள் என்று சொன்னார்கள்; வரவேற்கிறோம்.
ஆனால் இந்தியை எதற்காக படிக்கவேண்டுமென்று மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் விளக்குவார்களா ?

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** நான் டி.வி.யைப்
பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறேன். அதைப்பற்றி பேசியதற்குப்
பின்னாலே, சந்தர்ப்பம் கொடுத்தால் அதைப்பற்றியும் பேசு
கிறேன். டி.வி. யை பொறுத்தவரையில் ஏதோ உத்தரவு
பிறப்பிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். சென்னையிலே
இருக்கிற டெலிவிஷன் நிலையத்திலே 35 கேமராமேன்கள்
இருக்கிறார்கள். அவர்கள் யாருக்கும் எந்தவிதமான சுற்றறிக்கை
யும், தமிழக அரசின் நிகழ்ச்சிகளை எடுக்கக்கூடாது என்று,
குறிப்பாக முதலமைச்சர் அவர்கள் 'லாங் ஷாட்'-டில் காட்ட
வேண்டுமென்றும் சுற்றறிக்கை அனுப்பப்படவில்லை. அது
மட்டுமல்ல, வாய்மொழி உத்தரவுகளும் நிச்சயமாகப் பிறப்பிக்க
படவில்லை என்பதை அந்த கேமராமேன்—இடத்திலேயிருந்து
மட்டுமல்ல 'செய்திகளுக்குரிய பொறுப்பாளர் இடத்திலேயிருந்து
நான் தெரிந்திருக்கிறேன். அதுமட்டுமல்ல, சென்ற சில நாட்
களுக்கு முன்னாலே இங்கே Mr. Geoffrey Howe வந்திருந்
தார்கள். இங்கிலாந்து நாட்டு அமைச்சர் அவர்கள் இங்கே
வந்திருந்தார்கள். அவர்களுடைய நிகழ்ச்சிகளைப் படம் எடுப்
பதற்கு இங்கே இருக்கின்ற இன்பர்மேஷன் டிபார்ட்மெண்ட்
எந்தவிதமான தகவலையும் அவர்களுக்குத் தராவிட்டாலும்கூட,
இவர்கள் கொடுத்த அந்தப் படங்களை அங்கே போட்டு அதை
நல்லமுறையிலே காட்டியிருக்கிறார்கள் (குறுக்கீடு).

**திரு. கோ. பூவராகன் :** மாண்புமிகு துணைச் சபாநாயகர்
அவர்களே, நம்முடைய உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம்
அவர்கள் டி. வி. நிலையத்தைப் பற்றிச் சொன்னார்கள். இரண்டு
மூன்று தினங்களாக செய்தி படிக்கின்ற போது ''பெண்களை
இழிவு செய்யும் மடமையை கொளுத்துவோம்'' என்று போடப்
பட்டு செய்தி படிக்கின்றார்கள். இதேநிலை டெல்லியிலே நியூஸ்
படிக்கின்றபோது ஹிந்தியில் இதனை போடப்பட்டு படிக்கின்றார்
களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** அவர் எதை குறிப்
பிடுகிறார் என்று எனக்குத் தெரியவில்லை. நிச்சயமாக இது
போன்ற தவறுகள் நடைபெறவில்லை என்பதைத்தான் நான்
இங்கே குறிப்பிட்டேன். டெலிவிஷனை முழுமையாக தமிழக
அரசும் கல்வித் துறையும் பயன்படுத்தவேண்டுமென்று கேட்டுக்
கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

(முற்பகல் 11-40)

***திரு. எல். கணேசன்** (முதலமைச்சரின் பேரவைச் செயலர்) :
மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாலே

பேசிய மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஒரு விளக்கம் தரவேண்டும். ஆங்கில நாட்டில் 3 மொழிகள் படிக்கின்றார்கள் என்று சொன்னார்கள். இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப் பினர் மணிமாறன் அவர்கள் ஒரு வினா தொடுத்தார்கள். அதற்கு விடை தரவில்லை. ஆங்கில நாட்டில் Is it a compulsary education there ? Is it a must ? Or is it an option என்பதை விளக்க வேண்டும். (குறுக்கீடு) அது விரும்பி படிக்கிற ஒன்றா என்று கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு) சற்றுப் பொறுமையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, ஏதோ ஏழைஎளிய குழந்தைகள் எல்லாம் உயர் கல்வி, மேட்டுக் குடியினர் படிக்கக்கூடிய கல்வியைப் பெறு வதற்கு நவோதயா பள்ளி என்கிறார்கள். இந்தத் தமிழ்நாட்டில் பல கோடி மாணவர்கள் படிக்கிற பள்ளிகள் இன்னும் வசதியான பள்ளிகளாக ஆக்கப்படவேண்டும்; இன்னும் கல்வியின் தரம் உயர்த்தப்படவேண்டும்; நிதிப் பற்றாக்குறை கடினமாக இருக் கிறது என்று கல்வி அமைச்சர் அவர்களும் சொல்கிறார்கள்; நீங்களும் சொல்கிறீர்கள். அந்தப் பணத்தை இப்போது இருக்கிற பள்ளிகளுக்குக் கொடுத்து, இந்தப் பள்ளிகளின் தரத்தை உயர்த்து வதற்கு, கல்வி சிறப்பு நிலை அடைவதற்கு கொடுத்தால் என்ன ? ஆகவே, இங்கே நவோதயா பள்ளி மாணவர்கள் படிப்பதற்கு இல்லை; இந்தியைத் திணிப்பதற்காகத்தான். அதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம், அதிலே என்ன தவறு?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விடையைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 'Is it a must'? he has asked It is a 'must' In England, three language formula is compulsory. Every student who goes to school must learn English, one continental language and of course, an ancient language. Mostly they prefer Latin. They can even take Greek.

இரண்டாவதாக அவர்கள் கொடுத்த இந்தப் பணத்தை ஏன் கொடுக்கிறார்கள்? அதுதான் Operation Blackboard. Operetion Blackboard என்பது தரமான கல்வி அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்பது. ஒவ்வொரு பள்ளிக்கும் தேவையான அனைத்து சாதனங்களும் இருக்க வேண்டும். கட்டட வசதி இருக்க வேண்டும்; இடவசதி இருக்க வேண்டும்; கரும்பலகை இருக்க வேண்டும்; மேசை, நாற்காலிகள் இருக்க வேண்டும். இப் படிப்பட்ட சாதனங்கள் அனைத்தும் கிடைக்க வேண்டும் என் பதற்காகத்தான் ஏராளமான பணத்தை கொடுக்கிறார்கள். இன் னும் பணம் வேண்டுமென்றால் கேளுங்கள்; நிச்சயமாக உங் களுக்குத் துணையாக நிற்போம் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.





அடுத்தபடியாக இன்னொன்றையும் சொன்னார்கள். ஏதோ நாங்கள் இந்தியைத் திணிக்கிறோம் என்று சொல்வது அர்த்த மற்றப் பேச்சு. எந்த நிலையிலும் இந்தியைத் திணிக்கும் திட்டம் கிடையாது. ஆனால் இந்தியைப் படிக்கிறார்கள். தட்சிண பாரத இந்தி பிரச்சார சபா பக்கத்தில் நம்முடைய நாடாளு மன்றச் செயலாளர் போய்ப் பார்த்தால் தெரியும். எத்தனை ஆயிரக்கணக்கான பேர்கள் படித்துக்கொண்டு வெளியே வரு கிறார்கள் என்பது தெரியும்; நீங்கள் பார்க்க முடியும். அதனால் நான் இந்திக்கு வக்காலத்து வாங்குகிறேன் என்று நீங்கள் எண்ண வேண்டாம். இந்திக்கு வக்காலத்து வாங்கவேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. ஆனால் கூடுதலாக ஒரு மொழியைக் கற்க வேண்டுமென்று சொல்கிறோம் அது இந்தியாகக்கூட இருக்க லாம். நாம் ஒரிசாவுக்குச் செல்கிறோம் என்றால், நவோதயா திட்டத்தின் கீழ் ஒரியா மொழியைக் கற்கவேண்டும். நாம் மேற்கு வாங்காளத்திற்குச் செல்கிறோம் என்றால் வங்காளம் படிக்க வேண்டும். அதைப்போல உத்தரப் பிரதேசத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு வருகிறார்கள் என்றால், தமிழை கற்கவேண்டும் என்று இருக்கிறது. அதிலே பயிற்சிமொழி பற்றி உங்களுக்கு ஒரே ஒரு சந்தேகம் இருக்கிறது. தமிழை பயிற்சி மொழியாக ஆக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். நிச்சயமாக நவோதயா பள்ளிகளில் தமிழை பயிற்சி மொழியாக வைக்கவேண்டுமென்று நாங்கள் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். அந்த முயற்சிக்கு நீங்களும் பக்கபலமாக நிற்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் முயற்சி திருவினையாக வேண்டும் என்று நானும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டி.வி. யினுடைய கேமராமென் அல்லது டி.வி. நிலையத்திற்கு மத்திய அரசு எந்தவிதமான உத்தரவும் அனுப்பவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் நடைமுறையில் எப்படி இருக்கிறது என்று பார்க்கிறோம். நம் முடைய தமிழ் நாட்டில் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஊர் வலங்கள் நடத்தினால் அதை முழுமையாகக் காட்டுகிறார்கள். ஆனால் ஆளும் கட்சியினர் நடத்தும் ஊர்வலங்கள் காட்டப்படு வதில்லை. அது மட்டுமல்ல. கடந்த 2, 3 நாட்களுக்கு முன்னால் உள்ளாட்சித் துறை அமைப்பின் மாநாடு கல்கத்தாவில் நடை பெற்றபோது அந்த மாநாட்டில் பாரதப் பிரதமரும் மேற்கு வங்க முதலமைச்சரும் கலந்துகொண்டார்கள். ஆனால் டி.வி. யில் பாரதப் பிரதமர் கலந்து கொள்வதையும், அவர் பேசு வதையும் காட்டுகிறார்கள்; ஆனால் மாநில முதலமைச்சர் கலந்துகொள்வதையும் அவர் பேசுவதையும் காட்டவில்லை. அவரை போகிற போக்கில் காட்டுகிறார்களே தவிர என்ன பேசினார் என்று காட்டவில்லை. இப்படிக் காட்டப்படுவதன் நோக்கம் என்ன என்பதை அவர்கள் விளக்குவார்களா? (பதில் இல்லை).

திரு. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவைக்கு மூன்றாவது முறையாக தேர்ந்தெடுத்து அனுப்புவதற்கு என்னை தேர்வு செய்த தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், செஞ்சித் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் நன்றி தெரிவித்து என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற கல்வி மானியக் கோரிக்கையில் பல்வேறு சீர்திருத்தங்களை அறிவித்திருக்கிறார்கள். நடந்து முடிந்த 13 ஆண்டு கால ஆட்சியில் கல்வியின் தரம் மிகவும் சீர்கெட்டு, நிர்வாகம் சீர்குலைந்து படிக்கின்ற மாணவர்கள் மத்திய அரசு நிர்வாகங்களில் வேலை பெற முடியாத அளவுக்கு நிலைமை உருவாகி இருப்பதை முதற்கண் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்குத் தமிழக அரசின் ஐந்தில் ஒரு பகுதி நிதியை அதாவது ஏறக்குறைய 900 கோடி ரூபாயை கல்வி மானியமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தனியார்களின் சார்பாக பல்வேறு சுயநிதிக் கல்லூரிகள் எல்லாம் தொடங்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்ப்பதற்காக ஏறக்குறைய 5,000 ரூபாய், 10,000 ரூபாய், 20,000 ரூபாய் என்று லஞ்சமாகப் பெற்றுக்கொண்டு கல்லூரியைத் தொடங்கி, அதிலே மிகப் பெரிய முக்கியமானவர்கள் எல்லாம் சம்பந்தப்பட்டு, அந்தக் கல்லூரிகளே நடக்காமல், அந்தக் கல்லூரிகளிலே முறையாக சர்ட்டிபிகேட் வழங்காமல் நிர்வாகம் ஸ்தம்பித்திருக்கிற நேரத்தில் அந்தக் கல்லூரிகளைத் தொடர்ந்து நடத்த வேண்டுமா என்பது குறித்து ஆய்வு செய்ய ஒரு குழுவினை நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் திரு. வி. சி. குழந்தைசாமி அவர்கள் தலைமையில் அமைத்திருக்கிறார்கள். முறைகேடுகளையும், மோசடிகளையும் கண்டறிவதற்காக இப்படிப்பட்ட ஒரு குழுவை அமைத்ததற்காக நான் உண்மையிலேயே நன்றி தெரிவித்து, வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று இன்றைக்கு தமிழகத்தில் நர்சரி பள்ளிக்கூடம் என்ற பெயரில் கிராமப் புறங்களிலும் மற்றும் எல்லா பகுதிகளிலும் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அவற்றிற்கு சாதாரண ஏழை மக்களும் தங்களுடைய குழந்தைகளை எல்லாம் அனுப்ப வேண்டுமென்று விரும்புகிறார்கள். அவர்களுடைய குழந்தைகள் எல்லாம் வளமான குழந்தைகளாக, நல்ல படிப்பறிவுள்ள குழந்தைகளாக நல்ல வாழ்க்கைத் தரம் பெறவேண்டுமென்ற நோக்கத்தோடு அனுப்புகிறார்கள். அதாவது இளமையிலேயே கல்வி கற்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அங்கே அனுப்புகிறார்கள். ஆனால் அங்கேயும் கொள்ளை அடிக்கப்படுகிறது. இதை முறைப்படுத்துகின்ற வகையில் நர்சரி ஸ்கூல்ஸ் ரெகுலேஷன்ஸ் ஆக்ட் என்ற ஒரு சட்டத்தை இயற்றி ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதே போன்று இன்றைக்கு நவோதயா பள்ளியைப் பொறுத்த வரையில் இங்கே எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டுக் காட்டினார்கள். அது முக்கியமான ஒரு பிரச்சினை. அது ஒரு வர்க்கப் பிரச்சினையாகும். பணக்கார மாணவர்களுக்காக மத்திய அரசின் திட்டமாக அதை உருவாக்கி, அதாவது கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்களைப் போன்று அவர்களை உருவாக்குவதற்காக. ஆக அந்த வகையில் செயல்படுத்துவதற்காக அதை உருவாக்குவதாக அறிவித்தாலும்கூட அந்தத் திட்டம் அங்கே இந்தி மொழியைப் பயிற்று மொழியாக வைக்கிற திட்டமாகத்தான் அமைந்திருக்கிறதேயல்லாமல் வேறு ஒன்றுமில்லை. எனவே அந்த நோக்கத்தோடு செயல்படுகிற திட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம். மேலும் நவோதயா பள்ளிக்கூடம் என்ற முறையில் இங்கே இரண்டு பள்ளிக்கூடம் தேவையில்லை. டூயல் பாலிசி என்று சொல்வார்கள். அந்த இரட்டைக் கொள்கை என்ற முறையை இங்கே உருவாக்கிப் புகுத்துவது முறையல்ல. அந்த அடிப்படையில்தான் எங்களுடைய இயக்கம் ஆரம்ப காலந்தொட்டு இன்றுவரை நவோதயா பள்ளிக்கூடத்தை எதிர்க்கிறது.

பல்வேறு இனத்தினரும், பல்வேறு மொழி பேசுகின்றவர்களும் வாழ்கின்ற இந்த நாட்டில் எல்லா மக்களும் நிறைவோடு வாழ வேண்டும், சம உரிமையோடு வாழவேண்டும். எல்லா மக்களுடைய மொழிகளுக்கும் சமத்துவம் தரவேண்டுமென்ற நோக்கத்தோடு அந்த அடிப்படையில்தான் எங்களுடைய கழக அரசும் இங்கே ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் நவோதயா பள்ளிக்கூடங்களை இங்கே நுழைப்பதற்கு நாங்கள் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்டதொரு அறிவிப்பினை கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து கரும்பலகைத் திட்டம் என்று இங்கே சொன்னார்கள். அதாவது ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் ப்ளாக் போர்ட் திட்டம் என்று சொன்னார்கள். அந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் அதற்குரிய நிதியாதாரங்கள் ஊராட்சி ஒன்றியத்தில் இல்லை. ஒரு ஆண்டுக்கு 4 பள்ளிக்கூடங்கள் அல்லது 5 பள்ளிக்கூடங்கள் இருக்க வேண்டுமென்று உத்தரவு வருகிறது. ஆனால் இன்றைக்கு எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் பள்ளிக் கட்டிடம் இல்லை; உபகரணங்கள் இல்லை; ஆசிரியர்கள் விகிதாச்சாரம் இல்லை. இதையெல்லாம் போக்கினால்தான் தரமான கல்வியைத் தர முடியும். அப்படிப்பட்ட நிலையை உருவாக்க இந்த அரசு கூடுதலான நிதியை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதையெல்லாம் விட மிக முக்கியமானது இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற பள்ளிக்கூடங்களில் உள்ள ஆசிரியர்களை எல்லாம் ஏற்கனவே ஊராட்சி ஒன்றியத்தினுடைய

நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரவேண்டுமென்று விரும்பினார்கள்.
அந்த விருப்பத்திற்கேற்ற முறையில் அவர்களை மீண்டும்
ஊராட்சி ஒன்றியத்தினுடைய அதிகாரத்தின்கீழ் கொண்டுவரப்
பட்டால்தான் முறையாக பள்ளிக்கூடம் இயங்கும். இன்றைக்கு
பள்ளிக்கூட ஆசிரியர்கள் எல்லாம் முறையாக பள்ளிக்கூடத்திற்கு
வருகிறார்களா? மாணவர்களை முறையாகப் பயிற்றுவிக்கிறார்
களா என்றெல்லாம் அவர்களைக் கண்காணிக்க என்ன முறை
இருக்கிறது? எனவே இது குறித்தெல்லாம் முடிவு செய்வதற்காக
ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் நேரடியாக அவர்களை இணைக்க
வில்லை என்றாலும்கூட அதற்கு மாற்று ஏற்பாடாக ஊராட்சி
ஒன்றியத்தில் இருக்கிற பெருந்தலைவர், ஊராட்சி ஒன்றியத்தில்
இருக்கின்ற ஏ. இ. ஓ. மற்றும் அதிகாரிகளைக் கொண்ட ஒரு
கூட்டுக் குழுவின் மூலமாக அவர்களைக் கண்காணிக்க ஏற்பாடு
செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன்.

(முற்பகல் 11-50)

இதுபோன்று, இன்றைக்கு இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு
கடந்த ஆட்சிக் காலத்தில் நல்ல கல்வியாளர்கள், அறிஞர்கள்,
விவரம் புரிந்தவர்கள் எல்லாம் செனெட், சிண்டிகேட் அவைக்கு
செல்கின்ற நேரத்தில், இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டால்
போதும், மூன்றாவது முறை தேர்ந்தெடுக்கப்படக்கூடாது என்ப
தற்காக ஒரு தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அன்
றைக்கு கழகம் அதை எதிர்த்தது. ஏனென்றால், கல்வி அறி
வாளர்கள்தான், அவர்களுடைய எக்ஸ்பீரியன்ஸ்தான் ஒரு
நடைமுறையை உருவாக்க முடியும். 3 முறை 4 முறை
இருந்து இருந்தால், அவர்களுடைய அனுபவத்தினுடைய அடிப்
படையிலே என்ன திட்டத்தைக் கொண்டு வரலாம், எப்படி
கல்லூரிகளை நடத்தலாம், பல்கலைக் கழகத்தினுடைய விதிகளை
எந்த முறையில் திருத்தலாம் என்றெல்லாம் அந்த கல்வியாளர்கள்
தான் சொல்லமுடியும். அப்படிப்பட்ட ஒரு தடைச் சட்டத்தை
அன்றைக்கு அரசியல் நோக்கத்தோடு கொண்டு வந்தார்கள்.
திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் மதுரை பல்கலைக் கழகத்
தினுடய சிண்டிகேட்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரத்தில்
வேண்டுமென்றே, அன்றைய அரசு அவரை நீக்கவேண்டு
மென்பதற்காக அந்தத் தடைச் சட்டத்தை கொண்டு வந்தது.
இப்படிப்பட்ட உள்நோக்கத்தோடு, அரசியல் காரணத்திற்காக
நியாயத்திற்குப் புறம்பான, நல்ல ஒரு கல்வியாளர் உள்ளே
வருவதைத் தடுக்கின்ற அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்
தார்கள். அந்தத் தடைச் சட்டத்தை ரத்து செய்யவேண்டும்
என்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு தொழில் கல்வி எல்லாம்
சேர்த்து டெக்னிகல் யூனிவர்சிட்டி என்று இருக்கிறது. இந்த
தொழில் நுட்ப பல்கலைக் கழகத்தில் தமிழ்நாட்டில் இருக்கிற
எல்லா தொழில்நுட்ப கல்லூரிகளும் சேர்ந்திருக்கிறதா என்று



சொன்னால் சேர்க்கப்படவில்லை. அதற்கான அண்ணா தொழில்
நுட்ப பல்கலைக் கழகத்திலே, தமிழகத்திலே இருக்கின்ற எல்லா
தொழில்நுட்பப் பிரிவுகளையும் சேர்க்கவேண்டும் என்று நான்
இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த
வரையில் செஞ்சியை மிகவும் பின்தங்கிய பகுதி என்று சொல்வார்
கள். செஞ்சியை 'பனிஸ்மென்ட் ஏரியா' என்பார்கள். தண்டிக்
கப்பட்ட பகுதி. ஒரு காலத்தில் செஞ்சிக்கு யாரையாவது மாற்றி
னால் அவர்களைத் தண்டிப்பதற்காக அங்கே அனுப்புகின்றார்கள்
என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட மிகவும் பின்தங்கிய பகுதி
யில் ஒரு தொழில்நுட்பக் கல்லூரியை அல்லது ஐ.டி.ஐ.
தொழில்நுட்பக் கல்வி பள்ளியை ஏற்படுத்துவதற்கு நம்முடைய
அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று இன்றைக்கு மிகவும் பின்தங்கிய மக்களாக
வன்னியர் சமுதாயத்தினர், சீர்மரபினர் இவர்களுக்கெல்லாம்
கல்லூரிகளில், பள்ளிக்கூடங்களில் மற்றும் வேலைவாய்ப்புகளில்
எல்லாம் இட ஒதுக்கீடு அறிவித்திருக்கிறார்கள். 20 விழுக்காடு
என்று அறிவித்து இருக்கின்றார்கள். அந்த 20 சதவிகிதம் ஒதுக்
கீட்டை நான் மிகவம் முழு மனதோடு வரவேற்கக் கடமைப்
பட்டிருக்கிறேன். காரணம் போதிய நிதிவசதி இல்லாத காரணத்
தினாலே அவர்களுடைய உண்மையான நிலைமையைப் புரிந்து
கொண்டு தமிழக முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு
கருணை உணர்வோடு இந்த அறிவிப்பை அறிவித்து இருக்கின்
றார்கள். பின்தங்கிய மக்களுடைய சார்பாகவும், தமிழக
மக்களுடைய சார்பாகவும், அந்தப் பகுதி மக்களுடைய சார்பாக
வும் நான் உண்மையிலேயே அந்த அறிவிப்பை வரவேற்கிறேன்.

கல்லூரிகளில், தொழில்நுட்பக் கல்லூரிகளில், மருத்துவ
கல்லூரிகளில், பல்கலைக் கழகங்களில் எல்லாம் மற்றும் பல்வேறு இடங்களிலே
எல்லாம் அவர்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் அதனால்
கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அதை நான் வரவேற்க கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதேபோன்று நம்முடைய தமிழ் மொழி மிகச்
சிறப்பான மொழி. அந்த மொழியைப் பேசுகின்ற தமிழர்கள்
மொரேசியஸ் தீவு போன்ற இடங்களில் வாழ்கின்றார்கள்.
அவர்களுக்கு தமிழ் கற்பிக்கின்ற வசதியில்லை. அங்கே ஆசிரியர்
கள் இல்லை. போதுமான கருவிகள் இல்லை என்ற குறைபாடுகள்
இருக்கின்றன. அதெல்லாம் அரசுக்குக் கடந்த ஆட்சிக்காலத்தி
லேயே கொண்டுவரப்பட்டது. அதற்குரிய முறையில் நம்முடைய
தமிழகத்தின் சார்பாக 'டெபுடேஷன்' என்ற முறையிலே அங்கே
அனுப்பி தமிழர்கள் தமிழர்களாக வாழ்வதற்கு, தமிழ் பண்பாடு
கலாசாரத்தோடு வாழ்கின்ற முறையை உருவாக்குவதற்கு,
தமிழர் என்ற பெயரோடு மட்டும் வாழ்கின்றவர்களை, தமிழ்

பேசக்கூடியவர்களாக உருவாக்குவதற்கு இந்த அரசு ஒரு சிறப் பான திட்டத்தை அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அதேபோன்று இன்றைக்கு பிரான்ஸ் நாட்டில் பிரெஞ்சு மொழியைப் படிக்கின்றவர்கள் உலகத்திலேயே உள்ள எல்லா மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்கின்ற அளவுக்கு மிகப் பெரிய பல்கலைக் கழகத்தை வைத்திருக்கின்றார்கள். அதேபோன்ற பல்கலைக்கழகத்தை இங்கே உருவாக்குவதற்காக 'ஓர்ல்ட் லேங்குவேஜஸ் சென்ட்டர்' என்ற முறையில் உலக மொழிகள் அடங்கிய மொழி பெயர்ப்புத் துறையை உருவாக்குகின்ற முறை யில் ஒரு சிறப்பு நிலையை உருவாக்கினால் அதன்மூலமாக தமிழை உலகத்தினுடைய பல்வேறு மொழியினரும் பயில்வதற்கும், மொழி பெயர்ப்பதற்கும், குறிப்பாக சீனம், ரஷ்யம் போன்ற மொழி களைக் கற்பதற்கும் பயன்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்து, கடந்த கால ஆட்சியில் ஆசிரியர் பெற்றோர் மன்றம் அமைத்தார்கள். அதன்மூலமாக பள்ளியில் சேர்கின்ற மாணவர் களிடமிருந்து வசூல் செய்தார்கள். பல்வேறு பள்ளிகளில் கட்டி டம் கட்டுவதற்காக வசூல் செய்யப்பட்ட பணத்திற்கு கணக்கு காட்டவில்லை. அதுபோல உபகரணம் வாங்குவதற்காக என்று சொல்லி வசூல் செய்தார்கள். அதற்கெல்லாம் கணக்கு வழக்கு கள் இருக்கிறதா? உயர்நிலைப் பள்ளிகளில் எல்லாம் அப்படிப் பட்ட கணக்கு வழக்குகள் இருக்கிறதா என்பதைப்பற்றி எல்லாம் அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக செஞ்சியில் இருக்கிற அரசு உயர்நிலைப் பள்ளியில் ஓர் ஆசிரியர் பெற்றோர் சங்கம் இருக் கிறது. ஒவ்வோர் ஆண்டும் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த முறை யில் அது செயல்பட்டிருக்கிறதா? எந்த முறையில் அது சம்பந்த மான சட்டம் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி எல்லாம் அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, பல மாவட்டங்களில் ஒரு சம்பவம் நடைபெற்றது. அதாவது ஏற்கனவே ஆசிரியர்களை மாற்றம் செய்வதற்கான அதிகாரம் சி.இ.ஓ.க்களிடம் இருந்தது. முந்தைய ஆட்சிக்காலத் தில் திடீரென்று அதற்கான அதிகாரத்தை பள்ளிக் கல்வி இயக்கு நரிடம் மாற்றிவிட்டதால் தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலும் பரவலாக ஆசிரியர்களை மாற்றம் செய்யும் நிலை ஏற்பட்டது. மதுரையிலிருந்து ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் திடீ ரென்று செங்கல்பட்டுக்கு மாற்றப்பட்டார்கள். அதுபோல செங்கல்பட்டில் பணியாற்றிக் கொண்டிருந்த வேண்டாத பட்ட தாரி ஆசிரியர்கள் வேறு மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டார்கள் இது கடந்த கால ஆட்சியில் நடைபெற்ற சம்பவங்கள்.



இன்றைக்கு மறுபடியும் முன்பு இருந்தபடி சி.இ.ஓக்களிடம் அதிகாரம் கொடுக்க வேண்டும். அதுமாத்திரமல்ல; யார் யார் கடந்த ஆட்சிக் காலத்தில் மாறுதல் செய்யப்பட்டு, பழி வாங்கப் பட்டார்களோ, அதுபற்றி எல்லாம் கண்டறியப்படவேண்டும். மேலும் மொத்தமாக அப்படி மாறுதல் செய்ய என்ன காரணம் என்பதை எல்லாம் கண்டறிய விசாரணை செய்யவேண்டும்.(மணி யடிக்கப்பெற்றது) அடுத்து மிக முக்கியமன ஒரு பிரச்சினை. பார்ட் டைம் லெச்சரர்ஸ், கான்டிராக்ட் டீச்சர்ஸ் என்று இரண்டு பிரிவினர் உருவாக்கப்பட்டார்கள், முந்தைய ஆட்சிக்காலத்தில் ஏன் அப்படி ஒரு நிலையை உருவாக்கினார்கள்? பள்ளிக்கூட ஆசிரியர்கள் என்று சொன்னால் அவர்களுக்கு தொழிற்சாலை தொழிலாளர்கள் போன்ற நிலைமையை ஏன் ஏற்பட செய்தார் கள்? இதற்கு ஏற்பட்ட சூழ்நிலை என்ன? அதற்கான காலக் கட்டம் என்ன ? இதற்கு சட்டத்தில் வழி வகை இருக்கிறதா? அந்த ஆசிரியர்களை எல்லாம் ரெகுலரைஸ் பண்ணிவிட்டார்களா? இது குறித்து எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொல்ல வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல 10(ஏ)(1) என்று சொல்லப்படுகிற தற்காலிக பார்ட் டைம் லெச்சரர்ஸ், ஆசிரியர்களை எல்லாம் நியமித்திருக்கிறார் கள். அவர்களையும் இதுநாள்வரை பணிவரன்முறை செய்ய வில்லை. அதுமாத்திரமல்ல. பல ஆசிரியர்கள் ஈட்டிய விடுப்பில் சென்ற பிறகு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பளம் இதுவரை கொடுக்கப்படவில்லை. அவர்கள் இன்றைக்கு அது சம்பந்தமாக கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த அரசு அதுகுறித்தும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செஞ்சி தொகுதியில் இருக்கிற பள்ளிக்கூடத்தில் கம்ப்யூட்டர் சயின்சுக்கு வழிவகை செய்து தர வேண்டும். அதுபோல செஞ்சியில் இன்றைய தினம் கோ-எஜுகேஷன் இருக் கிறது. இந்நிலையில் பெண்களுக்காக தனியாக மேல்நிலைப் பள்ளி ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல செஞ்சியில் ஓங்கூரில் இருக்கிற பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வெள்ளமணப்பேட்டில் இருக்கிற உயர்நிலைப் பள்ளி யில் செகண்டரி கிரேட் கோர்ஸ் ஆரம்பிக்க வேண்டும். இறுதி யாக, செஞ்சியை மையமாகக் கொண்டு தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டு மென்று சொல்லி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள் பேசும்போது உயர் நிலைப் பள்ளிகளிலே, மேல்நிலைப் பள்ளிகளிலே எல்லாம்

ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களை நியமிக்கின்ற நிலைமை ஏன் ஏற்பட்டது? அவர்களை எல்லாம் நிரந்தரம் செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பது தொடர்பான கேள்விகளை எழுப்பினார்கள். இந்த அவையி லுள்ள உறுப்பினர்கள எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டிய ஓர் அடிப்படையான செய்தியாதலால் இந்த விவரத்தைச் சொல்ல வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது.

(நண்பகல் 12-00)

5, 6 ஆண்டுகளுக்கு முன்னர், அதுவரை தற்காலிக ஆசிரியர் கள், 10(ஏ)(1) பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டு, அத்தகைய ஆசிரியர் களுடைய எண்ணிக்கை எல்லாம் அதிகமாகியது. அப்போது பப்ளிக் சர்வீஸ் கமிஷன் என்னும் பொது தேர்வாணைக் குழு மூலமாக ஓரளவு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் பெற்றார்கள். மிச்சமுள்ள எண்ணிக்கை அதிகமாக இருந்த நிலையில், அவர்களை எல்லாம் பணி வரன்முறைப்படுத்தி, நிரந்தரமாக்க வேண்டுமென்று அரசு கருதியது. அரசின் சார்பிலே அதைத் தேர்வாணைக் குழுவிற்குத் தெரிவித்த போது, இப்போது தற்காலிகமாக நீடித்த, 2, 3, 4 ஆண்டுகள் பணியாற்றியவர்களை வரன்முறை செய்தாலும், இனி தற்காலிகமாக நியமனம் செய்வதற்கு தேர்வாணைக் குழு தரும் பட்டியலிலிருந்துதான் நியமனம் செய்ய வேண்டுமென்று அவர்கள் தெரிவித்தார்கள். அந்தக் கருத்து ஒத்துக்கொள்ளப் பட்டது. அந்த அடிப்படையில் அதுவரையில் 10(ஏ) (1) விதியின்கீழ் தற்காலிக நியமனத்தில் நீடித்துக் கொண்டிருந்த வர்கள், ஏறத்தாழ 500, 600 பேர் என்பது என்னுடைய நினைவு, புள்ளி விவரங்கள் இருக்கின்றன. அவர்கள் அத்தனை பேரும் நிரந்தரம் செய்யப்பட்டார்கள். அதற்குப் பின்னரா தேர்வாணைக்குழுவிடமிருந்து பட்டியல் பெறும் முயற்சி மேற் கொள்ளப்பட்டபோது, தேர்வாணைக் குழு அப்படிப்பட்ட பட்டியலைத் தரும் நிலையில் இல்லை. எனவே தற்காலிகமாக நியமனம் செய்ய அனுமதி கேட்டபோது, அது மறுக்கப்பட் டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில், உடனடியாக பள்ளி களினுடைய தேவைகளுக்காக, கல்விப் பணி நடைபெறுவதற் காக ஒப்பந்த ஆசிரியர்கள், கான்ட்ராக்ட் டீச்சர்ஸ் என்ற முறையில் நியமிக்கப்பட்டார்கள். ஆசிரியர்கள் தொடர்ந்து பணியாற்றினால், தற்காலிகம் என்ற உரிமை அவர்களுக்குக் கிடைத்துவிடும். தற்காலிக உரிமை அவர்களுக்குக் கிடைத்து விட்டால், தேர்வாணைக் குழு அவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைக் கைவிட்டு, அரசே நேரடியாக நியமனம் செய்ய நேரிடும். அப்படி அரசு நேரடியாக நியமிக்கும்போது தேர் வாணைக்குழுவின் உரிமை நீங்கிவிடுகிறது.

எனவே அந்த நிலைமைகள் இருக்கக்கூடாது என்று தேர் வாணைக்குழு கருதியது. ஏனென்றால் பல்வேறு மட்டங்களில் அவர்களுடைய ஆலோசனையை அரசு பெற்றதாக



வேண்டும் அவ்வாறு கருதிய காரணத்தால், இந்த ஒப்பந்த அடிப்படை ஆசிரியர்களை நியமிக்கும் பழக்கம் 3, 4 ஆண்டுக வாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அரசுக்கு ஏற்பட்ட நிதிப் பற்றாக்குறை வெவ்வேறு வகையில் இடித்தபோது, 2 மாதச் சம்பளம் மிச்சமாகியதுகூட அரசாங்கத்திற்கு ஒருவிதத் தில் உதவியாக இருந்தது. இருந்தாலும், அப்படிப் பணியாற் றியவர்களை, அடுத்த முறை, அதாவது 2 மாதம் விடுமுறை காலத்திற்குப் பின் மறுபடியும் ஆசிரியர்களை நியமிக்கும்போது, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி, நிர்வாகத்திலே உள்ளவர் களால் தகுந்த முறையிலே பணியாற்றியவர்கள் என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட அத்தனைபேரும், முன்னுரிமை அளிக்கப்பட்டு மறுபடியும் நியமிக்கப்பட வேண்டுமென்று, அரசுத் துறையில், கல்வித் துறையில் இருந்து அந்தத் துறையைச் சார்ந்தவர் களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த முன்னுரிமை இப்போதுள்ள நிலைமையில் நிச்சயமாக வழங்கப்படுமென்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

* திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி யின் சார்பாக கல்வி மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துக்களை இங்கே முன் வைக்க விரும்புகிறேன். இந்த ஆண்டு கல்விக்காக 900 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது 22 விழுக்காடு என்றும் கூறப்பட்டிருக்கிறது. இது குறைவு தான். பல கமிஷன்கள் கல்விக்கு குறைந்தபட்சம் 30 விழுக் காடு இருக்கக் கூடிய அளவுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தாலும், இன்றைக்கு இருக்கக்கூடிய நிதி நிலைமை மிகவும் மோசமாக இருக்கக்கூடிய காரணத்தால், இந்த அளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆனால் கல்வி அமைச்சரவர்கள், ஏற்கனவே ஒரு சமயத்தில் கல்வி மானியத்தின்மீது பேசும்போது ''எண்ணைச் செலவு செய்ததுதான் மிச்சம், பிள்ளை பிழைத்தபாடில்லை'' என்ற பழமொழியைக் கூறி, ஒதுக்கப்படக்கூடிய பணமானது சரியான முறையில், ஒழுங்கான முறையில் செலவழிக்கப்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும் என்ற கருத்தை எடுத்துச் கூறினார்கள். எனவே இப்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒழுங்கான முறையில் செலவழிக்கப்படுமென்ற நம்பிக்கை எனக்கு இந்தச் சமயத்தில் இருக்கிறதென்று சொல்லிக்கொள்ளப் பிரியப்படுகிறேன்.

பல்வேறு இனங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கே வேறொரு உறுப்பினர் எடுத்துக் கூறியதுபோல, அரசு உயர் நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிக் கட்டிடங்களுக்காக 10 இலட்சம் ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் இது போதாது. இதைக் கொஞ்சம் அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கூற விரும்புகிறேன்.

மேலும் இந்த பட்ஜெட்டில் பல்வேறு நிலைமைகளைப்
பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். 5 கோடி ரூபாய் செலவில்
ஆதிதிராவிடர்களுக்கு அவர்கள் வாழும் பகுதிகளில் புதிதாக
50 தொடக்கப் பள்ளிகள் கட்ட இருப்பதாகச் சொல்லப்பட்
டிருக்கிறது. இது மிகவும் வரவேற்கத் தக்க அம்சம்.
அதைப் போலவே நாம் இங்கே எவ்வளவுதான் ஒருவருக்
கொருவர் வாதிட்டுக் கொண்டாலும், புதிய கல்விக் கொள்
கையை ஒட்டி வந்திருக்கிற 'நவோதயா' பள்ளிகள் சம்பந்த
மாக ஒரு சரியான கறாரான நிலையை இந்த அரசு எடுத்திருக்
கிறது என்றே நாங்கள் கருதுகிறோம். எனவே அதையும்
நான் வரவேற்கிறேன். அதன் விவரங்களுக்குள்ளே நான் போக
விரும்பவில்லை. ஏற்கனவே அது சம்பந்தமான சாதக பாதக
அம்சங்கள் இங்கே விவாதிக்கப்பட்டுவிட்டன.

அதற்கடுத்து, பட்ஜெட் உரையில் ஒரு இடத்தில் குறிப்பிடப்
பட்டிருக்கிறது. அதாவது மேல்நிலை பள்ளிகளுக்குரிய தேவைகள்
பெருகிக்கொண்டே வருகின்றன. இதை நிறைவு செய்யும்
பொருட்டு, வரும் ஆண்டில் கூடுதலாக 600 இடைநிலை ஆசிரி
யர் பதவிகளும், 50 பி.எட்., ஆசிரியர் பதவிகளும் மற்றும்
50 தமிழாசிரியர் பதவிகளும் தோற்றுவிக்கப்பட உள்ளன
என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நம்முடைய இன்றைய தேவையை
இது பூர்த்தி செய்யுமா என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க
வேண்டுமென்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களை நான்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இது யானைப் பசிக்கு
சோளப் பொறி போடுவதுபோல் தான் இருக்கும். ஏற்கனவே
ஏராளமான ஆசிரியர்கள் வெளியே வேலை இல்லாமல் இருக்
கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்பது
மட்டுமல்ல, இன்றைக்கிருக்கிற கல்வித் தேவையைப் பூர்த்தி
செய்யக்கூடிய அளவில் இல்லை என்பதால், இதைக் கொஞ்சம்
அதிகப்படுத்தினால்தான் சரியாக இருக்கும் என்று நான் சொல்
லிக் கொள்ளப் பிரியப்படுகிறேன்.

அடுத்து சுய நிதி பள்ளிகள், கல்லூரிகள் குறித்தும் இங்கே
குறிப்பிடப்பட்டுள்ளது, நம்முடைய நிதிநிலை அறிக்கையில்
கூட அதைப் பற்றி ஒரு இடத்தில் கூறப்பட்டிருக்கிறது.
'' தனியார் சுயநிதி கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
அந்தக் கல்லூரிகளில் போதுமான வசதிகள் இல்லை என்றும்,
கல்வியின் தரம் மிகவும் சீர்கேடான நிலையில் உள்ளது என்றும்,
அங்கே முறைகேடுகள் பெருகி உள்ளது என்றும் பல புகார்கள்
வந்துள்ளன என்றும், எனவே புதிதாக சுயநிதிக் கல்லூரி
களுக்கு அரசு அனுமதி வழங்கப்படமாட்டாது என்று மட்டும்
தான் இதில் கூறப்பட்டிருக்கிறதே யொழிய ஏற்கனவே இப்படிப்
பட்ட நிலையில் இருக்கிற கல்லூரிகளை' பள்ளிகளை ஒன்று
ஒழுங்குபடுத்த வேண்டும், இல்லையென்றால் அவற்றின் அங்கீ
காரத்தை ரத்து செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று இந்தச் சமயத்தில் கூறிக் கொள்ளப்



பிரியப்படுகிறேன். காரணம் இத்தகைய சுயநிதிக் கல்லூரிகள்
கல்வி நிலையங்கள் எதற்காக ஊக்குவிக்கப்பட்டன—அவைகள்
எதற்காக நிறுவப்பட்டன என்பதையெல்லாம் நான் இங்கே
அதிகமாக விளக்கத் தேவையில்லை.

இப்படிப்பட்ட சுயநிதிக் கல்வி நிலையங்களில் அநேகமாக
இடம் பிடிப்பதற்கு ஆயிரக் கணக்கில் அல்ல இலட்சக்
கணக்கில் அது கல்லூரியானாலும் சரி, பள்ளிகளானாலும் சரி,
பணத்தை '' கேப்பிடேஷன் பீ '' என்ற முறையில் சட்ட
பூர்வமாகவே வசூலிக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்
பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் '' கேப்பிடேஷன் பீ ''
என்ற முறையில் தலைக்கட்டணம் என்ற பெயரில் மாணவர்கள்
கல்வி நிலையங்களில் சேருவதற்காகச் செலுத்துகிற நிதி.
அது இடத்திற்கு ஏற்ப, படிப்புக்கு ஏற்ப செலுத்தப்படுகிறது.
சட்ட பூர்வமாகச் செயயபபடுகிறது என்ற கருத்தைத் தெரிவித்
தார்கள். அது சட்ட பூர்வமாக செய்யப்படுவதல்ல. அவர்
களுக்கு சுய நிதிக் கல்லூரி நடத்த அனுமதி வழங்கப்படுகிற
போதே அவர்களிடத்தில் ஒப்பந்தம் செய்யப்படுகிறபோதே-
அவர்கள் கையெழுத்திட்டு-கேப்டேஷன் பீ போன்று எந்த நிதியை
யும் நாங்கள் வசூலிப்பதில்லை என்று ஒப்புக்கொண்டுதான்
துவங்கியிருக்கிறார்கள். ஆனால், நடைமுறையில் அதற்கு
மாறாக இன்றைக்கு வசூலிக்கிற முறைதான் நிலவுகிறது.
என்றாலும் இரண்டு மூன்று சுயநிதிக் கல்லூரிகளில் அப்படி
வசூலிக்கப்படுவதில்லை என்பது எனக்குத் தெரியும். ஆனால்
பல நிலையங்களில் அவ்வாறு வசூலிக்கப்படுகிறது. ஆனால்
அவர்கள் அனுமதிபெற்றபோது அப்படி வசூலிக்க மாட்டோம்
என்று உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். இப்போது அதை
மீறி செயல்படுகிறபோது, அடுத்த நடவடிக்கை என்ன என்ப
தைச் சட்டப்படி ஆலோசிக்க வேண்டியதாக இருக்கிறது.

திரு. சி. கோவிந்தராஜன்: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, அது மாத்திரமல்ல. பீஸ்-கட்டணமும் வசூலிக்கப்
படுகிறது. ஒரு டொர்முக்கு, மற்ற அரசு கல்லூரிகளில்
இருப்பதைவிட அதிகமாக ரூ. 15,000, ரூ. 20,000 என்று
வசூலிக்கப்படுகிறது. ஆனால், அரசாங்கத்திற்கென்று அந்த
கைய கல்லூரிகளில் ஒரு கோட்டா உண்டு. அந்தக் கோட்டா
வின் அடிப்படையில் போகிற மாணவர்களுக்கும்கூட இதே
மாதிரி கட்டணம் அங்கே வசூலிக்கப்படுகிறது என்பதனால்
இதைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்
என்று இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதைப் போலவே சுயநிதி-செல்ப் பைனான்சிங்
பள்ளிகள்- மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் எல்லாம் பல்வேறு

[திரு. சி. கோவிந்தராஜன்] [1989 ஏப்ரல் 7

வகையான முறைகேடுகள் நடைபெறுகின்றன. அங்கெல்லாம்
பெரிய மனிதர்கள வீட்டுப் பிள்ளைகள் படிக்கிறார்கள்.
பெரிய பெரிய அதிகாரிகளின் வீட்டுப் பிள்ளைகள் படிக்கிறார்
கள். எனவே எத்தகைய முறைகேடுகள அல்லது குறைபாடுகள்
அல்லது கம்ப்ளெய்ன்ட்கள் மேலிடத்திற்கு வந்தாலும், அவற்
றின்மீது நடவடிக்கை எடுக்கப்பட முடியாதஒரு சூழ்நிலை ஏற்பட்
டுள்ளது. அந்த நிறுவனத்திலுள்ளவர்கள் கூட நம் மீது யாரும் நட
வடிக்கை எடுக்க முடியாது ; நம்மிடத்தில் படிக்கும் பிள்ளைகள்
பூராவும் 'இந்த' இடத்திலே இருந்து வந்து படிக்கிறார்கள்
என்கிற நிலைமை இருக்கிறது என்பதை இந்தச் சமயத்திலே
சுட்டிக் காட்டி ; அதனால் அவர்கள், ஆசிரியர்களுக்கு
கொடுக்கக்கூடிய சம்பளத்தை குத்து மதிப்பாக, கன்சாலி
டேட்டாக கொடுக்கிறார்கள். அந்த இடங்களிலே இருக்கக்
கூடிய ஆசிரியர்கள் பூராவும் அநேகமாக இரண்டாவது, மூன்
றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளையொட்டித்தான்
இன்றைக்கும சம்பளம் வாங்குகிறார்களே தவிர, ஐந்தாவது
ஊதியக் குழுவின் பரிந்துரை வரவிருக்கிறது ; ஆனால் அவர்கள்
இரண்டாவது, மூன்றாவது ஊதியக் குழு மட்டத்தில்
தான் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட பாதிப்புக்கு ஆளாகிக்
கொண்டிருக்கும் ஆசிரியர்கள் கிட்டத்தட்ட 15 ஆயிரம் பேர்
களுக்கு மேல் இருக்கும்.

(பிற்பகல் 12.10).

அது மட்டுமல்ல, சுயநிதி பள்ளிகளின் வருமானத்தை,
மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படிப்பட்ட
வார்த்தையை இங்கே உபயோகப்படுத்தக் கூடாது என்று
கூறிய காரணத்தால், அப்படிப்பட்ட வார்த்தையை நான் இங்கே
சொல்லவில்லை, ஏராளமான அளவுக்கு அவர்கள் இலாபத்தை
சம்பாதிக்கிறார்கள். ஒரு ஆண்டுக்கு 2 கோடி ரூபாய், ஒரு
தொழிற்சாலைக்குக் கூட அந்த அளவு வருமானம் வராத
அளவுக்கு—2 கோடி ரூபாய், $2\frac{1}{2}$ கோடி ரூபாய் என்ற அளவிலே
அவர்களுக்கு வருமானம் வந்து கொண்டிருக்கிறது. இங்கே
என்னிடத்திலே கூட ஒரு கணக்கு இருக்கிறது. சென்னையில்
4 இடங்களிலே கல்வி நிலையங்கள் நடத்தக் கூடிய ஆதர்ஷ்
வித்யாலயாவும் ஒன்று. அங்கு அவர்களே ஏற்றுக்
கொண்டிருக்கிற கணக்கு 2 கோடியே 4 இலட்சத்து 14 ஆயிரத்து
645 ரூபாய் ; இந்தக் கணக்கு வேண்டுமானாலும் தாங்கள்
வாங்கிப் பார்த்துக் கொள்ளுங்கள். இந்த அடிப்படையிலே
கல்வி நிலையங்கள் இங்கே நடைபெறுகின்றன என்பதை தங்
களுக்குத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

அது போல சென்ட்ரல் போர்டு ஆப் செகன்டரி எஜு
கேஷனைப் பற்றியும் இங்கே பேசப்பட்டது. அதில் யாருமே
தலையிட முடியாது ; மாநில அரசு தலையிட முடியாது என்ற
கருத்து அந்த நிறுவன உரிமையாளர்களுக்கு இருக்கிறது



1989 ஏப்ரல் 7] [திரு. சி. கோவிந்தராஜன்]

என்று நான் கருதுகிறேன். அவர்கள் அந்த பள்ளிக்கு அங்கீ
காரம் பெறுவதே, அஃபிலியேஷன் வாங்குவதே மாநில அரசி
னுடைய பரிந்துரையின் பேரில் தான் ; மாநில அரசாங்கம்
அங்கீகரித்து பரிந்துரை செய்தால்தான், சென்ட்ரல் போர்டு
ஆஃப் செகன்டரி எஜுகேஷன் அதற்கு அஃபிலியேஷன் கொடுக்
கும் என்பதை இந்தச் சமயத்திலே குறிப்பிட்டு, அந்த
விதியைக் கூட கூற விரும்புகிறேன்.

The School should have formal recognition of the State Government and its application should be forwarded by the State Govern ment or the State Government should give No Objection Certificate

இவ்வாறு பரிந்துரையோ அல்லது 'நோ அப்ஜெக்ஷன்'
சான்றிதழோ கொடுத்தால் தான் அபிலியேஷன் கொடுக்கப்படு
மென்று இங்கே இருக்கிறது. அதுமட்டுமல்ல,

The School must pay salary to the staff not less than the corres ponding salaries in the State Government schools or as per scales prescribed by the Government of India.

ஆனால் இப்படிப்பட்ட நிலைமை இருக்கும்போது இங்கேஆசான்
உயர்நிலைப் பள்ளி நிறுவனத்தில் கடந்த 40 நாட்களாக
வேலை நிறுத்தம் நடைபெற்று வருகிறது. அதற்கான காரணம்
என்ன ? அங்குள்ள ஆசிரியர்களுக்கு ஊதியம் மிகக் குறை
வாக இருப்பதால் அவர்கள் சென்ட்ரல் போர்டு ஆஃப் செகன்டரி
எஜுகேஷனுடைய சேர்மனுக்கு, எங்களுக்கு ஒப்பந்தப்படி
ஊதியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டதற்காக, அந்த
ஸ்தாபனத்திலுள்ள 2 பொறுப்பாளர்களை அந்த நிறுவனத்தினர்
வேலை நீக்கம் செய்தார்கள். 40 பேர்களை தற்காலிக வேலை
நீக்கம் செய்திருக்கிறார்கள். மீதியுள்ளவர்கள் மூலம் வேலை
நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தற்காலிக
வேலை நிறுத்தம் செய்யப்பட்டிருப்பவர்களில் அதாவது 40
பேர்களில், 30 பேர் பெண்கள் என்பதையும் இந்தச் சமயத்தில்
நான் தெரியப்படுத்த விரும்புகிறேன். இவர்களுடைய பிரச்
சினையில் மாநில அரசு உடனடியாகத் தலையிட்டு, அதைத்
தீர்ப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும், இன்று
முதல் அவர்கள் உண்ணாவிரதத்தையும் ஆரம்பித்து இருக்கிறார்
கள் என்பதையும் இந்தச் சமயத்தில் உங்களுக்குச் சுட்டிக் காட்ட
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு
தலைவரவர்களே, பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அரசாங்
கத்தை அணுகியிருக்கிறார்கள். நேரடியாக தனியார் பள்ளி
களிலே அரசாங்கம் தலையிட வேண்டாமென்று விரும்பி
னாலும், அதிகாரிகளை அழைத்து சுமுகமாக பேச்சுவார்த்தை
நடத்தியதில் "பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் 40 பேரை
நாங்கள் வேலைக்கு எடுத்துக் கொள்கிறோம் ; ஆனால் 2

பேரை மட்டும் எடுத்துக் கொள்ள மாட்டோம்'' என்று நிர்
வாகத்தினர் தெரிவித்திருக்கிறார்கள். அந்த இரண்டு பேரையும்
எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தின் மூலம்
அவர்களை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. சி. கோவிந்தராஜன் : நடவடிக்கை எடுக்கப்பட்டு
வருவதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அந்த
நிர்வாகத்தினரின் எண்ணம், மாநில அரசு தலையிட முடியாது
என்பது ; ஆனால் 'முடியும்' என்பதைத்தான் நான் சுட்டிக்
காட்டினேன். அந்த அடிப்படையிலே நீங்கள் நடவடிக்கை
எடுத்திருக்கிறீர்கள்.. அதற்கு மிக்க நன்றி.

அது போல இங்கே பிரைவேட் ஸ்கூல் சம்பந்தமாக சொல்ல
வேண்டியிருக்கிறது. பிரைவேட் ஸ்கூல்ஸ் ரெகுலேஷன் ஆக்டில்
இருக்கக் கூடிய விதி முறையைப் பயன் படுத்தி, சீனியாரிட்டியை
ஓவர்லுக் பண்ணி, மெரிட்தான் என்று கூறி அதை மிஸ்-யூஸ்
பண்ணுகிறார்கள்.

Rule 15—Promotions shall be made on grounds of merit and ability, seniority being considered only when merit and ability are approximately equal.

என்ற அதைப் பயன்படுத்திக் கொண்டு, Seniority Overlook
பண்ணப்படுகிறது. எனவே, பணிமூப்பு உள்ள ஆசிரியர்கள்
பூராவும் புறக்கணிக்கப்பட்டு, வேண்டியவர்களுக்குச் சலுகை
கொடுப்பது என்று இருக்கக் கூடிய நிலைமையில் இங்கே
நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நான் இங்கே கூற விரும்புவது, இந்தச் சட்டம் மாநில
அரசினால் உருவாக்கப்பட்ட சட்டம். இந்தச் சட்டத்தில்
இப்படிப்பட்ட ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு, பிரை
வேட் நிறுவனங்கள் இதைச் செய்து கொண்டு வருவதால் இந்த
ஓட்டைகளை அடைப்பதற்கான சட்டத் திருத்தங்களை இங்கே
கொண்டு வர வேண்டும் என்று நான் உங்களிடத்திலே சொல்லப்
பிரியப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 15 மணித் துளி ஆகி
யிருக்கிறது.

திரு. சி. கோவிந்தராஜன் : குறுக்கீடுகள் வந்தன. 900
கோடி ஒதுக்கப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையில்
நான் பேராசிரியராக இல்லாவிட்டாலும், நான் பாமரனாக
இருப்பதால் எனக்கு ஒரு ஐந்து நிமிடங்களாவது நீட்டிக்
கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்து, இங்கே ஐந்தாவது ஊதியக் குழுவினுடைய
பரிந்துரை ஆசிரியர்களுக்கு 1-6-1988 லிருந்து முன் தேதி
யிட்டு கொடுக்கப்படும் என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்
கிறது; அதுவும், 'Retrospective effect என்று சொல்லும்



பொழுது, மத்திய அரசாங்கத்தினுடைய ஊழியர்களுக்கு
எல்லாம் கொடுக்கின்றதைப் போல் ஆசிரியர்களுக்கும், அது
பூராவும் 1-1-1986-லிருந்து அமல் படுத்துவதுதான் நியாய
மாக இருக்கும் என்று இந்தச் சமயத்தில் சொல்ல நான் பிரியப்
படுகிறேன்.

அடுத்து, Aided Schools பற்றிச் சொல்லவேண்டும் அங்கே
வேலை செய்யக்கூடிய ஆசிரியர்கள் இருக்கிறார்களே, அவர்கள்
இதர ஆசிரியர்களைப் போல பணி புரிவதால் அந்த வசதிகளும்
வீடு கட்டும் கடன் வசதி, இதர கடன் வசதிகள், எல்.டி.சி.
போன்றவைகளும் இந்த ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட
வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கூற விரும்புகிறேன்.

இங்கே பகுதி நேர ஆசிரியர்களைப் பற்றிக் கூறப்பட்டது.
அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்களும் இங்கே பதில் கூறினார்
கள். ஒரே வேலையைச் செய்கிறார்கள். ஒரே கல்வித்
தகுதியைப் பெற்றிருக்கிறார்கள். தேர்வாணைக் குழு ஒன்றைச்
சொல்லியிருக்கிறது, அதனால் இப்படி என்று நீங்கள் சொல்
கிறீர்கள்.

இவர்கள் எல்லாம் எம்.ஏ., பி.எட்., எம். காம்., பி.எட்.,
கல்வித் தகுதி பெற்றவர்கள், 28 பீரியடுகள் ஒரு வாரத்தில்
வேலை செய்கிறார்கள். பத்தாண்டுகள் சர்வீஸ் செய்திருந்த
பொழுதும் அவர்கள் பகுதி நேர ஊழியர்களாகவே இருக்க
வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதே போல நடுநிலைப்
பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் இப்படிப்பட்ட
நிலைமைதான். Craft Teacher கிட்டத்தட்ட ஆயிரம் பேர்களுக்கு
மேல் அப்படி இருக்கிறார்கள். கைத்தறி ஆசிரியர்கள்
கிட்டத்தட்ட 1600 பேர்கள் சம்பளம் இல்லாமலேயே வேலை
செய்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையும் இருக்கிறது.
இதையெல்லாம் பரிசீலனை செய்து, அதற்குரிய நடவடிக்கை
களை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.
300 ரூபாய் தான் இந்தப் பகுதி நேர ஆசிரியர்களுக்கு ஊதியம்
என்றால் இது நியாயமா ?

அடுத்து, காண்ட்ராக்ட் ஆசிரியர்கள் சம்பந்தப்பட்டவரை
தேர்வாணைக் குழுவின் பரிந்துரை இப்படி இருப்பதால் 10 (a)
(i)-இலே வைக்க முடியாத காரணத்தால் 'காண்ட்ராக்ட்'
ஆசிரியர்களாக அவர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று
அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இன்னொரு
விஷயத்தையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.
இந்த 'காண்ட்ராக்ட்' முறை பள்ளிகளில் மட்டுமல்ல, கல்லூரி
களிலும் இருக்கிறது. அவர்களுக்கு ஒன்பது மாத சம்பளம்
தான் கிடைக்கிறது.

[திரு. சி. கோவிந்தராஜன்] [1989 ஏப்ரல் 7

சட்டக் கல்லூரிகளிலும் இந்த 'காண்ட்ராக்ட்' முறை இருக்கிறது. சட்டக் கல்லூரியிலே கிட்டத்தட்ட 41 காலியிடங்கள் இருக்கின்றன. அதிலே 10 (a) (1) இலே இருப்பவர்கள் 17 பேர். காலியிடங்களே 41 இருக்கின்றன. காண்ட்ராக்டிலே இருக்கக்கூடிய ஆசிரியர்கள் 18 பேர்கள். ஆக 35 பேர். வேகன்சீஸ் 41-இல் இன்னும் 6 காலி இடங்கள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் நிரப்பக் கூடாதா என்பதுதான் கேள்வி.

இன்னொரு விஷயுத்தை இந்தச் சமயத்தில் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இதில் 12 வருஷம் உள்ள கே.கே. சாமிராவ் என்பவர் ரிடையர் ஆவதற்கு இன்னும் இரண்டாண்டுகள் தான் இருக்கின்றன. இப்படி ஒன்பது மாத சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு காண்ட்ராக்டிலே இருந்து, இப்படிப்பட்ட சட்டக் கல்லூரியினுடைய ஆசிரியர்கள் உள்பட எந்தவிதமான சம்பளமும் பெறாமல் ஓய்வுக் காலத்திலே கிடைக்க வேண்டிய சலுகைகளும் இல்லாமல் அவர்களெல்லாம் வெளியேறக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை இந்தச் சமயத்திலே கூற விரும்புகிறேன்.

சட்டக் கல்லூரி மாணவர்களைச் சேர்ப்பதில் ஊழல்களைப் புரிந்ததாகத் தண்டிக்கப்பட்ட ஒருவர்தான் இன்றைக்கும் Director of Legal Studies ஆக இருக்கிறார். அது மட்டுமல்லாமல், அவருக்குத் தனியாக நந்தனத்தில் ஆண்டுதோறும் தனியிடத்தில் ஒரு இலட்சம் ரூபாய் செலவில் ஏழு கட்டிடம் தேவையா? அவர் இங்கேயே, சட்டக் கல்லூரி வளாகத்திற்குள்ளேயே இருக்க முடியாதா? இவைகளை எல்லாம் கூட இந்த அரசு கவனித்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நர்சரிப் பள்ளிகளைப் பற்றி எல்லா உறுப்பினர்களும் பேசி இருக்கிறார்கள். நாளுக்கு நாள் பெருகி வரக்கூடிய நர்சரி பள்ளிகளை அரசாங்கமே எடுத்து நடத்துவதற்கு முடியாவிட்டாலும் கூட, அவைகளை எல்லாம் ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று இந்தச் சமயத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, பல இடங்களிலே ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் அரசினுடைய எந்தவிதமான அனுமதியும், அங்கீகாரமும் இல்லாமல் நடத்தப்படுகின்றன. அதில் படித்துத் தேறிய மாணவர்களுக்கு எங்கேயும் அங்கீகாரம் இல்லாமலும், வேலை கிடைக்காமலும் தத்தளிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் பூராவையும் கல்வித் துறை அலமாக நீக்கப்பட வேண்டும். அதற்குக் காவல் துறை துணை ரிந்தாலும் கூட நலமாக இருக்கும் என்று சொல்லக்கூடிய றையிலே தான் இதை நான் இங்கே எடுத்துக் கூறப் பிரியப் கிறேன்.



1989 ஏப்ரல் 7] [திரு. சி. கோவிந்தராஜன்]

[பிற்பகல் 12-20]

பல்வேறு பள்ளிகளுக்கு கட்டடங்கள் கிடையாது. நூல் நிலையம் கிடையாது, ஆராய்ச்சிக் கூடம் கிடையாது, சுகாதார வசதி கூட கிடையாது. குறிப்பாகச் சொன்னால் ஒரே ஒரு உதாரணத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய திருப்பூண்டி என்னுமிடத்தில் இருக்கிற மேல் நிலைப்பள்ளியில் கிட்டத்தட்ட 2,500, 3,000 மாணவர்கள் படிக்கிறார்கள். அங்கே பெண்கள் மட்டும் 800 பேர்கள் படிக்கிறார்கள். ஒரு லெட்ரீன் கூட அங்கே கிடையாது என்பதை இங்கே நான் வருத்தத்தோடு கூற விரும்புகிறேன்.

பாடப் புத்தகங்கள் சம்பந்தப்பட்ட வரையில் ஏற்கெனவே உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். இன்றைய காலக் கட்டத்திற்குத் தேவையான முறையில் விஞ்ஞான அடிப்படையில், மூட நம்பிக்கைகளைப் போக்குகிற அளவிற்குப் பாடப் புத்தகங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூற விரும்புகிறேன். மூட நம்பிக்கைகளை அகற்றுகிற முறையில் கல்கத்தாவில் ''பிளானடோரியம்'' இருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். எப்படிக் கிரகங்கள் இயங்குகின்றன, எப்படிப் பிரபஞ்சம் இயங்குகிறது என்று தெரிவிக்கிற முறையில் உள்ளது. அந்த அறிவை எல்லாம் நம்முடைய மாணவர்கள் பெறுவதற்கும், மக்கள் பெறுவதற்கும், அந்த வகையில் மூட நம்பிக்கைகளைப் போக்குகிற முறையில், இங்கேயும் அப்படிப்பட்ட ஒரு 'பிளானடோரியம் அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த முறை கல்வி நிதி ஒதுக்கீட்டிற்கான அறிக்கையோடு 10, 12 பல்கலைக் கழகங்கள் பற்றிய, பல்கலைக் கழகங்களைத் தனி நிறுவனமாக அதாவது ''அட்டானமஸ்'' உரிமைகள் பெற்ற கல்வி அமைப்புகள், அவற்றின் அறிக்கைகள் கூட வைக்கப்பட்டிருக்கின்றன. அதோடு தமிழக அரசின் சார்பில் அறிவியல் தொழில் நுட்பத் துறை ஒன்று அமைக்கப்பட்டு அதன் சார்பில் பல பணிகள் நடைபெற்று இருக்கின்றன. அந்த அறிக்கையும் ஒரு வேளை நேற்றே வைக்கப்படாவிட்டால் இன்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அவர்கள் இல்லங்களுக்கு வந்து சேரும். அதிலே தந்தை பெரியார் அவர்களுடைய பெயரில் ஒரு அறிவியல் கூடம் சென்னையில் அமைக்கப்பட்டு வருகிறது. அதற்கான கட்டடங்கள் எல்லாம் கூட முடிக்கப்பட்டு விட்டன. அதோடு இணைத்து பிளானடோரியம் அமைக்கப்பட்டு கடந்த மே மாதம் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்டராமன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு இப்போது ஏறத்தாழ இரண்டு வகையான காட்சிகள், வான்கோள் காட்சிகள் காட்டப்பட்டு, மூன்றாவது வகையான காட்சி கடந்த சில தினங்களுக்கு முன்னாலே தொடங்கப்பட்டிருக்கிறது. அது நான்

[பேராசிரியர் திரு. க. அன்பழகன்] [1989 ஏப்ரல் 7

அறிந்த வரையில் இந்த மாநிலத்திற்குத் தேவையான மிக முக்கிய
மான ஒரு கடமையாக நிறைவேற்றப்பட்டு செயல்படுகிறது.
அது பற்றிய விவர அறிவிப்பும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு
கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெங்கடேஸ்வர
தீட்சிதர் ஏதோ சொல்ல வேண்டுமென்று விரும்புகிறார். என்ன
வென்று கேட்போம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்று தடவை
களுக்கு மேல் மூட நம்பிக்கை, மூட நம்பிக்கை என்று சொல்லி
இருக்கிறார். அப்படி என்றால் கல்வியில் அவர்களுக்கு மூட
நம்பிக்கையா, இல்லை, தெய்வத்தின் மீது மூட நம்பிக்கையா,
அல்லது நிர்வாகத்தின் மீது மூட நம்பிக்கையாவென்று எனக்குத்
தெரியவில்லை. ஆனால் மூட நம்பிக்கையென்பது இப்போது
பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. அதுபற்றி சர்ச்சை, குழப்ப
மெல்லாம் நாட்டிலே நடந்து கொண்டிருக்கிறது. இவைகளைச்
சொல்லி அதற்கு அவர் பதில் சொல்லியிருக்கிறார். அதற்கும்,
இதற்கும் சம்பந்தம் இல்லை. பெரியார் அவர்கள் என்ன சொன்
னார்? மூட நம்பிக்கையென்று அவர் சொன்னார் என்றால்,
கோவில் எல்லாம் இடிந்தா போய்விட்டது? எனவே அவர்
சொன்னதற்கு விளக்கம் கேட்கத் நான் விரும்புகிறேன். வேறு
ஒன்றுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூட நம்பிக்கை என்
றால் மூட நம்பிக்கை தான்.

திரு. சி. கோவிந்தராஜன் : மூட நம்பிக்கை என்பது இந்த
நிதி நிலை அறிக்கையிலேயே வந்திருக்கிறது. உண்மைக்குப்
புறம்பானவை எல்லாம் மூட நம்பிக்கை என்பதை நான் தெரி
வித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). நகராட்சி
ஆசிரியர்கள் எல்லாம் அரசு ஊழியர்கள் என்று அறிவிக்கப்
பட்டும், 1—6—1986-லிருந்து அரசு ஊழியர்கள் என்று சொல்லியும்
கூட, இன்றைக்கும் நகராட்சிகளில்தான் அவர்கள் ஊதியப்
பெறுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. நகராட்சிகளில் நிதி
நிலைமை மோசமாக இருக்கிறது. எனவே அவர்களெல்லாம்
அரசு ஊழியர்களாக ஆகிவிட்டதால் கல்வித் துறையிலிருந்து
அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்னொரு முக்கியமான விஷயம். கடலூரில் இருக்கிற
பச்சையப்பன் ட்ரஸ்ட்டின் கீழ் நடைபெறுகிற கந்தசாமி நாயுடு
பெண்கள் கல்லூரிக்கு காம்பவுண்ட் சுவர் கிடையாது, விடுதி
கிடையாது என்ற நிலை இருக்கிறது. இவைகளுக்கு இந்த அரசு
உரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)
தென்னாற்காடு மாவட்டத்தில்... ... . . . . .



1989 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேச்சாளர்கள், ஒரு
நடவை மணியடித்தால் அதை முடிக்க வேண்டுமென்று உணர
வேண்டும்.

திரு. சி. கோவிந்தராஜன் : ஆசிரியர்கள் இல்லம் பல்வேறு
மாவட்டங்களில் கட்டுகிறார்கள். தென்னாற்காடு மாவட்டத்
தில் ஆசிரியர் இல்லம் கட்ட 15 ஆண்டுகளுக்கு முன்னதாக
எல்லாத் தரப்பு ஆசிரியர்களிடத்திலும் ஒரு நாள் ஊதியம் வசூ
லிக்கப்பட்டது. கல்வித் துறைக்கும் இதில் சம்பந்தம் உண்டு.
கட்டடத்திற்காக இடமும் வாங்கப்பட்டது. இது வரையில்
கட்டி முடிக்கவில்லை. அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் பணம் கொடுத்துத்
தான் வேலை வாங்க வேண்டியுள்ளது. பெண்களுக்காகப் பல்வேறு
சலுகைகளைக் கொடுக்கிறது இந்த அரசு. ஆரம்பப் பள்ளி
ஆசிரியர் வேலைக்குப் பெண்கள் கூட பணம் கொடுக்க வேண்டி
யுள்ளது. பெண்கள் ஆசிரியர்களாக இருந்தாலும் கூட, ஏற்
கெனவே ஒரு வேலைக்கு, அப்பாயிண்ட்மென்டிற்கு 5,000,
10,000 ரூபாய் என்று வாங்கக் கூடிய சூழ்நிலை இருந்தது.
இந்த நிலைமை இப்போதும் தொடர்வதாகப் பரவலாகப் பேசப்
படுகிறது. எனவே இதில் அமைச்சர் அவர்களும், அரசும் தலை
யிட்டு, அப்படிப்பட்ட நிலைமை நடவாமல் பார்த்துக் கொள்ள
வேண்டும். இல்லாவிட்டால் அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர்
ஏற்படும் என்பதைக் கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்
கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்தக்
கல்வி மானியத்தின் மீது நான் சார்ந்திருக்கிற இந்திய கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன்வரு
கிறேன்.

முதலிலே அமைச்சர் அவர்கள் கல்வியைப் பற்றிப் பெருமை
யாகச் சில வாக்கியங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அது
கண்ணுக்குச் சமமானது என்றும், கல்வி இல்லாதவர்கள் குருடர்
களுக்குச் சமமானவர்கள் என்றும், எண்ணும் எழுத்தும்
மாந்தர்க்குக் கண்கள் என்று சொல்லக் கூடிய முறையில் மிகவும்
உயர்வானது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக
இன்றைக்கு அதிகமாக நிதி ஒதுக்கியிருக்க வேண்டும். இருந்
தாலும் கூட இன்றைக்கு உள்ள நிலைமையில் 900 கோடி
ரூபாயோடு, வேறு பல நிதிகளை எல்லாம் சேர்த்து, 1,034
கோடி ரூபாய் இந்தக் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே
இன்றைக்குள்ள நிலைமையிலே 21 ஆம் நூற்றாண்டை நோக்கி
இது கம்ப்யூட்டர் ஆட்சிக் காலமாகத் திகழ இருக்கிறது என்று
எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இதுவரை நடந்து
இருக்கிற கல்வியைப் பற்றி நாம் பார்க்கின்றபோது, நம்முடைய

இந்தியாவினுடைய மொத்தக் கல்வியினுடைய நிலை, படித்தவர்கள் 36.17 சதவீதமாகவும், தமிழ்நாட்டில் 45.78 சதவீதமாகவும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். மொத்தப் பேர்களில் மூன்றிலே இரண்டு பங்கு பேர்கள், குழந்தைகள் அல்லது பெரியவர்கள் படிக்கத் தெரியாதவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லக் கூடிய புள்ளிவிவரங்கள் தான் நமக்கு முன்னாலே வைக்கப்பட்டு இருக்கின்றன.

இதுமாத்திரம் அல்லாமல், இப்போது கூட நாம் பார்த்தோம் என்று சொன்னால, இன்றைக்குத் தொடக்கப் பள்ளிகளிலே 75.75 லட்சமாக இருக்கக்கூடிய அந்த மாணவர்களுடைய எண்ணிக்கை, நடுநிலைப் பள்ளிக்கு வரும்போது 29.04 லட்சமாகவும், உயர்நிலைப் பள்ளிக்கு வரும்போது 10.62 லட்சமாகவும், மேல்நிலைப்பள்ளிக்கு வரும்போது, 4.22 லட்சமாகவும் குறைந்துபோகிறது. ஏன் இந்தமாதிரி குறை ஏற்படுகிறது என்பதை நாம் பார்க்கவேண்டும்.

அது மட்டுமல்லாமல், நம்முடைய இந்திய அரசியல் சட்டத்தில் அனைத்து சிறுவர், சிறுமியர்களுக்கும், 6-114 வயதுக்கு உட்பட்டவர்களுக்குக் கட்டாயமாகக் கல்வி வழங்கப்படவேண்டும் என்ற விதி இடம் பெற்றிருக்கிறது. அந்த நோக்கத்தை நிறைவேற்ற நம்முடைய தமிழக அரசு திட்டமிட்டு செயல்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே இன்றைக்கு ஏறக்குறைய தமிழகத்தில் இருக்கிற மூன்றிலே இரண்டு பங்கு பேர்கள் கல்வி அறிவு இல்லாத நிலையில் இருக்கிறார்களே, அந்தக் குறையைப் போக்குவதற்கு என்ன தீவிரமான நடவடிக்கைகளை நாம் எடுக்க இருக்கிறோம் என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பல இடங்களிலே 5-வது வகுப்புவரை கூட படிக்க முடியாத நிலைமை இருக்கிறது. இதற்கு என்ன காரணம்? அதற்கு இப்போது நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் சொல்லும்போது நவோதயா பள்ளிகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அடிப்படையிலே, சாதாரணமாக ஏழை எளியவர்கள், 5 அல்லது 6-வது வகுப்பு வரை எழுதப் படிக்கக்கூடத் தெரிந்துகொள்ள முடியாத நிலைமையில் இருக்கும்போது அதற்கு வேண்டிய உபகரணங்கள், கரும்பலகைகள், பள்ளிக்கூடங்கள், அதற்கு வேண்டிய இடங்கள், இவைகளையெல்லாம் சீர்பண்ணுவதற்கும், நல்லமுறையில் அமைப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யாமலேயே, மிக உயர்ந்த மேலான கல்வியைக் கொடுக்கப் போகிறோம், அதற்காக கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழிக்கப் போகிறோம் என்று சொல்லக்கூடியவர்கள், முதலிலே இதைச் செய்ய வேண்டாமா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். எனவே அதற்கு உகந்தமுறையில் நம்முடைய கல்வி சம்பந்தமான கொள்கையை நாம் மாற்றிக்கொள்ளத் தயாராக இருக்க





வேண்டும். இன்றைக்கு சுதந்திரம் பெற்று, 42 ஆண்டுகளுக்குப் பின்னால்கூட 100-க்கு 60 பேர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக, ரேகை போடக்கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இதை மாற்றுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி நாம் சிந்திக்கக்கூடிய காலத்தில் இருக்கிறோம். அடிப்படைக் கல்வியை வழங்கக்கூடிய கிராமப்புறங்களில் உள்ள பள்ளிக்கூடங்கள் சீராக நடைபெறாமல் இருக்கின்றன. அப்படி இருப்பதற்குக் காரணம் போதுமான கட்டிடம் இலலை. அப்படியே கட்டிடங்கள் இருந்தாலும்கூட இன்றைக்கு நீங்கள் சொல்லக்கூடிய சராசரிக் கணக்கைப் பார்க்கும் போது, மாணவர்கள்—ஆசிரியர்கள் வீதம் 45—50 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்றுதான் வருகிறது. ஆகவே இப்படி 45 முதல் 50 பேர்களுக்கு ஒரு ஆசிரியர் சொல்லிக் கொடுக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டது என்றால்,— இன்றைக்கு 2 ஆசிரியர்கள் இருந்து, அதிலே ஒருவர் விடுமுறை எடுத்துக் கொண்டால், 90 பிள்ளைகளை வைத்து அவர் பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டும் என்றால் எப்படி முடியும் என்பதைப் பார்க்கவேண்டும்.

அதே மாதிரியாக இன்றைக்குப் பல கிராமங்களிலே புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்குவதற்குச் சில கண்டிஷன்களைப் போட்டு இருக்கிறார்கள். 300 ஜனத்தொகை இருந்தாலும் கூட அந்த இடத்திலே பள்ளிக்கூடம் துவங்கவேண்டும் என்று சொன்னால், ஒரு மைலுக்குப் பக்கத்திலே பள்ளிக்கூடம் இருக்கிறது, ஆகவே நீங்கள் புதிதாகப் பள்ளிக்கூடம் தொடங்க முடியாது என்று கல்வி இலாக்கா அதற்கு இசைவு தர மறுக்கிறது. ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக அந்த இடத்தில் தொடக்கப் பள்ளி தொடங்கவேண்டும் என்று சொன்னாலும் கூட, பக்கத்திலே உள்ள தனியார் பள்ளி ஆட்சேபணை தெரிவிக்கிறது. ஒரு மைலில், ஒரு மைலுக்குப் பக்கத்தில் பள்ளிக்கூடம் இல்லையென்று சொன்னால், எப்படி ஒரு மைல் தூரத்திற்குச் சிறிய குழந்தைகள், தங்களுடைய ஆரம்பப் பாடத்தைப் படிப்பதற்குச் செல்லமுடியும் என்பதைக் கணக்கில் கொண்டு 300 மக்கள் வசிக்கக்கூடிய எந்தக் குடியிருப்புப் பகுதியாக இருந்தாலும் சரி, அங்கு கட்டாயமாக அந்தத் தொடக்கப் பள்ளியைத் தொடங்குவதற்கு, விதியை மாற்றி, ஏற்பாடு செய்யவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.30)

முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். இன்றைக்குப் பள்ளிக்கூடங்கள், பாலிடெக்னிக்குகள், மற்ற இன்சினீயரிங் கல்லூரிகளிலே, புதியதாக சுய நிதி உதவிக் கல்லூரிகள், சுய நிதி உதவி பாலிடெக்னிக்குகள் எல்லாம் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன.

அதிலே அமைச்சர் அவர்கள் சொல்லும்போது சொன்னார்கள். அதிலே அவர்கள் சட்டப்படி பணம் வாங்கக்கூடாது என்று இருக்கிறது. அதை மீறித்தான் வாங்குகிறார்கள் என்று சொன்னார் கள் அப்படியானல் அதிலே ஒரு விதியை மாற்றலாம் அல்லவா? இன்றைக்கு 50 சதவீத மாணவர்களைச் சேர்ப்பது அரசாங் கத்தினுடைய தேர்வு மூலமாக நாம் தேர்ந்தெடுத்து அனுப்பக் கூடியவர்களை அங்கே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இருக்கிறது. மீதி 50 சதவீதத்தினரை அவர்கள் நினைத்தபடி மார்க்கு கூட குறைவு என்று பார்க்காமல், குறைந்தபட்ச மார்க்காக இருந்தால் போதும் என்று தேர்வு செய்யக் கூடிய உரிமை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாக நான் நினைக்கிறேன். அந்த மாணவர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய முறையில், 50-க்குப் பதிலாக 75, 80-ஆக உயர்த்தப்பட்டால் மேனேஜ்மெண்டிற்கு சிறு பகுதியைக் கொடுத்துவிட்டால், இந்த மாணவர்களுக்கு ஏற்கெனவே இடம் கிடைத்துவிடும். பணம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அதுமட்டு மல்லாமல், இன்றைக்கு கல்வி என்பது வியாபார நோக்கோடு நடத்தக்கூடிய, லாபம் சம்பாதிக்கக் கூடிய தொழிலாக மாறிவிட்டது என்பதை இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே இன்றைக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்குப் பணம் வசூலிக்கப்படுகிறது. ஒரு ஆசிரியரைப்போட வேண்டுமென்று சொன்னால், மாண்பு மிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் சொன்னது போல், ரூ. 5,000, ரூ. 10,000 என்ற அளவில் இல்லாமல், செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக நியமிக்கப்பட வேண்டுமென்று சொன்னால், ரூ. 20,000, ரூ. 30,000, உயர்நிலைப் பள்ளியிலே பி.டி. ஆசிரியர்களாக நியமிக்கப்படவேண்டுமென்று சொன்னால், ரூ. 30,000 அளவில் பணம் இல்லையென்றால் ஆசிரியர்கள் வேலைக்குச் சேரமுடியாது. ஆகவே இன்றைக்கு அந்த மாதிரி நிலையைப் போக்குவதற்கு அரசாங்கம் என்ன செய்ய இருக்கிறது என்பதனை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போன்று சில குறைபாடுகள் நான் இந்தத் துறையினுடைய பொறுப்பை ஏற்று 10, 20 நாட்களில் என்னுடைய காதிற்கு வந்தது. அப்படி வந்த குறைபாடுகள் உண்மையா என்ற விசாரணையை நான் இலாக்காவிலே உள்ளவர்கள் மூலமாக ஒரு வகையிலே விசாரித்து அறிந்து கொள்ள முயற்சித்தேன். அதற்கிடையில் இப்படிப்பட்ட பழக்கம் ஏற்கெனவே உள்ள அந்த அடிப்படையிலே ஏற்பட்டு விட்டது என்றும், அந்த குறைபாடுகளிலேயிருந்து அந்த அலுவலர்கள்—அப்படி ஒரு குறையை ஏற்படுத்தி இடம் கொடுத்தவர்கள்—அந்தக் குறைபாடுகளுக்கு இடம் தராமல் அவர்களுடைய பணியை ஆற்றக்கூடிய முறையில் இப்போது ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. எது உண்மை என்று நீங்கள்



தெரிந்துகொள்ள வேண்டுமானால், அப்படிக் குறை ஏற்படு மானால், மாண்புமிகு உறுப்பினர்கள் மட்டுமல்லாமல், தமிழ கத்தைச் சார்ந்த வேறு யாராக இருந்தாலும், அந்தக் குறையை எனக்கு எழுதுவார்களேயானால், நிச்சயமாக நட வடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் மாண்புமிகு உறுப் பினர்களுக்கும், இந்த அவைக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஆசிரியர்களை நியமனம் பண்ணக் கூடிய அதிகாரம் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே அவர்கள் வேலை நிறுவனங்களிலிருந்து பெயர்களைக் கேட்டாலும்கூட, பெயர்களைக் கேட்டு வருகின்றவர்களிலே, அவர்கள் இஷ்டப் படக் கூடியவர்களை எடுக்கக்கூடிய நேரத்தில் பணம் கேட் கிறார்கள். அவர்களே தான் எடுக்கிறார்கள். எல்லாக் கல்லூரிகளிலும், எல்லாப் பள்ளிகளிலும் என்று நான் சொல்ல வில்லை. இதை எப்படி நாம் கண்டு பிடிக்கமுடியும்?

ஆசிரியர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். நர்சுகள், டாக்டர்கள் எல்லாம் படித்து முடித்தவுடனே அவர்கள் எல்லாம் வரிசைப்படுத்தப்பட்டு, அந்த வரிசையின் அடிப் படையில் நியமனம் செய்யப்படுகிறார்கள். அதேபோன்று ஆசிரியர்களும் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அவர்களையும், அந்தந்த மாவட்டத்திலுள்ள அளவிலே வரிசையாக லிஸ்ட் வைத்துக்கொண்டு, அவர்கள் தகுதியானவர்களா என்று நீங்களே ஒரு பரீட்சை வைத்து அதன்மூலம் தேர்ந்தெடுக்க லாம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர் களே, செவிலியர் போன்ற பயிற்சி, டாக்டராகப் பட்டம் பெறுகின்ற நிலை, இவைகளெல்லாம் ஒரு எண்ணிக்கை அளவில் ஏறத்தாழ அவர்களிலே ஒரு வரிசை வைத்து, அவை களிலேயிருந்து அவர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய வாய்ப்பு உடையதாக அது அமைந்திருக்கிறது. ஆனால் இப்போது பொறியியலாளராகப் பட்டம் பெறுகிறவர்களை அந்த வரிசை யில் எளிதில் வைக்கமுடியாது. பெரும் எண்ணிக்கையில் பட்டம் பெறுகிறார்கள். அதேபோன்று ஆசிரியர் பயிற்சி என்பது, அரசாங்கத்தினுடைய பயிற்சி நிலையங்களிலே வழங்கப்படுகின்ற பயிற்சி மட்டுமல்லாமல், தனியார் நிறு வனத்திலே வழங்கப்பட்ட பயிற்சிக்கும் தேர்வு வைக்க வேண்டிய ஒரு கட்டாய நிலைமை நீதிமன்றத்தினுடைய தீர்ப்பால் ஏற்பட்டு, அந்தத் தேர்வும் நடத்தப்பட்டு, அதே போன்று, 'கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ்' என்ற முறையிலும் அந்த ஆசிரியர் பயிற்சி அனுமதிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் ஆசிரியர்களாக வேலைக்குச் சேர விரும்புகிறவர்கள் 10,000 பேர் இருப்பார்களானால் 500 பேருக்குத்தான் வேலை

கிடைக்கக்கூடிய நிலைமை உள்ளது. இந்த ஒப்பீடு நிலை இருக்கின்ற காரணத்தால் முன்கூட்டியே ஒரு பட்டியல் தயாரிப்பது என்பது இயலாத காரியமாகத்தான் அமைகிறது. எனவே விண்ணப்பிப்பவர்களைக் கொண்டுதான் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. அதிலே முன்னுரிமைகளுக்கான விதி முறைகள் எல்லாம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த முன் னுரிமைகள், அவர்களுடைய தகுதிகள் இவை புறக்கணிக்கப் படாமல்தான் தேர்வு செய்ய முடியும்ம தவிர, முன்கூட்டியே செவிலியர்களுக்கு இருப்பதைப் போல ஒரு பட்டியல் அமைப் பது இயலாத காரியம் என்பதை நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, பக்கம் 17-லே ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த திட்டத்தின் அடிப்படையில் 1989-90-ல் 6–11 வயது குழந்தைகளுள் 100 சதவிகிதமும், 11-14 வயது குழந்தை களுள் 75 சதவிகிதமும் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும் என்பது இந்திய அரசு கருதியுள்ள இலக்கு ஆகும். தமிழ் நாட்டில் 1985-86—க்கு முன்னதாகவே 6-11 வயது தொகுதி யினர் 100 விழுக்காடும் 11-14 வயது உள்ள தொகுதியினருள் 79.63 விழுக்காடும், பள்ளிகளில் சேர்க்கப்பட்டுவிட்டனர் என்று இருக்கிறது. இங்கே 1,63,000 பேரில் தொடக்கப் பள்ளியிலே 75 இலட்சம் என்பது, நடுநிலைப் பள்ளியிலே 29 இலட்சமாகக் குறைந்திருக்கிறது. ஆகவே இங்கே கூறிய படி 79 சதவிகிதம் 11-14 வயது குழந்தைகள் சேர்க்கப்பட்டு விட்டனர் என்று சொன்னால் ஏறத்தாழ 60 இலட்சம் குழந்தைகள் சேர்ந்திருக்க வேண்டும். ஆனால் இங்கு புள்ளி விவரம் என்ன கூறுகிறது என்று சொன்னால் 60 இலட்சம் என்பதற்குப் பதிலாக 29·04 இலட்சம்தான் மாணவர்கள் 8 ஆம் வகுப்பு வரையுள்ள நடுநிலைப்பள்ளியில சேர்க்கப் பட்டிருக்கிறார்கள் என்று. ஆகவே இங்கு சொல்லப் படுவது மத்திய சர்க்காருடைய இலக்குக்கு மேலாக 79.63 சத வீதம் பள்ளிகளிலே சேர்க்கப்பட்டு விட்டார்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது. இது சரிதானா என்று கேட்க விரும்புகிறேன். அடுத்து தனியார் பள்ளிகளிலே பல்வேறு முறைகேடுகள் நடக் கிறது. இன்றைக்கு மாணவர்களுடைய உரிமைக்காகக் கோரிக்கை வைத்தால் அவர்களை அடித்து அவர்களுக்கு இடைஞ் சல் உண்டுபண்ணுவது போன்ற காரியங்கள் நடக்கின்றன. இன் றைக்கு நெல்லை மாவட்டத்திலே மேலநீலிதநல்லூரிலே பாலிடெக் னிக் மாணவர்கள் ஓராண்டு ஒரு பாடத்திலே பெயிலாகிவிட்டால், அதை அடுத்த ஆண்டு சேர்த்து எழுத வேண்டும் என்று ஒரு கோரிக்கைக்காக ஸ்டிரைக் செய்திருக்கிறார்கள். அவர்களை அடித்து, ஆசிரியர்களையும் அடித்து மிகப் பெரிய தகராறு எல்லாம் நடந்திருக்கிறது. மதுரையில் உள்ள மூட்டா என்று சொல்லக்கூடிய ஆசிரியர்களுடைய அந்த ஸ்தாபனம் புகார்களை





யெல்லாம் உங்களுக்கு அனுப்பியிருக்கிறது. இப்படியெல்லாம் பல்வேறு முறைகேடுகள் தனியார் கல்லூரிகளிலே, தனியார் பள்ளி களிலே ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் அளிக்க வேண்டிய உரிமை அளிக்கப்படாமல் இருக்கிறது. அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக எங்களுடைய தொகுதியிலே பாரதியினுடைய பெயரிலே பெண்கள் பாலிடெக்னிக் இருக்கிறது. அதில் டி.சி.இ. (சிவில் என்ஜினியரிங்) என்ற அந்தப் பிரிவு இல்லாமல் இருக்கிறது. மெக்கானிக்கல், எலக்ட்ரிகல் என்று சொல்லக்கூடிய பிரிவுகள் இருக்கிறதே தவிர, பெண்களுக்கு உபயோகமான டி. சி. இ. என்று சொல்லக்கூடிய அந்தப் பிரிவு இல்லாமல் இருக்கிறது. அதை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு எங்களுடைய தொகுதியிலே, 2, 3 கிராமங்களிலே பள்ளிகள் இல்லாமல் இருக்கிறது. வடக்கு செம்மப்புதூர் என்ற கிராமம் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது. காத்திப்பட்டி கிராமத்தில் எல்லாம் அதிகமான குழந்தைகள் இருந்தாலும், குழந்தைகள் ஒரு மைல், இரண்டு மைல் போக வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அங்கு ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இளையரசனேந்தல் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே மாதிரி இன் றைக்குப் பல பேர் பல விவரங்களைப் பேசிவிட்டார்கள். நர்சரிப் பள்ளிக்கூடங்கள் எங்கே பார்த்தாலும் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. அந்த நர்சரிப் பள்ளிகளிலே அவர்கள் சொல்லிக் கொடுக்கக்கூடிய மொழி ஆங்கிலம்தான். இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கி றார்கள், தாய் மொழியே பயிற்சி மொழியாக இருக்க வேண்டு மென்று உலகம் பூராவும் உள்ள நிபுணர்கள் கருதுகிறார்கள். தாய் மொழி மூலமாக கற்றால் தான் அவர்கள் அதிகமான திறமை பெற்று அறிவாளிகளாக வர முடியும் என்று பல்வேறு அறிஞர்கள் எல்லாம் கூறியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் இருக்கின்ற நர்சரி பள்ளிகள் பூராவிலும் அம்மா, அப்பா என்பதற்குப் பதிலாக மம்மி, டாடி என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. எங்கு பார்த்தாலும் நர்சரி பள்ளிக் கூடங்கள். அது முறைப்படுத்தப்படாதது மட்டுமல்லாமல் அதிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு ஏதாவது பாதுகாப்பு உண்டா? அவர்களுக்கு இவ்வளவு தான் ஊதியம் கொடுக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறதா? ஒன்றுமே இல்லை. அரசாங்கத்திலே இது போல தமிழிலே சொல்லிக் கொடுக்கக்கூடிய நர்சரிப் பள்ளிக் கூடங்களை நிறுவ ஏற்பாடு செய்யப்படுமா?

[ பிற்பகல் 12-40 ]

அல்லது இருக்கக்கூடிய பள்ளிகளை முறைப்படுத்தி, அந்த மாதிரி ஒரு சீரான -சிறு குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்ற எண்ணம், ஆர்வம் பல்வேறு மக்களிடத்

இலே வந்திருக்கிறது. ஆகவே, அதைச் செய்யக்கூடிய ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா என்பதை அறிந்துகொள்வதோடு, செய்ய வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரியாக, இன்றைக்கு ஆசிரியர்களுடைய விகிதங்கள், தொடக்கப் பள்ளிக்கூடங்களிலே 40 குழந்தைகள், 50 குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் என்பதற்குப் பதிலாக, 30 குழந்தைகள் இருந்தால் ஒரு ஆசிரியர் என்று சொல்லக்கூடிய முறையிலே அதிகமான ஆசிரிர்களை நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள்; செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 600 பேர், தமிழ் ஆசிரியர்கள் 60 பேர், பி. டி. ஆசிரியர்கள் 60 பேர், ஆக மொத்தத்தில் பார்த்தால் 720 ஆசிரியர்கள்தான் இன்றைக்கு வேலைவாய்ப்புப் பெறக்கூடிய நிலை இருக்கிறது! அதிகமாக இந்தத் துறைக்கு நிதியைப் பெற்றாலும் கூட—மிக மிக முக்கியமானது கல்வி, கண் போன்றது கல்வி, கல்வி இல்லையெனில் கண் கிடையாது, ஆகவே, கண்ணுடையவர் என்பவர் கற்றோர், கற்கவில்லை என்று சொன்னால் கண் இல்லாதவர் என்று சொல்லக்கூடிய முறையிலே அந்தக் கல்வியைக் கொடுப்பதற்கு இனி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாவது, ஒரு குறிப்பிட்ட 5 ஆண்டுகளுக்குள்ளாவது—அத்தனை பேரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள் என்ற நிலையை ஏற்படுத்துவதற்கு என்ன செய்யலாம் அல்லது எந்தெந்த ஸ்தாபனங்களின் மூலமாக எப்படி எல்லாம் அதைச் சொல்லிக் கொடுக்கலாம், எப்படியெல்லாம் கல்வியைக் கற்பிக்கலாம் என்பதனைப் பற்றியெல்லாம் ஆலோசிக்கவேண்டும்.

ஏனென்றால், நாம் ஆயிரம் கோடிக்கு அதிகமாக மொத்த பட்ஜெட்டில் ஏறக்குறைய 25 சதவிகிதம் இந்தக் கல்விக்காக ஒதுக்கியிருந்தாலும் கூட, பெரும்பகுதி, சாதாரண ஏழை எளிய மக்கள் அந்த கல்வியைப் பெற முடியவில்லை. குறிப்பாக இன்றைக்கு சென்னை நகரத்திலே பார்த்தோமானால், கார்ப்பொரேஷன் ஸ்கூலைப் பார்த்தால், பல இடங்களிலே ஸ்கூலாகவே பார்க்க முடிவதில்லை. சில நேரங்களில் அங்கே மாடுகள் எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. அதை முறைப்படுத்த வேண்டும். ஏனென்றால், பல இடங்களில் பார்த்தால் அந்தக் கல்வி ஸ்தாபனங்கள் ஒரு நல்ல புனிதமான ஸ்தலமாக ஆக்கப்படுவதற்குப் பதிலாக, நமக்கே அவற்றைப் பார்த்தால் ஒரு மாதிரியாக இருக்கிறது. ஆகவே, இன்றைக்குப் பள்ளியினுடைய தரத்தை உயர்த்துவதோடு மட்டும் அல்லாமல் சாதாரண ஏழை எளிய மக்கள், உழைக்கின்ற மக்கள் அந்தக் கல்வியைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும்.

வசதி உள்ளவர்கள் கான்வென்ட்டிலே படிக்கலாம் அல்லது மாதாமாதம் 50 ரூபாய், 100 ரூபாய் பணத்தைச் செலுத்தி, கல்வியைப் பெறலாம். ஏழை எளிய மக்கள் தங்களுடைய குழந்தைகளைக் கல்வி பெறுவதற்கு அனுப்பக்கூடிய நேரத்தில் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் சீராக வைத்துக் கொள்ளப்படுவ



தோடு மட்டுமல்லாமல், செம்மையாக நடத்தப்படுவதற்கு என்னென்ன ஏற்பாடுகளைச் செய்ய முடியுமோ அவைகளைச் செய்து தரவேண்டும். நம்முடைய தமிழ்நாட்டிலே—இன்றைக்கு இருப்பதிலே இந்தியாவிலேயே தமிழ்நாடு பரவாயில்லை, 40 சதவிகிதம். மொத்தம் 33-லே நம்முடைய விகிதாச்சாரம் ஓரளவு உயர்ந்திருந்தாலும் கூட, அது போதாது. இதைவிட கேரளா உயர்வாக இருக்கும் என்று நினைக்கிறேன். தமிழகத்திலே படிப்பு இல்லாதவர்கள் இல்லை என்று சொல்லக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவதற்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக அந்த காரியங்களைச் செய்ய வேண்டும். இன்றைக்குக் குறைந்திருக்கிற படிப்பின் தரத்தை உயர்த்துவது மட்டுமல்லாமல், கட்டிடங்கள் இல்லாது இருக்கிற கிராமங்களில் இருக்கிற பள்ளிகளுக்குக் கட்டிடங்களைச் சீரமைத்துக் கொடுக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பள்ளிகளுக்குக் கட்டிடத்தைச் சீராக்குவதற்கு அவர்களுக்கு நிதி இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, 5 ஆண்டு, 10 ஆண்டுக் காலமாக எந்தவிதமான ரிப்பேரும் செய்யாமல் மழைக் காலங்களில் ஒழுகக்கூடிய நிலை இருக்கிறது.

இதையெல்லாம் போக்கி, இன்றைக்கு கல்வி சம்பந்தப்பட்டவரையிலும் அனைவருக்கும் கல்வி கொடுக்கக்கூடியது மட்டுமல்ல; சட்டத்தில் இருந்தால் போதாது. யதார்த்தத்தில், நடைமுறையில் அத்தனை பேருக்கும் கல்வியைப் பெறுவதற்குண்டான வாய்ப்பை ஏற்படுத்தி, சாதாரணமாக 5ஆம் வகுப்பு வரையாவது அனைவரும் முறைப்படியாகப் படிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு சட்டப் பேரவை தலைவர் அவர்களே, அரியலூர் தொகுதியில் மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுத்த வாக்காளப் பெருமக்களுக்கும், தமிழ்ச் சமுதாயத்தினுடைய நம்பிக்கை நட்சத்திரம் தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் உரித்தாக்குகின்றேன்.

மக்களின் சேவையே மகேசன் சேவை என்று எடுத்துக் கொள்கின்ற இந்த அரசு கல்விப் பொறுப்பை ஏற்றிருக்கக்கூடிய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மாணவர்களின் சேவையே மகேசன் சேவை என்று கருதி, 1989-90 ஆம் ஆண்டுகளில் 900 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளார். அப்படி 900 கோடி நிதி ஒதுக்கிய இந்த நேரத்தில் மக்கள் தொகைக் கணக்கில் வைத்து இந்தியாவிலேயே அதிகமான அளவு நிதியை ஒதுக்கியது தமிழக மாநிலம் தான் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி முன்னேற்றத்திற்காகக் கழக அரசுக்குள்ள அக்கறை, ஆர்வம் காரணமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், அதனைப் போல, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் பட்டப்படிப்பு வரை இலவசமாக வழங்கியது இந்த அரசுதான் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்தைய ஆட்சியாளர்கள சுயநிதிக் கல்லூரி என்று அவர்களுக்கு வேண்டியவர்களுக்குப் பதிவு செய்து கொடுத்து அவைகள் கொட்டகைகளிலும், கூடங்களிலும் பொறியியல் கல்லூரிகளாக, பாலிடெக்னிக்குகளாகச் செயல்பட்டுக்கொண்டு மாணவர்களிடமிருந்து பணத்தை அட்டையைப் போல் உறுஞ்சுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் நன்கொடை என்ற பெயரால் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதைப்போல் அங்கே இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரிகள் ஆனாலும், பொறியியல் கல்லூரிகள் ஆனாலும், பாலிடெக்னிக்குகள் ஆனாலும் ஒவ்வொருவருக்கும் அவர்கள் 50 ஆயிரம், ஒரு லட்சம் ரூபாய் என்று வைத்து இருக்கிறார்கள், அப்படி வைக்கப்பட்டிருக்கக்கூடிய கல்லூரிகளில், கிராமப்புறங்களிலிருந்து வரக்கூடிய மாணவர்களில் ஏழை மாணவர்கள், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அங்கு படிக்க முடியவில்லை.

அதேபோல் கல்லூரி ஆசிரியர்களுக்கு, திருத்தி அமைக்கப்பட்ட சம்பள விகிதங்களை நிறைவேற்றியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும், ஆளுநரும் நிறைவேற்றாததை இந்த அரசு நிறைவேற்றி இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இன்றைக்குப் பள்ளிகளில் நடத்தக்கூடிய பாடங்கள் நல்வாழ்வுக் கல்வியாகவும், அதேபோல் முதல் உதவிக் கல்வியாகவும் ஒவ்வொருவரும் படிப்பதற்கு இடம தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் திருச்சி மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி அமைப்பது இந்த ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். அதற்காகத் திருச்சி மாவட்டச் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பில் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் அரியலூரில் கலைக் கல்லூரி 1965-ல் மதிப்பிற்குரிய முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவச்சலம் அவர்கள் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அப்படி ஆரம்பிக்கப்பட்ட அந்தக் கல்லூரியில் நீண்ட நாட்களுக்கு முன்னால் கழகத் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்த கால கட்டத்தில் சில கட்டிடங்கள் உருவாக்கப்பட்டன. அதேபோல் கழகத் தலைவர் காலத்தில்தான் 150-க்கும் மேற்பட்ட கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. அந்த கல்லூரிகள் நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், ஐ.பி.எஸ். அதிகாரிகள்



தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். 1961-லிருந்து 1976 வரை தமிழகத்தை ஆண்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எத்தனை பேர் தேர்ந்தெடுக்கப்படடு இருக்கிறார்கள், ஐ. பி. எஸ். அதிகாரிகள் எத்தனை பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள், பொறியியல் கல்லூரியில்; மருத்துவ கல்லூரியில் எத்தனை பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்; எத்தனை பேர் இன்றைக்கு வேலையில் இருக்கிறார்கள் என்பதை நல்ல உள்ளம் படைத்த, படித்த நண்பர்கள் நன்கு அறிவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1977 ஆம் ஆண்டிலிருந்து 1986 ஆம் ஆண்டுவரை சுய கல்லூரிகளும், பாலிடெக்னிக்குகளும் உருவாக்கப்பட்டதே ஒழிய மாணவர்கள் படிப்பில் அக்கறை செலுத்தவில்லை. அதேபோல்தான் அரியலூர் அரசுக் கல்லூரி நீண்ட நாட்களாக—நான் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலக் கட்டத்திலிருந்து மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது, அந்தக் கல்லூரிக்கு பி.காம்., எம். காம். போன்ற பட்டப்படிப்பு கொண்டு வரவேணடும என்று கேட்டுக்கொண்டு இருந்தேன். நான் பல முறை முயற்சி எடுத்தும் அந்த முயற்சி பலன் கொடுக்கவில்லை. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அந்தக் கல்லூரிக்கு பி.காம்., பட்டப் படிப்புக் கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அரியலூர் தொகுதியில் அரியலூர் மேல்நிலைப் பள்ளி, அதேபோல் தனியார் மாணவியர் மேல்நிலைப் பள்ளியும் இருக்கிறது.

திருமானூரில் ஒரு மேல்நிலைப் பள்ளி அமைக்க வேண்டும் என்று இரண்டு ஆண்டுகளாகப் பணம் கட்டப்பட்டும் அந்தப் பள்ளியை அனுமதிக்கவில்லை. அந்த மேல்நிலைப் பள்ளியை அனுமதிக்க வேணடும் என்று நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் திருமழபாடியில் 1,500-க்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள், அதேபோல் மாணவியர்கள் 400 பேர் படிக்கிறார்கள். இவர்கள் எல்லாம் பின்தங்கிய பகுதியில் உள்ளவர்கள், கிராமங்களிலிருந்து வரக்கூடிய மாணவர்கள் அங்கு தங்கிப் படிப்பதற்கு மாணவர் விடுதி ஒன்றை அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு எந்தப் பள்ளிக்கூடத்தை எடுத்துக் கொண்டாலும், நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்தபோது எங்கு பார்த்தாலும், உயர்நிலைப் பள்ளியை எடுத்துக் கொண்டாலும், கல்லூரிகளை எடுத்துக் கொண்டாலும், ஆரம்பப் பள்ளிகளை

[திரு. த. ஆறுமுகம்] [1989 ஏப்ரல் 7

எடுத்துக் கொண்டாலும் உட்காருவதற்கு மாணவர்களுக்கு இடம் இல்லை ; கரும் பலகை கிடையாது ; மேஜை—டெஸ்க் எல்லாம் கிடையாது என்று பலமுறை வலியுறுத்தியிருக்கிறார்கள். அப்படிப் பட்ட கல்வி அமைச்சர் அவர்கள், நிச்சயமாக இந்தக் கல்வித் தரத்தை மிகவும் உயர்த்துவார் என்று நான் நம்புகிறேன்.

(பிற்பகல் 12-50)

அதேபோல் இன்றைக்கு எத்தனையோ கல்லூரிகள் துவக்கப் பட்டிருந்தாலும் அந்தக் கல்லூரிகளில்—தனியார் கல்லூரிகளில் நடத்தப்படக்கூடிய மாணவர் விடுதிகள் சரியான முறையில் கண்காணிக்கப்படவில்லை. ஏனென்று சொன்னால், 200 ரூபாய் 250 ரூபாய் என்று மாதாமாதம் வாங்குகின்ற அந்த மாணவர் விடுதிகளில் உணவு வகைகள் சரியான முறையில் வழங்கப் படவில்லையென்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள் கிறேன்.

அதேபோல் இன்றைக்கு ஊராட்சி ஒன்றியத்தில்கூட பெருந் தலைவர்களிடம் ஆசிரியர்களையெல்லாம் ஒப்படைக்க வேண்டுமென்று சொன்னாலும், இன்றைக்கு அப்படி ஒப்படைக் கப்படுகின்ற கால கட்டத்தில் அங்கு இருக்கக்கூடிய ஆசிரியர் பெருமக்கள் எல்லாம் கல்வி இலாக்காவைத் தனியாகப் பிரித்து, ஏ. இ. ஓ., என்றும், டி. இ. ஓ., டிப்டி இன்ஸ்பெக்டர் என்றெல் லாம் தனியாகப் போடப்பட்டு, நடத்தக்கூடிய வாய்ப்பு இருக் கின்றன. அதை ஒன்றியத்தில் சேர்க்க வேண்டுமென்று சொன்ன நேரத்தில் பல ஆசிரியர்கள் அது தேவையில்லையென்று சொன் னார்கள். அதற்கேற்ப நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றியத்திலிருந்து நீக்கி விட்டோம் என்ற ஒரு அறி விப்பையும் ஆசிரியர்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல் இன்றைக்கு ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் எல்லாம் பொதுப்பணித் துறை மூலமும், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் ஒன்றியத்தின் மூலமும் பழுது பார்க்கப் படு கின்றன. உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவை பொதுப் பணித் துறை மூலமாகப் பழுது பார்க்கப்பட்டாலும், அவை நல்ல முறையில் பழுது பார்க்கப்படவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல், பள்ளிகளில் மாணவர்கள் குடிப்பதற்குத் தண்ணீர் வசதியும், அதேபோல் உட்காருவதற்கு இட வசதியும், அதேபோல் கட்டிட வசதியும் செய்துதரப்படவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள் ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இவற்றையெல்லாம் செய்து 'மக்களின் சேவையே மகேசன் சேவை' என்று செய்யக்கூடிய இந்த அரசு மக்களுக்காக என்றைக்கும் சேவை செய்ய வேண்டு மென்று கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கையை ஆதரித்து, என் உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.



1989 ஏப்ரல் 7]

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறை மானியத்தின் மீது கருத்துக்களை வழங்குகின்ற வாய்ப்பினை உருவாக் கித் தந்தமைக்கு முதலில் உங்களுக்கு என்னுடைய நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிற பல்வேறு கருத்துக்களில் ஒன்றிரண்டைக் கோடிட்டுக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

இன்றைக்கு வளர்ந்து வருகிற சமுதாயத்தில் கல்வித் துறையில் பல்வேறு மாற்றங்களைத் தமிழகத்தின் மறைந்த மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள். குறிப்பாக, புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில், எந்த ஆட்சி யிலும் இல்லாத அளவுக்கு ஒரு பெருமையைச் சேர்க்கின்ற வகையில், ஆறு பல்கலைக் கழகங்களைக் கொண்டு வந்த பெருமை புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியையே சாரும். பாரதியாருக்காக ஒரு பல்கலைக்கழகம், பாரதி தாசனுக்கு ஒரு பல்கலைக்கழகம், காமராஜர் பெயராலே ஒரு பல்கலைக் கழகம், பெண்களுக்காக என்று அன்னை தெரசா பெயரிலே ஒரு பல்கலைக்கழகம், தமிழுக்காக என்று ஒரு பல்கலைக் கழகம், புரட்சித் தலைவருடைய பெயரால் மருத்துவப் பல்கலைக்கழகம் என்று பல்கலைக்கழகங்களைத் துவக்கி, நாட்டிலே நலிந்து கிடக்கிற மக்களுடைய கண் ணீரைத் துடைப்பதற்காக, ஏழை எளிய மக்களுடைய குழந்தைகளின் கண்ணீரைத் துடைப்பதற்காக உருவாக்கித் தந்த பெருமை அன்றைக்கு இருந்த புரட்சித் தலைவர் அவர் களுடைய ஆட்சியையே சாரும்.

இன்றைக்குக்கூட மாண்புமிகு உறுப்பினர்களில் சிலர் குறிப்பிட்டுக் காட்டினார்கள். அப்படிக் குறிப்பிட்டுக் காட்டு கிறபோது, தனியார் பல்கலைக்கழகங்கள், தனியார் பொறி யியல் கல்லூரிகள், தனியார் மருத்துவக் கல்லூரிகள், பாலி டெக்னிக்குகள் போன்ற நிறுவனங்களை நீங்கள் தனியாருக்கு வழங்கியிருக்கிறீர்கள்; அதிலே தவறு ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டுக் காட்டினார்கள். குறிப்பாக, தமிழ் நாட்டிலே அது உருவாகவில்லையென்று சொன்னால், பக் கத்திலே இருக்கிற கர்நாடக மாநிலத்திற்குச் சென்று அங்கே லட்சக்கணக்கான ரூபாய்களைத் தந்து படிக்கின்ற நிலைமை இருந்தது. இங்கே இருக்கிற மாணவர்களுடைய பெற்றோர் கள் வாழ்க்கையிலே சேர்த்து வைத்த பணம் எல்லாம் அந்த மாநிலங்களுக்குச் செல்லக் கூடிய நிலைமையை மாற்றி யமைத்தவர் அன்றைய மாண்புமிகு முதலவர் என்பதை நாம் மறந்துவிட முடியாது. அந்த அடிப்படையிலே புரட்சித் தலைவர், அடித்தளத்திலே உழைத்துக் கொண்டிருக்கிற மக்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்காக, கல்வித் துறை யிலே பல்வேறு மாற்றங்களை அன்றைக்கு உருவாக்கித்

[திரு. கே. ஏ. செங்கோட்டையன்] [1989 ஏப்ரல் 7

தந்தார்கள். உயர்நிலைப் பள்ளியில்
காக, அன்றைக்கு பிளஸ் டூ கல்வி முறையைக் இருக்கின்றவர்களுக்
வந்து, இந்தியத் திருநாட்டின் தலைமையிலே கொண்டு
பாரதப் பிரதமர்கூட தமிழ்நாட்டினுடைய கல்வி இருக்கிற
யைப் பின்பற்றுங்கள் என்கின்ற அளவுக்கு ஒரு பெருமையைச் முறை
சேர்த்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அந்த
அளவுக்குக் கல்வித் துறையிலே பல்வேறு மாற்றங்களை உரு
வாக்கி, ஏழை மக்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்காக,
படித்துவிட்டு அவர்கள் வேலையில்லையே என்று கண்ணீர்
சிந்துவதைத் தடுப்பதற்காக, தொழில் கல்வியைக் கொண்டு
வந்த பெருமை அன்றைய ஆட்சிக்குச் சேரும்.

இன்றைக்குக் கல்வித் துறை மானிய அறிக்கையைப் புரட்
டிப் பார்க்கிறபொழுது, ஒரு கருத்தை இங்கே வைக்க நான்
கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே கல்வித் துறை மானியத்
தில் ஏழைக் குழந்தைகளுக்குச் சீருடை வழங்குகிறீர்கள்;
ஏழைக் குழந்தைகளுக்குப் புரட்சித் தலைவர் கொண்டு வந்த
சத்துணவுத் திட்டத்தைச் சரியான முறையிலே நாங்கள் அமுல்
படுத்துகிறோம் என்று சொல்கிறீர்கள். ஆனால், புரட்சித்
தலைவர் எம்.ஜி.ஆர். கொண்டு வந்திருக்கிற காலணி திட்
டம் மட்டும் இங்கே இடம் பெறவில்லையென்பதை நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு ஏழைக் குழந்தைகள் தொலைதூரம் சென்று
கல்விக் கூடங்களிலே கல்வி கற்க வேண்டுமென்றால் வெயிலி
லும் புதர்களிலும் காடுகளிலும் சென்று கொண்டிருக்கின்
றன. அந்தக் குழந்தைகளுடைய கண்ணீரைத் துடைப்பதற்
காக, அன்றைய முதல்வர் அவர்கள் காலணித் திட்டத்தைக்
கொண்டு வர வேண்டுமென்று கருதினார்கள். இன்றைய
காலத்திலே ஆட்சியிலே இருக்கிற தாங்கள் அதனை அமுல்
படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே குறிப்பாக, கல்வித் துறையிலே மாற்றங்களை
உருவாக்க வேண்டுமென்று சொன்னால், மேலை நாடுகளை
நாம் எண்ணிப் பார்க்கிறோம். மேலை நாடுகளிலே ஒரு
குழந்தைக்கு எந்தத் துறையிலே ஆர்வம் இருக்கிறதோ
அந்தத் துறையிலே அவர்களுக்குப் பயிற்சி தருவதுபோல்
தமிழ்நாட்டிலே ஒரு முன் உதாரணமாக, இந்தியத் திரு
நாட்டிலேயே ஒரு எடுத்துக்காட்டாகத் தமிழ்நாடு அமைந்திருக்
கிற வகையில் நீங்கள் உருவாக்கித் தர வேண்டுமென்றால்,
மேலை நாடுகளைப்போல், அந்தக் குழந்தைகள் எந்தத் துறை
யிலே ஈடுபாடு கொண்டிருக்கிறார்களோ, அது எந்தத் துறை
யாக இருந்தாலும், மருத்துவத் துறையாக இருந்தாலும்,
எந்தத் துறையை அவர்கள் கேட்கின்றார்களோ, அந்தத்
துறையை அந்தக் குழந்தைகளுடைய ஆர்வத்திற்கு ஏற்ப,



1989 ஏப்ரல் 7] [திரு. கே. ஏ. செங்கோட்டையன்]

கற்றுத் தருவதைப் போல், நீங்களும் கற்றுத் தரும் நிலைமையை உருவாக்கித் தர வேண்டுமென்ற வேண்டுகோளை எங்கள் சார்பாக நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கேகூட, 10 (ஏ) (1) என்ற விதியின் கீழ் நியமிக்கப்படுகிற கல்லூரிப் பேராசிரியர்களை நீங்கள் குறிப்பிட்டுக் காட்டினீர்கள். இதற்கு முன்னாலே உரையாற்றுகிறபொழுது ஒப்பந்த அடிப்படையிலே ஏறத்தாழ 5,000 பேராசிரியர்களை நியமிக்கிற நேரத்தில், 2,000 பேர்களுக்கு அன்றைக்கு உத்தரவாதம் தந்து, வேலை வாய்ப்பு நீங்கள் தந்திருக்கிறீர்கள். இருந்தாலும்கூட, தேர்வாணைக் குழு அன்றைக்கு ஏற்காத காரணத்தால், 3,000 ஆசிரியர்கள் வேலையில்லாத நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் கருத்திலே கொண்டு, நீண்ட நெடுங்காலமாக, 4, 5 ஆண்டுகளாக, அதிலே பணி புரிந்து கொண்டிருக்கிற, ஒப்பந்த அடிபபடையிலே பணியிலேயிருக்கிற பேராசிரியர்களுக்குப் பாதுகாப்பு தருகின்ற வகையிலே நிலைமைகளை உருவாக்கித் தர வேண்டும். அதற்காக, தேர்வாணைக் குழுவோடு சேர்ந்து இந்த அரசு நல்ல முடிவினை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல, நகராட்சியிலே இருக்கிற ஆசிரியர்களை இன்றைக்கு அரசுத் துறையிலே ஆசிரியர்களாக எடுத்திருக்கிறீர்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் இன்றைக்குத் தனி ஒப்பந்தம் ஏற்படுகிறதா என்றால் கிடையாது. நகராட்சி மன்றத்திலேயிருக்கிற ஆசிரியர்கள் அனைவரையும் அரசு ஊழியர்களாக எடுத்துக் கொண்டாலும், அவர்கள் நகராட்சியிலே இருக்கிறவர்கள், அந்தத் துறையிலே இருப்பவர்கள்தான். அவர்களை எல்லாம், சேர்க்க ஆணை பிறப்பித்து, இன்றைக்கு நடைமுறைச் சிக்கல் இருபபதை கண்கூடாகப் பார்க்கிறோம். இதையெல்லாம் கருத்திலே கொண்டு நல்லபல திட்டங்களை இந்த ஆட்சி உருவாக்கித் தரவேண்டும்.

அதே போல், இன்றைக்கு உயர்நிலைப் பள்ளிகளை மேலநிலைப் பள்ளிகளாக ஆக்க வேண்டுமென்று கிராமப்புறங்களிலே இருக்கிற மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கிராமங்களிலே ஏறத்தாழ 6, 8, 10 கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கிறவர்கள் உயர்நிலைப் பள்ளியிலிருந்து மேல் நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்றால், போதுமான வசதிகள் இல்லாத ஏழைக் குழந்தைகளுடைய கண்ணீரைத் துடைப்பதற்காக, ஆட்சி பொறுப்பேற்ற உடனே, புரட்சித் தலைவர், பல நூற்றுக்கணக்கான மேல்நிலைப் பள்ளிகளை உருவாக்கித் தந்தார்கள். ஆனால், இங்கே இன்றைக்கு எண்ணிப் பார்க்கிறோம். மேல்நிலைப் பள்ளிகளிலே தமிழ் ஆசிரியர்கள் குறிப்பிடுவதைப் போல், குறிப்பிட்ட அளவிற்குத்தான், ஓரளவிற்குத்தான், மூன்றில் ஒரு பங்கு அளவிற்குத்தான் பதவிகளைப் பூர்த்தி செய்கிற அளவிற்கு ஆசிரி

யர்களை நியமித்திருக்கிறீர்கள். ஆனாலும்கூட, சில இடங்களிலே நாம் பார்க்கிறோம். அதற்கு ரூ. 25,000—உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குவதற்கு, அரசினுடைய விதிமுறைக்கு உடபட்டு, செலுத்தி, அவர்களுக்கு வேண்டிய இடங்களும் கொடுத்து, ஏறத்தாழ 2 ஆண்டுக் காலம் 3 ஆண்டுக் காலம் ஆகியும் அனுமதி அளிக்கப்படாமல் தேங்கிக் கிடக்கிற பலவேறு பிரச்சினைகளை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரசின் விதிமுறைகளுக்கு ஏற்ப ரூ. 25,000 கட்டி, அதற்கு வேண்டிய நிலங்களைக் கொடுத்தபிறகு, நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த பிறகு....

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையினுடைய அனுமதியோடு அவை அலுவல் நேரம் மேலும் 30 மணித் துளிகள் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** ஆகவே அந்த நிலைமைகளை நீங்கள் உருவாக்கிக் தர வேண்டுமென்று நான் வேண்டுகோளாக இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு நாம் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு தேர்ச்சி பெற்றவர்கள் இருப்பதைப் பார்க்கிறோம். பொறியியல் துறையிலே ஒருவர் தேர்ச்சி பெற்றிருப்பார். அதைப்போல வேளாண்மைத் துறையிலே சில பேர் வல்லுநர்களாக இருப்பார்கள். சிலபேர் இலக்கியத் துறையிலே தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு பல்கலைக் கழகங்களில் முன்னுரிமை வழங்கி, அவர்களுக்கு ஊக்க ஊதியத்தை தருவதன் வாயிலாக இங்கே இருக்கின்ற பல்வேறு துறைகளிலே நம்முடைய தமிழகம் முன்னோடியாக வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நீங்கள் செய்து தரவேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு அரசுத் துறையில் ஒரு கல்லூரியும் கிடையாது. கோவை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அரசுத் துறையில் கல்லூரி இருக்கிறது. பெரியார் மாவட்டத்திலே தனியார் கல்லூரிகள்தான் இருக்கிறதே தவிர, அரசுத் துறையால் உருவாக்கப்பட்ட கல்லூரி கிடையாது. எனவே எங்களுடைய பகுதிகளிலே இருக்கின்ற பெண்கள், பெரியார் மாவட்டத்தின் தலைநகரமாக இருக்கின்ற ஈரோட்டிற்கோ அல்லது கோவைக்கோ செல்ல வேண்டிய நிலைமை இருக்கின்ற காரணத்தினாலே கோபிசெட்டிப்பாளையத்திலேயே பெண்களுக்காக, மகளிர் கல்லூரி ஒன்றை அரசின் சார்பாக அமைத்துத் தரவேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க, அது இருக்கிற இடத்தில் கல்லூரிகள் உருவாக ஏறத்தாழ தமிழ்நாட்டினுடைய ஒவ்வொரு மாவட்டத்



20, 30 இடங்களில் உருவாக்க வேண்டுமென்ற
திலேயிருந்தும் இது குறித்த கருத்துரு அரசிடம்
வேண்டுகோள் இருக்கிறது. அரசாங்கத்தினுடைய நிதி
இருக்கிறது. ஆனால் அவைகள் இரண்டு உயர்நிலைப் பள்
நிலை காரணமாக, மாவட்டத்திற்கு என்ற அளவிற்குத்தான்
ளிக்கூடம், ஒரு மேல்நிலைப் பள்ளி இந்த ஆண்டு ஏற்படுத்தக்கூடிய
செய்ய முடியும். கல்லூரிகளை நடைபெற்ற ஆட்சியின் வினை
நிதிநிலையை இதற்கு முன்னால் இது ஒரு குற்றச்சாட்டு
வாக இந்த அரசு பெற்றிருக்கவில்லை. கல்லூரியாக இருந்தாலும்.
அல்ல. இயற்கை நிலைமை. எனவே தொடங்குவதற்கு என்று
மேல்நிலைப் பள்ளியாக இருந்தாலும் போதாது, கட்டிடங்களும்
சொல்கிறபோது இடவசதி மட்டும் சொன்னால், ஒரு 20
தேவைப்படுகிறது. கட்டிடம் என்று வருவது எவ்வளவு
ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு கட்டிடம் பெரிய முதலீடு
எளிதாயிற்றோ அதற்கு மாறாக இப்போது நிலையில் தமி
தேவைப்படுகிறது. எனவே இன்றைக்கு இருக்கிற தேவையை நிறை
ழக அரசு அந்தந்தப் பகுதி மக்களுடைய செல்வர்களோ அல்லது
வேற்ற வேண்டுமானால் தனிப்பட்ட வந்தால்தான் அதுவும்
சங்கங்களோ நிதி வழங்குவதற்கு முன் ஊதியத்தைத்
குறிப்பாக ஆசிரியர்களுக்காகத் தரவேண்டிய மூன்று
தர முன்வந்தால்தான் இயலும். ஏற்கெனவேஇரண்டு ஊதியப்
ஆண்டுகள் அப்படித்தான் தரப்பட்டிருக்கிறது. அந்த கட்டினால் அவர்
பொறுப்பை ஏற்றுக்கொண்டு அந்த நிதியைக் தீர்மானிக்கப்பட்டி
களுக்கு முன்னுரிமை வழங்குவது என்று கட்டிடங்கள் முதலான
ருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், உருவாகி அதற்கு நிதி
வற்றிற்கான அடிப்படைச் சூழ்நிலை ஒரு கல்லூரி தகுந்த
கிடைக்கக்கூடிய நிலைமை இருந்தால்தான் போதுமான நிதி இல்லாத
கல்லூரியாக உயர முடியும். எனவே, இந்த அவையிலே வலி
நிலையில் மாண்புமிகு உறுப்பினர்கள் வசதி கிடைப்பதற்கும்,
யுறுத்திப் பேசியதைப் போல இதற்கான முயற்சியின் அடிப்படை
தகுந்த முயற்சி எடுத்துக் கொண்டு அந்த கல்வி நிலையங்கள்
யிலே தங்கள் தங்கள் பகுதியிலே தகுந்த கேட்டுக் கொள்கிறேன்.
உருவாகப்பாடுபட வேண்டுமென்று நான்

**திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு கல்வித்
துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல அரசால்
விதிக்கப்படுகின்ற தகுதிக்கு ஏற்ப அடிப்படை வசதிகளோ
கட்டிட வசதிகளோ வேண்டுமென்றாலும் நாங்கள் தருவதற்குத்
தயாராக இருக்கிறோம். அதற்காக அங்கே ஒரு கமிட்டி அமைக்கப்
பட்டிருக்கிறது. அங்கே இருக்கின்ற வியாபாரப் பெருங்குடி
மக்கள், பொதுவாழ்விலே ஈடுபடுகின்றவர்கள் அதற்காக அக்
கறை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசு அந்தப்
பகுதியிலே இருக்கிற மக்களுடைய நலனைக் கருதி மகளிர் கல்லூ
ரியை உருவாக்குவதற்கு முன் வருமேயானால், விதிக்கப்படுகின்ற
நாளிலேயே அதற்குத் தேவையான இடங்களை வகுத்துத் தரு
வதற்கு நாங்கள் என்றைக்கும் தயாராக இருக்கிறோம் என்பதை
இங்கே நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கே. ஏ. செங்கோட்டையன்] [1989 ஏப்ரல் 7

இங்கே பல்வேறு பிரச்சினைகளைக் குறிப்பிட்டுக்காட்டியிருக்கிறோம். அந்தப் பிரச்சினைகளுக்கு ஏற்ப புரட்சித் தலைவர் அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை இந்த அரசு மீண்டும் தொடர்ந்து நல்ல பல திட்டங்களை, ஏழையெளிய மக்களுக்காக நிறைவேற்ற முன்வரவேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

*திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது இந்திய தேசியக் காங்கிரசின் தலைவரும் நமது பாரதப் பிரதமருமான மாண்புமிகு ராஜிவ் காந்தி அவர்களுக்கும், எங்களது நீலகிரி பாராளுமன்ற உறுப்பினரும் மத்திய இணை அமைச்சருமான மாண்புமிகு ஆர். பிரபு அவர்களுக்கும், எங்களது தலைவர் மாண்புமிகு ஜி. கே. மூப்பனார் அவர்களுக்கும், என்னை இந்தச் சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுத்த உதகை வாக்காளர் பெருங்குடி மக்களுக்கும் எனது நன்றியையும், நல்வாழ்த்துக்களையும், நமஸ்காரத்தையும் தங்கள் மூலமாகத் தெரிவித்து கல்வி மானியக் கோரிக்கையில் எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமது மாநிலக் கல்வியின் தரம் குறைந்துகொண்டு வருகிறது. தரத்தை உயர்த்துவதற்கு ஆசிரியர் பயிற்சி மையங்கள் அமைப்பதுடன், மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருப்பதால், தென் மாவட்டங்களுக்குத் தனியாக ஒரு கல்வி இயக்குநர் அலுவலகம் ஆரம்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பல தொடக்கப் பள்ளிகள் தனியாருக்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அவைகளைக் காலி செய்யுமாறு கேட்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் என் தொகுதியிலுள்ள கீலூர் கோக்கலாடா தொடக்கப் பள்ளி இருக்கிறது. அப்படிப்பட்ட பள்ளிகளுக்கு அரசு சொந்தக் கட்டடங்களைக் கட்டிக்கொடுக்க வேண்டும். அதோடு குழந்தைகளுக்குப்போதுமான வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும்.

இடம் பற்றாக்குறை காரணமாக ஒரே வகுப்பறையில் 2 அல்லது 3 வகுப்புகள் நடைபெறுகின்றன. இப்படிப்பட்ட நிலைமைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

வகுப்புக்கு ஒரு ஆசிரியர் என்ற கொள்கை கண்டிப்பாகத் தேவைப்படுகிறது. பல ஆண்டுகளாகப் பள்ளிக் கட்டடங்களின் பராமரிப்பு சரியாக இல்லை. வெள்ளை அடிக்காமல் 15 ஆண்டுகளாகப் பல பள்ளிகள் இருக்கின்றன. பள்ளி மாணவர்களுக்கு என்று தனியாகக் கழிப்பிடம் இல்லாத பள்ளிகள் பல இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் என் தொகுதியிலுள்ள மஞ்சனக்கோரை பள்ளிக்கூடம் இருக்



1989 ஏப்ரல் 7] [திரு. எச். எம். ராஜு]

கிறது. தனியாக கழிப்பிடம் இல்லாததால் பொதுமக்கள் கழிப்
பிடத்தையே அந்த மாணவர்கள் பயன்படுத்தும் நிலைமை இருக்
கிறது.

அதைப்போன்று விளையாட்டு மைதானங்கள் இல்லாத பள்
ளிகள் பல இருக்கின்றன. உதாரணத்திற்கு என்னுடைய தொகுதி
யிலுள்ள கீழ்கோடப்பமந்து பள்ளி இருக்கிறது.

பெஞ்சு, மேசை, நாற்காலிகள் உடைந்து போயும், போதிய
அளவுக்கு இல்லாமலும் உள்ள பள்ளிகள் பல இருக்கின்றன.
இவைகளை அரசு உடனடியாகக் கவனிக்க வேண்டும். உதாரண
மாக, எங்கள் மாவட்டத்தில் கூடலூர் தொகுதியில் மோரிகல்,
தூனேரி பள்ளிகள் இருக்கின்றன. மேலும் இந்த மாதிரியான பள்
ளிகள் பல இருக்கின்றன. சில வாரங்களுக்கு முன்பு மத்திய இணை
அமைச்சர் மாண்புமிகு ஆர். பிரபு அவர்கள் மோரிகல் பள்ளிக்கு
வந்து பார்த்துவிட்டு அப்பள்ளிக்கு 20 பெஞ்சுகள் மற்றும் மேசை,
நாற்காலிகள் தந்து உதவியிருக்கிறார்கள். அதைப் போன்று
தூனேரி என்ற ஊரில் இருக்கிற பள்ளிக்கும் கொடுப்பதாகச்
சொல்லியிருக்கிறார்கள்.

சில கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் இல்லாமல் முதல்
வகுப்பு படிக்கும் குழந்தைகள் 1 மைல், 2 மைல் தூரம் சென்று,
அவர்கள் காட்டுப் பாதையில் நடந்து சென்று படிக்க வேண்டிய
சூழ்நிலை இருக்கிறது. ஊர்ப் பொதுமக்கள் பள்ளிக்கு இடம் தர
சம்மதிக்கின்றனர். ஒன்றாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பு படிக்கிற
பிள்ளைகள் கூட இவ்வளவு தூரம் சென்று படிக்க வேண்டியிருக்
கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால் என்
தொகுதியில் கரியல்வளை என்ற ஊர் இருக்கிறது. அங்கிருந்து
கல்லகோரை என்ற ஊருக்குக் காட்டுப்பாதை வழியாக நடந்து
சென்று படிக்கிறார்கள்.

எங்கள் மாவட்டத்தில் இடிந்துவிழக்கூடிய நிலையில் பல
பள்ளிக் கட்டடங்கள் இருக்கின்றன. இது மிகவும் அபாயகர
மானது. உதாரணமாக கூடலூர் தொகுதியில் உள்ள நடு
வட்டம் என்ற ஊரில் இருக்கிற பள்ளிக்கூடம்.

மனிதாபிமான அடிப்படையில் ஆசிரியர்களுக்கும் முக்கிய
மாக ஆசிரியைகளுக்கும் தகுந்த காரணங்கள் இருந்தால் அவர்கள்
கேட்கும் ஊருக்கு மாற்றல் கொடுக்க முதன்மைக்கல்வியாளருக்
கும், மாவட்டக் கல்வி அதிகாரிக்கும் உரிமை கொடுக்க வேண்டும்.
இவர்கள் இயக்குநரைக் கேட்டுத்தான் மாற்றல் கொடுக்க வேண்டு
மென்று சொல்கிறார்கள். அது நல்லதல்ல. முதன்மைக் கல்வி
அதிகாரிக்கும் மாவட்ட கல்வி அதிகாரிக்கும் இந்த அதிகாரத்தைக்
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு கொடுத்தும் பள்ளிகளில் 'ட்ராப் அவுட்ஸ்' அதிக
அளவில் உள்ளன. அதிலும் பெண் குழந்தைகள் 'ட்ராப்

[திரு. எச். எம். ராஜு] [1989 ஏப்ரல் 7

அவுட்ஸ்' அதிகமாக இருக்கிறது. இதற்கு என்ன காரணம்
என்பதைக்கண்டறிய வேண்டும். குறைகள் நிவர்த்திக்கப்பட்டு,
'ட்ராப் அவுட்ஸுக்கு' இடமில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்
டும்.

மேற்கூறிய சில கருத்துக்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்கும்
பொருந்தும். 32 கிலோமீட்டர் தூரத்திற்கு மினி பேருந்தில்
பயணம் செய்து பிளஸ் 2 படிக்கும் மாணவ மாணவியர்களும்
இருக்கிறார்கள். அவர்கள் செல்லுகின்ற பாதையோ காட்டுப்
பாதையாக இருக்கிறது. அந்தக் காட்டுப் பாதையில் அந்த மினி
பஸ்ஸில் அவர்கள் நின்றுகொண்டே பயணம் செய்யவேண்டியிருக்
கிறது. நடுவில் யானைகள் நிறைந்த காடு இருக்கிறது. அந்தக்
காட்டு யானைகளுக்குப் பயந்து பெற்றோர்கள் தங்கள் குழந்தை
களை அனுப்பப் பயப்படுகிறார்கள். அதனால் பெற்றோர்கள்
தங்கள் குழந்தைகளை பிளஸ் 2 படிக்க அனுப்புவதில்லை. அப்
படிப்பட்ட இடங்களில் 'ஸ்ட்ரெங்த்' இல்லை என்று சொல்லாமல்,
ஸ்பெஷல் கேசாகக் கருதி, குறைந்த அளவிலே மாணவர்கள்
இருந்தாலும், அந்தந்த ஊரிலேயே மேல்நிலைப் பள்ளிகளை
ஏற்படுத்தி, அந்த மாணவர்கள் படிப்பதற்கு ஏற்ற வசதிகளை
உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதா
ரணத்திற்கு என்தொகுதியிலுள்ள கிண்ணக்கொரை என்றகிராமம்
தற்போது மாணவர்கள் மஞ்சூர் என்ற இடத்திற்குச் சென்று
படித்து வருகிறார்கள்.

தமிழ் அல்லாத பிற மொழிகள் படிக்க விரும்பும் மாணவ,
மாணவியருக்கு நாம் ஊக்கமளிக்க வேண்டும். அதிக மொழி
களைக் கற்க வேண்டுமென்று விரும்புகின்ற மாணவர்களின்
ஆசையை நாம் கெடுக்கக்கூடாது; அவர்கள் ஆசையை நிறை
வேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏன் பிற மொழிகளைக் கற்க வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டு
மென்பதற்கு ஒரு உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். சென்
னையில் ஒரு சினிமா, "கியாமத் சே கியாமத் தக்" என்ற இந்தி
திரைப்படம் 48 வாரங்களாகத் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்
கிறது. பள்ளி மாணவர்களும், கல்லூரி மாணவ, மாணவிகளும்
அந்தப்படத்தைப் பார்க்கிறார்கள். இந்தி படித்தால் நன்றாகப்
புரிந்துகொள்ள முடியும் என்று நினைக்கிறார்கள். மாணவர்களும்,
மக்களும் இந்தி படிக்க விரும்புகிறார்கள். ஆகவே, அவர்கள் படிக்
கட்டும், அவர்களுடைய ஆசையை நாம் கெடுக்க வேண்டாம
என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 1-10)

பேச்சுக் கலை, இசைக் கலை, நாடகக் கலை ஆகியவற்றுக்கு
முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கி
றேன்.



1989 ஏப்ரல் 7] [திரு. எச். எம். ராஜு]

நீலகிரி மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களும், அரசு ஊழியர்
களும் சுமார் 12,000 பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு சீசன்
அலவன்ஸ் மார்ச், ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் நபருக்கு
150 ரூபாய் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
இந்த வகையில் மொத்தம் 72 இலட்சம் ரூபாய்தான் செலவாகும்.
எனவே நிச்சயமாக இதை அரசு செய்து கொடுக்க வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஹில் அலவன்ஸ் மற்றும் குளிர் கால அலவன்ஸ்
வழங்குவதில் உச்சவரம்பை வைத்திருக்கிறார்கள். அந்த உச்ச
வரம்பு இல்லாமல் நீக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து மாநில, தேசிய விருதுகள் கொடுக்கின்றபோது
அவற்றைத்தகுதி அடிப்படையில் அதாவது மெரிட் அடிப்படையில்
கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பல ஆசிரி
யர்கள் இது குறித்து மிகவும் வருத்தப்படுகிறார்கள். தேசிய
விருது என்பது மிகப் பெரிய விருது. ஒரு ஆசிரியர் என்ற முறை
யில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இது நன்றாகத்
தெரியும். எனவே இதிலே முறைகேடுகள் இல்லாமல் தகுதி
அடிப்படையில் இவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்தால் நல்லது
என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் ஒரே ஒரு அரசு கல்லூரிதான் இருக்
கிறது. கோத்தகிரி, கூனூர், கூடலூர் ஆகிய மூன்று தாலுகாக்
களிலும் வேறு கல்லூரிகளே இல்லை. வரும் ஆண்டுகளிலாவது,
ஒரு தாலூகாவிற்கு ஒரு கல்லூரியாவது வேண்டும். ஆகவே, கல்
லூரிகள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து கல்லூரிகளில் போஸ்ட் கிராஜுவேட் பாடங்கள்
எல்லாம் கண்டிப்பாக இருக்க வேண்டும். சில கல்லூரிகளில்
அந்தப் பாடங்கள் இல்லை. நீலகிரி மாவட்டத்தில்
உள்ள அரசு கல்லூரியில் எம்.எஸ்.ஸி. விலங்கியல் மற்றும்
எம். காம். போன்ற பாடங்கள் தேவைப்படுகின்றன. இந்த விலங்
கியல் துறையில் 5 பி.எச்.டி. ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இதற்
காகப் பணமோ இடமோ அதிகமாகத் தேவை இல்லை. அதே
ஐந்து ஆசிரியர்களே பார்த்துக்கொள்ள தயாராக இருக்கிறார்கள்.
எனவே, இதற்கான ஏற்பாட்டை அரசு உடனடியாகச் செய்ய
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பாரதியார் பல்கலைக்கழகம், ஈரோடு, கோயம்புத்தூர்,
நீலகிரி போன்ற மூன்று மாவட்டங்களுக்கும் பொதுவாக இருக்
கிறது. ஆனால் பாரதியார் பல்கலைக் கழகத்தில் நீலகிரி மாவட்
டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் பேராசிரியர்கள் மற்றும் வேறு
பணியாளர்கள் என்ற வகையில் எத்த வேலை வாய்ப்பும் தருவ
தில்லை. இதை அரசு கவனித்து உடனடியாக ஏற்பாடு செய்ய
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எச். எம். ராஜு] [1989 ஏப்ரல் 7

அடுத்து வெளி மாவட்டத்திலிருந்து நீலகிரி மாவட்டத்திற்கு வரும் மேல்நிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரிகள் ஆகிய வற்றின் ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு வசதி மிக மிக அவசியம். குடியிருப்பு வசதி இல்லாத காரணத்தால் அந்த மாவட்டத் திற்கு வெளி மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் வரத் தயங்கு கிறார்கள். இதை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும்.

அடுத்து எங்களுடைய மாவட்டத்தில் பள்ளிகள், கல்லூரிகள் செல்லும் மாணவ, மாணவியர்களுக்கு சேரன் போக்குவரத்தில் கன்செஷன் பாஸ் வழங்கவேண்டும். ஏனென்றால் எங்கள் மா வட்டத்தில் தனியார் பேருந்துகள் கிடையாது என்பது பேரவைத் தலைவருக்கு நன்கு தெரியும்.

எல்லாக் கல்லூரி முதல்வர்களுக்கும் சமமான சம்பளம் தான் கொடுக்கப்படவேண்டும். அது தலைவர் அவர்களுக்கும் நன்கு தெரியும். கிரேட் 1, கிரேட் 2 என்பது தவிர்க் கப்பட வேண்டும். ஏற்கெனவே நண்பர் குறிப்பிட்டார். நான் என்னுடைய குறிப்பில் இதுபற்றி யிருந்ததால் நானும் இது குறித்துப் பேசக்கடமைப்பட்டிருக்கி றேன். எனவே இதனை அவசியம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முதியோர் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இன்னும் சிறப்பான முறையிலே அதைச் செயல்படுத்தலாம். எனவே, அரசு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொழில் நுட்பப் பள்ளிகளையும், பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளையும் அதிகரிக்க வேண்டுமென்று நான் கேட் டுக் கொள்கிறேன்.

மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் எஸ். எஸ் எல். சி., மற்றும் மேற்படிப்பு படித்த வேலையில்லாத மாணவர்களுக்கு அரசு கொடுக்க முன் வந்திருக்கிறது. அதை நான் வரவேற்கி றேன். அதே நேரத்தில் நகர்ப்புறத்தில் மேற்படி படிப்பைப் படித்து வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கும் நீட்டிக்க வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கல்வியின் தரம் போதிய நூலக வசதி இல்லாத காரணத்தா லும், மிகவும் குறைகிறது. எனவே நூலகம் இல்லாத ஊர்களில் நூலகம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கெத்தை, சோகத்துறை போன்ற இடங்களில் நூலக வசதி அவசியம் தேவை. சோகத்துறை கிராமத்தில் நூலகத்திற்குத் தேவைப்படும் இடத்தை அரசுக்கு இலவசமாகத் தர மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்



1989 ஏப்ரல் 7] [திரு. எச். எம். ராஜு]

கொள்கிறேன். தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளி, கல்லூரிகள் போன்றவற்றில் ஒவ்வொரு ஆண்டும் அரசு ஒரு விழாவை நடத்தி அந்த விழாவில் தேர்வில் அதிக சதவிகிதம் தேர்வு பெற்ற பள்ளிகள், கல்லூரிகளுக்குப் பரிசுகள் கொடுத்து அந்த விழாவின் மூலம் மாணவர்களை ஊக்குவிக்கவும் கல்வியின் தரத்தையும் உயர்த்தவும் வழி வகுக்க வேண்டும். அதற்காக ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

ஐ. ஏ. எஸ். தேர்வைப் பொறுத்தவரையில் கடந்த 30 வருடங்களுக்கு முன்பு ஓரே கல்லூரியில் 15 பேர்தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். இப்போது இரண்டு பேர் தான் என்றும் அதுவும் டெல்லியில் பயிற்சி பெற்றவர்கள்தான் தேர்ச்சி பெற்றி ருக்கிறார்கள் என்பதும் வேதனையாக இருக்கிறது. எனவே, அரசு ஐ.ஏ.எஸ்., தேர்வுக்கென்று தனியாக ஒரு பயிற்சி நிலை யத்தை ஏற்படுத்தி அதிகமான பேர் தேறுவதற்கான ஏற்பாடு களைச் செய்யக்கூடாதா என்று நான் கேட்க ஆசைப்படு கிறேன்.

தமிழ்நாடு உதவி பெறும் நடுநிலைப்பள்ளி நிருவாகிகள் ஆசிரியர் நிர்வாகிகள் சங்கம் ஒரு விண்ணப்பத்தைக் கொடுத் திருக்கிறார்கள். அதிலே நிதியுதவி பெறும் பள்ளிகளுக்குக் கட்டிட வாடகை, ஆயா, துப்புரவுப் பணியாளர், இரவு காவலர், கடைநிலை ஊழியர் ஆகியோருக்கான ஊதியம் அரசு வழங்க வில்லை என்றும், நிர்வாகமே ஊதியம் வழங்குகிறது என்றும், அவர்கள் பெறும் 4 சதவிகிதத்தை 10 சதவிகிதமாக உயர்த்தித் தருமாறும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது ஒரு நல்ல கோரிக்கை என்று நான் கருதுகிறேன். இதை மனதில் கொண்டு அரசு நிச்சயமாகச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அரசுக்கல்லூரிகளில் சுமார் 400 துணைப் பேராசிரியர்களை நியமித்து இருக்கிறார்கள். அவர்களை வருடந்தோறும் வேலை நீக்கம் செய்வதும், பிறகு சேர்த்துக்கொள்வதுமான நிலைமை இருக்கிறது. புதுக்கோட்டை ராஜா அரசு கலைக் கல்லூரி போன்ற கல்லூரிகளில் இவ்வாறுபணி செய்பவர்களை வேலை நீக்கம் செய் கிறார்கள். அவர்களுக்கு வெக்கேஷன் சேலரி கிடையாது. முறையான தேர்வு நடத்தித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தான் இவர்கள். இவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விருதுநகர் நகராட்சியில் உள்ள ஆசிரியர்களுக்கு வழங்கப் பட்ட சம்பளத்தில் ஈட்டுத் தொகை மானிய பணம் தமிழக அரசி டம் இருந்து 18 இலட்சம் ரூபாய் வரையில் வரவேண்டி இருக் கிறது. இன்னும் அது தரப்படவில்லை. எவ்வளவோ முறை அதுகுறித்துச் சொல்லியும் அந்தப் பணம் அவர்களுக்கு வர

வில்லை. இதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக, எங்களுடைய மலைப்பகுதியான நீலகிரிக்கு ஸ்பெஷல் கேஸாகக் கருத்தில் கொண்டு முன்னுரிமை கொடுத்து ஆதரவு தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு இந்த அரிய வாய்ப்பினைக் கொடுத்த நல்ல உள்ளங்களுக்கு மீண்டும் நன்றி கூறி விடைபெறுகிறேன். ஜெய் ஹிந்த்.

திரு. ஆ. அதியமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டு கல்வி மானியத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பேராசிரியர் அவர்களுக்கும், என்னைத் தேர்ந்து எடுத்து சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்திருக்கின்ற சேடப்பட்டி வாக்காளர் பெருமக்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே மிகச் சிறப்பான நிதிநிலை அறிக்கையைத் தமிழகத்திலே வாழ்கின்ற மக்களுக்காகப்படைத்திருக்கிறது. அப்படிப் படைத்திருக்கின்ற நேரத்தில் இந்த நிதிநிலை அறிக்கையின் சிறப்பு வெளியிலே, மக்கள் மத்தியிலே சிறப்பாகப் பேசப்பட்டு வருகின்ற காலத்திலே கல்விக்காக நம்முடைய கழக அரசு 900 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து மொத்த செலவினத்திலே 22 சதவிகிதத்தை ஒதுக்கி இருப்பது கல்விக்காக இந்த அரசு எத்தகைய சிறப்பினைச் செய்கிறது என்பதனைக் காட்டுகின்ற வகையிலே இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மொழிக் கொள்கையைப் பொறுத்தமட்டிலும், ஆளுநர் அவர்களுடைய உரையிலே, நிதிநிலை அறிக்கையிலே தமிழுக்காகச் சிறப்பு செய்கின்ற வகையிலே பல்வேறு இடங்களிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பது சிறப்புக்குரியதாகும். நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்திலே நவோதயா பள்ளியைப் பொறுத்தமட்டிலும் சாதாரண ஏழையெளிய குழந்தைகளுக்குக் கூட பயன் தரக்கூடிய திட்டத்தை மத்திய அரசு அளித்திருக்கிறது, ஆனால் இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் இதை எதிர்த்துக் கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நவோதயா பள்ளிக்கூடம் மூலம் இந்தியைத் திணித்திட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே இதை ஒரு சாதனமாக, இதை ஒரு கருவியாகப் பயன்படுத்தி இன்றைக்கு மத்திய அரசு இதைச் செய்து கொண்டிருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழக அரசு நெடுங்காலமாக இந்தியைத் தமிழகத்திலே நுழையவிடக் கூடாது என்ற உணர்வோடு



செயல்பட்டுக் கொண்டிருந்ததன் அடிப்படையிலே இன்றைக்கும் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நவோதயா பள்ளி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல சாதாரண மக்களுக்கு ஏற்றதல்ல. கிராமப் பகுதிகளிலே வாழ்கின்ற நம்மைப் போல பிற்படுத்தப்பட்ட பகுதியிலே வாழ்கின்ற ஏழையெளிய மக்கள் நடைமுறையிலே மொழியைப் பயிலுவதற்கே மிகவும் சிரமமான நிலையில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். அதையும் மீறி நவோதயா பள்ளிகள் மூலமாக இந்தியைத் திணிப்பது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. நல்ல முறையில் கல்விக் கொள்கை தேவைதான். அதில் எங்களைப் போன்றவர்களுக்கு மாறுபட்ட க்ருத்து இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இங்கு இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம் ஒன்றை நினைவுபடுத்தி ஆக வேண்டும். 20 ஆண்டுகளுக்கு முன்பு அன்றைக்கு நம்மைப் போன்றவர்கள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்கின்ற நேரத்திலே பள்ளியிலே, ஆரம்பப் பள்ளிக்கூடத்திலே ஒரே ஒரு புத்தகத்திலிருந்து, அரிச்சுவடியிலிருந்து ஆரம்பித்தார்கள். ஆனால் இன்றைக்கு நிலைமை என்னவென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு அரிச்சுவடியை ஆரம்பிக்கின்ற நேரத்தில் கூட, 1 ஆம் வகுப்பில் படிக்கிற மாணவ மாணவியர் கூட ஆக்ஸ்போர்ட் டிக்சனரியை பார்க்கிற நிலைமை, பார்க்க சொல்லக் கூடிய நிலைமை இருக்கிறது. இது வரவேற்கத்தக்கது. அதுபோல் இன்றையதினம் 1 ஆம் வகுப்பில் படிக்கிற மாணவ மாணவியர் தங்களுடன் கையில் ஒரு டிக்சனரியை எடுத்துச் செல்லும் நிலைமை இருப்பதையும் பார்க்கிறோம்.

(பிற்பகல் 1-20)

அடுத்து, இன்றைக்கு உயர்நிலைப் பள்ளிக்கூடங்களிலும், பட்டப் படிப்பு கல்லூரிகளிலும்,' முதுகலை பட்டப் படிப்பு கல்லூரிகளிலும் புதிய திட்டங்களையும், புதியக் கல்விக் கொள்கைகளையும் அரசு வகுப்பதிலே தவறு ஒன்றுமில்லை. அதுபோல நம்முடைய கழக அரசு தாழ்த்தப்பட்ட ஏழையெளிய மக்களுக்காகவும், பெண்களுக்காகவும் பட்டப் படிப்பு வரை இலவசமாகக் கல்வியை நடைமுறைக்குக் கொண்டு வந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. அதேபோல இன்றைக்குக் காலத்தின் கோலம் என்கிற வகையில் தமிழக மக்கள் தங்கள் குழந்தைகளை ஆங்கில மொழி மூலம் கற்பிக்கிற பள்ளிகளில் தான் சேர்க்க வேண்டும் என்கிற எண்ணத்தில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஓர் எண்ணம் பெற்றோர்களிடையே உருவாகியிருக்கிறது. அப்படி உருவாகியிருப்பதன் விளைவு, கிராமப்புறங்களில் 100 வீடுகள் ஓர் ஊரில் இருக்கிறது என்று சொன்னால் உடனே அங்கே ஒரு நர்சரிப் பள்ளியை ஆரம்பித்து விடுகிறார்கள்

[திரு. ஆ. அதியமான்] [1989 ஏப்ரல் 7

இப்படிப்பட்ட நிலைமை தமிழகம் பூரா இருக்கிறது.
அப்படி ஆரம்பிப்பவர்கள் நன்கொடை என்கிற பெயரால்
பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை வசூல் செய்து விடுகிறார்கள்.
இப்படிப்பட்ட தனியார் பள்ளிகள் மிக மோசமான
முறையில் செயல்படுகின்றன. இதுபோன்ற நிலைமைகளைத்
தொடர்ந்து அரசு நடக்க அனுமதிக்கக்கூடாது. அதற்காக
அரசுப் பள்ளிகளில் ஆரம்ப வகுப்பிலிருந்தே ஆங்கிலத்தில்
கல்வி கொடுப்பதற்கான ஏற்பாடுகளையும், தகுதியான
ஆசிரியர்களை நியமிப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்ய
வேண்டுமென்றும், அதன் மூலமாக ஏழையெளிய மாணவ
மாணவிகள் நல்ல முறையில் கல்வி பயிலுவதற்கான
வாய்ப்பினைப் பெறுவார்கள் என்பதையும் தெரிவித்துக்
கொள்கிறேன். தற்போது தமிழகத்திலுள்ள சில நர்சரிப்
பள்ளிகளில் தகுதியற்றவர்களை ஆசிரியர்களாக
நியமனம் செய்து பாடங்களைப் போதிப்பதால் மாணவர்
களின் கல்வித் தரம் குறைந்திருக்கிறது. இதையும் உடனடியாக
கவனத்தில் கொண்டு அப்படிப்பட்ட பள்ளிகளைக் கண்டு
பிடித்து உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, கடந்த ஆட்சிக் காலத்தில் பல்வேறு இடங்
களில் தனியார் பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன.
இன்றைக்குத் தனியார் மேல்நிலைப் பள்ளிகளிலோ அல்லது
அரசு சார்பிலோ ஆசிரியர் பயிற்சி வகுப்புகளை ஆரம்பித்து,
தகுதியுடைய பட்டதாரிகளுக்குப் பயிற்சியளித்து, அவர்களை
எல்லாம் சிறப்புத் தகுதியுடையவர்கள் என்கிற நிலைக்கு
உயர்த்தி அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பினை
உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்து, தமிழகத்தில் 100-க்கு மேற்பட்ட தொழில்
நுட்பக் கல்விக் கூடங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.
அவற்றின் நிலைமையையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.
கடந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பல தனியார்
என்ஜினியரிங் கல்லூரிகள் சரிவர செயல்படாத
காரணத்தால் அவற்றை எல்லாம் இழுத்து மூடுகிற
சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் அவற்றை எல்லாம் அரசே
ஏற்று நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.
ஆனால், அவர்கள் மாணவர்களைச் சேர்க்கின்ற நேரத்தில்,
அளவுக்கு மீறி அதிகமான அளவு நன்கொடை பெற்றுக்
கொண்டு, மாணவர்களிடம் ஆசை வார்த்தைகளை ஊட்டி,
அவர்களுக்குத் தொழில் கல்வி கற்றுத் தருவதாகச் சொல்லி
யிருக்கிறார்கள். அங்கே எந்தவிதமான சிறப்பு வசதியும்,
அடிப்படை வசதியும் இல்லாததால் பல்வேறு இடங்களில்
பிரச்சினைகள் உருவாகி, மாணவர்களுக்கும் நிர்வாகத்துக்கும்
இடையே தகராறு, அதுபோல ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்
திற்கும் இடையே தகராறு. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் உரு
வாகியிருக்கின்றன. இந்நிலைமைகளை மாற்றியமைப்பது



1989 ஏப்ரல் 7] [திரு. ஆ. அதியமான்]

என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். எனவே அரசு
இதுபோன்ற கல்விக் கூடங்கள் மீது உடனடியாக
நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் இதுபோன்ற
கல்விக் கூடங்களுக்கு இனிமேல் அனுமதி வழங்குவதையும்
நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியானாலும்
சரி, தாலுகா மையமாக இருந்தாலும் சரி எல்லா
இடங்களிலும் பரவலாகத் தொழில் நுட்பக் கல்விக்
கூடங்களை ஆரம்பிக்க வேண்டும்.

அடுத்து, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சில தனியார்
பள்ளிகளில் ஆனாலும் சரி, கல்லூரிகளில் ஆனாலும் சரி, அங்கே
வேலை பார்க்கின்ற ஆசிரியர்களுக்குச்சரிவர ஊதியம் வழங்குவ
தில்லை. அவர்களுடைய பணியை நிரந்தரம் செய்வதுமில்லை.
அவர்கள் எல்லாம் இன்றையதினம் சிரமத்திற்கு உள்ளாகி
யிருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட நிலையில் இருக்கின்ற
கல்லூரி மற்றும் பள்ளி ஆசிரியர்களின் பணியை உடனடியாக நிரந்
தரம் செய்து நியமிக்க உத்தரவிட வேண்டும். பணி வரன்முறைப்
படுத்தல், பணி நிரந்தரம் செய்தல் போன்ற நடவடிக்கைகளை
யும் விரைவுபடுத்த வேண்டும். 1986 ஆம் ஆண்டில் உள்ளாட்சி
மன்றங்களில் வேலை பார்த்த ஆசிரியர்களை எல்லாம் அரசு
ஊழியர்களாக ஆக்கி, அறிவிப்பு செய்திருந்தாலும் உள்ளாட்சி
மன்றங்களில் இருந்த பள்ளிக்கூடங்களை நிர்வகிக்கின்ற
பொறுப்பு அந்தந்த உள்ளாட்சி மன்றங்களின் பொறுப்பில்தான்
இருந்தன. இன்றைக்கு நகராட்சிகள் போன்ற உள்ளாட்சி
அமைப்புகளின் நிதி நிலைமைகள் மிகவும் மோசமாக இருப்ப
தால், அங்கேயுள்ள பள்ளிகள் சரிவர நிர்வகிக்கப்படவில்லை
என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே
உள்ளாட்சி மன்றங்களிலுள்ள பள்ளிகளை நிர்வகிக்க, பராமரிக்க
சிறப்பான நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டுமென்று இந்த
நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

நான் வெற்றி பெற்று வந்திருக்கிற சேடப்பட்டி சட்டமன்றத்
தொகுதியில் டி. இராமநாதபுரம், குன்னத்தூர், பாப்பநாயக்கன்
பட்டி ஆகிய இடங்களில் உள்ள ஆரம்பப் பள்ளிகளும், உயர்
நிலைப் பள்ளிகளும் விரிவுபடுத்தப்பட வேண்டும். குறிப்பாக
டி. இராமநாதபுரத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி தனி
யார் வீட்டில் தொடர்ந்து 20 ஆண்டுகளாக நடைபெற்று வருகிற
தென்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அங்கே உயர்
நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்ட 5 ஏக்கர் நிலமும், 10,000 ரூபா
யும் அரசுக்கு முறையாகச் செலுத்தப்பட்டிருந்தும் கடந்த கால
அரசின் மெத்தனப் போக்கால், அந்தப் பள்ளியை ஏற்படுத்திக்
கொடுக்கவில்லை. எனவே கழக அரசு கருணை உள்ளத்தோடு
அந்தப் பள்ளியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

[திரு. ஆ. அதியமான்] [1989 ஏப்ரல் 7

நான் நகரமன்றத் தலைவராக இருக்கிற திருமங்கலத்தில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குப் போதிய கட்டிட வசதி இல்லாததாலும், இருக்கிற கட்டிடம் பராமரிக்கப்படாததாலும், மாணவர்கள் மரத்தடியிலேயே பயிலும் அவல நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அங்கே 1,500 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பள்ளியைச் சுற்றி நிறைய இடம் விளையாட்டு மைதானத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு அந்தப் பகுதியிலே இருக்கின்ற சமூக விரோதிகள் சிலர் அந்தப் பகுதியை ஆக்கிரமிப்பு செய்துகொண்டு, பள்ளியின் விளையாட்டு மைதானத்தை சுருக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சியை இங்கே அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதன் காரணமாக, அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்தப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் எழுப்பித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற சேடப்பட்டியாக இருந்தாலும், நகர மன்றத் தலைவராக இருக்கிற திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியாக இருந்தாலும், அங்கே கலைக் கல்லூரி வசதி இல்லை. அது கல்லூரி வசதி இல்லாத ஒரு பகுதி என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். சுமார் 30 கிலோ மீட்டர் சுற்றளவில் ஒன்று விருதுநகருக்குச் சென்று கல்லூரி படிப்பைத் தொடரவேண்டும் அல்லது மதுரைக்குச் சென்று கல்லூரி படிப்பைத் தொடர வேண்டும் என்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வரவர்களும் மாண்புமிகு பேராசிரியர் அவர்களும் என்னுடைய தொகுதிக்குச் சிறப்புக் கவனம் கொண்டு, உடனடியாக இல்லாவிட்டாலும், என்னுடைய பதவிக் காலத்திற்குள் நிச்சயமாக ஒரு கல்லூரியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 8-4-1989, சனிக்கிழமை காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-28 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

44. 1974–75-ஆம் ஆண்டு முதல் 1980–81 ஆம் ஆண்டு வரைக்கான சென்னை, கூட்டுறவு கால்நடை தீவன உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கத்தினரால் செலுத்தக்கூடிய விற்பனை வரி மற்றும் மேல் வரியினை ரத்து செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 6—7—1988 ஆம் நாளிட்ட 1030 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

45. 1980 ஆம் ஆண்டு முதல் 1984-ஆம் ஆண்டு காலவரையில் தமிழ்நாடு திரைப்படப் பிரிவினரால் எடுக்கப்பட்டு இருப்பிலிருந்த திரைப்படச் சுருள் விற்பனையின்மீது செலுத்த வேண்டிய வரி மற்றும் மேல் வரியினை ரத்து செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 29—11—1988-ஆம் நாளிட்ட. 1453 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

46. 1—4—1981 முதல் 31—3—1982 வரையில் சில்லறை வணிகர்களுக்கு செய்யப்பட்ட விற்பனைக்காக சாராவி வடிசாலைகளால் வசூலித்து செலுத்தப்பட்ட விலை வேறுபாட்டுத் தொகை மீது செலுத்த வேண்டிய விற்பனை வரி, மேல் வரி, கூடுதல் வரி, வரி மற்றும் அபராதம் ஆகியவற்றை தள்ளுபடி செய்தல் குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 28—12—1988 ஆம் நாளிட்ட 1558 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.

———

1989 ஏப்ரல் 7]

[201 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

1. தோற்றுவாய்.

"அறிவுடையார் எல்லாம் உடையார்" என்றார் திருவள்ளுவர். அறிவினை அடையும் வழி கல்வியே. கல்வியைப் பெறுவதற்கு ஏதுவாம், எண்ணும் எழுத்தும் மாந்தர்க்குக் கண்கள். அந்தக் கண்களைப் பெறாதார் அறியாமை இருளில் உழல்வர்.

2. மனித வாழ்வில் துன்பத்தைக் குறைத்து இன்பம் பெருக்குவதற்கும், வறுமையை அகற்றி வளம் தேடுவதற்கும், உலகத்தாருடன் ஒட்டி வாழ்வதற்கும், உரிமை காத்து முன்னேறுவதற்கும் துணையாகும் கல்வியை அனைத்து மக்களும், ஒல்லும் வகையால் வழங்குவது மக்களாட்சி நெறி போற்றும் அரசுக்குக் கடமையாகும்.

3. கடலனையது கல்வி, அதன் ஆழத்திலும், பரப்பிலும், வானனையது அதனால் பெறும் உயர்வும், நோக்கும், வான் மழை அனையது அதன் பயனும், தேவையும். "கல்வி கரையில, கற்பவர் நாள் சில" என்பது பழமொழி. கேடில் விழுச் செல்வமான கல்வி, ஒருவரின் வாழ்விற்கு உறுதுணையாய், ஒளியாய் விளங்குதலினால் "யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன் சாந்துணையும் கல்லாத வாறு" என்றார் வள்ளுவர். நெடிய வாழ்நாள் முழுவதும், கற்பதும் தெளிவதும் சிறப்பெனினும், இளமையில் கற்பது பெரும்பயன் தருவது. இளைஞர்கள் அறிவாற்றலும், தொழில் திறனும், தன்னம்பிக்கையும் பெறுவதற்கு ஏதுவாகும் கல்வி. அவர் தம் தகுதியை உயர்த்திடவும், ஏற்றம் எய்திடவும், சமுதாய நிலையை மேம்படுத்தவும், பொருளியல் வளர்ச்சிக்கு வழி காணவும், நாட்டிற்குப் பெருமை சேர்க்கவும் துணையாகிறது.

4. வருங்காலத்தினை ஆளவிருக்கும் இளைஞர்கள் ஏற்புடைய கல்வியில் நாட்டங்கொண்டு அதன் அருமை உணர்ந்து கருத்தூன்றிக் கற்பாராயின் வருந்தலைமுறையினர் வாழ்வில் உயர்வர்.

5. இருபதாம் நூற்றாண்டு, நாளும் பெருகிவரும் அறிவியல் ஆற்றலால் ஆளப்படும் காலம். இருபத்து ஒன்றாம் நூற்றாண்டோ அறிவியல் பொறிகளிலே வியத்தகும் திறனை வெளிப்படுத்தும் மின்னணுக் கணிப்பொறியாம் "கம்ப்யூட்டர்" ஆட்சிக் காலமாகத் திகழவிருப்பது. முன்னேறிய நாடுகளில் இயந்திர மனிதன் "ரோபாட்ஸ்" செயற்படுவதுடன், வான்வெளி ஆய்வுகள்—விசைக் கோள்கள் மூலம் நிகழ்ந்து வருகின்றன.

6. மனிதனின் மூளை பல்வேறு வகைப்பட்ட நுட்பத் திறன்கள் பொதிந்து மூடிக்கிடக்கும் உயிராற்றல் கொண்ட உறுப்பு. மனிதருள் ஒவ்வொருவர் வாயிலாக ஒவ்வொரு வகையால், திறன் வெளிப்படும்போது வியக்கின்றோம். மனித மூளையின் பேராற்றல் பெரிதே. அது வெளிப்படும் வழியான வாய்ப்பும், வளர்த்துக் கொள்வதற்கான பயிற்சியும், அத்திறன் பிறரால் அடையாளம் கண்டு கொள்ளப்படலுமே அரியதாம்.

[1989 ஏப்ரல் 7

7. மின்னணுக் கணிப்பொறியோ மனிதன் அதனுட் பதியவைக்
கும் குறிப்புகளை நினைவுபோல பதிவு செய்துகொண்டு, அவன்
செயற்படுத்தும் வழிமுறைப்பட்டு இயங்கி, அவன் பெற விரும்பும்
விடையை—விளக்கத்தைத் தருகிறது. அறிவுடையார் பலர்
கூடிப் பலமணி நேரம் முயற்சித்துப் பெறக்கூடிய விடையை,
சில கணங்களில் தந்துவிடும் செயல் விரைவுத் திறன் கொண்டதே
மின்னணுக் கணிப்பொறி.

8. இந்தியா வளர்ந்துவரும் பொருளாதார நிலையில் உள்ள
தொரு நாடு என்பதாலும், பெருகி நிற்கும் மக்கள் தொகையி
னால் அனைவருக்கும் வேலை வாய்ப்பு வழங்குவதே சமுதாயத்
திற்குப் பெருஞ்சுமையாக உள்ள நிலையாலும், நம் நாட்டு அலு
வலகங்கள் பலவும் கணிப்பொறியைப் பயன்படுத்த முற்படுவது
விரும்ப முடியாததாக இருந்தாலும், அதே மக்களுடைய முன்
னேற்றத்திற்கு—உடனுக்குடன் முடிவு காண வேண்டியதாகவும்,
மிகவும் நுணுக்கமான வரையறை அளவுகளை இம்மியும் பிற
ழாது காத்திட வேண்டியதாகவும் உள்ள பணிகளை நிறைவேற்ற
''கணிப்பொறி'' தவிர்க்க முடியாததாகிறது. அதனால் அறிவி
யல் துறை சார்ந்த அடிப்படை அறிவியல் பாடங்களும், பொறி
யியலும், மருத்துவமும் போன்று ''கணிப்பொறி'' அறிவும்,
இயக்கும் திறனும், வடிவாக்கும் ஆற்றலும், நமது மாணவர்கட்கு
அவர் தம் நிலைக்கும், வாய்ப்புக்கும் ஏற்ப, பயிற்றுவிக்கப்பட
வேண்டியதாகியுள்ளது. எனவே, உயர்நிலைக் கல்வி, மேல்
நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழிற் பயிற்சிக் கல்வி, தொழில்
நுணுக்கக் கல்வி; பல் வகைப்பட்ட பொறியியல் கல்வி என்
பவற்றுடன் மின்னணுப் பொறிக் கல்வியும்—மாணவர் பயில்
நிலைகட்கேற்ப இடம் பெறச் செய்யும் முயற்சி தொடங்கப்
பட்டுள்ளது.

9. கலைத் துறை சார்ந்த நடனம், நாடகம், ஓவியம்,
சிற்பம் முதலான கலைக் கல்வியும், சட்டக் கல்வி, மருத்துவம்,
வேளாண்மை, மருந்தாளுநர், செவிலியர் முதலான தனித்துறைக்
கல்விகளும் நமது மாநிலத்தில் வளர்க்கப்படுகின்றன.

10. மேல்நிலை வகுப்பு முடிய அமையும் பள்ளிக் கல்வியின்
பாடத் திட்டத்தையும் பயிற்சித் திறத்தையும் உயர்த்தவும்,
பல்கலைக் கழகப் பட்டப் படிப்புத் திறத்தை மேம்படுத்தவும்,
நிபுணர் குழுக்களின் கருத்தறிந்து முயற்சி மேற்கொள்ளப்பட்
டுள்ளது.

11. இளைஞர் தம் உடல் வலிவும் பொலிவும் பெற உரிய
விளையாட்டுக்களும், உடற் பயிற்சிகளும், ஆட்டப் போட்டிகளும்
பெருக, பலமுனைச் செயல் திட்டங்கள் நடைபெறுகின்றன.
இளைய தலைமுறை கடமை உணர்வும் கட்டுப்பாடும் கொண்டு,
கண்ணியமாக நடந்திடப் பயிற்சி வழங்கும் இயக்கமாக சாரண
சாரணிய இயக்கம் மாநிலமெங்கும் பரவலாகச் செயற்படுகிறது.



1989 ஏப்ரல் 7]

12. தேசிய மாணவர் படை (N.C.C.) மாணவ மாணவியர்
படைவகைப் பயிற்சி பெறவும், நாடு காக்கும் ஆர்வம் கொள்ள
வும் உதவுகிறது. தேசிய பணித் திட்டம் சமுதாயத் தொண்
டாற்ற பயிற்சி அளிக்கிறது.

13. தமிழ்மொழி ஆக்கம்-அறிவியல் பெருக்கம்-ஆய்வியல்
திறன்-ஆகியவற்றை வளர்ப்பதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்
தும் பல திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

14. இளஞ்சிறார், பள்ளி புகா மழலையர் வளர்ச்சிக்கு
வேண்டும் உடல் நலம் பேணவும், ஊட்டச்சத்து குறைவினால்
அவர்கள் பிணிக்கு ஆளாகாது தடுக்கவும் சத்துணவுத் திட்டம்
செயற்படுகிறது.

15. பெண்ணுரிமை போற்றப்பட வேண்டும் என்னும் நோக்
கத்துடனும் இயற்கையிலேயே மாணவிகள் கல்வியிலும், பயிற்சி
யிலும் நாட்டமுடையராய் சிறந்த தேர்ச்சி பெறுகின்றனர்
என்பது கருதியும் பல நிலையிலும் பெண்களுக்குக் கல்வி வழங்
கிட அரசு ஆவன செய்து வருகின்றது. இவ்வாண்டிலிருந்து
கல்லூரிகளில் புதிதாகச் சேரும் மாணவியருக்கு பட்டப்படிப்பு
வரையில் (கட்டணம் வேண்டா) இலவசக் கல்வி, அறிவிக்கப்
பட்டுள்ளது. தொடக்க நிலையில் முதல் இரண்டு வகுப்பு
களையும் மகளிரே ஆசிரியராக அமர்ந்து சிறுவர்கட்குக்
கல்வி புகட்ட வேண்டும் என்பதும் ஏற்கப்பட்டுள்ளது.

16. எனினும், கல்வித் துறையில் நிறைவேற்றப்பட வேண்
டிய முக்கிய கடமைகளும், பணிகளும் ஏராளமாக உள்ளன.
பெருமளவில் நிதியும் தேவைப்படுகிறது. தமிழக அரசு-கல்விப்
பணியின் முதன்மை உணர்ந்து நிதி ஒதுக்கம் செய்யினும், சமு
தாயத்தின் தேவையை நிறைவு செய்வதற்கு பொதுமக்கள் ஒத்
துழைப்பும் வளமுடையாரின் நிதிக் கொடையும் பெரிதும் வேண்
டப்படுகிறது. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்—மாவட்டந்
தோறும் மக்கள் ஆதரவுடன் நடைபெற வேண்டும். கடந்த
காலம் போன்று பள்ளிகட்கு வேண்டிய தளவாடப் பொருட்கள்
தட்டாமல் கிடைக்கச் செய்ய அனைவரின் ஆதரவும் வேண்டும்.

17. பள்ளி என்பது தொழிற்சாலையல்ல. ஒரு பெரிய
குடும்பம். அங்கு பயிலும் மாணவர்கட்கும்- ஆசிரியர்கட்கும்
இடையே நிலவும் உறவும் தொடர்புமே கல்வியின் அடித்தளம்.
இளஞ்சிறார் உள்ளத்தில் கல்வியின் ஆர்வம் விளைவிக்கும்
விதையை ஊன்றும் பெரிய பொறுப்பு ஆசிரியர்கட்குண்டு. வருங்
காலத் தலைமுறைக்கு வடிவு தருகின்ற பெரிய பொறுப்பு தமக்
குண்டு என்று உள்ளங்கொண்டு ஆசிரியர் பெருமக்கள் தமது
பணியை ஆர்வத்துடன் நிறைவேற்ற வேண்டும். ''ஆசிரியர் தம்
பணி சிறந்தால் நாடு சிறக்கும்'' ''மாணவர் திறம் வளர்ந்தால்
அடுத்த தலைமுறை வாழும்'' என்பது கருத்தில் கொள்ள வேண்டி
யனவாம்.

[1989 ஏப்ரல் 7

18. கல்வி—சமுதாயக் கசடு போக்கவும் பயன்பட வேண்டும். வழிவழி வந்த நம்பிக்கைகள்—மூடநம்பிக்கைகளாய் சாதி, குல, மத பேதங்களைப் பெரிதெனக் கருதச் செய்து, இன மொழி, கலை, நாகரீக வேறுபாடுகள் இயற்கை எனத் தெளியாது புகையும் பகையும் வளர இடர்தரும் நிலை மாற்றப்படுவதற்கும், ஒப்புரவும் ஒற்றுமையும் தழைப்பதற்கும், கல்விப் பயிற்சி வழி கோல வேண்டும். ''ஒன்றே குலம் ஒருனே தேவன்'' என்னும் பொது நோக்கு, சிறந்து, மனிதப் பண்பு மாந்த நேயம் உயர்ந்திட ஏதுவாகும், பகுத்தறியும் பக்குவ நிலை இளைஞரிடையே அரும்பி, மலர்ந்திடக் கல்வியே துணையாக வேண்டும், அந்த உயர் நோக்குடன்—பல துறை கல்வியையும் வளர்க்கவும், பரப்பவும், பல நிலைகளிலும் பலமுனைகளிலும் பல்வேறு கல்வி நிலையங்கள் மூலம் ஆற்றிவரும் பணிகளை இந்த அறிக்கை விவரிக்கின்றது.

## தேசிய கல்விக் கொள்கை-1986.

### மைய அரசின் கல்விக் கொள்கையும் மாநில அரசின் செயற்பாடும்

தேசிய கல்விக் கொள்கை ஒன்று முதன் முதலில் 1968 ஆம் ஆண்டு மைய அரசால் உருவாக்கப்பட்டது. அண்மையில் 1986 ஆம் ஆண்டில் அக்கொள்கையைத் திருத்தி அவ்வரசு ''தேசிய கல்விக் கொள்கை–1986''-ஐ தயாரித்துள்ளது. தேசியக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது குறித்து மைய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கிடையிலான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயற்படுத்தும் பணியை மைய அரசின் ''மனித ஆற்றல் மேம்பாட்டு அமைச்சகம்'' கவனித்து வருகிறது. இக் கொள்கையின் பல்வேறு அம்சங்களை நடைமுறைப்படுத்துவதற்கு விரிவான செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசியல் சட்டத்தில் அனைத்துச் சிறுவர் சிறுமியர்கட்கும் 6–14 வயதுவரை கட்டாயமாகக் கல்வி வழங்கப்பட வேண்டும் என்னும் விதி இடம் பெற்றுள்ளது. இந் நோக்கத்தை நிறைவேற்ற தமிழக அரசு திட்டமிட்டுச் செயற்படுகிறது.

2. தேசிய கல்விக் கொள்கை–1986இல் உள்ள முக்கிய பரிந்துரைகளாவன :—தொடக்கப் பள்ளி நிலையில் பள்ளியில் சேரும் மாணவர், மாணவியர் எண்ணிக்கையைப் பெருக்கவும், அவர்களைத் தொடர்ந்து பயிலச் செய்வதற்குமான ஊக்குவிப்புத் திட்டங்கள் ; பள்ளிகளில் அறிவியல் கல்வியை மேம்படுத்துதல்; மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற்கல்விப் பாடங்கள், பெரிய அளவிலான வயது வந்தோர் கல்வி திட்ட நடவடிக்கைகள்; கல்லூரிக் கல்வியை மேம்படுத்துதல்; தன்னாட்சி உரிமைபெற்ற கல்லூரிகள் அமைத்தல்; ஆசிரியர்கள் தம் திறனை முழுமையாகக் கல்விப் பணியில் செலுத்தும் வண்ணம் அவர்களுக்குச் சலுகைகளும், நன்மைகளும் அளித்தல்; பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலம் உள்ளூர் மக்களின் நன்கொடைகளையும்



1989 ஏப்ரல் 7]

ஒத்துழைப்பையும் பெறுதல் போன்றவையாகும். இவ்வகை வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு முன்னோடியாக திகழ்கிறது. மேலும், இவ்வகைத் திட்டங்கள் சில பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழகத்தில் செயற்படுத்தப் பட்டு வருகின்றன. இளஞ் சிறார்களுக்கு கல்வி புகட்டுதல், தொடக்கக் கல்வி, பள்ளி சாராக் கல்வி, மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற் கல்வி போன்றவை குறித்து இம்மாநிலத்தின் சாதனை அனைத்திந்திய மட்டத்தில் பாராட்டினைப்பெற்றுள்ளது.

3. தேசியக் கல்விக் கொள்கை–1986இல் அடங்கியவை பெரும் பாலும் கல்வி வளர்ச்சியின் பல்வேறு கூறுகள் பற்றிய பொதுப் படையான குறிக்கோள் விளக்கங்களேயாகும். அவற்றில் ஈழே விவாதிக்கப்பட்டுள்ளவை போன்ற சிலவற்றைத் தவிர ஏனையவை ஏற்கத்தக்கவையேயாகும்.

4. புதிய கல்விக் கொள்கை, பள்ளிகளில் மும்மொழிக் கொள்கையை பரிந்துரைத்துள்ளது. அறிஞர் அண்ணா தலைமையில் அமைந்த தமிழக அரசு சட்டமன்றத் தீர்மானத்தின்படி தமிழ்நாட்டுப் பள்ளிகளில் (கல்வித் துறை நிலை ஆணை 105/24–1–1968-ன்படி) பின்வரும் இருமொழிக் கொள்கையைச் செயற்படுத்தியது :—

| | | |
|---|---|---|
| பகுதி-ஏ மொழி. | 1–11 வகுப்புகளில் கற்றுத் தரப்படுவது (10+2+3 வகுப்பு முறை நடைமுறைக்கு வந்தபின் 10 ஆண்டு பள்ளிப் படிப்பு இறுதியில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு நடைபெறுவதால் 1–10 வகுப்புகளில் கற்றுத் தரப்படுவது). | வட்டார மொழி (வட்டார மொழி அல்லாத வேறு மொழி தாய் மொழியாக இருக்குமானால் அந்த மொழி). |
| பகுதி-பி மொழி. | 3–11 வகுப்புகளில் கற்றுத் தரப்படுவது (தற்பொழுது 3–10 வகுப்புகளில்). | ஆங்கிலம் அல்லது இந்திய மொழியல்லாத வேறு ஏதாவது ஒரு மொழி. |

இருமொழிக் கொள்கை செயற்படுத்தப்பட்ட நாளிலிருந்து பின் வந்த ஆட்சிகளும் அக்கொள்கையையே தொடர்ந்து செயற்படுத்தி வந்துள்ளன. நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டவாறு, மைய அரசின் நவோதயா பள்ளிகள் மூலமாக இந்தி திணிக்கப் படுவதை இவ்வரசு வன்மையாக எதிர்க்கும், இந்த நவோதயா

[1989 ஏப்ரல் 7

பள்ளிகள், ஏழை மக்களின் கல்விக்குப் பயன்படுத்தப்படவேண்டிய பெரு நிதியை குறைந்த எண்ணிக்கையினருக்குச் செலவிட்டு கல்வியிலேயே ஒரு மேட்டுக்குடிக் கல்வியை மைய அரசு முத்திரையுடன் உருவாக்குகிறது. இது ஏழைக் கல்வி வேறாகவும், சீமான் கல்வி வேறாகவும் அமையும் போக்கினை வளர்ப்பதாகும். பள்ளி நிலையில் தாய் மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்ற அனைத்து நாட்டு கல்வி வல்லுநர்களின் ஒருமித்த கருத்திற்கு நவோதயா பள்ளிகள் உடன்படாதவை. மேற்கூறிய காரணங்களால் நவோதயா பள்ளிகளுக்கு ஒதுக்கக் கூடிய நிதியினை கிராமப்புறங்களிலுள்ள ஆரம்பப் பள்ளிகள் இன்றியமையாத வசதி பெறுவதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும் ஒதுக்க வேண்டுமென்று இவ்வரசு மைய அரசை வலியுறுத்துகிறது.

5. புதிய கல்விக் கொள்கையில் குறிப்பிடப்பட்ட சில அம்சங்களை செயற்படுத்தும் வகையில் 1987–88-லிருந்து மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களாகப் பல திட்டங்கள் கல்வி முன்னேற்றத்திற்காக வகுக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு :

(1) கரும்பலகை திட்டம் (ஆரம்பக் கல்வி நிலையில் வசதிகளைப் பெருக்குதல்).

(2) மாவட்டக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் (DIETS).

(3) நடுநிலை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கல்வி நிலையில் அறிவியல் கல்வியை மேம்படுத்துதல்.

(4) பள்ளிகளில் சுற்றுப்புறச் சூழல் மேம்பாடு.

(5) மேல்நிலை வகுப்பில் தொழிற் கல்வி.

(6) தொடர் கல்வி நிலையங்கள்.

(7) கல்வி பயிற்றலில் தொழில் நுட்ப சாதனங்களைப் பயன்படுத்துதல்.

(8) உயர் கல்வியியல் நிறுவனங்கள் மற்றும் கல்வியியல் கல்லூரிகள்.

மேற்கண்ட திட்டங்களுக்கு மைய அரசிடமிருந்து நிதியைப் பெற்று நன்கு செயற்படுத்துவதில் தமிழக அரசு முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது. இத்திட்டங்களின் செயலாக்கம் குறித்த விபரங்கள் இவ்விளக்கக் குறிப்பில் தரப்பட்டுள்ளன.

6. மைய அரசின் அறிவியல் தொழில் நுட்பத்திறன் வளர்ச்சிக் குழுவின் ஆலோசனையின் அடிப்படையில், அறிவியல்-தொழில் நுட்பப் பயிற்சித் திறனையும், அடிப்படை அறிவியல், கணிதம் முதலான துறைகளில் பல்கலைக் கழகங்களும் தனி நிலையங்களும் வழங்கும் பயிற்சித் திறனை மேம்படுத்தவும் ஆலோசனை வழங்கிச் செயற்படுத்தவும், அதற்கு நிலையங்களிடையே ஒருங்கிணைப்புக்குத் துணை செய்யவும், ஓர் உயர்நிலை-அறிவியல் கல்விக் குழுவினை விரைவில் அமைத்திடவும் அரசு கருதியுள்ளது.



1989 ஏப்ரல் 7]

கல்விச் செலவும் மாநில வரவு-செலவுத் திட்டமும் :

கல்விக்காக 1989–90ஆம் ஆண்டில் ''மானியக் கோரிக்கை 17—கல்வி''-ன் கீழ் ஒதுக்கியுள்ள ரூபாய் 900 கோடி அவ்வாண்டு வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூபாய் 4,134 கோடியில் சுமார் 22 விழுக்காடாகும்.

2. கல்வி மானியக் கோரிக்கையின்கீழ் 1989–90 வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு :—

| | 1989–90 வரவு-செலவு மதிப்பீடு. | | |
|---|---|---|---|
| | திட்டமில்லாதச் செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 2059. அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றின் கட்டட பராமரிப்புச் செலவு. | 1,82 | .. | 1,82 |
| 2202. பொதுக் கல்வி— | | | |
| 01. தொடக்கக் கல்வி | 3,27,80 | 35,24 | 3,63,04 |
| 02. உயர்நிலைப் பள்ளிக் கல்வி. | 2,72,15 | 18,47 | 2.90,62 |
| 03. கல்லூரிக் கல்வி .. | 1,16,57 | 8,24 | 1,24,81 |
| 04. வயதுவந்தோர் கல்வி | 1,38 | 7,27 | 8,65 |
| 05. மொழி வளர்ச்சி .. | 1,29 | 16 | 1,45 |
| 80. பொது—ஏனைய செலவு | 59,06 | .. | 59.06 |
| கூட்டுக.— | | | |
| திருப்பி வசூலிப்பவை | 92 | .. | 92 |
| பொதுக் கல்வி மொத்தம் | 7,79,17 | 69,38 | 8,48,55 |

[1989 ஏப்ரல் 7

| (1) | 1989-90 வரவு-செலவு மதிப்பீடு. திட்டமல்லாத செலவினம். (2) | திட்டச் செலவினம். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 2203. தொழில் நுட்பக் கல்வி. | 25,05 | 4,17 | 29,22 |
| 2204. விளையாட்டும், இளைஞர் நலனும். | 5,52 | 1,98 | 7,50 |
| 2205. கலை, பண்பாடு—நூலகங்கள். | 6,38 | 20 | 6,58 |
| ஆவண காப்பகங்கள் .. | 46 | 14 | 60 |
| நுண்கலைக்கல்வி—கலை கைத்தொழில் கல்லூரிகள். | 45 | 10 | 55 |
| இசைக் கல்லூரிகள் .. | 13 | 5 | 18 |
| கலை, பண்பாடு ஆகிய வற்றின் மேம்பாடு. | 10 | 78 | 88 |
| தொல்பொருள் ஆய்வு | 29 | 34 | 63 |
| அருங்காட்சியகங்கள் .. | 47 | 20 | 67 |
| பிற செலவுகள் .. | 60 | .. | 60 |
| கலை, பண்பாடு மொத்தம் | 8,88 | 1,81 | 10,69 |
| 2235. சமூக பாதுகாப்பும் நலனும் | 25 | .. | 25 |
| 3425. ஏனைய அறிவியல் பணிகள் | .. | 1,66 | 1,66 |
| 3454. மக்கள், தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரங்கள்—மாவட்ட விவரச் சுவடிகள் | .. | 4 | 4 |
| பெரு மொத்தம் .. மானியக் கோரிக்கை 17 கல்வி] | 8,20,69 | 79,04 | 8,99,73 |



1989 ஏப்ரல் 7]

துறை வாரியாக ஒதுக்கீடு விவரம் வருமாறு :—

| (1) | 1989-90 வரவு-செலவு மதிப்பீடு. திட்டமில்லாத செலவினம் (2) | திட்டச் செலவினம். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில் ) | | |
| கல்வித் துறை .. | 8,18,86 | 77,55 | 8,96,41 |
| தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத் துறை | 1,83 | 1,49 | 3,32 |
| மொத்தம் .. .. | 8,20,69 | 79,04 | 8,99,73 |

3. மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர, பள்ளி, கல்லூரிக் கட்டடங்கள், கடன்கள் முதலியவற்றிற்காகப் பிற மானியக் கோரிக்கைகளின் கீழ் 1989-90-இல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு :—

| (1) | 1989-90 வரவு-செலவு மதிப்பீடு. திட்டமல்லாத செலவினம். (2) | திட்டச் செலவினம். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்,) | | |
| (அ) வருவாய்க் கணக்கில் செலவு— | | | |
| மானியக் கோரிக்கை 28—சமுதாய வளர்ச்சி—சமூகக் கல்வி | .. | 15 | 15 |
| மானியக் கோரிக்கை 37—பொதுப்பணி - அரசுப் பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள் சிறு பணிகள் | 8 | 10 | 18 |
| 2071. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம். | 48,84 | .. | 48,84 |

[1989 ஏப்ரல் 7

| (1) | 1989-90 வரவு-செலவு மதிப்பீடு. திட்ட மல்லாத செலவினம். (2) | திட்டச் செலவினம். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 2236. சத்துணவுத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருள் வகையில் செலவு. | 35,32 | 45,40 | 80,72* |
| (ஆ) வருவாய்க் கணக்கின் கீழ்வராத செலவு— | | | |
| 4202. கல்வி, கலைகள், பண்பாடு ஆகியவற்றிற்கான மூலதனச் செலவு—அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றிற்கான கட்டிடங்கள். | 19 | 3,51 | 3,70 |
| கடன்கள் : | | | |
| 6202. தேசிய கடன், படிப்பு, உதவித் தொகைகள். | .. | 25 | 25 |
| தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன். | 1 | .. | 1 |
| 7615. தனியார் கல்வி .. நிறுவன ஆசிரியர்களுக்குக் கடன்கள். | 8 | .. | 8 |
| மொத்தம் .. .. | 84.52 | 49.41 | 1,33.93 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1989-90ஆம் ஆண்டில் கல்விக்காகச் செலவிட இருக்கும் தொகை ரூபாய் 1,034 கோடிக்குச் சற்று கூடுதலாகும். இத்தொகையில், பள்ளி மாணவர்களுக்கு நண்பகல் உணவு, பாடப் புத்தகங்கள், இலவச சீருடை ஆகிய ஊக்குவிப்புத் திட்டங்களுக்காக செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் ரூபாய் 175 கோடியளவில் சேர்ந்துள்ளது.

* "2236" என்ற தலைப்பில் உள்ள நிதி ஒதுக்கத்தில் ஒரு பகுதி இளஞ்சிறார் சத்துணவுத் திட்டத்தைச் சார்ந்ததாகும்.



1989 ஏப்ரல் 7]

4. இவ்விடத்தில் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்
டியது பின்வருவதாகும்—அதாவது, ஆதி திராவிடர் மற்றும் பின்
தங்கிய வகுப்பினர் நலப்பள்ளிகள், விடுதிகள்; ஆதி திராவிடர்,
பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாண
வர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் முதலியவற்றிற்கான
செலவு; சீர்திருத்தப் பள்ளிகள், தொழில் பயிற்சி நிறுவனங்கள்,
ஊனமுற்றோர்களுக்கான பள்ளிகள் போன்றவற்றிற்காக ஆகும்
செலவு; மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை
மருத்துவக் கல்வி ஆகிய வகைக் கல்விகளுக்கு ஆகும் செலவு
ஆகிய செலவினங்கள் கல்விச் செலவு பற்றிய மேற்கண்ட புள்ளி
விவரங்கள் எவற்றிலும் சேரவில்லை.

1989-90-ஆம் ஆண்டு கல்வித் திட்டப்பணி செலவு விவரம்.

5. எல்லாத் தலைப்புகளின் கீழும் (2202, கல்வி, 4202.
கல்விப்பணி குறித்த கட்டடச் செலவு 6202. கடன் முதலியன)
கல்விக்காக 1989-90 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளில் செலவு
விபரம் வருமாறு ("+" குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள்
மத்திய அரசு பெறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக்
குறிக்கும்).

| (1) | பொறுப் பேற்ற செலவினம். (2) | 1989-90-ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| (i) பொதுக் கல்வி— | | | |
| 1. தொடக்கக் கல்வி .. | 34,61 | 63 | 35,24 |
| 2. பள்ளிக்கல்வி .. | 18,15 +78 | 1,55 | 19,70 +78 |
| 3. வயதுவந்தோர் கல்வி | 276 +440 | 14 | 2,90 +440 |
| 4. கல்லூரிக் கல்வி .. | 838 +25 | 50 | 888 +25 |
| 5. தமிழ் வளர்ச்சி .. | 7 | 5 | 12 |
| | 63,97 +543 | 287 | 66,84 +543 |

| (1) | பொறுப் பேற்ற செலவினம். (2) | 1989-90-ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| (ii) தொழில்நுட்பக் கல்வி | 4,60<br>+7 | .. | 4.60<br>+7 |
| (iii) விளையாட்டு, இளைஞர் நலன். | 1,40<br>+1,16 | ..<br>.. | 1,40<br>+1,16 |
| (iv) கலைப் பணிகள்— | | | |
| கல்வித் துறை .. | 48 | .. | 48 |
| தமிழ் வளர்ச்சித்துறை | 1,23 | 20 | 1,43 |
| மொத்தம் .. | 1,71 | 20 | 1,91 |
| (v) ஏனைய அறிவியல் ஆராய்ச்சி. | 56<br>+7 | 23 | 79<br>+7 |
| பெரு மொத்தம் .. | 72,24<br>+673 | 3,30 | 75,54<br>+673 |



## II. பள்ளிக் கல்வி.

### (1) பொது.

1989-90 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் (மேல்நிலைப் பள்ளிக் கல்வி உட்பட) ரூ. 654 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 30—9—1988 அன்றைய நிலவரப்படி தமிழ் நாட்டில் இருந்த பள்ளிகள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

| (1) | பள்ளிகளின் எண்ணிக்கை. (2) | ஆசிரியர் களின் எண்ணிக்கை. (3) | மாணவர்/ மாணவி யர்கள் எண்ணிக்கை. (4) |
|---|---|---|---|
| | | (இலட்சத்தில்) | |
| தொடக்கப்பள்ளிகள் (1—5 வகுப்புகள்) | 29,359 | 1.18 | 53.63 |
| நடுநிலைப்பள்ளிகள் (1 முதல் 8 அல்லது 6—8 வகுப்புகள்) | 5,707 | 0.66 | 29,80 |
| | 35,066 | 1.84 | 83.43 |
| உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் (பொதுவாக 6—10/ 6—12 வகுப்புகள்) .. | 4,709 | 1.10 | 36.20 |
| | 39,775 | 2.94 | 1,19,63 |

வகுப்புத் தொகுதி வாரியாக மாணவ, மாணவியரின் எண்ணிக்கை வருமாறு :—

| வகுப்புகள். (1) | மாணவர். (2) | மாணவியர். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | | (இலட்சத்தில்.) | |
| 1—5 .. .. | 40.89 | 34.86 | 75.75 |
| 6—8 .. .. | 16.91 | 12.13 | 29.04 |
| 9—10 .. .. | 6.57 | 4.05 | 10.62 |
| 11—12 .. .. | 2.47 | 1.75 | 4.22 |
| மொத்தம் .. | 66.84 | 52.79 | 1,19.63 |

நிருவாக வாரியாக பள்ளிகளின் விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

(2) 1989-90-ம் ஆண்டில், பள்ளிகளுக்கு கூடுதலாக ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன :—

| | |
|---|---|
| தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் வாழுமிடங்களில் திறக்கப்படும் 50 தொடக்கப் பள்ளிகளுக்கு இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் | 100 |
| ஏற்கனவே உள்ள பள்ளிகளுக்கு இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் .. .. .. | 600 |
| நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு தமிழ் ஆசிரியர் பணியிடங்கள் .. .. .. | 50 |
| உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் .. | 50 |
| | 800 |

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் :

(3) பள்ளிகளின் வசதிகளைப் பெருக்குவதற்கும், நல முயற்சிகளைத் திரட்டவும் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்படுகின்றன. 1988-89ல் நடந்த மூன்று பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளின் மூலம் ரூ. 6.84 கோடி மதிப்புள்ள பலவகைப்பட்ட பொருள்கள் நன்கொடையாகப் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டது.

(ii) தொடக்கக் கல்வி.

இருபது அம்சத் திட்டம் 1986-ல் பள்ளி வயது சிறுவர் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை விரிவாக்குதல், 10-வது அம்சமாக இடம் பெற்றுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதிக்குள் (1989-90-ல்) 6—11 வயது குழந்தைகளுள 100 சதவிகிதமும், 11—14 வயது குழந்தைகளுள் 75 சதவிகிதமும் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டும் என்பது இந்திய அரசு கருதியுள்ள இலக்கு ஆகும். தமிழ்நாட்டில் 1985-86-க்கு முன்னதாகவே 6—11 வயது தொகுதியினர் 100 விழுக்காடும் 11—14 வயதுத் தொகுதியினருள் 79.63 விழுக்காடும்



பள்ளிகளில் சேர்க்கப்பட்டு விட்டனர். தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் 1988-89-ல் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டோரின் எண்ணிக்கை வருமாறு :—

| வயதுத் தொகுதி. | மாணவர். | மாணவியர் (இலட்சத்தில்.) | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 6—11 .. .. | 0.50 | 0.51 | 1.01 |
| 11—14 .. .. | 0.65 | 0.63 | 1.28 |
| மொத்தம் .. | 1.15 | 1.14 | 2.29 |

(2) கல்வித்தரத்திற்கு அடித்தளமாக விளங்கும் ஆரம்பக் கல்வியை விரிவாக்குவதில் தீவிரக் கவனம் செலுத்தும் நோக்கத்தில் 1986 ஜூலை 12-ம் நாளிலிருந்து ஆரம்பக் கல்விக்கு என தனி இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(3) குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் தற்போது ஓர் இளஞ்சிறார் பள்ளி வகுப்பும் நடத்தப்படுகிறது. இளம் சிறுமியர் தங்கள் தம்பி தங்கையரைக் கவனித்துக்கொள்ள வீட்டில் நிறுத்தப்படுவதைத் தவிர்க்கவும் இவை உதவும். 1–2 வகுப்புகளில் பயிற்றுவிக்க மகளிரையே (ஆசிரியர்களாக) அமர்த்தப்படவேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம் 1–10 வகுப்பு பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு.

(4) தமிழ்நாடு தொடக்கப்பள்ளி மதிய உணவுத் திட்டம் 1957 முதல் 1982 வரை அமுல்படுத்தப்பட்டது. அதன் இடத்தில் 1982-லிருந்து தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம் அமுலாக்கப்பட்டது. அப்புதிய திட்டம் முன்னதைவிட விரிவானதும் பரவலானதும் ஆகும். தமிழ்நாட்டில் 1–7–1982/15–9–1982 முதல் 1—5 வகுப்புகளிலும், 15–9–1984 முதல் 6—10 வகுப்புகளிலும் இத்திட்டம் அமுலாக்கப்பட்டது.

(5) 1—10 வகுப்புகளில் பயிலும் 64 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு 35,510 பள்ளி உணவு மையங்கள் (பெரும்பான்மை மையங்கள் பள்ளிக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ளன) மூலம் இத்திட்டத்தின் கீழ் சத்துணவு அளிக்கப்

[1989 ஏப்ரல் 7

படுகிறது (இதர் மையங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல் வாழ்வு இயக்குநரகம், நகராட்சி நிருவாகம், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சென்னை மாநகராட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன),

(6) 1—5 வகுப்புகளில் உள்ள குழந்தைகளுக்கு ஆண்டு முழுவதும் அதாவது 365 நாட்களிலும் உணவு அளிக்கப்படுகிறது. (சில குறிப்பிடப்பட்ட ஏறக்குறைய 20 விடுமுறை நாட்களில், விடுமுறைக்கு முதல் நாளில் முன்னதாகச் சமைக்கப்பட்ட உணவு கொடுக்கப்படுகிறது. 6—10 வகுப்புகளில் உள்ள குழந்தைகளுக்கு எல்லா பள்ளி நாட்களிலும் சத்துணவு அளிக்கப்படுகிறது. குழந்தை ஒன்றுக்கு அளிக்கப்படும் பங்கீடு வருமாறு:—

| | வகுப்புகள். (1—8) கிராம். | வகுப்புகள் (9—10) கிராம். |
|---|---|---|
| அரிசி .. .. .. | 100 | 120 |
| பருப்பு .. .. | 15 | 15 |
| எண்ணெய் .. .. | 3 | 3 |
| காய்கறிகள் .. .. | 50 | 50 |

**1–8 வகுப்பு மாணவ, மாணவியருக்கு இலவசச் சீருடை :**

(7) தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 1—8 வகுப்புகளில் பயில்வோருள் தமிழக அரசு சத்துணவுத் திட்டத்தின்கீழ் சத்துணவு பெறுவோர் அனைவருக்கும் ஆண்டுக்கு ஒரு இலவச சீருடை வழங்கும் திட்டத்தை 1985-86 முதல் அரசு அமுல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1988-89இல் மொத்தம் ரூ. 15.53 கோடி செலவில் 62.10 லட்சம் மாணவ, மாணவியருக்குச் சீருடைகள் அளிக்கப்பட்டன. இத்திட்டம் கைத்தறி மற்றும் நெசவுத்துறை, சமூக நலத்துறை, கதர், வாரியம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருகிறது.

**1–8 வகுப்பு மாணவ மாணவியருக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் :**

(8) மதிய உணவு பெற்று வந்த 1—3 வகுப்பு மாணவ மாணவியருக்கு 1966-67 முதல் பாடப் புத்தகங்கள் இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றன. 1985-86-ல் இது 4—8 வகுப்புகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 1988-89-ல் 1—8 வகுப்புகளில் பயனடைந்தோர் 62.10 இலட்சம் பேர் ஆகும். செலவு ரூ. 7.64 கோடி ஆகியது. அதே வருடத்தில் 1-ம் வகுப்பு பயிலும் சுமார் 5 இலட்சம் மாணவர்களுக்கு ரூ. 12 இலட்சம் செலவில் கற்பலகைகள் இலவசமாகத் தரப்பட்டன.



1989 ஏப்ரல் 7]

புத்தக வங்கி :

(9) அநேகமாக அனைத்து பள்ளிகளிலும் புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உயர் வகுப்புக்கு செல்லும் மாணவர்கள் வழங்கும் புத்தகங்களைக் கொண்டும், பெற்றோர் ஒத்துழைப்புடனும், சமூகத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடனும் இப்புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மகளிர்க்குத் திருமண நிதியுதவி :

(10) மகளிர் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு 8-ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் படித்த ஏழைப் பெண்டிர்க்கு ரூ. 5,000 திருமண நிதியுதவி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கம் சமூகநலத் துறையின்கீழ் செய்யப்பட்டுள்ளது.

ஏழைச் சிறுமியர் கல்விபெற உதவித் திட்டம் :

(11) கொடைத்தன்மை வாய்ந்த குடிமக்கள், 1 முதல் 8-ம் வகுப்பு பயிலும் சிறுமியரைத் தத்து எடுத்து, அச்சிறுமியரின் பெற்றோருக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ. 250 வழங்கும் படிக்கான ஒரு வளர்ப்பு—பெற்றோர் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் சேர்பவர்கள் தொடர்ந்து பயிலாமல் இடையில் நின்றுவிடும் நிலை சிறுமியரிடையே அதிகமாக உள்ளது. இதனைச் சீர்செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மிகக் குறைந்த காலத்திலேயே 50,000 நன்கொடையாளர்கள் இதற்கு உதவ முன்வந்துள்ளனர்.

கரும்பலகைத் திட்டம் :

(12) 1987-88 ஆம் ஆண்டிலிருந்து மைய அரசு பொறுப்பேற்கும் திட்டமாக கரும்பலகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆரம்பக் கல்வி நிலையில் பெருமளவில் முன்னேற்றம் கொண்டு வருவதும், வசதிகளைப் பெருக்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் முக்கியமான மூன்று அம்சங்கள் பின்வருமாறு :—

(1) ஆரம்பப் பள்ளிகளுக்குத் தேவையான இடவசதிகளை அளிப்பது.

(2) ஓராசிரியர் பள்ளிகளை ஈராசிரியர் பள்ளிகளாக்குவது.

(3) அத்தியாவசியமான கற்பிப்பு உபகரணங்கள் அளித்தல்.

[1989 ஏப்ரல் 7

(13) இத்திட்டம், 1987-88 முதல் 1989-90 முடிய இம் மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல் படுத்தப்படும். மொத்த ஊராட்சி ஒன்றியங்களில் மூன்று கட்டங்களில் முறையே 20 சதவீதம், 30 சதவீதம், 50 சதவீதம் என்ற அடிப்படையில் செயலாக்கப்படும். இத்திட்டத்திற்கு மைய அரசு இதுவரை அளித்துள்ள தொகை பின்வருமாறு :—

| | முதல் கட்டம். | இரண்டாம் கட்டம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மைய அரசால் விடுவிக்கப்பட்ட மான்யம். | ரூ. 481 லட்சம். | ரூ. 645 லட்சம். |
| செயற்படுத்தப்படும் ஒன்றியங்களின் எண்ணிக்கை. | 77 | 113 |
| செயற்படுத்தப்படும் பள்ளிகளின் எண்ணிக்கை. | 5,995 | 8,212 |
| புதியதாகக் கட்டப்படும் பள்ளிக் கட்டடங்கள். | 58 | 51 |
| கூடுதல் வகுப்பறை கட்டப்படும் பள்ளி களின் எண்ணிக்கை. | 91 | 293 |
| ஓராசிரியர் பள்ளிகளில் இரண்டாவது ஆசிரியர் நியமனம் செய்யப்படும் பள்ளிகள். | 450 | 619 |

(ஒவ்வொரு ஆரம்பப் பள்ளியும் பெறும் உபகரணங்களின் மதிப்பு ரூ. 7,215).

(14) 1987-88ல் தெரிவு செய்யப்பட்ட 450 ஓராசிரியர் பள்ளி களிலும் இரண்டாவது ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளனர் (அனை வரும் பெண்கள்). இக்கட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள 5,995 ஆரம்பப் பள்ளிகளுக்கும் பாட நூல்கள், தேசப்படங்கள், குளோப்புகள், விளையாட்டு/இசைக் கருவிகள், கரும்பலகைகள் போன்ற கற்பிப்பு சாதனங்கள் வாங்க ரூ. 428 இலட்சங்களை மைய அரசு வழங்கியுள்ளது. இக் கற்பிப்பு சாதனங்கள் 'சிட்கோ' மற்றும் 'டான்சி' நிறுவனங்கள் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. புத்தக வெளியீட்டாளர்களிடம் புத்தங்கள் வாங்க ஆணையிடப்பட்டுள்ளது. இச்சாதனங்கள் யாவும் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.



1989 ஏப்ரல் 7]

(15) 1988-89ல் தெரிவு செய்யப்பெற்ற 619 ஓராசிரியர் பள்ளிகளிலும் இரண்டாவது ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கற்பிப்பு சாதனங்கள் மற்றும் புத்தகங்கள் வழங்குமாறு சம்பந்தப் பட்ட அமைப்புகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. அனைத்து 8,212 ஆரம்பப் பள்ளிகளுக்கான மான்யமும் மைய அரசால் தரப்பட்டுள்ளது. கட்டடங்கள் தேவைப்படும் பள்ளிகளில் பெரும் பாலும் கட்டுமான பணி தொடங்கப்பட்டுள்ளன.

(16) கரும்பலகைத் திட்டம் தமிழ் நாட்டில் நல்ல முறை யில் செயலாக்கப்படுவதையொட்டி, மைய அரசு மூன்றாம் கட்டத்தில் செயற்படுத்தவேண்டிய மொத்த ஒன்றியங்களில், 10 சதவீதம் ஒன்றியங்களுக்கான (2,867 பள்ளிகள், 192 ஆசிரியர் கள்) மான்யமாகிய ரூ. 212 இலட்சங்களை 1988-89-லேயே கொடுத்துள்ளது.

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் :

(17) ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளில் பணி புரிந்து வந்த ஆசிரியர்களும், அடிப்படை ஊழியர்களும் 1-6-1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டனர். அப்பள்ளிகளின் கட்டடப் பராமரிப்பு தவிர பள்ளி நிர்வாகப் பொறுப்பு முழு வதையும் ஆரம்பக் கல்வி இயக்குநர் கவனித்து வருகிறார். இப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 97,483 ஆகும். இவ்வாசிரியர்களுக்கு பணி விதிகள் ஏற்படுத்தப்பட் டுள்ளன.

நகராட்சி மற்றும் மாநகராட்சித் தொடக்கப்பள்ளிகள் :

(18) நகராட்சிகள், நகரியம், மாநகராட்சிகள் ஆகியவற்றின் நிருவாகத்தின் கீழ் உள்ள பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதவர் 1-6-1986 முதல் அரசு ஊழியர் களாக ஆக்கப்பட்டுள்ளனர். இதை நடைமுறைப்படுத்த விரிவான திட்டங்களை ஒருங்கிணைப்புக் குழு வகுத்து வருகின்றது.

1988-89ல் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சி கள் நிர்வகித்துவந்த தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 1,550 (1,127 தொடக்கப் பள்ளிகள், 423 நடு நிலைப்பள்ளிகள்) ஆகும். அவைகளில் 16,571 ஆசிரியர்கள் பணி புரிகின்றனர்.

[1989 ஏப்ரல் 7

## (III) உயர்நிலைப்பள்ளிக் கல்வி.

1988-89ல் தமிழ் நாட்டில் 14—16 வயதுத் தொகுதியினரான 18.91 இலட்சம் பேர்களுள், 56.16 விழுக்காடாகிய 10.62 இலட்சம் பேர் உயர்நிலைப் பள்ளிகளில் 9—10 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1988-89ல் உயர் நிலைப்பள்ளி வகுப்புகள் நடைபெற்று வந்த பள்ளிகளின் விவரங்கள் வருமாறு :—

| (1) | சாதாரண பள்ளிகள் (ஆங்கிலோ இந்திய மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் உட்பட) (2) | நடுவண் உயர்நிலைப் பள்ளிக்கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்தவை. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| உயர்நிலைப்பள்ளிகள் .. | 2,821 | 101 | 2,922 |
| மேல்நிலைப்பள்ளிகள் .. | 1,710 | 77 | 1,787 |
| மொத்தம் .. | 4,531 | 178 | 4,709 |

1988-89ல் மேற்கண்ட பள்ளிகளில் வெவ்வேறு நிலைகளில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| (1) | மாணவர்களின் எண்ணிக்கை. (இலட்சத்தில்) (2) |
|---|---|
| 1—5 வகுப்புகள் .. .. .. .. | 3.00 |
| 6—8 வகுப்புகள் .. .. .. .. | 18.36 |
| 9—10 வகுப்புகள் .. .. .. .. | 10.62 |
| 11—12 வகுப்புகள் .. .. .. .. | 4.22 |
| மொத்தம் .. | 36.20 |



1989 ஏப்ரல் 7]

1988-89-ல் 47 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாக திறக்கப்பட்டன.

அறிவியற் கல்வி :

2. உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியற் கூடங்களை அமைப்பதற்கான இத்திட்டத்தின் கீழ் 1988-89 முடிய 1,163 உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெற்றுள்ளன. இத்திட்டத்தின் படி ஆய்வுக்கூட சாதனங்கள் பள்ளிக் கல்வி இயக்குநரால் மொத்தமாக வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. பள்ளி ஒன்றுக்கு ரூ. 25,000 மதிப்புள்ள சாதனங்கள் வழங்கப்படுகின்றன. அரசுப் பள்ளி ஒன்றுக்கு ஆய்வுக் கூடக் கட்டட மதிப்பு ரூ. 1.00 இலட்சமாகும். உள்ளாட்சி மற்றும் தனியார் உயர் நிலைப் பள்ளிக்கு ஆய்வுக்கூடக் கட்டடத்திற்காக கட்டடச் செலவில் 60 விழுக்காடு அல்லது ரூ. 60,000 இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது.

3. ஆய்வுக்கூட வசதியைப் பெறாத கிராமப்புற உயர் நிலைப் பள்ளிகளில் அறிவியல் சோதனைகளை நடத்திக் காட்டுவதற்காக மொத்தம் உள்ள 56 கல்வி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் அறிவியல் ஆய்வுக்கூட வண்டி உள்ளது.

4. பெங்களூரில் உள்ள விசுவேசுவரய்யா தொழில் மற்றும் தொழில் நுட்ப அருங்காட்சியகம், தென் மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி ஆகியவற்றிற்கு தென் இந்திய அறிவியல் கண்காட்சி ஒன்றை நடத்தி வருகிறது. இக் கண்காட்சியில் 1980லிருந்து தமிழ்நாடு பங்கேற்று வருகிறது. தென் இந்திய அறிவியற் கண்காட்சி 1988-ல் அக்டோபர் மாதத்தில் சென்னையில் நடைபெற்றது. இக்கண்காட்சியில் தமிழ்நாடு மிகச் சிறந்த இடத்தைப் பெற்றது. தமிழ்நாட்டு மாணவர் மூவருக்கு படிப்பு உதவிப் பணமும், ஆறு மாணவர்களுக்கு சிறப்பு பரிசுகளும், மற்றும் மூன்று ஆசிரியர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டன. நமது பள்ளிகள் காட்சிக்கு வைத்த அறிவியல் காட்சிப் பொருள்களும் மாணவர்களும் மிகவும் பாராட்டைப் பெற்றனர்.

5. அறிவியல் கண்காட்சிகள் ஒவ்வோர் ஆண்டும், மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு மாநில அளவிலான அறிவியல் கண்காட்சி 1989 ஜனவரியில் காஞ்சிபுரத்தில் நடத்தப்பட்டது.

14483
D
V211,31'N89
N89.8.2

6. கல்வித் தொழில் நுட்ப செயல்பாடு விரிவாக்கத் திட்டத்தின்கீழ் 5,000 தொடக்கப் பள்ளிகளுக்கு வானொலி மற்றும் ஒலிப் பதிவுக் கருவிகள் வாங்குவதற்கு மைய அரசு ரூ. 30 இலட்சம் மானியமாக அளித்துள்ளது. கல்வித் தொலைக் காட்சி பட நிலையம் கட்டும் பணி, பள்ளிக் கல்வி இயக்குநரக வளாகத்தில் முடியும் தருவாயில் உள்ளது.

பள்ளிகளில் அறிவியல் கல்வியை மேம்படுத்துவதற்கான மைய அரசு பொறுப்பேற்கும் திட்டம் :

7. இத்திட்டத்திற்காக 1987–88-ல் மைய அரசு ரூ. 218 இலட்சங்களை அளித்தது. 1,669 நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ. 19 இலட்சம் செலவில் அறிவியல் கருவிகள் பெட்டி வழங்குவதற்கு 'சிட்கோ' நிறுவனத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே 557 உயர்நிலை/மேல் நிலைப் பள்ளிகளுக்கு தலா ரூ. 35,000 செலவில் அறிவியல் சாதனங்களும், நூலகங்களுக்கு அறிவியல் புத்தகங்களும் வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதனை சிட்கோ நிறுவனம் மற்றும் புத்தக வெளியீட்டாளர்கள் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ரூ. 150 இலட்சத்திற்கு கூடுதலாக இத்திட்டத்திற்கு ஏற்கனவே செலவிடப்பட்டுள்ளது.

8. உயர்நிலைப் பள்ளி/மேல் நிலைப் பள்ளிகளிலுள்ள 9–10வது வகுப்பு கணிதம் மற்றும் அறிவியல் பாட ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக மாநில கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் ஏற்பாடு செய்து வருகிறது. 11–12வது வகுப்பு கணிதம் மற்றும் அறிவியல் ஆசிரியர்களுக்கு கோடை/மழைக்கால பருவங்களில் இயற்பியல், வேதியியல், உயிரியல், மற்றும் கணிதப் பாடங்களில் 54 பயிற்சி வகுப்புகள் நடத்த தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் ஏற்பாடு செய்து வருகிறது.

9. 1988–89 ஆம் ஆண்டில், 702 உயர்நிலைப் பள்ளிகளும் 502 மேனிலைப் பள்ளிகளும், மேம்பாட்டிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவைகளுக்கு, அறிவியல் ஆய்வக மேம்பாட்டிற்காக ரூ. 241 இலட்சமும், நூலக புத்தகங்கள் வாங்குவதற்கு ரூ. 181 இலட்சமும் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1,600 நடுநிலைப் பள்ளிகளுக்கு 'அறிவியல் கருவிகள் பெட்டி' ரூ. 19 இலட்சம் செலவில் வழங்கப்படும். எஞ்சிய அனைத்து பள்ளிகளும் 1989–90-ல் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும்.

பள்ளிகளில் சுற்றுப்புறச் சூழல் கல்வி :

10. கல்வியில் எல்லா நிலைகளிலும் சுற்றுப் புறச் சூழல்பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து தேசியக் கல்விக் கொள்கை, 1986-ல் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. பள்ளிகளில் சுற்றுப் புறச்சூழல் கல்வித் திட்டத்தை



ரூ. 34 இலட்சம் செலவில் செயல்படுத்த, மைய அரசு பங்கேற்கும் திட்டமாக அனுமதித்து அவ்வரசு மார்ச்சு 1989-ல் ரூ. 18 இலட்சம் வழங்கியுள்ளது. இத்திட்டம் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள 6 தாலுக்காககளில் செயல்படுத்தப்படும். பிற நடவடிக்கைகளோடு பள்ளிகளில் செடிகள் வளர்த்தலும் இச்சூழல் கல்வியின் முக்கியமான அம்சமாகும்.

உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் :

11. 1989–90 வரவு-செலவு மதிப்பீட்டில் உயர்நிலைப்பள்ளிக் கட்டடங்களுக்கான நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டட மானியம். | 1 |
| அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கான கட்டடங்கள்——சிறு பணிகள். | 10 |
| முன் ஆண்டுகளில் ஏற்பளித்து முடிவுறாமல் உள்ள கட்டட வேலைகள். | 202 |
| புதுப் பணிகள் .. .. .. .. .. | 150 |
| வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றத்தால் சேதமாகும் கட்டடங்களுக்கான பழுது பார்த்தல் பணிகள். | 5 |
| மொத்தம் .. | 368 |

அரசினர் உயர்நிலை/மேல் நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டுதல், நிலங்களைக் கையகப்படுத்துதல், சுற்றுச் சுவர்கள் கட்டுதல் ஆகியவற்றிற்கு 1988–89-ல் மொத்தம் ரூ. 377 இலட்சம் ஏற்பளிக்கப்பட்டது. இதில் அரசினர் மகளிர் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு இரண்டு அல்லது மூன்று வகுப்பறைகள் கட்டுவதற்கு குறிப்பிடத்தக்க அளவு செலவிடப்பட்டது.

கல்விச் சலுகைகள், படிப்புதவித் தொகைகள் மற்றும் பிற ஊக்குவிப்புப் பணிகள் :

12. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி பொதுவாக 1–12 வகுப்புகளில் ஏறத்தாழ அனைத்து நிலைகளிலும் அனைவருக்கும் இலவசமாகும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த

[1989 ஏப்ரல் 7

மாணவர்கள் சிறப்பு படிப்புதவித் தொகைகளையும், இதர சலுகைகளையும், ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர். அதே போன்ற வசதியை பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர்.

13. 9–12 வகுப்பு மாணவியருக்கு இலவசக் கல்வி காரணமாக எந்த அளவுக்குப் படிப்புக் கட்டணத் தொகை செலுத்துவதிலிருந்து தவிர்க்கப்படுகிறதோ அந்த அளவுக்கு கல்விக் கட்டணத் தொகையை ஒரு திட்டத்தின்கீழ் நடுவரசு வழங்கி வருகிறது. 1987–88 மற்றும் 1988–89 ஆம் ஆண்டுகளுக்கு இத் திட்டத்திற்காக மொத்தம் ரூ. 121 இலட்சம் வழங்கும்படி மைய அரசிடம் கோரப்பட்டுள்ளது. மாணவியர் கல்வி முன்னேற்றத் திட்டங்களுக்காக இத் தொகை செலவிடப்படுகிறது.

மேற்பார்வைப் படிப்பு :

14. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு அவர்களுக்கு ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்கள் ஆகியவற்றில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள் தோறும் ஆசிரியர்களின் நேரடி மேற் பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுகிறது. 625 தேர்ந்தெடுக்கப்பட்ட உயர் நிலைப் பள்ளிகளில் 8, 9, 10 வகுப்புகளில் இச்சமுதாயத்தைச் சார்ந்த 62,799 மாணவர்களுக்கு, 375 மேல்நிலைப் பள்ளிகளில் 24,057 மாணவர்களுக்கும் இத்திட்டம் பயனளித்து வருகிறது.

பள்ளியிறுதித் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி :

15. ஆண்டு முடிவில் நடைபெறும் பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி பெறாத மாணவர்களுக்கு பள்ளிகளிலேயே 1,000 மையங்களில் சிறப்பு பயிற்சி தரும் திட்டம் ஒன்று செயல்படுகிறது. ஒவ்வொரு மையத்திலும் இரண்டு முழு நேர பி.டி. ஆசிரியர்கள் மூன்று மாதங்களுக்கு போதனை அளிக்கின்றனர். அந்தந்த இடத்திலுள்ள தேவை மற்றும் வசதிக்கேற்ப பள்ளி நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரத்திலோ அல்லது பகல் வேளையிலோ இம் மையங்கள் இயங்குகின்றன. 18 வயதுள்ள மாணவர்கள் இத் திட்டத்தின் கீழ் பயனடையலாம்.

## IV. பள்ளிப் பாடத் திட்டம், பாடங்கள் மற்றும் பாடப் புத்தகங்கள்.

தேசியக் கல்விக் கொள்கை 1986-ன்படி பள்ளிகளில் பாடத் திட்டமும் பாடங்களும் திருத்தி அமைக்கப்பட வேண்டியிருந்தன. 1 முதல் 12 வகுப்புகளுக்கு திருத்திய பாடங்களை, பாடத்திட்ட திருத்த குழுக்கள் உயர்மட்டக் குழுவின் ஆலோசனையின்படி தயாரித்தன. 1988–89 முதல் அவைகளை அறிமுகமாக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



1989 ஏப்ரல் 7]

(2) தற்போதுள்ள பாடத் திட்டத்தின்படி எழுதப்பட்ட பள்ளிப் பாடப் புத்தகங்களின் புதிய வடிவங்களைத் தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் படிப்படியாக பின்வருமாறு அச்சிடுகிறது :—

| வருடம். | வகுப்புகள். |
|---|---|
| 1988–89 .. .. | 1, 3 மற்றும் 6. |
| 1989–90 .. .. | 2, 4, 7, 9 மற்றும் 11. |
| 1990–91 .. .. | 5, 8, 10 மற்றும் 12. |

(3) வாழ்க்கைக் கல்வித் திட்டத்தின் நோக்கம் பயிலும் கல்விக்கும் வாழ்க்கைக்கும் இடையேயுள்ள இடைவெளியைக் குறைத்து பள்ளிக் கல்வியை அனைத்து மட்டங்களிலும், தொழில் மற்றும் வேலை வாய்ப்போடு இணைந்ததாக ஆக்க வேண்டும் என்பதுடன் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், எல்லா நிலைகளிலும் தங்களுடைய தொழில் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், உடல் உழைப்பின் மேன்மையை உணர்ந்து கொள்ளவும் வழி செய்ய வேண்டுமென்பதாகும். செயல் முறை அனுபவங்கள் மூலம் தொழில் நுணுக்கங்களை அவர்கள் கற்றுக் கொள்ள இத் திட்டம் வழிகோலும். இத் திட்டத்தின்பால் நாட்டம் கொண்ட பல பள்ளிகள் தாமாகவே முன் வந்து 1984–85-லிருந்து இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. இத்திட்டம் தற்போது 670 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 8—10 வகுப்புகளில் 1.11 இலட்சம் மாணவர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. அப்பள்ளிகளில் பணியாற்றி வந்த ஆசிரியர்களின் பணி பயன்படுத்தப்பட்டதுடன், கைவினைஞர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள் போன்றவர்கள் 1,250 பேர்களை பகுதி நேரப் பணியாளர்களாக நியமித்து அவர்களுடைய பணியும் பயன்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் பயன் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் :

(4) தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிடும் பாட நூல்கள் மாவட்ட மற்றும் கூட்டுறவு சங்கங்கள் 58 மூலமாக மாநிலம் முழுவதும் விநியோகிக்கப்படுகின்றன. இக்கூட்டுறவு சங்கங்களால் நியமிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக பாடநூல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை நகரில் இந்நிறுவனம் தனது வெளியீடுகளை நேரடியாக விற்பனை செய்கிறது.

(5) 1979–80 முதல் தமிழ்நாட்டுக்கு இந்திய அரசு ஒதுக்கும் மலிவு விலைத் தாள்களைக் கொண்டு நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து விநியோகிக்கும் பணியையும் இந்நிறுவனம் செய்து வருகிறது. 1988–89 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட நோட்டுப் புத்தகங்களின் மதிப்பு ஏறத்தாழ ரூ. 3.35 கோடியாகும்.

[1989 ஏப்ரல் 7

(6) தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மாநிலத்தின் கல்விப் பணிக்கு ஆதரவாக ஆற்றிவரும் வேறு பணிகளுள் 1—8 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவச பாடநூல்களை வழங்கும் செலவில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளுதல், அரசினர் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள் கட்ட கட்டட நிதி வழங்குதல்; பள்ளிச்சாராக் கல்விக்கான புத்தகங்கள், கல்லூரிப் பாடநூல்கள், தமிழ் வளர்ச்சிக்கான பல்வேறு நூல்கள் ஆகியவற்றை வெளியிடுதல் முதலியன குறிப்பிடத் தக்கனவாகும். இதுவரை ரூ. 2.25 கோடியை பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்காக இந்நிறுவனம் வழங்கியுள்ளது.

## (V) ஆசிரியர் பயிற்சி.

தற்போது பின்வரும் விவரப்படி அங்கீகரிக்கப்பட்ட 91 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன :—

| | ஆடவர். | மகளிர். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| அரசு .. .. | 14 | 14 | 28 |
| அரசு (சமூக நலத் துறை) | .. | 1 | 1 |
| உதவி பெறுபவை (தனியார்) | 14 | 31* | 45 |
| உதவி பெறாதவை .. | 7 | 10 | 17 |
| மொத்தம் .. | 35 | 56 | 91 |

1984–85-லிருந்து ஆசிரியர் பயிற்சி நிலையம் ஒவ்வொன்றிலும் ஆண்டு தோறும் 40 மாணவர்கள் இடைநிலை ஆசிரியர் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.

2. இளநிலை ஆசிரியர்கள், இடைநிலைத் தகுதிபெற்று இடைநிலைத் தகுதிக்கான ஊதியத்தைப் பெற வகை செய்யும் பொருட்டு தமிழ்நாடு கல்வியாராய்ச்சி நிறுவனம் நடத்தி வரும் 5 மாத அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்பு பயிற்சியில் 60,000-க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இதன் மூலம் பயனடைந்துள்ளனர்.

*(இவற்றில் சென்னை 7-ல் உள்ள இறித்தோபர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியோடு இணைந்த இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பிரிவு 1-ம் இளஞ்சிறார்க்கான ஆசிரியர் பயிற்சி நிலையுங்கள் 8-ம் அடங்கும்.)



1989 ஏப்ரல் 7]

3. ஆங்கில மொழி, பயிற்றுவிப்புக்கான 10 மையங்கள் 1967-68 முதல் 1988-89 வரை மூன்று அல்லது நான்கு வாரங்கள் ஆங்கிலப் பயிற்சியினை 6—8 வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் 47,000 இடைநிலை ஆசிரியர்களுக்கு அளித்துள்ளன. 1967-68 முதல் 1988–89 வரை இவ்வகைப் பயிற்சியில் பயனடைந்த பி.டி ஆசிரியர்கள் 15,000 பேர்கள் ஆகும்.

4. பெங்களூரிலுள்ள வட்டார ஆங்கிலப் பயிற்சி நிறுவனத்திற்கு இவ்வரசு 1988-89-ல் ரூ. 3.94 இலட்சம் நிதியுதவியை அளித்துள்ளது. 1988-89-ல் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 29 ஆங்கில ஆசிரியர்கள் நான்கு மாதப் பயிற்சிபெற இந்நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டனர். ஆங்கிலம் பயிற்றுவிப்பு மேம்பாட்டிற்காக ஒவ்வோர் ஆண்டும் ரூ. 30 இலட்சம் செலவிடப்படுகிறது.

### மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள்.

5. மைய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ் மாநிலத்திலுள்ள 14 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களாகத் தரமுயர்த்த இந்திய அரசு ஒப்புதலளித்துள்ளது.

6. மேற்கூறியவற்றுள் 7 நிறுவனங்களைத் தரமுயர்த்துவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன. இந்த 7 நிறுவனங்களுக்கு தொடரராச் செலவினங்களுக்கென ரூ. 209 இலட்சம்—அதாவது தளவாடங்களுக்கென ரூ. 49 இலட்சமும், கட்டிடங்கள் கட்டுமானச் செலவுக்கென ரூ. 160 இலட்சமும்—மத்திய அரசு அனுமதியளித்துள்ளது. மேலும் தொடரும் செலவுகளுக்கென முதல் தவணையாக ரூ. 21 இலட்சம் மத்திய அரசு நிதியுதவி அளித்துள்ளது. தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கும் கட்டுமானப் பிரிவு மேற்பார்வைப் பொறியாளரிடம் இந்நிறுவனங்களுக்கான கட்டுமானப்பணி ஒப்படைக்கப்பட்டு, அனைத்து இடங்களிலும் கட்டுமானப் பணி தொடர்கிறது. இந்நிறுவனங்களுக்குத் தேவையான பணியிடங்கள் தோற்றுவித்து அனுமதி ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன. சிறு தொழில்கள் முன்னேற்றக்கழகம் மற்றும் கதர், கிராமத் தொழில்கள் வாரியம் ஆகியவை இந்த 7 மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்குத் தேவையான அறிவியல் உபகரணங்கள் மற்றும் அலுவலகத் தளவாடங்களை அளிக்கவுள்ளன. நூலகத்திற்குத் தேவையான புத்தகங்கள், கருவிகள், விளையாட்டுப் பொருள்கள், இசைக் கருவிகள் ஆகியவைகள் பல்வேறு நிறுவனங்களிடம் இருந்து விலைக்கு வாங்கப்படவிருக்கின்றன.

7. இரண்டாவது கட்டத்தில் தரமுயர்த்தப்படவிருக்கும் 7 மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் சார்பான அனுமதி ஆணைகள் விரைவில் வெளியிடப்படும். வரும் ஆண்டில் மிகுதியுள்ள 6 மாவட்டங்களில் மாவட்டக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் அமைக்கப்படும்.

[1989 ஏப்ரல் 7

## (VI) தமிழ்நாடு கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம்.

1976-ல் முன்பிருந்த மாநில கல்வி நிறுவனம் மாநில கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாக மேம்படுத்தப்பட்டது. மாநில மதிப்பீட்டுப் பிரிவும் அறிவியல் பிரிவும் மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்துடன் சேர்க்கப்பட்டன. பள்ளிக் கல்வியின் ஒரு பிரிவாக இயங்கிவரும் இந்நிறுவனம் பல்வேறு நிலைப்பள்ளி ஆசிரியர்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு கருத்தரங்குகள், பணிக்களரிகள், புத்தறிவுப் பயிற்சிகள் ஆகியவற்றை நடத்தி வருகிறது. கல்வியின் தரத்தை முன்னேற்றுவது பற்றிய திட்டங்களுக்கேற்ப இந்நிறுவனத்தின் செயல்கள் அமைந்துள்ளன. பள்ளிக் கல்வி இயக்குநரே இந்நிறுவனத்தின் இயக்குநர் ஆவார்.

2. தொடக்கக் கல்வியைச் சார்ந்த பின்வரும் சிறப்பு முன்னோடித் திட்டங்களை யூனிசெஃப் உதவியுடன் இந்நிறுவனம் செயற்படுத்தி வருகிறது :—

| திட்டம். (1) | செயற்படுத்தும் இடங்கள். (2) |
|---|---|
| (1) தொடக்கக் கல்விப் பாடத் திட்டத்தை புதுப்பித்தல். | 130 தொடக்கப் பள்ளிகள் (50,000 மாணவர்கள்). |
| (2) சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி—35 வயதுடைய அனைவருக்கும் அவரவருக்கு இசைந்த தொழிற் சார்ந்த கல்வி அளித்தல். | பல்வேறு மாவட்டங்களில் மொத்தம் 5 சமுதாய மையங்கள். |
| (3) தொடக்கக் கல்வி வாய்ப்புகளைப் பரவலாக்குதல் (பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திவிட்ட 9—14 வயதுத் தொகுதினர்க்குப் பள்ளி சாராக் கல்வி முறையை உருவாக்குதல்). | 75 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள். |
| (4) இளஞ்சிறார் கல்வி (3—5 வயது குழந்தைகளுக்கு). | காரியாப்பட்டி வட்டாரத்தில் தொடங்கப்பட்டுள்ள 61 இளஞ்சிறார் பள்ளிகள். |
| (5) கல்வி, சமுதாயம்-பொருளாதாரம் பண்பாடு மற்றும் நுண்கலை முன்னேற்றத்திற்காக ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஆழ்நோக்கு கல்வித் திட்டம். | இத்திட்டத்தைச் செயல்படுத்த பின்தங்கிய பகுதியாக கிருட்டிணகிரி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. |



1989 ஏப்ரல் 7]

### மக்கட் தொகைக் கல்வி :

3. 1982—83 முதல் மக்கட் தொகை கட்டுப்பாடு நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிதி (UNFPA)யின் மூலம் தமிழ் நாட்டில் மக்கள் தொகைக் கல்வித் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு பேராசிரியர், திட்ட ஒருங்கிணைப்பாளர், திட்ட அலுவலர்கள் மூவர் மற்றும் ஓர் ஆராய்ச்சி அலுவலரைக் கொண்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் ஏற்படும் ஊதியம் பற்றிய எல்லாச் செலவையும் மாநில அரசு முதற்கண் செய்து பின்னர் ஐக்கிய நாடுகள் நிதியிடமிருந்து செலவுத் தொகையைப் பெற்றுக் கொள்கிறது. இந்திய அரசுக்கும், தமிழ்நாடு அரசுக்குமிடையே உள்ள ஒப்பந்தப்படி இத்திட்டம் 1990 வரை நீட்டிக்கப்படும்.

### அனைவருக்கான அஞ்சல் முறைப் பள்ளி :

4. உயர்நிலைப் பள்ளி நிலையில் பள்ளி சாராக் கல்வியினை விரிவாக்கும் பொருட்டு அனைவருக்குமான அஞ்சல் முறைப் பள்ளியை மாநில கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் தொடங்கியுள்ளது. ஏற்கனவே 8-வது வகுப்பு தேறி 15 வயது நிரம்பியவர்கள் இதில் சேரலாம். ஆண்டுதோறும் 2,500 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அஞ்சல் வழிப் பயிற்சியும், நேரடித் தொடர்பும் இணைந்து இப்பள்ளி 12 மாத காலம் நடத்தப்பட்டு பள்ளி இறுதி வகுப்புக்கு இணையான கல்வி தரப்படுகிறது. இப்படிப்பு மிகவும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. அனைவருக்குமான (அஞ்சல் முறைப்) பள்ளியில் பயின்ற மாணவர்களில் ஐந்து அணியினர் படிப்பை முடித்து, இறுதித் தேர்வுகளை எழுதினர். 5,070 பேர் இதுவரை பயன் அடைந்துள்ளனர். வாழ்க்கைக்குதவும் தொழிற்கல்விகளையும் அளிக்க வகை செய்யத்தக்க பாடத் திட்டத்தினை உருவாக்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

## (VII) பள்ளி ஆசிரியர்கள் ஆசிரியரல்லாதோர் நலன்.

தனியார் உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதவர்களின் பணிப்பாதுகாப்புக்காக சட்ட பூர்வமான பாதுகாப்பு, தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் 1973 மற்றும் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளி (விதிமுறைகள்) விதிகள் 1974, 1—12-1974 முதல் இயற்றப்பட்டு அமுலில் உள்ளன. அண்மையில் இச்சட்டம் மற்றும் விதிகள் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் பொருந்தும்படி செய்யப்பட்டுள்ளன.

[1989 ஏப்ரல் 7

2. இந்நாள் வரையிலும் தற்காலிகமாக அரசுப்பள்ளிகளில் பணிபுரியும் 661 பள்ளி உதவியாளர்கள், 585 மொழி ஆசிரியர்கள் மற்றும் 22 உடற்பயிற்சி இயக்குநர்களுடைய பணி வரன்முறைப்படுத்தப்பட்டு 3—8—1988 முதல் பணப்பலன் அடைந்துள்ளனர்.

3. மாணவர்களின் எண்ணிக்கை 750 அதற்கு மேல் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் ரூ. 1,160—1,950 ஊதிய விகிதத்தில் உள்ள முதுநிலை பட்டதாரி ஆசிரியர் ஒருவரை உதவித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றவும் அதற்கான சிறப்பு ஊதியமாக ரூ. 25 பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது.

4. மாணவர்களின் எண்ணிக்கை 750 அதற்கு மேல் உள்ள உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் மற்றொரு இடைநிலை ஆசிரியர் உதவித் தலைமை ஆசிரியராகவும் அதற்காக சிறப்பு ஊதியமாக ரூ. 25-யைப் பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது.

அரசு அல்லாத கல்வி நிறுவனப் பணியாளர்களுக்கு ஓய்வு ஊதியம் :

(5) அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற) பள்ளி ஆசிரியர்களுக்கு 1—6—1970-லிருந்தும், தனியார் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு 1—4—1972-லிருந்தும் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு 2—10—1970-லிருந்தும் பிற வகையான தனியார் கல்வி நிறுவனப் பணியாளர்களுக்கு வேறு வேறு நாட்களிலிருந்தும் தாராள ஓய்வூதிய விதிகளின் பயன்கள் தரப்பட்டுள்ளன.

(6) தமிழ்நாடு சிறப்பு வைப்பு நிதி பணிக்கொடைத் திட்டம் 1—4—1984 முதல் அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் விரிவாக்கப்பட்டது.

உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரிவோருக்கு வைப்பு நிதி :

7. தனியார் பள்ளி ஆசிரியர்களின் வைப்பு நிதிக் கணக்குகள் அஞ்சலக சேமிப்புக் கணக்கு மூலமாக செயல்படுத்துவதற்குப் பதிலாக அரசு ஊழியர்களுக்கு எவ்வாறு செயல்படுத்தப்படுகிறதோ அதே முறையில் 1—4—1986 முதல் செயல்படுத்துமாறு ஆணையிடப்பட்டுள்ளது. அப்படியே உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் வைப்பு நிதியை மாவட்ட கல்வி அலுவலர்கள்/ மகளிர் பள்ளி ஆய்வாளர்கள் கவனித்து வருகின்றனர்; 1—4—1988 முதல் வைப்பு நிதிச் சந்தா அரசுக் கணக்கில் செலுத்தப்படுகின்றது. அவ்வப்போது அரசு ஊழியர்களுக்கு



1989 ஏப்ரல் 7

எவ்வாறு வழங்கப்படுகிறதோ அவ்வாறே உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரிவோரும் ஆசிரியர் வைப்பு நிதிக்கான வட்டியைப் பெற அருகதையுள்ளவர்களாகின்றார்கள்.

ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி :

8. ஆசிரியர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் வறுமை முதலியவற்றால் வாடும்போது நிதியுதவி செய்யவும் அவர்களுடைய குழந்தைகளுக்கு மேற்படிப்புக்காக உதவித் தொகைகளை அதற்கான விதிமுறைகளுக்குட்பட்டு அளிப்பதற்கும் 1962-ல் தொடங்கப்பட்ட இந்நிதியிலிருந்து உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. 1987—88-ல் இந்நிதிக்கு வசூலான தொகை ரூ. 5.38 இலட்சமாகும். மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 1,000 தொழிலியல் பட்டயப்படிப்பு மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 500 என்பது உதவித் தொகையின் விகிதமாகும். 1987—88-ல் 111 பேர் உதவித் தொகை பெற்றனர். காசநோய் போன்று சில குறிப்பிட்ட கடுமையான நோய்களால் அவதிப்படும் ஆசிரியர்களுக்கு ரூ. 750 நிதியுதவி தரப்படுகிறது. 1987—88-ல் 114 ஆசிரியர்கள் உதவி பெற்றனர். சைதாப்பேட்டை கல்வியியல் கல்லூரியில் ரூ. 52 இலட்சத்தில் ஆசிரியர் இல்லம் ஒன்றைக் கட்ட அரசு நிதி அளித்துள்ளது.

ஆசிரியர்களுக்கான விருதுகள் :

9. பள்ளி ஆசிரியர்களுக்கான மாநில விருதுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 1987—88 ஆம் ஆண்டில் பின்வரும் விவரப்படி 228 ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் .. .. | 112 |
| உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்கள் .. .. .. .. | 112 |
| ஆங்கிலோ இந்தியப் பள்ளி ஆசிரியர்கள் .. | 2 |
| மெட்ரிகுலேசன் பள்ளி ஆசிரியர்கள் .. .. | 2 |
| | 228 |

இவ்விருது ஒவ்வொன்றும் ரூ. 500 வெள்ளிப் பதக்கம், தகுதிச் சான்றிதழ் ஆகியவற்றைக் கொண்டது. 15 தொடக்கப் பள்ளி ஆசிரியர்களும் 7 இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களும் இந்திய அரசிடமிருந்து 1988 ஆம் ஆண்டுக்கான தேசிய விருதுகளையும் பெற்றுள்ளனர்.

[1989 ஏப்ரல் 7

தமிழ்நாடு ஆசிரியர் தேர்வுப் பணி வாரியம் :

10. தமிழ்நாடு தேர்வாணைக் குழுவுக்கு, பள்ளிகளில் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதில் இருந்த இன்னல்களைக் களைய, ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க தனியே ஒரு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியம் ஆறு மாதத்திற்குள்ளாகவே 1,329 நபர்களைத் தெரிவு செய்துள்ளது. இவ்வாரியம் 1—6—1989 கல்வியாண்டிற்குள் தேவைப்படும் அத்தனை பணியிடங்களுக்கும் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும்.



1989 ஏப்ரல் 7]

III. மேல்நிலைப் பள்ளிக் கல்வி.

தமிழ் நாட்டில் 1988–89-ல் செயல்பட்டுவந்த 1,710 மேல்நிலைப் பள்ளிகளின் நிருவாகவாரி விவரங்கள் வருமாறு :

பள்ளிகளின் வகை :

| | | |
|---|---|---|
| அரசுப் பள்ளிகள்— | | |
| பள்ளிக் கல்வித் துறை | 758 | |
| தொழில் நுட்பக் கல்வித் துறை .. .. | 14 | |
| | 772 | |
| தனியார் .. .. | 692 | |
| நகராட்சி மற்றும் மாநகராட்சி .. | 62 | 1,526 |
| மெட்ரிகுலேசன் .. | | 155 |
| ஆங்கிலோ-இந்தியன் | | 29 |
| | | 1,710 |

இப்பள்ளிகளில் 1987–88 மற்றும் 1988–89-ல் புதிதாகத் தொடங்கிய பள்ளிகள் 92 (தனியார் 39 மெட்ரிகுலேசன் 53). மேற்கண்ட 1,710 மேல்நிலைப் பள்ளிகளில் (CBSE) உடன் இணைந்த பள்ளிகள் சேர்க்கப்படவில்லை. 1988–89 ஆம் ஆண்டில் மேல்நிலை வகுப்புகளில் பயின்றுவந்த மாணவ மாணவியர் எண்ணிக்கை பின்வருமாறு :

| | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|
| பொதுப் பாடங்கள் .. | 2,03,087 | 1,25,341 | 3,28,428 |
| தொழிற் பாடங்கள் .. | 43,653 | 50,286 | 93,939 |
| மொத்தம் .. | 2,46,740 | 1,75,627 | 4,22,367 |

[1989 ஏப்ரல் 7

2. 1978—79-ல் மேல் நிலைப் பள்ளிகளை தொடங்கப்பட்ட பொழுது மேல்நிலை வகுப்புகளில் கலை, அறிவியல் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர் தேவையில் பெரும் பகுதி மேல்நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பதவிக்கு முழுத்தகுதி பெற்ற உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்களை மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாற்றம் செய்தும், முதுகலைப் பட்டத்தகுதி பெற்றிராத உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை மேல் நிலை வகுப்புகள் நடத்த ''உட்படுத்தியும்' பூர்த்தி செய்யப்பட்டது. அவ்வாண்டும் அதற்கு பின்னர் உள்ள ஆண்டுகளுக்கு (புதிதாக துவக்கப்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் புதிய பிரிவுகளுக்கு) கூடுதலாகத் தேவைப்பட்ட மேல் நிலைப் பள்ளி ஆசிரியர்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும்பொருட்டு இதுவரை 10,000க்கு மேற்பட்ட மேல்நிலை வகுப்பு ஆசிரியர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றோடு உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள் 650-ம் ஆய்வுக்கூட உதவியாளர் பணியிடங்கள் 900-ம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

3. மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர், மேல் நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பணியிடங்களுக்கான பணி விதிகள் ஏப்ரல் 1981-ல் வெளியிடப்பட்டன. உயர் நிலைப் பள்ளியிலிருந்து ''உட்படுத்தப்பட்ட'' ஆசிரியர்கள் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களாக முறையான நியமனம் பெறுவதற்கு மேற்படிப்புத் தகுதியடைய போதிய காலம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதுவரை இவ்வாசிரியர்கள் மாதந்தோறும் ரூ. 40 சிறப்பூதியம் பெற்று வருகின்றனர். ''உட்படுத்தப்பட்ட'' ஆசிரியர்களுக்கு மாநிலக் கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் பத்து மாத, ''பட்ட மேற்படிப்புச் சான்றிதழ்'' வகுப்பை நடத்தியுள்ளது. இவ்வகுப்பில் தேர்ச்சி பெறுபவர்கள் மேல் நிலை வகுப்பு ஆசிரியர்களுடைய சம்பள விகிதத்தைப் பெறுவர்.

4. மேல் நிலை வகுப்புகளில் தமிழ் மொழி அல்லது தமது தாய்மொழி வாயிலாகப் பயிலும் சிறுபான்மை மொழி மாணவர்களிடமிருந்து பள்ளிக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. தங்கள் தாய்மொழி வழியாக பத்தாம் வகுப்பு வரை பயின்ற சிறுபான்மை மொழி மாணவர்கள் அதே மொழியில் 11—12 வகுப்புகளில் பாடங்களைப் பயில வாய்ப்பில்லையெனில் ஆங்கில மொழி வாயிலாகப் பயில அனுமதிக்கப்பட்டு பள்ளிக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. மேல் நிலை வகுப்புகளில் ஆங்கில மொழி வாயிலாகப் பயிலும் ஏனைய மாணவர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 20 வீதம் ஓராண்டில் 10 மாதங்களுக்கு ரூ. 200 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. தொழிற் பாடங்களைப் பொருத்தவரை அந்தந்த தொழிற் பாடத்தில் பகுதி III-ல் பொதுக் கல்வியில் தொடர்புடைய பாடத்துக்கு எது பயிற்று மொழியோ அதுவே அந்த தொழிற் பாடத்துக்கும் பயிற்று மொழியாகக் கருதப்பட்டு அதற்கேற்ப பள்ளிக் கட்டணம் வசூலிப்பதா இல்லையா என்பது நிர்ணயிக்கப்படுகிறது.



1989 ஏப்ரல் 7]

5. மேல்நிலைப் பள்ளிகளில், மேல்நிலை வகுப்புகளில்
அறிவியல் பாடங்களில் செயல்முறை வகுப்புகளை நடத்த அறி
வியல் ஆசிரியர்களுக்கு உதவியாக மாணவர்களை ''அறிவியல்
தலை மாணாக்கர்களாக நியமிக்கும் திட்டம் 1983—84-லிருந்து
செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு தலை மாணாக்கருக்கும்
மாதம் ரூ. 20 வீதம் ஆண்டுக்கு 10 மாதம் மதிப்பூதியம் தரப்படு
கிறது. ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியிலும் 11 ஆம் வகுப்பில்
அறிவியல் பாடம் ஒவ்வொன்றிலும் ஒரு தலை மாணாக்கரும்
12 ஆம் வகுப்பில் அறிவியல் பாடம் ஒவ்வொன்றிலும் ஒரு தலை
மாணாக்கரும் என்றவாறு மொத்தம் அனைத்துப்பள்ளிகளிலும்
ஏறத்தாழ 7,742 அறிவியல் தலை மாணாக்கர்கள் இருப்பர்.

6. மேல்நிலைப்பள்ளி நிலையில் தொழிற் பாடங்களைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டின் சாதனை அனைத்திந்திய மட்டத்தில் பாராட்டினைப் பெற்றுள்ளது. 1988—89-ல் மொத்தம் 1,267 மேல்நிலைப் பள்ளிகளில் 108 வகையான தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. 1988—89-ல் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்று வந்த 4.22 இலட்சம் மாணவர்களில் 93,939 பேர் பின்வரும் விவரப்படி தொழிற் பாடங்களைப் பயின்று வந்தனர்:

| தொழிற்பாடவகை. | மாணவர். | மாணவியர். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. வேளாண்மை .. | 5,232 | 67 | 5,299 |
| 2. மனையியல் .. .. | 58 | 4,238 | 4,296 |
| 3. வாணிகத்துறை .. | 21,348 | 17,734 | 39,082 |
| 4. பொறியியலும், தொழில் நுட்பவியலும் .. | 16,818 | 1,278 | 18,096 |
| 5. உடல் நலம் .. | 197 | 4,701 | 4,898 |
| 6. ஆசிரியர் பயிற்சி .. | .. | 22,268 | 22,268 |
| மொத்தம் .. | 43,653 | 50,286 | 93,939 |

மாணவிகளுக்காக புதிய தொழிற் கல்விப் பாடமாகிய ''இடை
நிலை ஆசிரியர் பயிற்சி'' 1985—86-ல் 281 மேல்நிலைப் பள்ளி
களிலும், 1986—87-ல் 267 பள்ளிகளிலும் தொடங்கப்பட்டது.

7. மைய அரசு நாடெங்கும் அமுல்படுத்தியுள்ள ஒரு திட்டத் தின் கீழ் மின் கணிப்புப் பொறியைப் பற்றிய கல்வியானது 1984–85-லிருந்து இம்மாநிலத்தில் சில மேல்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்பட்டுள்ளன. 1986–87-ல் இப்பாடத்தை நடத்தி வரும் 30 பள்ளிகளில் 16 பள்ளிகள சென்னையிலும், 14 பள்ளி கள் கோயம்புத்தூரிலும் அதையொட்டியும் அமைந்துள்ளன.

8. மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் பொதுப்பாடங்களைப் பயிலும் மாணவர்கள் விருப்பப் பாடங்களாக கற்க வேண்டிய 4 பாடங்களில் ஒன்றுக்குப் பதிலாக தொழிற் பாடம் ஒன்றைப் பயில அனுமதிக்கும் திட்டத்தை விருப்பமுள்ள மேல்நிலைப்பள்ளி கள் 1984–85 முதல் செயல்படுத்த அனுமதிக்கப்பட் டுள்ளன.

9. முன்னர் உயர்நிலைப் பள்ளிகளில் இருமுனைப்பாடங்களை கற்பித்துவந்தவர்களான 491 முழு நேர தொழிற்பாட ஆசிரியர்க ளோடு புதிதாக நியமிக்கப்பட்ட 3,837 பகுதி நேர தொழிற் பாட ஆசிரியர்களும் தொழிற் பாடங்களைக் கற்றுத் தருகின்றனர். பகுதி நேர ஆசிரியர்களுக்கு மாத ஊதியம் ரூ. 300/700 ஆகும். அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுவோரில் பொருத்தமானவர்கள் இருப்பின் அவர்களும் பிற இடங்களில் வெளி நபர்களும் பகுதிநேர ஆசிரியர்களாக நியமிக்கப்படு கின்றனர். தொழிற்பாட தலை மாணாக்கர்கள் நியமிக்கும் முன் னோடித் திட்டமும் செயல்பட்டு வருகிறது. மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் தொழிற் பாடங்களுக்கான தளவாடங் கள் வகையில் அரசு பணத்திலிருந்து மட்டும் செய்துள்ள செலவு ரூ. 40 இலட்சத்திற்கு மேல் ஆகும். இதுபோக அந்தந்தப் பள்ளி வசதிக் கட்டண நிதியிலிருந்தும் தனியார் நிருவாகங்களின் பணத் திலிருந்தும் தொழிற்பாட தளவாடங்களுக்காகச் செலவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

10. மேல்நிலைப் பள்ளித் தொழிற்பாட மாணவர்களின் வேலைவாய்ப்புகளை அதிகரித்தல், அவர்கள் உயர் கல்வியும், தொடர் கல்வியும் பெற வழி செய்தல் போன்ற நோக்கங்களுடன் மேல்நிலைக் கல்வித் தொழிற்பாட வகுப்புகளின் பாடங்கள், பாடத்திட்டம் ஆகியவற்றை மாற்றி அமைப்பதற்காக அரசு அமைத்த குழந்தைசாமி குழுவின் பரிந்துரைகளை படிப்படியாக அரசு செயற்படுத்தி வருகிறது.

11. மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்பாடங்களைப் பயின்று தேறி வெளிவரும் மாணவர்களுக்கு 6 மாத சிறப்புப் பயிற்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட 19 தொழில்களில் ஏதாவது ஒன்றில் அவ்வாறு மொத்தம் 1,300 பேருக்கு " தொழில் பழகு பயிற்சிக் குழு " வின் மூலமாக பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ. 200 ஊதியம் தரப்படும்.





**மேல்நிலை வகுப்புகளில் தொழில் சார்ந்த பாடங்கள கற்பித்தலுக்கான மைய அரசு பொறுப்பேற்கும் திட்டம்**

12. ஒவ்வொரு ஆண்டும் மாநிலத்திற்கு 100 பள்ளிகள் வீதம் மேல்நிலை வகுப்புகளில் தொழிற்கல்வி கற்பிப்பதற்கு மைய அரசு பொறுப்பேற்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த ஒப்புதல் அளித் துள்ளது. 1987–88-ல் இம்மாநிலத்துக்கு ரூ. 192 இலட்சத் திற்கு ஒப்புதல் அளித்து, இதில் ரூ. 112 இலட்சத்தினை கட்ட டங்கள், உபகரணங்கள் முதலியவற்றுக்குக்காக முதற்கட்டமாக மைய அரசு அளித்துள்ளது. இத்தொகை பள்ளிக் கல்வி இயக்குந ருக்கும், தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்கும் அளிக்கப்பட்டுள் ளது. வகுப்பறை மற்றும் தொழிற்கூடங்கள் கட்டுமானப் பணி நடந்து வருகிறது. கருவிகளை தயாரிக்கும் பொறுப்பை தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்திடம் பள்ளிக் கல்வி இயக்குநர் ஒப்படைத்துள்ளார்.

13. 1988–89-ல் இத்திட்டத்தின்கீழ் ரூ. 225 இலட்சத்தை இம்மாநிலத்துக்கு மைய அரசு அனுமதித்துள்ளது.

கட்டடங்களும் தளவாடங்களும் —

14. அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஒரு வகுப்பறையும் ஒரு ஆய்வுக்கூடமும் கட்ட ஒவ்வொன்றிற்கும் ரூ. 4.20 இலட்சம் அளவில் அரசு ஏற்பளித்துள்ளது.

15. இதுவரை தொடங்கியுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் தேவையான ஆய்வுக்கூடத் தளவாடங்கள் வழங்க மொத்தம் சுமார் ரூ. 7 கோடிக்கு மேல் செலவிடப்படு கிறது. சிறுதொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் ஈடுபட் டுள்ள தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (சிட்கோ) மூலமாக இத்தளவாடங்கள் வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. 1986–87-ல் உயர்த்தப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடத் தளவாடங்கள் வாங்குவதற்கு ரூ. 26.10 இலட்சம் முன்பண மாக இந்நிறுவனத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

16. தனியார் மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள் கட்டவும் தளவாடங்கள் வாங்கவும் ஆகும் செலவில் 40 விழுக்காட்டை பள்ளிக்கு ரூ. 1 இலட்சம் (கட்டடத்திற்கு ரூ. 75,000 மற்றும் ஆய்வுக்கூட தளவாடங்களுக்கு ரூ. 25,000) என்ற வரம்புக்குட் பட்டு மானியமாகத் தரும் திட்டம் ஒன்றுக்கும் அரசு ஏற்பளித் துள்ளது. இதுவரை இவ்வாறு இணை மானியமாக ஏற்பளிக்கப் பட்டுள்ள மொத்தத் தொகை சுமார் ரூ. 2.95 கோடியாகும்.

17. கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் உள்ள ஆய்வுக் கூட வசதிகளை மேல்நிலைப் பள்ளி மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள வகைசெய்யும் நோக்குடன் " கல்லூரி இணையங்களும்' " பாலிடெக்னிக் இணையங்களும் " வாய்ப்பான இடங்களில் எல்லாம் அமைக்கப்பட்டுள்ளன.

## IV. அரசுத் தேர்வுகள்.

அரசுத் தேர்வுத் துறை 1975 ஆம் ஆண்டு பிப்ரவரி யிலிருந்து தனி இயக்குநரின் கீழ் இயங்கி வருகிறது. சென்னையில் இயங்கிவரும் தலைமை அலுவலகத்தோடு மதுரை, கோயம்புத் தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சென்னை ஆகிய ஐந்து இடங்களில் வட்டார அலுவலகங்களும் செயல்பட்டு வரு கின்றன.

2. இத்துறை மாநிலம் முழுவதற்குமாக நடத்திவரும் 41 பொதுத் தேர்வுகளில், எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைப் பள்ளித் தேர்வுகள் முக்கியமானவைகளாகும். இத் தேர்வுகளின் முக்கிய விவரங்கள் வருமாறு :—



**தேர்விற்குப் பதிவு செய்த தேர்வர்களின் விபரங்கள்.**

| தேர்வு. | மார்ச்/ஏப்ரல் 1988 பதிவு செய்த தேர்வர்களின் எண்ணிக்கை. | தேர்ச்சியின் சதவீதம். | செப்டம்பர்/ அக்டோபர்/ 1988 பதிவு செய்த தேர்வர்களின் எண்ணிக்கை. | மார்ச் ஏப்ரல் 1989 பதிவு செய்த தேர்வர் களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| **எஸ்.எஸ்.எல்.சி.—** | | | | |
| மொத்தம் (தனித் தேர்வர்கள் உட்பட). | 4,96,319 | * | * | 5,06,934 |
| பள்ளி மாணாக்கர்கள் மட்டும். | 3,69,226 | 51.10 | * | 3,67,160 |
| தனித் தேர்வர்கள் மட்டும் .. | 1,27,093 | * | 1,77,294 | 1,39,774 |
| **ஆங்கிலோ-இந்தியப் பள்ளித் தேர்வு—** | | | | |
| மொத்தம் (தனித் தேர்வர்கள் உட்பட). | 3,492 | * | * | 3,964 |
| பள்ளி மாணாக்கர்கள் மட்டும் .. | 3,275 | 84.00 | * | 3,696 |
| தனித் தேர்வர்கள் மட்டும் .. | 217 | * | 672 | 268 |
| **மெட்ரிகுலேஷன் பள்ளித் தேர்வு—** | | | | |
| மொத்தம் (தனித் தேர்வர்கள் உட்பட). | 10,970 | * | * | 13,226 |
| பள்ளி மாணாக்கர்கள் மட்டும் .. | 10,445 | 89.00 | * | 12,563 |
| தனித் தேர்வர்கள் மட்டும் .. | 515 | * | 1,217 | 663 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| மேல்நிலைப் பள்ளித் தேர்வு— | | | | |
| மொத்தம் (தனித் தேர்வர்கள் உட்பட). | 2,27,874 | * | * | 2,71,442 |
| பள்ளி மாணாக்கர்கள் மட்டும் .. | 1,67,625 | 59.3 | * | 1,96,486 |
| தனித் தேர்வர்கள் மட்டும் .. | 60,249 | * | 84,341 | 74,956 |

*பகுதிமுறைத் தே வு 1978 மார்ச் மாதத்திலிருந்து அமுலாக்கப்பட்டதன் காரணமாக மொத்தம் தேர்வு எழுதுபவர்களில் தேறியோர் விழுக்காடு பள்ளியில் பயின்று முடித்துவிட்டு எழுதுவோர்களுக்கு மட்டுமே தர இயலும்.

## தேர்வு மையங்களின் விவரங்கள்.

| தேர்வின் பெயர். | தேர்வு மையங்களின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | மார்ச் 1988. | அக்டோபர் 1988. | மார்ச் 1989. |
| (1) | (2) | (3) | (4) |
| 1. இடைநிலைக் கல்வி பொதுத் தேர்வு .. | 2,019 | 566 | 2,113 |
| 2. ஆங்கிலோ-இந்தியப் பள்ளி இறுதித் தேர்வு .. | 27 | 2 | 27 |
| 3. மெட்ரிகுலேஷன் பள்ளித் தேர்வு .. .. | 109 | 3 | 1 |
| 4. மேல்நிலைக் கல்வித் தேர்வு .. .. .. | 1,224 | 372 | 1,336 |



## தனித் தேர்வர்கள் தேர்வு அனுமதிக்கான தகுதிகள்.

| தேர்வு. | குறைந்த பட்ச கல்வித் தகுதி. | குறைந்த பட்ச வயது வரம்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. இ.எஸ்.எல்.சி. .. | இல்லை. .. | டிசம்பர் திங்கள் முதல் நாளன்று 13 வயது நிரம்பி இருத்தல் வேண்டும். |
| 2. எஸ்.எஸ்.எல்.சி. .. | எட்டம் வகுப்பில் ஆங்கிலப் பாடத்துடன் தேர்ச்சி பெற்றிருத்தல் (அல்லது) அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் எட்டாம் வகுப்புத் தேர்ச்சி பெற்றிருத்தல். | மார்ச் திங்கள் முதல் நாள்/செம்டம்பர் திங்கள் முதல் நாள் 15 வயது நிரம்பியிருத்தல் வேண்டும். |
| 3. மேல்நிலைத் தேர்வு பொதுக் கல்விப் பாடங்கள் (செய்முறைக் கல்வியில்லாத பாடங்கள்). | 10-ம் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல். | ஏப்ரல் முதல் நாள்/அக்டோபர் முதல் நாள் 17 வயது நிரம்பியிருத்தல் வேண்டும். |

## தேர்வுக் கட்டணம் :

| தேர்வு. | கட்டணம். |
|---|---|
| (1) | (2) |
| 1. இ.எஸ்.எல்.சி. .. .. .. | பகுதிமுறை மற்றும் அனைத்துப் பாடங்களுக்கும் ரூ. 10 மட்டும். |
| 2. எஸ்.எஸ்.எல்.சி., ஓ.எஸ்.எல்.சி. ஆங்கிலோ-இந்தியன் மெட்ரிக்குலேஷன். | பகுதிமுறை மற்றும் அனைத்துப் பாடங்களுக்கும் ரூ. 25 மட்டும். |
| 3. மேல்நிலைத் தேர்வு .. .. .. | ஒரு பாடத்திற்கு ரூ 10 மட்டும், அனைத்துப் பாடங்களுக்கும் ரூ. 50 மட்டும். |

[1989 ஏப்ரல் 7

3. மேற்கூறிய தேர்வுகள் தவிர ஆசிரியர் கல்வியில் பட்டயப் படிப்பு, தொழிற் கல்வி (வணிகவியல் அல்லாத) பாடங்கள், ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் படிப்பு போன்ற தேர்வுகளையும் இத்துறை நடத்தி வருகிறது.

மையங்களில் விடைத்தாட்கள் மதிப்பிடுதல்—

4. எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல் நிலைத் தேர்வுகள் விடைத் தாள்கள் திருத்தும் பணி தொடர்ந்து நடப்பு ஆண்டிலும் மைய மதிப்பீட்டு முறையால் செய்யப்பட்டு வருகின்றது. மார்ச்/ ஏப்ரல் திங்கள் 1988 முதல் மைய மதிப்பீட்டு மையங்களில் ப ணி புரியும் பணியாளர்களுக்கு அரசு ஒரு குறிப்பிட்ட தொகையைச் சிற்றுண்டிச் செலவாக வழங்குகிறது.

சிறந்த மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான தேசியத் தேர்வு--

5. இந் தேர்வின் முதற் கட்டம் இவ்வியக்கத்தால் நடத்தப் படுகிறது. நடப்பு ஆண்டில் 216 தேர்வர்களுக்கான தேர்ச்சிப் பட்டியல் புது டெல்லியில் உள்ள என்.சி.இ. ஆர்.டி.' அமைப்பால் நடைபெறவுள்ள இரண்டாம் கட்டத் தேர்விற்காக அனுப்பப் படுகிறது. கிராமப் புற மாணவர்களும் இத் தேர்வில் அதிக அளவில் கலந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தும் முகத்தான் நடப்பு ஆண்டில், இத்தேர்வின் முதற் கட்டத்திற்கு அனுமதி பெற நிர்ணயிக்கப்பட்ட மதிப்பெண்கள் 75 சதவிகிதத்திலிருந்து 60 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில், இத் தேர்வு டிசம்பர் திங்கள் மூன்றாம் நாள், 8818, மாணாக்கர் களுக்கு நடை பெற்றது.

தேர்வுப் பணிகளை கணிப்பான் மூலம் செய்வித்தல்—

6. தேர்வுக்கு முந்தைய மற்றும் பிந்தைய பணிகள், எஸ்.எஸ்.எல்.சி. பொதுந் தேர்வு மற்றும் மேல்நிலைத் தேர்வு களுக்கு கடந்த ஆண்டுகளைப் போன்று தொடர்ந்து கணிப்பான் (கம்ப்யூட்டர்) மூலமாகச் செய்யப்படுகின்றன. ஆங்கிலோ இந்தியன் மற்றும் மெட்ரிகுலேசன் தேர்வுகளுக்கான பணிகளும் 1987 செப்டம்பர்—அக்டோபர் முதற் கொண்டு கணிப்பான் (கம்ப்யூட்டர்) மூலமாக செய்யப்படுகின்றன.

பகுதிமுறைத் தேர்ச்சித் திட்டம்—

7. பகுதி முறையில் தேர்ச்சி பெறும் திட்டம் தற்பொழுது நடைமுறையிலுள்ளது. எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைத் தேர்வுகளில், ஒரு தடவையோ அல்லது பல தடவைகள் தேர்வு எழுதியோ ஒவ்வொரு பாடத்திலும் 35 விழுக்காடு மதிப்பெண் ணுக்குக் குறையாது பெற்றால் தேர்வர்கள் தேர்ச்சி பெற்றதாகக் கருதப்படுவர்.



[1989 ஏப்ரல் 7

8. பிற மாநில இடைநிலைத் தேர்வு வாரியங்கள் நடத்திய பத்தாவது (எஸ்.எஸ்.எல்.சி.) தேர்வில் தேர்ச்சி பெற்ற சான்றி தழ்கள் வைத்திருக்கும் தேவர்கள், பத்தாவது வகுப்புத் தேர்வில் நமது மாநில மாணவர்களுக்குரிய விதியைப் போல் குறைந்த பட்ச மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும் என்பதனை வற்புறுத்தாது தனித் தேர்வர்களாக மேல்நிலைத் தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். இந்தியா முழுமையிலுமாக இம் மாநிலம் ஒன்றுதான் மாந்த நேய உணர்வு அடிப்படையில் இந்த ஆணையை வழங்கியுள்ளது.

9. கடந்த 1986-ம் ஆண்டு வரையில், எஸ்.எஸ்.எல்.சி. மற் றும் மேல்நிலைத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட ஒரு வாரத் திற்குப் பின்னரே மாணாக்கர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டன. ஆயினும் தற்போது 1987-ஆம் ஆண்டு முதல் தேர்வு முடிவு வெளியிடப்படும் தினத்திலேயே மாணாக்கர் களுக்கு மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இம்முறையே இனி வரும் ஆண்டுகளிலும் பின்பற்றப்படும்.

V. வயது வந்தோர் கல்வியும், பள்ளிசாராக் கல்வியும்.

வயது வந்தோர் கல்விக்கும் பள்ளி சாராக் கல்விக்கும் 1989–90 நிதிநிலை அறிக்கையில் ரூ. 8.65 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது. (1988–89 ல் ரூ. 7.36 கோடியே ஒதுக்கப்பட்டிருந்தது).

வயது வந்தோர் கல்வி—

2. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி எழுத்தறிவு பெற்றவர்கள் விழுக்காடு தமிழ்நாட்டிலும் அனைத்திந்தியாவிலும் பின் வருமாறு இருந்தது :—

| | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| | | (விழுக்காடு) | |
| இந்தியா .. .. | 46.74 | 24.88 | 36.17 |
| தமிழ்நாடு .. .. | 57.19 | 34.12 | 45.78 |

தமிழ்நாட்டில் வயது வந்தோர் கல்வி பல்வேறு திட்டங்களின் கீழ் அளிக்கப்படுகிறது. வயது வந்தோர் கல்வி இருபது அம்சத் திட்டத்திலும் இடம் பெற்றுள்ளது. இதில் தமிழ்நாட்டில் சாதனை தொடர்ந்து சிறப்பாக இருந்து வருகிறது.

ஊரக (தொழில் சார்ந்த) எழுத்தறிவிப்புப் பணி—

3. மைய அரசின் முழுப் பண உதவியுடன் நடைபெறும் இத் திட்டத்தின்கீழ் இம்மாநிலத்தில் உள்ள 20 மாவட்டங்களிலும் மொத்தம் 8,100 மையங்கள் செயல்படுகின்றன. ஒவ்வொன்றிலும் 300 மையங்கள் வீதம் மொத்தம் 27 செயற் பிரிவுகள் இத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் செயல்படுகின்றன. மைய அரசு வகுத்துள்ள வரை முறைகளின்படி இத் திட்டம் செயல்படுகிறது. ஒவ்வொரு செயற் பிரிவுக்கும் (300 மையங்கள்) முதலாமாண்டிற்கு ரூ. 15.54 இலட்சமும் பின்னர் ஆண்டுக்கு ரூ. 13.89 இலட்சம் வீதமும் செலவினம் அனுமதிக்கப்படுகிறது.

தொடர் கல்வி நிலையங்கள்—

4. தேசியக் கல்வியறிவுக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளவைகளை ஒட்டி தொடர்கல்வி நிலையங்களை (Jana shikshan Nilayam) நாடெங்கிலும் படிப்படியாக அமைக்க இந்திய அரசு முடிவெடுத்துள்ளது. தொடர் கல்வியையும் ஏட்டறிவு





நிலைத் திட்டத்தையும் தொடர்ந்து செயற்படுத்த வகை செய்வதே நோக்கமாகும். அடிப்படைக்கல்வி அறிவுத் திட்டம் ஏட்டறிவு நிலைத் திட்டம் மற்றும் தொடர் கல்வியினையும் ஒருங்கிணைக்கும் வகையில், தேசியக் கல்விக் குழுவின் அறிக்கையின்படி 700 தொடர்கல்வி நிலையங்களை இம்மாநிலத்திற்கு முழு நிதியுதவியுடன் மைய அரசு மார்ச் 88ல் வழங்கியுள்ளது. அந்த 700 தொடர்கல்வி நிலையங்களும் 27 ஊரக (தொழில் சார்ந்த) எழுத்தறிவுப்பணி செயற்பிரிவுகளில் 2–10–88 முதல் துவக்கப்பட்டுள்ளன. மேலும் 150 தொடர் கல்வி நிலையங்களுக்கு சனவரி 1989ல் மைய அரசு அனுமதி வழங்கியுள்ளதால் இதன் கூடுதல் 850 ஆகும். ஒவ்வொரு தொடர் கல்வி நிலையத்திற்கும் தொடரும் செலவினமாக ரூ. 7,000ம் மற்றும் தொடராச் செலவினம் ரூ. 7,000 ஆக கூடுதல் ரூ. 14,000 முதலாண்டிலும் பின் வரும் ஆண்டுகளில் ரூ. 7,000 தொடரும் செலவினமாகவும் மைய அரசு வழங்குகிறது. 5,000க்கு மேல் மக்கட் தொகை கொண்ட 3—4 கிராம முதியோர் கல்வி நிலையங்களுக்கு ஒரு தொடர் கல்வி நிலையம் அமையும் வகையில் இத் திட்டம் செயற்படுத்தப் படுகிறது.

ஊரகத் (தொழில் சார்ந்த) எழுத்தறிவுப் பணித்திட்ட இடங்களில் 8 முதல் 12 முதியோர் கல்வி நிலையங்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் நியமிக்கப்படுகிறார். மேற்பார்வையாளர்களின் குறைந்த பட்ச கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சியாகும். தொடர்கல்வி நிலையங்களுக்கு மாதம் ரூ. 200-ம் மேலும் அவர்கள் மேற்பார்வையின் கீழ் உள்ள முதியோர் கல்வி நிலையங்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆண்டுக்கு ரூ. 400-ம் மதிப்பூதியமாகவும் பெறுவர். தவிரவும் சிறப்பு ஈட்டுப்படியாக மாதம் ரூ. 50ம் அவர்கள் பெறுவார்கள். மேலும் வயது வந்தோர் கல்வி மையங்கள் ஒவ்வொன்றிலும் 'எழுத்தறிவு ஊக்குநர்கள்' உள்ளனர். அவர்களுக்கு மாதம் ரூ. 100 மதிப்பூதியமாகவும் ரூ. 35 மண்ணெண்ணெய்க்காகவும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மையத்திலும் பின்வரும் முன்னுரிமைப்படி எழுத்தறிவு இல்லாதவர்கள் 30 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

1. ஆதி திராவிடர் (மகளிர்)
2. பெண்கள் (பொதுவாக)
3. ஆதி திராவிடர் (ஆடவர்)
4. பிற வகுப்பினர் (ஆடவர்)

இம்மையங்கள் அந்தந்த இடத்துக்கு வசதியான நேரங்களில் வகுப்புகளை நடத்துகின்றன.

[1989 ஏப்ரல் 7

மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம்—

5. மாநில அரசின் வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் செயல்படும் மையங்களின் விவரம் வருமாறு :—

| திட்டம் தொடங்கிய காலம். | செயல் திட்டப் பிரிவுகளின் எண்ணிக்கை. | மையங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மார்ச் 1980 .. .. | 61 | 6,100 |
| அக்டோபர் 1983 .. .. | 54 | 5,400 |
| அக்டோபர் 1985 .. .. | 6 | 600 |
| அக்டோபர் 1986 .. .. | 6 | 600 |
| அக்டோபர் 1987 .. .. | 10 | 1,000 |
| பிப்ரவரி 1988 .. .. | 15 | 1,500 |
| | 152 | 15,200 |

ஊரக (தொழிற் சார்ந்த) எழுத்தறிவுத் திட்ட மையங்களைப் போன்றே இம்மையங்களும் செயல்படுகின்றன. முப்பது முதல் முப்பத்தைந்து மையங்களுக்கு ஒருவர் வீதம் மேற்பார்வையாளர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 600 சம்பளமும் போக்குவரத்துச் செலவுக்கு ரூ. 75-ம் தரப்படுகிறது.

6. மாநில முதியோர் கல்வித் திட்டப்பகுதிகளில் இதற்கு முன்னர் ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்கள் சிறு அளவில் நடைமுறைப்படுத்தப் பட்டன. அவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்ட ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்கள் மற்றும் தொடர் கல்வித் திட்டங்கள் போதுமானதாக இல்லாததால் அதன் பயன் சிறப்பாக இல்லை. எனவே, ஒவ்வொன்றும் ரூ. 14,000 செலவில் 100 தொடர் கல்வி நிலையங்கள் ரூ. 14 இலட்சம் செலவில் 1989–90இல் அனுமதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7. வயது வந்தோர் கல்வித் திட்டத்தைப் பயனுள்ள தாக்கவும் கல்வியறிவற்றவர்களை எழுத்தறிவு மையங்களுக்கு ஈர்ப்பதற்கும் எழுத்தறிவு மையங்களில் அந்தந்த வட்டார தேவைக்கேற்ப சிறு சிறு கைத்தொழில்களும் அவரவர்களுக்குக் கற்றுத் தரப்படுகின்றன. அத் தொழில்கள் மூலம் அவர்கள் தம் வருமானத்தையும் பெருக்கிக் கொள்ள முடியும். அவர்கள் கடன் வசதி பெறுதல், உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்தல் ஆகிய காரியங்களுக்காக கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கும் அவர்களுக்கு உதவப்படுகிறது.

பிற அமைப்புக்களின் எழுத்தறிவிப்ப டணிகள்—

8. தனியார், அமைப்புகள், நேரு இளைஞர் மையங்கள் பல்கலைக் கழகங்கள் கல்லூரிகள் ஆகியவையும் வயது வந்தோர் கல்வி மையங்களை நடத்தி வருகின்றன.



1989 ஏப்ரல் 7]

9. வயது வந்தோர் கல்விக்கான பல்வேறு திட்டங்களிலும் சேர்ந்து மொத்தம் இதுவரை எழுத்தறிவு பெற்றுள்ளவர்கள் விவரம் வருமாறு :—

| திட்டத்தின் பெயர். | ஆடவர். | மகளிர். | மொத்தம். | மொத்த எண்ணிக்கையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (இலட்சங்களில்.) | | |
| 1. ஊரக தொழில் சார்ந்த எழுத்தறிவுத் திட்டம் (1979 ஜூலை 1988 டிசம்பர்). | 5.07 | 14.73 | 19.80 | 9.06 |
| 2. மாநில அரசின் வயது வந்தோர் கல்வித் திட்டம் (1980–81—1988 டிசம்பர்). | 9.11 | 22.44 | 31.55 | 14.91 |
| 3. தொண்டு நிறுவனங்கள் (1979–80—1988 டிசம்பர்). | 1.30 | 4.00 | 5.30 | 2.66 |
| 4. கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் (1979–80—1988 டிசம்பர்). | 0.75 | 0.79 | 1.54 | 0.69 |
| 5. நேரு இளைஞர் மையங்கள் (1979–80—1988 மார்ச்) அதன் பின்னர் இம்மையங்கள் செயல்படவில்லை. | 0,17 | 0.12 | 0 29 | 0.13 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 6. ஒட்டு மொத்த எழுத்தறிவிப்புத் திட்டம்— தாமாகவே முன்வருபவர்கள் மூலம் (1986, 1987 மற்றும் 1988). | 0.65 | 0.81 | 1.46 | 0.59 |
| 7. தேசியப் பணித் திட்டத்தைச் சார்ந்த மற்றும் சாராத மாணவர்கள். | 0.49 | 0.16 | 0.65 | 0.09 |
| 8. ஆசிரியப் பயிற்சி பெற்று வருபவர்கள் .. | 0.11 | 0.18 | 0.29 | 0.11 |
| 9. ஆசிரியர்கள், ஏனையோர்கள் தாமாகவே முன்வருபவர்கள். | 0.07 | 0.04 | 0.11 | 0.04 |
| 10. மலைவாழ் மக்கள் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம். | 0.02 | 0.´1 | 0.03 | 0.03 |
| மொத்தம் .. | 17.74 | 43.28 | 61.02 | 28.31 |



10. 1986ஆம் ஆண்டின் இறுதியில் செயல்பட்டு வந்த வயது வந்தோர் கல்வி மையங்களின் மொத்த எண்ணிக்கை 26,820 ஆகும். அம்மையங்களில் டிசம்பர் 1988 வரை பயின்று வந்தோரின் எண்ணிக்கை 9.39 இலட்சம் பேர் ஆகும். இவர்களுள் பெரும்பாலோர் அதாவது 6.40 இலட்சம் பேர் மகளிர் ஆவர். மொத்த எண்ணிக்கையாகிய அந்த 9.39 இலட்சம் பேரில் 3.98 இலட்சம் பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்தவராவர்.

ஏட்டறிவு நிலைத்திட்ட மையங்கள்.

11. புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள், மீண்டும் பழையபடி எழுத்தறிவற்ற நிலைக்குப் போய்விடாமல் தடுப்பது ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்களின் நோக்கமாகும். ஊரகத் தொழில் சார்ந்த எழுத்தறிவுத் திட்டத்தின்கீழ் 5,400 ஏட்டறிவு நிலைத்திட்ட மையங்கள் தற்சமயம் செயல்பட்டு வருகின்றன. மைய அரசின் நிதியுதவியுடன் இம்மையங்கள் செயல்பட்டு வந்தன. அவைகள் 31–7–1988 உடன் நிறுத்தப்பட்டுவிட்டன. அவைகளுக்குப் பதிலாக நிலையான நிறுவனமயமாக்கப்பட்ட 700 தொடர்கல்வி நிலையங்களை முழு நிதி உதவியுடன் இந்திய அரசு அனுமதித்துள்ளது.

தொழிலாளர் கல்வி நிலையங்கள்.

12. சென்னையில் தொழிலாளர் கல்வி நிலையம் ஒன்று 1982 ஜூலை மாதத்தில் அமைக்கப்பட்டது. அது நகர்ப்புறங்களிலும் பிற தொழில் பகுதிகளிலும் உள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்கிறது. இவற்றில் பயின்றவர்கள் வியாசர்பாடி, புஷ்பா நகர், நங்கநல்லூர், கபாலிவனபோஜனத் தோட்டம் ஆகிய இடங்களில் கூட்டுறவு அமைப்புகளை தொடங்கியுள்ளனர். இத்தகைய நிலையம் ஒன்று மதுரையில் செப்டம்பர் 1985லும் திருச்சியில் அக்டோபர் 1986லும் தொடங்கப்பட்டுள்ளன. இவ்விரு நிலையங்களும் இதுவரை 2,380 பயிற்சிகளை (குறுகிய கால மற்றும் நீண்டகாலப் பயிற்சிகள்) நடத்தியுள்ளன. 79,830 பேர் பயனடைந்துள்ளனர்.

பள்ளி சாராக் கல்வி.

13. காமராசர் மாவட்டம், சிவகாசிப் பகுதியிலுள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் வேலை செய்து வரும் சிறுவர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக 30 பள்ளிசாரா கல்வி மையங்கள் ஒரு மையத்திற்கு 30 சிறுவர்கள் வீதம் 1980–81இல் தொடங்கப்பட்டன. இம்மையங்கள் ஒரு தொகுதி மாணவர்களுக்கு மூன்று ஆண்டுகள் கல்வி புகட்டும் பணியை 1983-ல் நிறைவேற்றின. இரண்டாவது தொகுதியினருக்கு

மூறாண்டுகள் பயிற்றுவிக்கும் பணி 1986இல் நிறைவேறியது. வட ஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் பகுதியிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலை செய்துவரும் சிறுவர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக பள்ளி சாராக்கல்வி மையங்கள் பத்து 1985-ல் திறக்கப்பட்டன. 1985-ல் ''யூனிசெப்'' உதவியுடன் சாத்தூர், வெம்பக்கோட்டை பகுதிகளில் பள்ளிசாராக் கல்வி மையங்கள் மேலும் 70 திறக்கப்பட்டுள்ளன.

## VI. கல்லூரிக் கல்வி.

1989–90 வரவு-செலவுத் திட்டத்தில் கல்லூரிக் கல்விக்கென ரூ. 125 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுவகை உயர் கல்வி கற்பிக்கும் பல்கலைக் கழகங்களுக்கு வழங்கும் ஆண்டு நிதி அரசுக் கல்லூரிகளுக்கான கட்டிடச் செலவு மற்றும் மாணவர்களுக்கான கடனுதவித் தொகை ஆகியவையும் இத் தொகையில் அடங்கும்.

2. தற்பொழுது பின்வரும் விவரப்படி கலை, அறிவியல் வணிகவியல் கல்லூரிகள் 210 செயல்பட்டு வருகின்றன :—

| கலை அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகள். | கல்லூரிகளின் எண்ணிக்கை. | | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | | (3) |
| | | முறையான வகுப்புகள்— | |
| அரசினர் கல்லூரிகள் | 54 | *பட்டப் படிப்பு. | 1,78,362 |
| ஆண்டு நிதிபெறும் தனியார் கல்லூரிகள். | 133 | 210 பட்ட மேற்படிப்பு | 18,236 |
| ஆண்டு நிதி பெறாத தனியார் கல்லூரிகள். | 23 | | |
| | | | 1,96,598 |
| | | மாலை நேர வகுப்புகள். | 34,000 |
| | | | 2,30,598 |
| பிற கல்லூரிகள் :— | | | |
| கல்வியியல் கல்லூரிகள் | 22 | | 3,012 |
| இதர கல்லூரிகள் | 20 | | 2,136 |
| | | | 5,148 |

*தன்னாட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகள் 38 இவற்றுள் அடங்கும்.



3. பல்கலைக் கழக வாரியாக மேற்கண்ட 210 கலை, அறிவியல், வணிகவியல் கல்லூரிகள் விவரம் வருமாறு :—

| பல்கலைக் கழகம். | நிருவாக வரம்பிற்குட்பட்ட மாவட்டங்கள். | கல்லூரிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சென்னை பல்கலைக் கழகம், சென்னை. | சென்னை, செங்கை-அண்ணா, வடஆர்காடு, தென்னார்க்காடு, சேலம், தர்மபுரி. | 67 |
| பாரதியார் பல்கலைக் கழகம், கோவை. | கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி. | 28 |
| பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி. | திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை. | 33 |
| மதுரை, காமராசர் பல்கலைக் கழகம், மதுரை. | மதுரை, திண்டுக்கல்-காயிதேமில்லத், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர், திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார், கன்னியாகுமரி. | 82 |
| | | 210 |

4. அனைத்திந்தியாவிலும் பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில்தான் தன்னாட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகள் அதிகமாகும். தற்பொழுது மாநிலத்தில் 38 தன்னாட்சிக் கல்லூரிகள் உள்ளன. ஒவ்வொரு கல்லூரிக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 2 இலட்சம் வீதம் பல்கலைக் கழக மானியக் குழு அளித்து வந்த நிதியுதவி ஐந்தாண்டுகளுக்குப் பிறகும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

## பல்கலைக் கழகங்கள்.

5 பொதுக் கல்விக்கான பல்கலைக் கழகங்களுக்கு (தமிழ் பல்கலைக் கழகம் உட்பட) நிதி உதவி தர 1989–90 நிதி நிலை அறிக்கையில் மொத்தம் ரூ. 19.27 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

6. தமிழ்நாட்டில் கல்வித் துறையின் கீழ் 9 பல்கலைக் கழகங்கள் உள்ளன :—

(1) சென்னைப் பல்கலைக் கழகம்.

(2) மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

(3) பாரதியார் பல்கலைக் கழகம்.

(4) பாரதிதாசன் பல்கலைக் கழகம்.

(5) அழகப்பா பல்கலைக் கழகம்.

(6) அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம்.

(7) அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

(8) தமிழ்ப் பல்கலைக் கழகம்.

(9) அண்ணா பல்கலைக் கழகம் (பொறியியல்)

பல்கலைக் கழகச் செயல்பாடுகள் குறித்த குறிப்புத் தொகுப்பு தனியே வைக்கப்பட்டுள்ளது மாநில அரசால் வழங்கப்பட்டுவரும் ஆண்டு நிதி மற்றும் நிர்வாகச் செலவு நிதி ஆகியவற்றால் பல்கலைக் கழகங்கள் நிருவகிக்கப்படுகின்றன. தவிரவும் இதனில் பல்கலைக் கழகங்களின் சிறப்புத் திட்டங்களுக்கு ஏற்படும் செலவு முழுவதுமோ அல்லது பகுதியோ தனி நிதியாகவும், பல்கலைக் கழக நிதிக் குழு உதவியுடன் செயல்படும் திட்டங்களுக்குப் பங்கு நிதியாகவோ உதவி அளிக்கப்படுகிறது.

(7) அண்மையில் பல்கலைக் கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்குப் பல்கலைக் கழக நிதியுதவிக்குழுவின் ஊதிய விகிதத்தை ஏற்று 1—1—1986 முதல் உரிமையுடையதாக ஏற்பளித்து மாநில அரசு ஆணையிட்டுள்ளது. 1-1-1986லிருந்து பெறவேண்டிய ஊதிய நிலுவைத் தொகையினை அவ்வாசிரியர் பெறுவார். இதன்மூலம் அரசு மற்றும் தனியார் கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சுமார் 15,385 பேர் பயன் பெறுவர். இது தொடர்பாக 1—1—1986 முதல் 31—3—1990 வரை ரூ. 57.38 கோடி கூடுதல் செலவு ஏற்படும். இச்செலவினத்தில் 80 விழுக்காடு பங்கினை மைய அரசு ஏற்கிறது. மீதி 20 விழுக்காடு மாநில அரசு அளிக்கிறது. 1—4—1990 லிருந்து இது தொடர்பான மொத்த செலவினத்தையும் மாநில அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்.



மாநில உயர் கல்விக் குழு :

8. மாநில அளவிலான உயர்நிலை கல்விக் குழு ஒன்று அமைப்பதற்கான கருத்துரு ஆய்விலுள்ளது. இக்குழு, பல்கலைக் கழகங்களின் பல்வேறு வகைப்பட்ட செயற்பாட்டினையும் ஒருங்கிணைப்பதற்கு உதவுவதோடு, மாநிலத்தில் உயர்கல்வியின் தரத்தையும் பயனையும் நன்கு மேம்படுத்த உதவும்.

அஞ்சல் வகுப்புகளும் தொடர் கல்வியும் :

9. அஞ்சல் வழி வகுப்புகள் மற்றும் மாலை நேரக் கல்லூரி வகுப்புகளில் பயின்று வருவோர் விவரம் வருமாறு :—

| | மாணவர் எண்ணிக்கை. |
|---|---|
| அஞ்சல்வழி வகுப்புகள் :— | |
| மதுரை—காமராஜ், அண்ணாமலை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்கள். | 1,63,500 |
| எவரும் பயிலலாகும் திறந்த பல்கலைக் கழக கல்வி முறை (Open University)— | |
| மதுரை—காமராஜர் மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்கள். | 47,000 |
| மாலை நேரக் கல்லூரி வகுப்புகள் .. .. | 34,000 |
| | 2,44,500 |

கல்வித் தர மேம்பாடு :

10. தற்போதுள்ள அரசு கல்லூரிகளின் கல்வித்தர மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஏழாவது ஐந்தாண்டு திட்டக் காலத்திலும் தொடர்ந்து முதன்மை அளிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. 1985-86 முதல் 1988-89 வரையிலும் புதிதாக 15 இளங்கலைப் பட்ட வகுப்புகளும், 8 முதுகலைப் பட்ட மேற்படிப்பு வகுப்புகளும் அரசு கல்லூரிகளில் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. 1988-89-ல் அரசு கல்லூரிகளில் புதிதாகப் பட்ட வகுப்புகள் தொடங்க ரூ. 8 இலட்சமும் புதிதாக பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்க ரூ. 3.18 இலட்சமும் ஒதுக்கப்பட்டன. இவ்வகுப்புகளுக்காக 77 ஆசிரியர் பணியிடங்களும் 1988-89 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டன.

11. கல்லூரி கல்வி இயக்குநரகத்தில் ஆங்கில மொழி பயிற்றுவிப்பு மையத்தை வலுப்படுத்துவதற்காக தனியாக ஒரு துணை இயக்குநர் பணியிடம் வழங்கப்பட்டுள்ளது.

12. அரசு கல்லூரிகளில் புதிய வகுப்புகள் தொடங்குதல், பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள் நடத்துதல் மற்றும் புள்ளி விவரங்கள் சேகரித்தல் போன்ற தேவையான வளர்ச்சிப் பணிகளைத் திட்டமிடுவதற்காக '' கல்லூரி வளர்ச்சிப் பிரிவு '' ஒன்றும் ஆய்வுப் பிரிவு ஒன்றும் கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தில் தொடங்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. இத்துறையின் களப் பணி அலுவலர்களான வட்டாரத் துணை இயக்குநர்கள் ஐவருக்கும் உதவி பெறும் கல்லூரிகளில் ஆய்வுகள் நடத்துவதற்கும், கணக்குகளைச் சரி பார்ப்பதற்கும் ஏதுவாக ஊர்திகள் வழங்கப் பட்டுள்ளன.

13. அரசு கல்லூரிகளில் உள்ள நூலகங்கள், ஆய்வுக் கூடங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான நூல்கள், கருவிகள், இயந்திரங்கள் ஆகியவை படிப்படியாக வழங்குவதற்கு ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் நிதி அளிக்கப்படுகிறது.

14. சென்னை, சைதாப்பேட்டை அரசு கல்வியியல் கல்லூரியை கல்வியியலில் ஒரு உயர்படிப்பு நிறுவனமாக மேம் படுத்தவும், மேலும் வேலூர், ஒரத்தநாடு மற்றும் குமார பாளையம் ஆகிய இடங்களில் உள்ள 3 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி களை மேம்படுத்தவும் மைய அரசு உதவியுடனான திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 1988-89 ஆம் ஆண்டுக்கு இதற் கான கல்லூரி மற்றும் விடுதிக் கட்டிடங்கள் கட்டவும், தளவாடங் கள் வாங்கவும் முதல் தவணைத் தொகையாக ரூ. 107 லட்சம் மைய அரசு அளித்துள்ளது.

15. கல்லூரி ஆசிரியர்களின் பயிற்றுத் தரத்தை உயர்த்து வதற்காக அவர்கள் எம்.பில்., மற்றும் பி.எச்.டி., ஆய்வுப் படிப்புக்குப் பல்கலைக் கழக நிதிக் குழு திட்டத்தின் கீழ் அனுப்பி வைக்கப்படுகின்றனர். அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் உள்ள பட்டதாரி பயிற்றுநர்களும், விளக்குநர்களும் எம்.ஏ., எம்.எஸ்சி. படிப்பிற்கு மாநில அரசின் செலவில் அனுப்பப் படுகின்றனர்.

கல்லூரிகளில் பட்டப் படிப்பு வரை மாணவர்களுக்கு இலவசக் கல்வி.

16. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டபடி ஆதி திராவிடர் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கும் சீர்மரபினருக்கும் பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம். ஆகிய கல்லூரி இளங்கலை பட்டப் படிப்பு இலவசமாக்கப்படுகிறது. இதற்கென ரூபாய் 2.25 கோடி உரிய நிதித் தலைப்பில் ஒதுக்கப்பட் டுள்ளது.



படிப்புதவித் தொகையும் பயிற்சி உதவித் தொகையும்.

17. கல்லூரிக் கல்வித் துறை நிருவகித்து வரும் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டங்களுள் முக்கியமான சிலவற்றின் கீழ் பயன் பெறுவோர் விவரம் வருமாறு :—

| திட்டம். | 1988-89-ல் புதிதாக அளிக்கப்பட்ட படிப்புதவித் தொகைகள் எண்ணிக்கை (மேல் நிலைப் பள்ளிகளில் தரப்பட்டவை உட்பட). | 1988-89-ல் புதியவை மற்றும் புதுப்பிக்கப் பட்டவை, மொத்த எண்ணிக்கை. | 1989-90-ல் வரவு-செலவுத் மதிப்பீட்டில் ஒதுக்கப் பட்டுள்ள தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம். (ஓரளவு மைய அரசு நிதியுதவி பெறுவது.) | 2,108 | 8,000 | 55.00 |
| தேசிய கடன் படிப்புதவித் திட்டம். (முழுவதும் மைய அரசு நிதியுதவி பெறுவது). | 1,381 | 5,562 | 25.00 |
| பள்ளி ஆசிரியர்களது பிள்ளைகளுக்குரிய மாநில அரசு படிப்புதவித் தொகை. | 70 | 91 | 2.00 |

மேலும் எஸ்.எஸ்.எல்.சி. மெட்ரிகுலேசன் தேர்வுகளில் முதன் மையாக வரும் மாணவர்களின் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்கு மேல் இருப்பினும் அவர்களுக்கும் உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

18. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுள் மேல்நிலைப் பள்ளித் தேர்வில் 60 விழுக்காடு அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர்களுக்கு அவர்கள் மேற்படிப்பில் சேர உதவிடுவதற்கு ஒவ்வொரு வருக்கும் ரூ. 300 உதவித் தொகை (ஒரு தடவை மட்டும்) வழங்கப்படுகிறது.

19. தமிழைப் பயிற்று மொழியாக ஏற்பதை ஊக்குவிக்கும் முறையில் பட்ட வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவித் தொகையாக ஆண்டுக்கு ரூ. 180 தரப்பட்டு வருகிறது. இவ்வுதவித் தொகை பெற்ற மாணவர் எண்ணிக்கை 1988-89-ல் 23,429 ஆகும். தமிழ் பயிற்றுமொழித் திட்டம் இளங்கலை பட்டப் படிப்பளவில் ஊக்குவிக்கப்பட்டு மேலும், முதுகலை, உயர்நிலை, ஆய்வுநிலை வரை செயல்பட வேண்டும். இதற்கு அடித்தளமாக தொன்மையான தமிழ் மொழி தற்கால சமூகவியல், அறிவியல் வளர்ச்சி நிலைகளுக் கேற்ப வளம் பெற திட்டமிட்டுச் செயல்படுத்தப்படும்.

கல்லூரி ஆசிரியர், பிற பணியாளர்கள் நலன்.

20. கல்லூரி ஆசிரியர்களுக்கு அண்மை ஆண்டுகளில் செய்துள்ள நன்மைகளில் மிக முக்கியமானவை வருமாறு :—

(1) உரிய தகுதி பெற்ற பயிற்றுநர்களையும், விளக்குநர்களையும், அவர்கள் மூன்றாண்டுகள் பணி முடித்தவுடன் உதவிப் பேராசிரியர்ளாக உயர்த்தியது ;

(2) 10 ஆண்டு பணி முடித்த உதவிப் பேராசிரியர்களை பேராசிரியர்களாக உயர்த்தியது ;

(3) உதவி பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் பணியாளருக்கு அரசு நேரடியாகச் சம்பளம் வழங்கியது ;

(4) பின்வருவன போன்ற விஷயங்களில் அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்கியுள்ள அதே அளவு சலுகைகளைத் தனியார் கல்லூரி ஆசிரியர் மற்றும் பிற பணியாளர்களுக்கும் விரிவாக்கியது :—

ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம், விடுப்பு (ஈட்டிய விடுப்பு வசதி உட்பட), குழு ஈட்டுறுதித் திட்டம், பணியிலிருக்கும் போது, அவருள் எவரேனும் இறந்துவிட்டால் அவர்ளுடைய மகன் போன்ற நெருங்கிய உறவினருக்குப் பணி நியமனம் பெறுவதில் முன்னுரிமை.

(5) ஈட்டிய விடுப்பு ஆண்டுக்கு 3 நாளிலிருந்து 13 நாட்களாக உயர்த்தப்பட்டது ;

(6) ஆண்டு நிதி பெறும் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் அரசு நிதியிலிருந்து பண்டிகை முன்பணம் வழங்கல் ;



(7) சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம் (தனியார் கல்லூரிப் பணியாளர்களுக்கும்) உரித்தாக்கப்பட்டது.

(8) ஆண்டு நிதி பெறும் தனியார் கல்லூரிகளில் ஆசிரியரல்லாத பணியாளர்களை நியமிப்பதற்கான கோட்பாடுகளை திருத்தியமைத்தது.

(9) பல்கலைக் கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழக நிதிக் குழு சம்பள விகிதங்கள் செயற்படுத்தப் பட்டது.

சட்டக் கல்வி.

21. சட்டக் கல்லூரிகளில் 1988–89 ஆம் ஆண்டில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு :

| சட்டக் கல்லூரி. | முழு நேரப் பட்டப் படிப்பு. | | |
|---|---|---|---|
| | மூன்றாண்டு சட்டப் படிப்பு. | ஐந்தாண்டு சட்டப் படிப்பு. | மாலை நேர வகுப்புகள். |
| (1) | (2) | (3) | (4) |
| சென்னை .. | 810 | 960 | 720 |
| மதுரை .. | 540 | 750 | 360 |
| திருச்சிராப்பள்ளி .. | 240 | 400 | 180 |
| கோயம்புத்தூர் .. | 180 | 340 | 180 |
| மொத்தம் .. | 1,770 | 2,450 | 1,440 |

முதுநிலை சட்டப் படிப்பு (1986-87-ல் துவக்கப்பட்டது).

| | |
|---|---|
| சென்னை சட்டக் கல்லூரி .. .. .. | 120 |
| மதுரை சட்டக் கல்லூரி .. .. .. | 30 |
| மொத்தம் .. | 150 |

22. தமிழ்நாட்டில் அனைத்துச் சட்டக் கல்லூரிகளிலும் ஐந்தாண்டு சட்டப் படிப்பு 1983–84-ல் தொடங்கப்பட்டது. இந்தியாவில் பிற மாநிலங்கள் மூன்றாண்டு சட்டப் படிப்பை முழுமையாக நிறுத்தும் வரை இங்கும் அவ்வகுப்பு தொடர்ந்து நடத்தி வரப்படும்.

23. வேலையில் இருப்பவர்களுக்கென்று 1983–84 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டு மாலை நேர சட்ட வகுப்புகளும் நடத்தப்பெற்று வருகின்றன.

24. தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டும் சட்டக் கல்லூரி மாணவர்கள் கற்பிக்கப்படுகின்றனர். தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு சட்டம் பயிலுகின்ற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூ. 180 உதவித் தொகை வழங்கப்படுகிறது.



VII. விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன்.

(1) விளையாட்டுகளும், உடற்பயிற்சியும்.

இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறைக்கும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகத்திற்கும் சேர்த்து 1989–90 ஆம் ஆண்டுக்கு ரூ. 3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம் திரு. ப. சிவந்தி ஆதித்தன் அவர்களைத் தலைவராகக் கொண்டு ரூ. 1.00 கோடி மூலப் பங்குடன் தொடங்கப்பட்டது. இக்கழகம் கம்பெனிகள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகத்திற்கு 1989–90-ல் ரூ. 1.44 இலட்சம் உதவி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விளையாட்டுத் திறன் வளர்ச்சித் திட்டங்கள் :

3. இளம் வயதிலேயே விளையாட்டுத் திறன்களைக் கண்டறிய இளஞ்சிறார்களைக் கண்டு பயிற்சியளித்தல் (5 வயதுக்குட்பட்டோர்)விளையாட்டுத் திறன் போட்டிகள் (12 வயதுக்குட்பட்டோர்) இளமையில் திறன் கண்டு தேர்ந்தெடுத்தல் (16 வயதுக்குட்பட்டோர்) ஊரக விளையாட்டுப் போட்டிகள் (16 வயதுக்குட்பட்டோர்) பொங்கல் விளையாட்டுக்கள் (16 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் மற்றும் மகளிர்) மகளிர் விளையாட்டு வகைப் போட்டிகள் ஆகியவை நடத்தப்படுகின்றன.

விளையாட்டுப் பள்ளிகளும் விடுதிகளும் :

4. நான்கு விளையாட்டுப் பள்ளிகளும் மூன்று விளையாட்டு விடுதிகளும் நிறுவப்பட்டுள்ளன. இங்கு இலவசமாக தங்குமிடத்துடன் உணவும், பயிற்றுநர்களால் சிறப்பு வாய்ந்த பயிற்சி முறைகளும் தரப்படுகின்றன.

பள்ளிகள்.

| | |
|---|---|
| 1. ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சிக் கல்லூரி, சென்னை | 115 |
| 2. மாருதி உடற்பயிற்சிக் கல்லூரி, கோவை .. | 90 |
| 3. நெய்வேலி நிலக்கரி விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி. | 50 |
| 4. பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் கல்லூரி, (மகளிர் மட்டும்), கோவை. | 50 |
| மொத்தம் .. | 305 |

[1989 ஏப்ரல் 7

விடுதிகள்.

| | | |
|---|---|---|
| 1. | மதுரை .. .. .. .. .. | 30 |
| 2. | திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 30 |
| 3. | திருநெல்வேலி .. .. .. | 30 |
| | மொத்தம் .. | 90 |

தற்போது 650 மாணவர்கள் இந்த விளையாட்டுப் பள்ளி
களிலும், விளையாட்டு விடுதிகளிலும் பயிற்சி பெறுகின்றனர்.

ஊக்கத் திட்டங்கள் :

5. குடியரசு நாள் விளையாட்டுப் போட்டி (உயர் நிலைப்
பள்ளி) பாரதியார் நாள் விளையாட்டுப் போட்டி (மேல் நிலைப்
பள்ளி), பொங்கல் விளையாட்டுப் போட்டி (ஆண்கள் மற்றும்
மகளிர்) ஆகியவற்றில் முதன்மையாக வருபவருக்கு ரூ. 600-ம்
மற்றும் இரண்டாவதாக வருபவருக்கு ரூ. 400-ம் விளையாட்டு
ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. அனைத்து உலக
நாடுகள் தேசிய போட்டிகளில் வெற்றி பெறும் சிறந்த விளை
யாட்டு வீரர்களுக்கும், அனைத்து உலக நாடுகள் போட்டிகளில்
நம் நாட்டிற்காக விளையாடுவோருக்கும் பண விருது வழங்கப்
படுகிறது. வி ளயாட்டு/உடற்பயிற்சிக் கல்வியில் ஆராய்ச்சி
செய்வோருக்கு மாதந்தோறும் ரூ. 450 ஊக்கத் தொகையாக
அளிக்கப்படுகிறது.

அடிப்படை கள வசதிகள் :

6. பின்வரும் இடங்களில் திறந்த வெளி விளையாட்டரங்
கங்கள் உள்ளன. (1) வேலூர், (2) காஞ்சிபுரம், (3) தருமபுரி,
(4) சேலம், (5) கோயம்புத்தூர், (6) திருச்சிராப்பள்ளி, (7)
தஞ்சாவூர், (8) திருநெல்வேலி, (9) மதுரை, (10) நாகர்கோயில்,
(11) கடலூர்.

7. இம்மாநிலத்தில் 3 நீச்சல் குளங்கள் இத்துறையின் கீழ்
உள்ளன. அதில் சென்னையில் அண்ணா நீச்சல் குளம், ஷெனாய்
நகர் நீச்சல் குளம் என இரண்டும், தருமபுரியில் ஒன்றும் உள்ளன.
தஞ்சாவூரில் நீச்சல் குளம் கட்டும் பணி முடியும் தருவாயில்
உள்ளது. சென்னை நேரு பூங்கா விளையாட்டு வளாகத்தி
லுள்ள விளையாட்டு மைதானம் அனைத்து முதன்மை விளை
யாட்டுப் பிரிவுகளுக்கும் இடம் தரும் வகையில் உருவாக்கப்பட்டு
முடிவுறும் தருவாயில் உள்ளது.



1989 ஏப்ரல் 7]

பயிற்சித் திட்டங்கள் :

8. பட்டியாலாவில் உள்ள தேசிய விளையாட்டு நிறுவனத்
தில் பயிற்சி பெற்ற 215 பயிற்றுநர்கள் இம்மாநிலத்தில் மாணவர்
கள் / மாணவரல்லாதார்/பொது மக்கள் ஆகியோருக்கு நாள்
தோறும் காலை மற்றும் மாலை நேரங்களில் பயிற்சியளிக்க நிய
மனம் செய்யப்பட்டுள்ளார்கள். அத்துடன் பயிற்சி முகாம்கள்
ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. ஆயிரம் விளையாட்டு
வீரர்கள் இந்த முகாம்களால் பயனடைகிறார்கள். உயர்நிலைப்
பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள 630 உடற் பயிற்சி
ஆசிரியர்கள்/உடற் கல்வி இயக்குநர்களுக்கு இரண்டு, மூன்று
வகையான விளையாட்டுகளில் ஆண்டுதோறும் மறு பயிற்சி
அளிக்கப்படுகிறது.

மேம்பாட்டுத் திட்டங்கள் :

9. விளையாட்டு போட்டிகளில் பங்கேற்கும்போது ஏற்படும்
விபத்துக்களால் காயமுற்ற? ஊனமுற்ற சிறந்த விளையாட்டுவீரர்
களது நலனுக்காக ''இராஜ சேகரன் நினைவு நிதித் திட்டம்''
தொடங்கப்பட்டுள்ளது. விளையாட்டு ஓய்வூதியம் எனும் திட்
டத்தின்படி வறுமையில் வாடும் சிறப்பு வாய்ந்த விளையாட்டு
வீரர்களுக்கு மாதந்தோறும் ரூ. 75 வழங்கப்படுகிறது. 50
விளையாட்டு வீரர்கள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

மாணவர் அல்லாத இளைஞர்கள் : (Non-student youth)

10. ஊரகப் பகுதிகளிலுள்ள மாணவரல்லாத இளைஞர்களி
டத்து விளையாட்டு ஆர்வத்தை வளர்க்க 349 ஊரக விளையாட்டு
மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இளைஞரிடையே விளை
யாட்டு மேம்பாட்டிற்கென 124 இளைஞர் மன்றங்கள் இம்மா
நிலத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் 200 தனி
யார் விளையாட்டுக் குழுக்கள் விளையாட்டுச் சாதனங்கள் வாங்க
மானியம் ரூ. 500 வீதம் பெறுகின்றன. கரகம், கோலாட்டம்
தெம்மாங்கு, வில்லுப்பாட்டு, முதலிய கிராமியக் கலைகளை
வளர்க்க ஆண்டுதோறும் இளைஞர் விழாக்கள் நடத்தப்படுகின்
றன. அடிப்படை மற்றும் உன்னத மலையேற்ற பயிற்சி திட்ட
மும் இளைஞர்களுக்கென உள்ளது.

II நாட்டு நலப் பணித் திட்டம் : (N.S.S).

11. நாட்டு நலப் பணித் திட்டம் மைய அரசு மற்றும் மாநில
அரசு உதவியினை 7 : 5 என்ற விகிதத்தில் பெற்று செயல்
படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி தற்போது அன்றாட
நடவடிக்கைகளுக்காக மாணவர் ஒருவருக்கு ஆண்டுக்கு பொது
திட்டத்தில் ரூ. 80-ம், சிறப்புப் பயிற்சித் திட்டத்தில் ரூ. 150
ஆக கணக்கிட்டு வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 1988–89-ல்

நாட்டு நலப் பணித் திட்டத்தில் பங்கு கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 1,40,000 (கல்லூரிகளில் 90,000 ; மேல் நிலைப் பள்ளிகளில் 50,000) இவர்களில் 70,000 மாணவர்கள் சிறப்பு பயிற்சித் திட்டத்தில் பங்கு பெறுகின்றனர்.

### III சாரண சாரணியர் : (Scouts and Guides)

12. தொண்டுள்ளம் கொண்ட பாரத சாரண் சாரணியர் இயக்கம் தமிழ்நாட்டில் எல்லா வகைப் பள்ளிகளிலும் நடைபெற்று வருகின்றது. தமிழ்நாட்டில் தற்போது 1·75 இலட்சம் சாரண் சாரணியர் (சாரணர் 1.34 இலட்சமும் சாரணியர் 0.41 இலட்சமும்) உள்ளனர். இவ்வெண்ணிக்கை இந்தியா அனைத்திலுமுள்ள சாரண சாரணியர் எண்ணிக்கைகளில் நான்கில் ஒரு பங்காகும். இந்த இயக்கம் 4,363 சாரண ஆசிரியர்கள் மற்றும் 1,311 சாரண ஆசிரியைகள் ஆகியோரைக் கொண்டு 3,766 பள்ளிகளில் திறம்பட செயல்பட்டு வருகிறது. இந்நாட்டி… வருங்கால குடிமக்களாகிய மாணவர்களிடத்தில் நன்னடத்தைய… உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

### IV தேசிய மாணவர் படை :

13. தமிழ்நாட்டு தேசிய மாணவர் படை இயக்கத் தலைமையகம் சென்னையில் உள்ளது. அதன் கட்டுப்பாட்டின் கீழ் சென்னையில் இரண்டும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக வட்டாரத் தலைமையிடங்கள் 5 அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படையில் சேர அனுமதித்துள்ள மாணவர் எண்ணிக்கையும் பிரிவுகளும் வருமாறு :—

| | பிரிவுகள். படைகள். | அலுவலர்கள். | மாணவர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| முது நிலைப் பிரிவு (மாணவர்). | 45 | 225 | 1,7[illegible]7 |
| முதுநிலைப் பிரிவு (மாணவியர்). | 5 | 47 | 3,2[illegible]0 |
| இளநிலைப் பிரிவு (மாணவர்). | 619 | 624 | 61,[illegible]50 |
| இளநிலைப் பிரிவு (மாணவியர்). | 52 | 53 | 5,2[illegible]0 |
| மொத்தம் .. | 721 | 949 | 87,1[illegible]0 |

14. 1989–90-ல் தேசிய மாணவர் படைக்காக மாநில அர… நிதியிலிருந்து ரூ. 3.48 கோடி செலவிடப்படும்.



15. தேசிய மாணவர் படைக்கான செலவினை மத்திய அரசும் மாநில அரசும் ஏற்றுக்கொள்கின்றன. அப்படை மாணவ மாணவியருக்கான பலவகை பயிற்சி முகாம்களுக்கான செலவில் பாதியை மைய அரசும் பாதியை மாநில அரசும் ஏற்றுக்கொள் கின்றன.

16. இராணுவத்தில் அதிகாரிகளாகச் சேர்பவர்களைத் தெரிந்தெடுப்பதற்காக மைய அரசுத் தேர்வாணைக் குழு நடத் தும் தேர்வில் கலந்து கொள்ளும் தமிழக தேசிய மாணவர் படை யினருக்குச் சிறந்த பயிற்சி அளிப்பதற்காகப் பயிற்சி அதிகாரி ஒருவர் தலைமையில் ''இராணுவ அதிகாரி தேர்வுக்கான முன் பயிற்சிப் பிரிவு'' ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டைச் சார்ந்த முதுநிலை, இளநிலை மற்றும் மகளிர் பிரிவு களின் 109 மாணவர்கள் சனவரி 1989-ல் புதுடெல்லியில் நடை பெற்ற குடியரசு நாள் விழாவிலும், பிரதமர் அணிவகுப்பு வரிசை யிலும் பங்கு பெற்றனர். தமிழ் மாணவர்களுள் 14 பேர் முதல் பரிசினையும், 4 பேர் இரண்டாவது பரிசினையும் அடைந்து அதற்கான தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று வந்தனர். தமிழ்நாட்டு தேசிய மாணவர் படையினர் தமது பயிற்சித் திறத்தால் சிறந்து விளங்குகின்றனர் என்று பாராட் டப்பட்டுள்ளனர்.

## VIII. நூலகங்களும் ஆவணக் காப்பகங்களும்.

### (i) பொது நூலகங்கள்.

கிராமப் பகுதிகள் உள்ளிட்டு மாநிலம் முழுமைக்குமான சீரிய நூலகப் பணி நடைபெறும் மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். 1989–90ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் பொது நூலகத் துறைக்கென ரூ. 6.58 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. பொது நூலகத்துறையின் நூலகப் பணிகள் பற்றிய முக்கிய விவரங்கள் வருமாறு :—

| | நூலகங்களின் எண்ணிக்கை. | இருப்பிலுள்ள நூல்களின் எண்ணிக்கை. | உறுப்பினர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (இலட்சங்களில்) | |
| மாநில மைய நூலகம் (கன்னிமாரா பொது நூலகம், சென்னை) .. | 1 | 4.28 | 0.[illegible] |
| மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின் கீழ் உள்ள நூலகங்கள் — | | | |
| மாவட்ட மைய நூலகங்கள் | 18 | 130.06 | 15.[illegible] |
| கிளை நூலகங்கள் .. | 1,519 | | |

கன்னிமாரா நூலகம் :

2. சென்னையிலுள்ள கன்னிமாரா பொது நூலகம் மாநிலத்தின் மைய (தலைமை) நூலகமாகும். இந்தியாவில் வெளியிடப்படும் அனைத்து வகை நூல்களிலும் ஒவ்வொன்றிலும் ஒரு பிரதியினை இந்நூலகம் இலவசமாகப் பெறுகிறது. ஆண்டத்தில் மூன்று தேசிய விடுமுறை நாட்களைத் தவிர ஏனைய நாட்கள் அனைத்திலும் (காலை 8-00 மணி முதல் இரவு 8-00 மணி வரை) இந்நூலகம் செயல்படுகிறது. பொது மக்களின் வசதிக்காக நூலகத்தைப் பயன்படுத்துவோர் தேவைக்குப் பயன்பட இந்நூலகத்திற்கென புகைப்படப் பிரதி எடுக்கும் கருவி ஒன்று வாங்கப்பட்டுள்ளது.



மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள் :

3. தற்பொழுது மொத்தம் 18 மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின்கீழ் மொத்தம் 18 மாவட்ட மைய நூலகங்களும், 1,519 கிளை நூலகங்களும் செயல்படுகின்றன. மாவட்ட நூலக ஆணைக்குழுக்களின்கீழ் 3,358 அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் அனைவரும் 1–4–1982 முதல் அரசுப்பணியாளர்களாக ஏற்கப்பட்டுள்ளனர். 1987–88 மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் நூலக வரியாக ரூ. 1.63 கோடி அளவு வசூல் பெற்றுள்ளது. இதில் சென்னை மாவட்டக் குழுவின் பங்கு மட்டும் ரூ. 55 இலட்சம் ஆகும். சில மாவட்ட நூல ஆணைக் குழுக்களின் நூலகவரி வருமானம் புத்தகங்கள் வாங்கும் செலவினங்களுக்குப் போதுமானதாக இல்லை. எனவே நிதி நிலைமை சரியில்லாத நூலக ஆணைக் குழுக்களுக்குப் புத்தகங்கள் வாங்க வசதி செய்யும் பொருட்டு, 1984–85-லிருந்து ஆண்டுதோறும் ரூ. 11 இலட்சம் சிறப்பு நிதியாக அரசு வழங்கி வருகிறது. சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், வட ஆற்காடு, சேலம், செங்கை-அண்ணா ஆகிய மாவட்ட மைய நூலகங்களில் படிப்போரின் தேவைக்காக புகைப்படப் பிரதி எடுக்கும் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.

4. பயிற்சி பெறாத மூன்றாம் நிலை நூலகங்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக சென்னையில் ''நூலகவியல் பயிற்சி நிலையம்'' ஒன்று இயங்கி வருகிறது.

நூலகக் கட்டிடங்கள் :

5. சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்காக வட்டார நூலகங்கள் 6-ம் கிளை நூலகங்கள் 30-ம் ஆக 36 புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் பல கிளை நூலகங்களுக்கான கட்டடங்கள் கட்டும் பணி நடந்து வருகிறது. மாநில அளவில் மொத்தம் 130 நூலக கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 48 நூலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

### (ii) ஆவணக் காப்பகங்கள் :

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் (முன்னர் சென்னை ஆவண அலுவலகம் என வழங்கப்பட்டது) 1909-ல் நிறுவப்பட்டதாகும். 1670-ம் ஆண்டிலிருந்து தலைமைச் செயலக ஆவணங்கள், வருவாய் வாரியம், வனத் துறை, உயர்நீதி மன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள் ஆகியவற்றின் ஆவணங்கள், பல்வேறு குழுக்கள், ஆணையங்களின் அறிக்கை ஆவணங்கள், டச்சு மற்றும் டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனியார் ஆவணங்கள், பெர்சியன், மோடி மற்றும் மராத்தி மொழி ஆவணங்கள், வாக்காளர் பட்டியல்கள் ஆகியவை தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தென் ஆசியாவில் உள்ள மிகப் பெரிய ஆவணக் காப்பகங்களில் இது ஒன்றாகும். இவ்வாண்டு இந்த ஆவணங்களைப்பற்றிய வழிகாட்டி நூல் ஒன்று தயாரிக்கப்படவிருக்கிறது. இந்நூலிற்காகும் செலவில் 75 விழுக்காடு அளவு மைய அரசு ஏற்றுள்ளது.

2. வெற்றிட அறையில் ஆவணங்களை சில காலம் வைப்பதன் மூலம் தாள்களைத் துளைத்துச் சிதிலமாக்கும் பூச்சிகளை ஒழிப்பதற்கான கருவியும், மக்கிப் போனதால் கிழியும் நிலையில் உள்ள பழைய தாள்களின் மீது பிளாஸ்டிக் பூச்சு தந்து உறுதிப்படுத்துவதற்கான கருவியும் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, அவற்றைப் பயன்படுத்தி நவீன முறையில் ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 1982-ல் நிறுவப்பட்ட நுண் நிழற்படக் கருவி நன்கு செயல்பட்டு வருகிறது. கவனமாகப் பாதுகாக்க வேண்டிய நிலையிலுள்ள பழைய மூல ஆவணங்களை ஆராய்ச்சியாளர்கள் மீண்டும் மீண்டும் கையாளுவதைத் தவிர்க்கும் வகையில் அப்பழைய ஆவணங்களின் நுண் நிழற்படங்கள் எடுக்கப்பட்டு ஆய்வுக்குத் தரப்படுகின்றன.

3. சென்னையில் ஆவணக்காப்பாக ''ஆய்வாளர் அறையில்'' ஆய்வறிஞர்களுக்கு வசதிகள் செய்து தரப்படுகின்றன. பழைய அரசிதழ்களிலிருந்து சான்றிடப்பட்ட நகல் பகுதிகள் அவற்றைக் கோரும் பொதுமக்களுக்குக் கட்டணம் பெற்று வழங்கப்படுகின்றன.

மாவட்ட ஆவண மையங்கள் :

4. முப்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட மாவட்ட ஆவணங்கள் யாவற்றையும் சேகரித்து நவீன அறிவியல் முறையில் பாதுகாத்து வரும் நோக்குடன், மதுரை, கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய இடங்களில் மாவட்ட ஆவண மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு :

5. கடந்த மூன்று நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் பல்வேறு வரலாற்று மற்றும் சமுதாய வாழ்க்கைத் துறைகள் பற்றி ஆராய்ச்சியினை மேற்கொள்ளும் ஆர்வமும், திறமையும் மிகுந்தவர்களை ஊக்குவிப்பதற்காக, 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு ஆண்டுதோறும் ஆராய்ச்சி மாணவப் பணியிடங்கள் இரண்டு வழங்கப்பட்டு வருகிறது. நிருவாக அல்லது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பொருள்கள் பற்றி ''ஆய்வுச் சிற்றுரைகள்'' எழுதுவதற்காக ஆண்டுதோறும் ஆய்வறிஞர் பதின்மருக்கு மதிப்பூதியம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. 1974 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஆராய்ச்சி மாணவர்கள் 18 பேர் இக்குழுவில் சேர்ந்து ஆராய்ச்சி செய்து ஆய்வு அறிக்கைகளை ஒப்படைத்துள்ளனர். 1988-90 இரண்டாண்டு காலத்திற்காக ஆய்வு மாணவர்களாக இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு 1988 செப்டம்பர்—அக்டோபர் திங்கள்களில் சேர்ந்துள்ளனர். ஆய்வுச் சிற்றுரை எழுத மதிப்பூதியம் வேண்டியவர்களில் மூவர் ஏற்கத்தக்கவரென ஆராய்ச்சிக் குழுவால் ஆய்ந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட விவரச் சுவடிகள் :

6. இதுவரை தஞ்சாவூர், தென்னார்க்காடு, மதுரை, சேலம், கோயம்புத்தூர், இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய ஏழு மாவட்டங்களின் மாவட்ட விவரச் சுவடிகள் புதிதாகத் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளன. தர்மபுரி மாவட்ட விவரச்சுவடி அச்சில்



உள்ளது. கன்னியாகுமரி மாவட்ட விவரச் சுவடியின் கைப்
பிரதியைத் தயாரிக்கும் பணி இறுதிக் கட்டத்தில் உள்ளது. நீலகிரி
மற்றும் செங்கை-அண்ணா மாவட்டங்களுக்கு மாவட்ட விவரச்
சுவடிகள் புதிதாகத் தயாரிக்கும் பணி தொடக்க நிலையில் உள்
ளது. புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கான
விவரச்சுவடிகளின் தமிழ் வடிவங்கள் விரைவில் வெளியிடப்படும்

பயிற்சி :

7. அரசு அலுவலகங்களிலும், பொதுத் துறை நிறுவனங்
களிலும் ஆவண அறைப் பொறுப்பில் உள்ள பணியாளர்களுக்
கான ஆவணப் பராமரிப்பு குறித்த பயிற்சி ஒன்றினைத் தமிழ்
நாடு ஆவணக் காப்பகம் அளித்து வருகிறது. இதுவரை இத்
தகைய பயிற்சிகள் நடத்தப்பட்டு 1,320 பேர் தகுதி பெற்றுள்
ளனர். அதிகாரிகளுக்கான கூர்ந்தாய்வுப் படிப்பு (இரண்டு
நாள்) திட்டம் ஒன்றும் தொடங்கப்பட்டு இதுவரை 142 அதிகாரி
கள் வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

வெளியீட்டுப் பிரிவு :

8. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த அல்லது அரசு நிருவாகம்
சார்ந்த பொருள்கள் பற்றியனவாகத் தெரிந்தெடுத்த ஆவணத்
தொகுப்புகளையும் இத்துறை அவ்வப்பொழுது வெளியிட்டு
வருகிறது. ''குடிநீர் வழங்குதலும், வடிகால் வசதியும்''
''சென்னை மாகாணத்தில் வேளாண்மை குறித்த சட்டங்களின்
வரலாறு'' ஆகியவை குறித்த ஆவணத் தொகுப்புகள் விரைவில்
வெளியிடப்படும். மாவட்டங்களில் உள்ள பழைய ஆவணங்க
ளைப் பட்டியலிட்டு விளக்கும் வழிகாட்டி நூல்களை மீண்டும்
அச்சிட்டு வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு இதுவரை கோயம்
புத்தூர், நீலகிரி, திருநெல்வேலி மாவட்ட ஆவணங்களைக்,
குறித்து அத்தகைய வழிகாட்டி நூல்கள் மறு பதிப்பு செய்யப்
பட்டுள்ளன. ராஜாஜி சிறையில் எழுதிய நாட்குறிப்பும் (திரு.
சி. ஆர். நரசிம்மன் அவர்கள் இசைவைப் பெற்று) மறு பதிப்பு
செய்யப்படவிருக்கிறது. 1987-லிருந்து இத்துறை ''ஆவண
அமுதம்'' என்னும் காலாண்டு இதழையும் வெளியிட்டு வருகிறது

ஆவணக் காப்பக நூலகம் :

9. மிகப் பெரிய நூலகங்களுள் ஒன்றான தமிழ்நாடு ஆவ
ணக் காப்பக நூலகத்தில் 2.5 இலட்சம் புத்தகங்கள் உள்ளன.
பெரும்பாலானவை ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ளன. பிற
மொழிகளிலும் புத்தகங்கள் உள்ளன. இந்நூலகத்தில் பொது
வான புத்தகங்களைத் தவிர தமிழ்நாடு அரசின் பல்வேறு துறை
களினால் அச்சிடப்பட்ட வெளியீடுகளும் உள்ளன. பழைய
அரசிதழ்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கைகள்,
நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற விவாதப் பதிவுகள், ஆவணப்
பட்டியல்கள், பஞ்சாங்கங்கள், தகவல் தொகுதிகள், நீதி
மன்றத் தீர்ப்பு அறிக்கைகள், விவரச் சுவடிகள், பழைய தாளி
கைகள் முதலிய விலை மதிப்பற்ற நூல் தொகுப்புகள் இந்நூல
கத்தில் உள்ளன. 1867-ஆம் ஆண்டு அச்சகங்கள் மற்றும் புத்த
கங்கள் பதிவுச் சட்டம் இயற்றப்பட்ட காலத்திலிருந்து இம்
மாநிலத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்ட அனைத்து மொழி நூல்
களின் படிகளும் இந்நூலகத்தில் உள்ளன.

## XI. தொழில் நுட்பக் கல்வி.

தொழில் நுட்பக் கல்விக்காக 1989-90-ல (கட்டிடங்கள், கடன்கள், அண்ணா பல்கலைக் கழகத்துக்கு மானியம் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கங்கள் உட்பட) ரூபாய் 29 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்பக் கல்வித் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயல்படும் தொழிற் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை அவற்றில் ஆண்டு தோறும் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை ஆகியவை (1988-89- ல் இருந்தவாறு) வருமாறு :—

| கல்வி நிறுவனங்கள். | எண்ணிக்கை. | ஆண்டு தோறும் புதிதாகச் சேர்க்கப் படும் மாணவர் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| பொறியியல் கல்லூரிகள்— | | |
| திருச்சிராப்பள்ளியில் உள்ள வட்டார பொறியியல் கல்லூரி (தமிழ் நாட்டு மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு). | 35 பட்ட வகுப்புகள்— | |
| | (1) முழுநேரம் | 6,710 |
| | (2) பகுதி நேரம் | 640 |
| | பட்ட மேற்படிப்பு— | |
| | (1) முழு நேரம் .. | 276 |
| | (2) பகுதி நேரம் | 56 |
| | பட்ட மேற்படிப்புப் பட்டயம்— | 211 |
| | (1) முழு நேரம் .. | 279 |
| | (2) பகுதி நேரம் | |
| பல்தொழில் பயிலகங்கள் (பாலிடெக்னிக்) மற்றும் சிறப்புப் பட்டயப் படிப்பு நிறுவனங்கள் (கலை, கைத்தொழில் மற்றும் சிற்பக்கலைக் கல்லூரிகள் 3 உட்பட). | 132 பட்டய வகுப்புகள்— | |
| | (1) முழு நேரம் .. | 22,590 |
| | (2) பகுதி நேரம் | 1,365 |
| | பட்டய மேற்படிப்பு— | |
| | (1) முழு நேரம் .. | 299 |
| | (2) பகுதி நேரம் .. | 90 |
| | சான்றிதழ் வகுப்பு— | |
| | (1) முழு நேரம் .. | 70 |
| | (2) பகுதி நேரம் .. | 210 |
| தொழில் நுட்ப மேல் நிலைப் பள்ளிகள். | 14 முழு நேரம் .. | 840 |

2. கடந்த ஆண்டுகளில் 74 புதிய பல்தொழில் பயிலகங்கள் (மகளிருக்கென 1 உட்பட) திறக்கப்பட்டதால் பல்தொழில் பயிலகங்களில் ஆண்டுதோறும் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை வெருவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், ஷிப்டு முறையும் புகுத்தப்பட்டு 1983-84-க்குள் ஏழு பல்தொழில் பயிலகங்களுக்கு விரிவாக்கப்பட்டன.

தன்னாட்சி (Self financing) தொழிற் கல்வி நிறுவனங்கள்.

3. கடந்த சில ஆண்டுகளில் பல சுயநிதி தொழிற் கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இவற்றில் போதுமான வசதிகள் இல்லையென்றும், கல்வியின் தரம் மிகவும் சீர்கேடான நிலையில் உள்ளது என்றும், முறைகேடுகள் பெருகிடுவதாகவும், பல புகார்கள் வந்துள்ளன. எனவே, புதிதாக வரும் ஆண்டுகளில் சுயநிதி தொழிற்கல்வி நிறுவனங்கள் துவங்குவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது. ஏற்கெனவே உள்ள இக்கல்வி நிலையங்களின் செயற்பாட்டை ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுப்பதற்காக அண்ணா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் வி. சி. குழந்தைசாமி தலைமையில் ஓர் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

4. ஆவடி, முருகப்பா பாலிடெக்னிக், விருதுநகர் சி.எஸ்.வி. நாடார் பாலிடெக்னிக், இராசபாளையம் பி.ஏ.சி. இராமசாமி ராசா பாலிடெக்னிக் ஆகியவற்றில் கணிப்பொறி அறிவியல் மற்றும் பொறியியலில் பட்டயப்படிப்பு அறிமுகப்படுத்தப்படும். சேலம், அரசு பொறியியல் கல்லூரியில் கணிப்பொறி உதவி வடிவமைப்பு முதுகலைப் பட்டப்படிப்பு பிரிவு ஒன்று அறிமுகப்படுத்தப்படும். சேலம் மற்றும் திருநெல்வேலி, அரசு பொறியியல் கல்லூரிகளில் கணிப்பொறி அறிவியல் மற்றும் பொறியியலில் பட்டப்படிப்பு தொடங்கப்படும். எட்டயபுரம் பாலிடெக்னிக் மற்றும் திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரிகளில் மகளிர்க்காக விடுதி கட்டவும், கோயம்புத்தூர் அரசு தொழிற் நுட்பக் கல்லூரி, காரைக்குடி ஏ.சி. பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கு நூலக வசதிகளை விரிவு படுத்தவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. பாடத் திட்டத்தில் ''மின்கணிப் பொறி தொழில் நுட்பவியல்'' ஒரு கட்டாயப் பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் மின்கணிப் பொறிகள் உள்ளன. பணியாளர்களின் தகுதி, பணி முதலிய விவரங்கள் மற்றும் துறை சம்பந்தப்பட்ட பல்வேறு புள்ளி விவரங்கள் யாவும் மின்னணுப் பொறியில் பதிவு செய்து தொகுக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.



தேர்வுப் பணிக்கு மின்னணுப் பொறியைப் பயன்படுத்துதல்.

6. பல்வேறு பட்டயத் தேர்வுகளையும் (அந்தந்த பருவமுறை இறுதியில்) எழுதும் பலதொழில் பயிலக மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறது. எனவே, அதிகரித்துள்ள பணிச் சுமையை நன்முறையில் ஈடு செய்யும் நோக்குடன் தேர்வாளர் பட்டியல், தேர்வு, அனுமதிச் சீட்டு, மதிப்பெண் அட்டை, பட்டயச் சான்றிதழ் முதலியவற்றைத் தயாரித்தல், தேர்வு முடிவினை வெளியிடுதல் போன்ற அனைத்து பணிகளுக்கும் கடந்த நான்கு ஆண்டுகளாக மின்கணிப்பான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 1986-87-லிருந்து பட்டயத் தேர்வுக்கான விடைத் தாள்களை மதிப்பீடு செய்ய மைய மதிப்பீட்டு முறைத் தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தேர்வு முடிவுகள் விரைவில் வெளியிட ஏதுவாகிறது. மதிப்பீடு சீராகவும், துல்லியமாகவும் இருப்பதுடன், அஞ்சல் செலவினமும் குறைந்துள்ளது. விடைத்தாள் திருத்துபவர்களுக்கு மதிப்பீட்டு மையத்திலேயே மதிப்பூதியம் தரப்படுகிறது. ஒவ்வொரு பாடத்திற்கும் விடைத்தாள் திருத்தும் மையம் தனித்தனியே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மதிப்பெண்களைப் பட்டியலிட தொழிற் கல்வி இயக்ககத்தில் உள்ள மின்கணிப் பொறிகள் பயன்படுத்தப்படுவதால், தேர்வு முடிவுகளை துரிதமாக வெளியிட முடிகிறது.

7. மேலும் பல்வேறு தேர்வுகளில் பாட வாரியாகவும் கல்வி நிலையங்கள் வாரியாகவும், மாணவ. மாணவியர் மதிப்பெண் விவரங்களைப் பட்டியல் செய்து மாநில சராசரி மதிப்பெண்களுடன் ஒப்பிட்டு மாணவர்களின் தேர்ச்சி மதிப்பீட்டு அட்டவணைகள் தயாரிக்கப்படுகின்றன. இதன் மூலம் எந்தெந்தக் கல்வி நிலையங்களில் எந்தெந்தப் பாடங்களில் மாணவர்கள் குறைவான மதிப்பெண்கள் பெற்றிருக்கின்றனர் என்பதைப் பார்த்து அதற்கான காரணங்களை ஆய்வு செய்து அந்தக் குறையை நீக்கும் வழி காணப்படுகிறது.

வணிகவியல் பாடங்களில் தேர்வுகள்.

8. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரே வணிகவியல் பாடங்களான தட்டச்சு, சுருக்கெழுத்து, வணிகக் கணக்கு வணிகப் புவியியல், வங்கியியல் முதலிய பாடங்களில் தேர்வுகளையும் நடத்தி வருகிறார். ஆண்டுதோறும் இரு தடவை அதாவது மே, நவம்பர் மாதங்களில் இத்தேர்வுகள் நடக்கின்றன. ஆண்டுக்கு சுமார் 2.5 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் தேர்வெழுதுகின்றனர்.

அண்ணா பல்கலைக் கழகம்

9 நமது நாட்டிலேயே மிகப் பெரிய தொழில் நுட்பப் பல்கலைக் கழகமாக அண்ணா பல்கலைக் கழகம் விளங்குகிறது. இப்பல்கலைக் கழகம் கீழ்க்காணும் துறைகளில் போற்றத்தக்க பணிகளை ஆற்றி வருகிறது.—

[1989 ஏப்ரல் 7

தேர்வுப் பணிக்கு மின்னணுப் பொறியைப் பயன்படுத்துதல்.—தொடர்ச்சி.

1. நீர்ப்பாசனம், நீர் மேலாண்மை (Irrigation-Water management)
2. சுற்றுப்புறச் சூழல் பொறியியல் (Environmental Engineers)
3. தொலை உணர்வு (Remote Sensing).
4. மக்கள் குடியிருப்பு (Human Settlement).
5. படிம வளர்ச்சி (Crystal Growth).
6. உயிரியல் தொழில் நுட்பம் (Bio Technology).

10. அண்ணா பல்கலைக் கழகத்தில் அடியிற்கண்ட சார்பு நிறுவனங்களில் 1988—89 ஆம் ஆண்டில் பயிலும் மாணவர்களின் விவரம் :

| நிறுவனம்/கல்லூரி. | இளநிலைப் பட்டப்படிப்பு | | மேல்நிலை பட்டப்படிப்பு. | | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| | முழு நேரம். | பகுதி நேரம். | முழு நேரம். | பகுதி நேரம். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| பொறியியல் கல்லூரி .. | 1,490 | 823 | 957 | 116 | 3,386 |
| சென்னை தொழில் நுட்பக் கல்லூரி. | 515 | . | 137 | 15 | 667 |
| சென்னை அழகப்பா தொழில் நுட்பக் கல்லூரி. | 435 | .. | 157 | 11 | 303 |
| கட்டடக்கலை மற்றும் திட்டப்பள்ளி. | 134 | .. | 70 | 5 | 209 |
| மொத்தம் . | 2,574 | 823 | 1,321 | 147 | 4,865 |

11. எம். பில். மற்றும் பி.எச்டி. படிப்புப் பிரிவுகள் பல தனிப்பட்ட துறைகளில் தொடரப்பட்டுள்ளன. இப்பல்கலைக் கழகத்தில் இதுவரையில் எம்.பில். மற்றும் பி.எச்டி. பட்டப் படிப்புகளில் பட்டமளிக்கப்பட்டவர் விவரம் :—

| (1) | எம். பில். (2) | பி.எச்.டி. (3) |
|---|---|---|
| 1987 வரை .. .. | 83 | 29 |
| 1988 .. .. .. | 17 | 17 |

இது தவிர இப்பல்கலைக்கழகத்தால் இதுவரை 5,859 மாணவர்களுக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.



1989 ஏப்ரல் 7]

## X. அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

அறிவியல் தெளிவும் நோக்கும் மக்களிடம் பரவிட ''தமிழ் நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையங்கள் என அழைக்கப்படும் தன்னாட்சி உரிமை பெற்ற ஒரு நிறுவனத்தை தமிழக அரசு அமைத்துள்ளது. அறிவியல்-மற்றும் தொழில் நுட்பத்திற்குப் பொறுப்பான அமைச்சர் இந்த அமைப்பின் தலைவராவார். இளம் தலைமுறையினரிடையே அறிவியல் எண்ணப் போக்கையும் சிந்தனை மேம்பாட்டையும் வளர்ப்பதுடன் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் பயன்களில் தகவல்களை மக்களிடம் பரவச் செய்வதுமே அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையங்களின் நோக்கமாகும். சென்னையில் உள்ள கோட்டூர்புரத்தில் பெரியார் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையத்தை நிறுவுவதற்காக அதன் முதல் கட்டப் பணிக்காக அரசு ரூ 401.25 லட்சங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் அதே வளாகத்தில் ரூ. 2 கோடி செலவில் ஒரு வான்கோள் காட்சி அரங்கு நிறுவிடவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

2. பெரியார் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையத்தின் கட்டிடப்பணி முடியும் தருவாயில் உள்ளது இதன் முதல் கட்டமாக 6,448 சதுர மீட்டர் அளவில் 8 அரங்குகள் விமைக்கப்பட உள்ளன. இவ்வரங்குகளில் இடம் பெறும் வியப்பூட்டும் காட்சிப் பொருள்கள் தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்து கொண்டிருக்கின்றன. 1989-90ல் மூன்று அரங்குகள் திறந்து வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. உயிரியல், கனிமவியல் மற்றும் சிறுவர்களுக்காக ஒரு பகுதி, இயக்கத்திறன் கணிப் பொறியியல் போன்ற ஏனைய அறிவியல் கருவிப் பொருட்கள் சார்ந்த அரங்குகள் ஆகியவற்றை விரைந்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கிராமப் புறங்களில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தகவல்களை பரவிடச், செய்யும் பொருட்டு 24 காட்சி பொருள்களோடு கூடிய ஒரு அறிவியல் காட்சி ஊர்தி, கிராமங்களைச் சுற்றிவரும்.

### பிர்லா கோளரங்கம்.

3. மேலும் 236 இருக்கைகள் கொண்ட கோளரங்கம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டு 11-5-1988 அன்று மேதகு முடியரசு தலைவர் அவர்களால் இந்திய நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. இந்த கோளரங்கத்தை நிறுவுவதற்கு ஆகும் செலவான ஏறத்தாழ 2 கோடி ரூபாயை இந்தியாவின் முன்னோடித் தொழிலதிபர்களில் ஒருவரான திரு. சி. கே. பிர்லா நன்கொடையாக வழங்கியுள்ளார். வானவியல் நிகழ்ச்சிகளான ஞாயிறு உள்ளிட்ட நட்சத்திரங்களின் நிலைகள் மற்றும் சென்னை மாநகரம், சந்திரன், செவ்வாய், முதலான கோள்களின் பரந்த காட்சிகளும் எரி நட்சத்திரங்கள் மற்றும் சூரிய சந்திர

கிரகண காட்சிகளும் கோளரங்க நிகழ்ச்சிகளில் விவரமாக விளக்கப்பட்டுள்ளது. வானவியல், வான் பௌதீகவியல் போன்ற துறைகளில் அறிவியல் ஆராய்ச்சினை வளர்ப்பதற்கும் அறிவியல் உணர்வைப் பொதுமக்கள் மற்றும் மாணவர்களி டையே பரவிடச் செய்வதற்கும் கோளரங்கம் கிடைத்ததற் கரிய ஓர் அமைப்பாக உள்ளது. இக்கோளரங்கத்தின் துவக்க நிகழ்ச்சியான ''ஞாயிற்றுக் குடும்பத்தைப் பற்றிய ஓர் ஆய்வு''. பள்ளி மாணவர்களிடையே மிகுந்த வரவேற்பினைப் பெற்றது. இதுவரை சுமார் 1.75 இலட்சம் மக்கள் இந்த நிகழ்ச்சியினைக் கண்டு களித்தனர். இதில் 50 விழுக்காடு மாணவர்களாவர். இக் கோளரங்கத்தின் இரண்டாவது நிகழ்ச்சியான ''கட்டு மீறிய பேரண்டம்'' நவம்பர் திங்கள் 1988-ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்டது. அறிவியல் பூங்கா ஒன்று பல்வகைப்பட்ட காட்சிப் பொருள்கள் அமைந்ததாய் பெரியார் மற்றும் அறி வியல் தொழில் நுட்ப வளாகத்தில் அமைக்கப்பட்டு 26-8-1988 அன்று பொதுமக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் குழு.

4. அரசு ''தமிழ்நாடு அறிவியல், தொழில்நுட்பவியல் மாநில நிறுவனம்'' என்கிற உயர்மட்ட நிறுவனமொன்றை உருவாக்கி யுள்ளது. மாநிலத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு, பகுதிவாரியாக அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் திறன் களை, தேர்ந்தெடுத்து ஏற்ற திட்டங்களைத் தீட்டும் பொறுப் பினை, இந்நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்நிறு வனம் டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா என்ற ஒரு புகழ்பெற்ற விஞ்ஞானியின் தலைமையில் தன்னாட்சி அமைப்பாக இயங்கி வருகிறது. இதில் புகழ்வாய்ந்த கல்வியாளர்கள், தொழிலதிபர் கள், ஆராய்ச்சி அறிவியலாளர்கள் குறிப்பிட்ட வளர்ச்சித் துறைகளுக்குப் பொறுப்பு வகிக்கும் நிருவாகிகள் உறுப்பினர் களாக உள்ளனர். இந்நிறுவனம் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் வளர்ச்சிக்காகத் திட்டமிடுதல் அரசுக்கு ஆலோ சனையும் வழங்கும்.

5. அரசு இதுவரை கீழ்க்காணும் மானியங்களை தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனத்திற்கு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்காக வழங்கியுள் ளது :—

| | (ரூபாய் இலட்சங்களில்.) |
|---|---|
| 1986—87 | 4.68 |
| 1987—88 | 10.00 |
| 1988—89 | 8.34 |
| | 23.02 |



6. அரசு வழங்கிய மானியங்களைக் கொண்டு கீழ்க்காணும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்களை இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது. அவைகள் வெவ்வேறு நிலையில் செயல் படுத்தப்பட்டு வருகின்றன :—

(1) தொடக்கப்பள்ளிகளில் மாணவர்கள் படிப்பை அரை குறையாக நிறுத்துவதைத் தடுப்பதற்கான கொள்கைத் திட்டம்.

(2) சத்துணவுத் திட்டத்தின் பயனடைவுகள் பற்றிய தகவல்.

(3) தொழில் நுட்பக்கல்வி, கல்வித்தரத்தை மதிப்பிடுதல்.

(4) கிராமப்புற மகளிருக்கு திரை அச்சு மூலமாகத் தொழில் நுட்ப முறைகளை தெரிவித்தல்.

(5) சமூக அறிவியலுக்காக கணிப்பொறிமுறை விவர பகுப்பாய்வு பற்றிய பயிற்சி.

(6) முதியோர் கல்விக்கு ஆரம்பப் பாடங்களைத் தயா ரித்தல்.

(7) ராமநாதபுர மாவட்டத்தில் நில வள ஆதாரங்களைக் கணக்கிடுதல் மற்றும் குடிநீர் மேலாண்மை.

(8) தொழில் அபிவிருத்தி மற்றும் சென்னையை சுற்றி யுள்ள சுற்றுப்புற தூய்மைக்கேடு.

(9) ஒருங்கிணைக்கப்பட்ட நீர் நயபபுமன் பற்றிய ஆய்வு மற்றும் புன்செய் விவசாயத்தில் விளைச்சலை பெருக்கு வதற்கான உர ஆய்வு.

(10) 10 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு மற்றும் சுகாதாரம் ஆகிய பயன்களைப் பற்றி எடுத்துரைத்தல்.

(11) கிடைக்கக்கூடிய உயர்ந்த நார் இயல் உணவுப் பொருள்கள் மற்றும் கால்நடை தீவனத்தைத் தொழில்நுட்ப மூலம் சத்துணவாக்குதல்.

(12) சில உள்ளூர் தாவரங்களின் நச்சுத் தன்மையைக் கண்டறிய புதிய வழிமுறைகள்.

7. இவைகளையன்றி ஆராய்ச்சி பணியாளர்களுக்கும் களநிலை நிருவாகிகளுக்குமிடையே கூட்டங்கள் விவாதங்கள் ஆகியவற்றையும் இந்நிறுவனம் நடத்துகிறது. இதனால் மேற்கொண்ட ஆராய்ச்சியின் விளைவுகள், களத்தில் பயன்படுத்தப்படுகிறது. களத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு, நடைமுறைக்கு உகந்த தீர்வு காண்பதற்காக ஆராய்ச்சி அறிவியல் வல்லுநர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுன்கின்றன. தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் நிறுவனம் இளம் விஞ்ஞானிகளுக்கு ஊக்குவிப்புத் தொகை அளிக்கிறது. மேலும் 1987-ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 28-ம் நாளை தேசிய அறிவியல் தினமாக தானாக முன்வந்து உதவக்கூடிய நிறுவனங்களுடன் சேர்ந்து கொண்டாடுகிறது. இந்நிறுவனத்திற்கு 1989–90-ம் ஆண்டிற்கு பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் புதிய ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டங்களுக்காக ரூ. 12.50 லட்சங்கள் வழங்க உத்தேசித்துள்ளது.

8. ஒரு தொழில் நுட்ப தகவல் மையத்தை நிறுவும் பணியினை அரசு தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மன்றத்திடம் ஒப்படைத்துள்ளது. இந்த மையம் பல்கலைக் கழகங்கள், தொழிற்சாலைகள், அரசு மற்றும் நிதி நிறுவனங்கள் இவைகளுடன் இணைந்து செயல்படும்.

9. இம்மையம் பல்கலைக் கழகங்கள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் உதவிகள் தேவைப்படக்கூடிய தொழிற்சாலைகளின் குறிப்பிட்ட பிரச்சினைகளை பகுதிவாரியாக தெரிந்தெடுத்து திட்டங்களை தீட்டும். முக்கியமாக தற்பொழுது தொழில் நுட்பவியல் தொடர்புடைய வளர்ச்சியைப் பற்றிய தகவல்களைத் தேவைப்படுகின்ற சிறு தொழில் நிறுவனங்களுக்கு இம்மையம் அளிக்கும்.

அறிவியல் மற்றும் தொழில் முனைவர்கள் மேம்பாட்டுத் திட்டம்.

10. இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை அமைச்சகம், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையைச் சேர்ந்த தேசிய அறிவியல் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர் மேம்பாட்டு வாரியத்தின் (National Science and Technology Entrepreneurships Development Board) கூட்டு முயற்சியுடன் தருமபுரி மாவட்டத்திற்குத் தொழில் வாய்ப்புப் பற்றிய தகவல் குறிப்புத் தயாரிப்புத் திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு ஒப்புதலளித்துள்ளது. இத் திட்டத்திற்குத் தற்போது அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொழில் முனைவோர்த் திட்டம் (Science and Technology Entrepreneurships Develop-



ment Scheme) எனப் பெயரிடப்பட்டு 1985–86 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம் இந்தத் திட்டத்தின் மொத்த செயலாட்சி முகமையாக நியமிக்கப்பட்டுள்ளது. இந்தியத் தொழில் நுட்பவியல் நிறுவனங்களிலும், பல்கலைக்கழகங்களிலும், பொறியியல் பயிற்சிப் கல்லூரிகளிலும், பயிற்சி பெற்றவர்களிலிருந்து பல தொழில் பள்ளிகளிலும், தொழில்பயிற்சி நிலையங்களிலும், பட்டம் பெற்றவர்கள் வரையில் எல்லா நிலைகளிலுமுள்ள அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் பணியாளர்களுக்கு சுய வேலை வாய்ப்பை உருவாக்குவதற்காகவே இத் திட்டம் முக்கியமாக வகுக்கப்பட்டுள்ளது.

11. இத் திட்டத்தின் (STEDS) கீழ் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தில் உள்ள விவரங்களைக் கொண்டும் மற்றும் பல நிறுவனங்களிலிருந்து கிடைக்கக்கூடிய விவரங்களை வைத்தும், தருமபுரி மாவட்டத்திற்கு என்று ஒரு வளமான வடிவம தயாரிக்கப்பட்டது. தொழிற்சாலைகள் பற்றிய ஒரு மூன்றாண்டு கால நோக்குத திட்டத்தை தயாரித்துள்ளது. சில நிறுவனங்களால் இன்னின்ன தொழில் துறைகள், தருமபுரி மாவட்டத்திற்கு ஏற்றவை என தெரிந்தெடுக்கப்பட்டு, அவ் விவரங்கள் அடங்கிய அட்டவணை ஒரு புத்தக வடிவில் வெளியிடப்பட்டது. இப் புத்தகத்தை மாவட்டத்தின் வெவ்வேறு நிறுவனங்களுக்கு அனுப்பி விரிவாக விளம்பரப்படுத்தப்பட்டது. உள்ளாற்றலுடைய தொழில் முனைவர்களைக் கண்டறிய வேலை வாய்ப்பு அலுவலகத்தில் உள்ள நடைமுறைப் பதிவேட்டின்படி பட்டம் பெற்றவர்கள், பட்ட மேற் படிப்பு பெற்றவர்கள், பட்டப் படிப்பு பெற்றவர்கள் மற்றும் தொழில் துறை பயிற்சி நிலையத்தின் சான்றிதழ் பெற்றவர்களின் பட்டியல்களை வட்டாரம் வாரியாக தயாரித்து எல்லா முகமையாளர்களுக்கும் அளித்துள்ளது.

12. அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் நபர்களிடம் தொழில் முனைப்பு எண்ணத்தை ஊக்குவிக்க அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் முனைவர் மேம்பாட்டுத் திட்டத்தின் அதிகாரிகள் கருத்தரங்குகளையும் மற்றும் பயிற்சிகளையும் நடத்தி இருக்கிறார்கள். இதைத தவிர, குறிப்பிட்ட திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்காக தொழில் முனைவர் மேம்பாட்டுத் திட்டத்தினை பயிற்சி பெற்ற 7 நபர்களுக்கும், மற்ற 70 அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் நபர்களுக்கும் இத் திட்டம் உதவி செய்துள்ளது. தொழில் முனைவர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் பயிற்சி பெற்ற 4 நபர்களுக்கும் மற்றும் 40 அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் நபர்களுக்கும் நிதி நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்வதற்கு இத்திட்டம் ஏற்பாடு செய்துள்ளது. புதிய நிறுவனங்களை நிறுவுவதற்காகத் தொழில் முனைவர்கள் திட்டம் பயிற்சி பெற்ற 3 நபர்களுக்கும் மற்றும் மற்ற 30 அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் நபர்களுக்கும் இத் திட்டம் உதவி அறிவித்துள்ளது. மொத்தம் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள் 33 ஆகும். மொத்தம் வேலை வாய்ப்பு உண்டாக்கப்பட்டுள்ள நபர்கள் 395 ஆகும்.

[1989 ஏப்ரல் 7

13. இத்திட்டத்தின் தொடர் இனச் செலவிற்காகவும் மற்றும் கணிப்பொறியை அமைப்பதற்காகவும் ரூ. 2.88 இலட்சங்களை 1988–89-ல் மைய அரசு வழங்கியுள்ளது.

14. அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சிக் கழகத்தின் ஆய்வகத்தைச் சேர்ந்த மத்திய மின் இரசாயன மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பங்கேற்புடன் பசும்பொன்முத்துராமலிங்க மாவட்டத்திலும் இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**அண்ணா பல்கலைக் கழகத்தின் சிறப்பு மையங்கள் :**

15. அண்ணா பல்கலைக் கழகத்தின் பல தரப்பட்டத் துறைகள் நிகழ்த்தி வரும் 20 இளநிலை பட்டப்படிப்பும், 34 மேல் நிலைப் பட்டப் படிப்புத் திட்டங்களுடன் சமுதாயத் தொடர்புடைய தலைப்புகளில் ஆய்வும், விரிவாக்கச் செயல்களும் செய்து வருகின்றன.

16. விரிவாக்கப் பணிகளிலும் தொடர்புடைய ஆய்வுகளிலும் முழு கவனத்தையும் செலுத்த பல மையங்களும் நிறுவனங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கீழே தரப்பட்ட இம் மையங்களும் நிறுவனங்களும் தமிழ்நாட்டின் தேவைகளுக்கான பலதிறப்பட்ட விரிவாக்கப பணிகளையும், ஆய்வுப் பணிகளையும் செயல்படுத்தி வருகின்றன.

1. நீர் வள மையம்.
2. தொலை உணர்வு நிறுவனம்.
3. சுற்றுப்புறச் சூழல் ஆய்வு மையம்.
4. மக்கள் குடியிருப்பு ஆய்வு மையம்.
5. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திப் பொருள்கள் மையம்.
6. படிம வளர்ச்சி மையம்.
7. உயிரியல் தொழில் நுட்ப மையம்.

ஆராய்ச்சிப் பணிகளின் முடிவுகளை சமுதாயத்தின் தேவைக்குப் பயன்படுத்துவதையே முழு நோக்கமாகக் கொண்டு இம் மையங்கள் செயல்படுகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை கீழே தரப்பட்டுள்ளன.



1989 ஏப்ரல் 7]

17. பல்துறை அறிஞர்கள் பங்கு பெறும் நிறுவனமாக நீர் வள மையம் செயல்படுகிறது. கடந்த பத்தாண்டு காலமாக, நீர்வளத் திட்டம், முன்னேற்றம் மற்றும் மேற்பார்வை ஆகிய துறைகளில், பல பொருளுதவி செய்யும் நிறுவனங்களுடனும் ஆராய்ச்சியால் பயன்பெறும் நிறுவனங்களுடனும், கூட்டுறவுடனும் பணியாற்றி வருகிறது. இதுநாள் வரை பல தேசிய மற்றும் அயல்நாட்டுப் பொருளுதவி நிறுவனங்களிடமிருந்து சுமார் 5 கோடி ரூபாய் மானியமாக ஆராய்ச்சிக்கும், பயிற்சிக்கும் பெறப்பட்டுள்ளது. அவற்றுள் தமிழ்நாடு அரசிடமிருந்து பல ஆராய்ச்சி மற்றும் தொழில் நுட்ப ஆலோசனைத் திட்டங்களுக்காக 12 இலட்சம் ரூபாய் பெறப்பட்டுள்ளது. போர்டு பவுண்டேஷன் என்ற நிறுவனத்தின் 31,000 டாலர் பொருளுதவியுடன் தற்கால சிறிய ஏரிகளின் மூலம் நடைபெறும் பாசனத் திட்டத்தை நவீனப்படுத்தும் முறைகளை இம் மையம் செயல்படுத்தி வருகிறது. இந்த ஆய்வும், செயல் திட்டமும் பல தேசிய மற்றும் அந்நிய-இணைப்பு நிறுவனங்களிடையே ஆர்வத்தை உருவாக்கியுள்ளது. ஐரோப்பிய பொருளாதார சமுதாயத்தின் நிதியுதவியுடன் தமிழ்நாட்டிலுள்ள 150 நீர்ப்பாசன ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டம் 260 மில்லியன் ரூபாய் செலவில் தற்போது செயல்பட்டு வருகிறது. இதற்கு அண்ணா பல்கலைக் கழகமே திட்டம் தயாரித்தது. இதைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலுள்ள 30,000 நீர்ப்பாசன ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்திற்குக் கடன் வழங்கி பெரும் பொருளுதவி அளிக்க உலக வங்கி விழைந்து முன் வந்துள்ளது. இத் திட்டம் பொதுப் பணித் துறையின் செயல் முறையிலிருந்து வருகின்றது. இம் மையம் முதுநிலை பட்டமுறிப் படிப்பு, முதுநிலை பொறியியல் பட்டப் படிப்பு, பொறியியல் முனைவர் ஆராய்ச்சிப் படிப்புகளையும் நிகழ்த்தி வருகின்றது.

18. தொலை உணர்வு மையம் 1982-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் நிறுவப்பட்டது. தொலை உணர்வு மையப் பணிகளுக் காக இம் மையம் தேசியத் துணை மையமாக இந்திய அரசாங் கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இம் மையம் மொத்தம் ஏழரை கோடி ரூபாய் செலவில் அமைந்துள்ளது. இவற்றுள் 2.73 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசும், 3.5 கோடி ரூபாய் மேற்கு ஜெர்மனி அரசும் எஞ்சிய தொகை இந்திய அரசாலும் அளிக்கப்பட்டுள்ளது. இயற்கை வளம், சுற்றுப்புறச் சூழல் மாற்றம் ஆகியவற்றை அறிவதற்கும், படம் பிடிப்பதற்கும் தொழில் நுணுக்கங்களை அறிவதற்கும் தேவையான பயனுள்ள பல நுண் பொறிகளைப் பெற்றுள்ளது. வாக்ஸ்-11/780 எனும் நுண்ணிய கணிப்பொறி மாநில அரசின் நிதியுதவியுடன் வாங்கியவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இக்கருவி முக்கியமாகச் செயற்கைக் கோள் கருவியிலிருந்து வரும் விவரங்களை ஆய்வதற்குப் பயன் படுகிறது. இம் மையத்தில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுத் திட்டங் கள் பின்வருமாறு—

தமிழ்நாட்டு தரிசு நில மேம்பாட்டு வரைபடம் தயாரிக்கும் திட்டம்.

இராமநாதபுரம் மாவட்ட நிலநீர் வரைபடம் தயாரித்தல்.

நகரத் திட்டம், நிலநீர்ப் பொறியியல், நிலவியல் விவசாயம், வன வளம், மீன்வளம் ஆகிய துறைகளின் விவரங்களைச் செயற்கைக் கோளின் மூலம் பெற்று தமிழகத் திட்டங்களுக்குப் பயன்படுத்தல், தமிழக அரசு அலுவலர்கட்குப் பயிற்சியளித்தல், முதுநிலை பொறியியல் பட்டப் படிப்புடன் பல பயிற்சித் திட்டங்களையும் நிகழ்த்தி வருகிறது. இத் துறையுடன் தொடர்புள்ள பல அரசு நிறுவனங்கள் அவைகளின் குறிக்கோள்களுக்காக இம் மையத்துடன் தொடர்பு கொண்டு இம் மையத்தின் வசதிகளைப் பயன்படுத்தி வருகின்றன.

19. இம்மையத்தின் மேல்நிலைப் பட்டப் படிப்புக்கும் அதைத் தொடர்ந்து முதுநிலை நுட்பவியல் பட்டப் படிப்புக்கும், முனைவர் பட்டப்படிப்புக்குமான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இம் மையம் தகுதி வாய்ந்த பேராசிரியர் குழுவினையும், தேவையான ஆய்வுக்கூட தளவாடங்களையும் போதுமான அளவு பெற்றுள்ளது. இம் மையத்தின் உயர் ஆய்வுக் கூடங்கள் நவீன வசதியுடன் கூடிய கட்டடத்தில் அமைந்துள்ளது. இம் மையத்தில் பிரான்சு, ஐக்கிய நாடுகள், சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளின் பல்கலைக் கழகங்களுடன் பன்னாட்டுப் பரிமாற்றத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. தொழில் துறையில் பல்கலைக் கழகத்தின் செயல் விளைவை வலுப்படுத்தும் வகையில் பெரிய தொழில் நிறுவனமான சதர்ன் பெட்ரோகெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (SPIC) நிறுவனத்துடன் ஒரு உடன்பாட்டு ஒப்பந்தக் குறிப்பு மேற் கொள்ளப்பட்டது. அதன்படி இரண்டரை கோடி ரூபாய் நிதியைக் கொண்டு ஒரு உயிரியல் நடைமுறை ஆய்வுக் கூடம் (SPIC Bio Process Laboratory) நிறுவி, அதன் மூலம் அடிப்படை ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்களை தொழில்றைக்கு பயன்படும்படி நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் நிதியுதவியான ஏழரை இலட்சம் ரூபாயும் சேர்த்து மொத்தம் 1.3 கோடி ரூபாய் நிதியுதவியுடன் இம் மையம் பல ஆராய்ச்சித் திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. இவ் வகையில் உயர்தர உயிரியல் தொழில் நுட்ப செயல்முறைகளுக்கான உள் அமைப்பு வசதிகளுக்காக ரூபாய் அறுபது இலட்சம் செலவில் இந்தோ-ஸ்விஸ் நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஆராய்ச்சித் திட்டம் குறிப்பிடத்தக்கது. இம் மையத்திற்கும் இங்கிலாந்து பல்கலைக் கழகங்களுக்கும் இடையில் உயிரியல் தொழில் நுட்பத் துறையின் ஒரு கல்வி இணை பரிமாற்றத் திட்டத்திற்குப் பல்கலைக் கழக மானியக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. பொது சுகாதாரத் துறை மற்றும் சென்னை மாநகராட்சியுடன் இணைந்து பயோசைடு யுக்தி கொண்டு கொசு ஒழிப்புக்களை ஆய்வு நடத்தியதில் பயன் தரத்தக்க விளைவுகள் கிடைத்துள்ளது.

20. தமிழ்நாடு அரசு இரண்டாம் பகுதித் திட்டத்தின்கீழ் 1985–86 ஆம் ஆண்டில் ரூ. 22.15 இலட்சமும், 1987–88 ஆம் ஆண்டில் ரூ. 10.25 இலட்சமும் தொலை உணர்வு மையம், உயிரியல் தொழில் நுட்பம் ஆகியதுறைகளின் ஆராய்ச்சிப்



பணியை வலுப்படுத்த நிதி வழங்கியுள்ளது. அண்ணா பல்கலைக் கழகத்திற்கு 1989–90 ஆம் ஆண்டிற்கு பகுதி இரண்டு திட்டத்தில் கீழ்க்காணும் இரண்டுத் திட்டங்களுக்கும் சேர்த்து மொத்தம் ரூ. 10 இலட்சங்கள் வழங்க உத்தேசித்துள்ளது.

| | | (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|
| (1) | நீர், கழிவு நீர் நேரிடக் கட்டுபல விளக்க வசதிகளை ஏற்படுத்தித் தரம் உயர்த்தல் .. | 3.50 |
| (2) | கருவிகள் மின்னணுவியல் நிறுவனத்தில் அறிவியல் கருவி ஆய்வுக் கூடம் ஒன்றை ஏற்படுத்துதல் .. | 6.50 |

21. பல்கலைக் கழக மான்யக் குழு, இந்திய அரசு, தமிழக அரசு ஆகிய பல நிறுவனங்களிடமிருந்து 1989–90ஆம் ஆண்டில் கிடைக்கக்கூடிய நிதி உதவியுடன் இப் பல்கலைக்கழக அனைத்து மையங்களும், நிறுவனங்களும், ஆராய்ச்சி மற்றும் தொழில் ஆலோசனைப் பணிகள் ஆகியவற்றில் முனைந்து செயல்படும்.

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்.

22. 1988–89 ஆம் ஆண்டிலும் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், மத்திய அரசின் மரபுவழிச் சாரா எரிசக்தித் துறையின் உதவியுடன் கீழ்க்காணும் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது:—

1. மின் உற்பத்திக்கும் மற்றும் நீர் இறைப்பதற்கும் உதவிடும் காற்றாலைகள் நிறுவுதல்;

2. உயிரியல் சார்ந்த எரிசக்தி-எரிசக்தி தாவரங்கள் வளர்த்தல் மற்றும் சாண எரிவாயு சாதனங்கள் நிறுவுதல்;

3. வீடு மற்றும் தொழில் நிறுவனங்களின் உபயோகத்திற்காக சூரிய சக்தி சுடுநீர் சாதனங்கள் அமைத்தல்;

4. ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டங்கள்;

5. உஜாகிராம்;

6. பலநோக்கு இழுவை சாதனங்கள் வழங்குதல்.

[1989 ஏப்ரல் 7

மின் உற்பத்திக்கான காற்றாலைகள் :

23. காற்று சக்தி அமைப்பின் கீழ், சிதம்பரனார் மாவட்டத்தில் தூத்துக்குடிக்கு அருகே முல்லைக்காடு என்னும் இடத்தில் நிறுவப்பட்டு இயங்கிவரும் 1.1 மெ.வா. ஒருங்கிணைந்த திறன் கொண்ட காற்றாலைத் தொகுப்பு 1988 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் வரையிலும் 34.81 லட்சம் யூனிட்டுகள் மின் உற்பத்தி செய்துள்ளது. ஒவ்வொன்றும் 90 கி.வா. மின் உற்பத்தி திறன் கொண்ட பதினைந்து காற்று சுழல்வான்கள் அடங்கிய இரண்டாவது காற்றாலைத் தொகுப்பு கயத்தாற்றில் 1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறுவப்பட்டது. இந்த காற்று சுழல்வான்கள் 1988 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் தேதி வரையிலும் 20.35 லட்சம் யூனிட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்துள்ளன. டானிடா மானியத் திட்டத்தின்கீழ், கயத்தாறு மற்றும் முப்பந்தல் ஆகிய இரு இடங்களிலும் 10 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலைத் தொகுப்புகள் நிறுவும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இதற்கான நிலம் வாங்கும் பணிகள் யாவும் முடிவு பெறும் நிலையில் உள்ளன. இத்திட்டத்திற்கான மொத்த செலவுத் தொகை ரூ. 22 கோடி ஆகும். இதில் இயந்திரங்களுக்காக செலவிடக்கூடிய ரூ. 17.5 கோடி மட்டும் டானிடா நிதியுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. இதர செலவுத் தொகை ரூ. 4.5 கோடி தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனமும், தமிழ்நாடு மின்சார வாரியமும் பகிர்ந்து கொள்ளும்.

நீர் இறைக்கும் காற்றாலைகள் :

24. வருடம் முழுமைக்கும் தமிழக மாநிலம் முழுவதும் மிகுந்த காற்று வளம் பெற்றுள்ளதால், நீர் இறைக்கும் காற்றாலைகளுக்கு அதிக தேவை ஏற்பட்டிருக்கிறது. 1988–89ஆம் ஆண்டிற்கு 250 காற்றாலைகளுக்கு மத்திய அரசின் மரபுவழிச் சாரா எரிசக்தித் துறை ஒப்புதல் வழங்கியுள்ளது. இதுவரையிலும் 12 பியு 500 வகைக் காற்றாலைகள் மொத்தம் 176 நிறுவப்பட்டுள்ளன.

உயிரியல் சார்ந்த எரிசக்தி :

25. திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டத்தில் தேவர் குளம் மற்றும் முத்தம்மாள்புரம் ஆகிய இரு கிராமங்களிலும் மொத்தம் 523 ஹெக்டேர் நிலப்பரப்பில் எரிசக்தி தாவரங்கள் பயிரிடும் திட்டத்தை 1988–89 ஆம் ஆண்டில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த செலவு மதிப்பீடு ரூ. 52.3 லட்சம் ஆகும். இத்திட்டத்தில் ஏறத்தாழ 600 விவசாயிகள் பங்கேற்கிறார்கள். இதுவரையிலும் 323 ஹெக்டேர் நிலப்பரப்பில் மொத்தம் 7.59 லட்சம் கன்றுகள் நடப்பட்டுள்ளன.



1989 ஏப்ரல் 7]

சாண எரிவாயு சாதனங்கள் :

26. இதுவரை 41 திட்டக் கருத்துக்கள் (நிறுவன எரிவாயுக்
கலன்கள் 3) மரபு வழிச்சாரா
கலன்கள் 38, சமூக எரிவாயுக் கலன்கள் 3) மரபு வழிச்சாரா இவற்றில்
எரிசக்தி துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. (நிறுவன எரி
ரூ. 25.15 லட்சத்திற்கு 31 திட்டக் கருத்துக்கள் ஒப்பளிக்கப்
வாயுக் கலன்கள் 28, சமூக எரிவாயுக் கலன்கள் 3) இயங்கி
பட்டுள்ளன. 16 திட்டங்கள் ஏற்கெனவே நிறுவப்பட்டு
வருகின்றன.

சூரிய சக்தி விரிவாக்கத் திட்டம் ;

27. இதுவரையிலும் ரூ. 2.33 கோடி செலவில் நாள் ஒன்றுக்கு
4,53,025 லிட்டர் நீரை சூடாக்கவல்ல 133 சூரிய சக்தி சுடுநீர்
அமைப்புகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இதில் ரூ. 1.82 கோடி
செலவில் நாள் ஒன்றுக்கு 3,91,675 லிட்டர் நீரைச் சூடாக்கக்
கூடிய 112 சூரிய சக்தி சுடுநீர்ச் சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
21 சுடுநீர் சாதனங்கள் நிறுவும் பணி நடைபெற்றுக்
கொண்டிருக்கிறது.

ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம் :

ஒருங்கிணைந்த எரிசக்தி வளங்களை முதன்மையாகப்
28. உள்ளூரில் கிடைக்கும் எரிசக்தி ஆதாரங்கள் மற்றும்
பயன்படுத்தும், மரபுவழிச் சாரா எரிசக்தி ஆதாரங்கள் ஆகியவற்றின் பெரிதும்
மரபுவழி சார்ந்த எரிசக்தி ஆதாரங்கள் உற்பத்தி நடவடிக்கை
உகந்த கலவை மூலம் வீட்டிற்கும், எதிர்கொள்ள ஒரு
களுக்கும் வேண்டிய எரிசக்தித் தேவைகளை கொண்ட, நில வளர்ச்சி
வட்டாரத்தை, திட்டமிடும் அலகாகக் உள்ளது. இந்த
அணுகு முறையின் அடிப்படையாக இத்திட்டம் சர்க்கார் சாம
செயல் முறை இதுவரை காட்டாங்கொளத்தூர், பாங்கிப்பேட்டை, பழநி
குளம், திருமங்கலம், ஆலந்தூர், செயல்படுத்தப்பட்டு
மற்றும் வாலாஜா ஆகிய 7 வட்டாரங்களில் அரசின் திட்டக்
அவற்றுக்கான எரிசக்தி அறிக்கைகள் மத்திய
குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1989-90 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட இருக்கிற நட
வடிக்கைகள் :

29(1) 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் கயத்தாற்றிலும்
முப்பந்தலிலும் ரூ. 22 கோடி மதிப்புள்ள 10 மெகாவாட் காற்
றாலை தொகுப்புகள் நிறுவப்பட இருக்கின்றன. 1989-90-ம்
ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு எரிசக்தி
வளர்ச்சி நிறுவனம் மேற்கொள்ளும் பங்கிற்காக ரூ. 50 லட்சம்
ஒதுக்கப்பட்டுள்ளது.

1989 ஏப்ரல 7]

(2) தனியார் துறையில் 30 சதகிவிதம் மானிய அடிப்படையில் ரூ. 66 லட்சம் பெறுமானமுள்ள 50 சூரிய வெப்பத்தால் சுடுநீர் ஆக்கும் சாதனங்கள், தொழிற்சாலைகள், சிற்றுண்டிச் சாலைகள் உணவகங்கள் ஆலைகள் ஆகியவற்றில் நிறுவப்பட எண்ணப்பட்டுள்ளது.

(3) தமிழ்நாடு முழுவதும் ரூ. 30 லட்சம் பெறுமானமுள்ள 150 நீர் இறைக்கும் காற்றாலைகள், 12 பியூ 500 வகை நிருவ எண்ணப்பட்டுள்ளது. தேசிய காற்றாலைகள் செயல் விளக்கத் திட்டத்தின் மூலம் மரபு வழி சாரா எரிசக்தித்துறை, இந்த காற்றாலைகள் பயன் அடைபவர்களுக்கு இலவசமாக வழங்குகிறது.

(4) 25 கனமீட்டரிலிருந்து 45 கன மீட்டர் வரையிலான கொள்ளளவு உள்ள 20 சாண எரிவாயு சாதனங்கள் ரூ. 30 லட்சம் செலவில் நிறுவப்பட இருக்கின்றன.

(5) இரண்டாவது கட்டமாக 477 ஹெக்டேர் நிலப்பரப்பில் எரிசக்தி மரங்கள் பயிரிடுவதை மெற்கொள்ள மரபு வழி சாரா எரிசக்தி துறையினருக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 10,000 வீதம் மொத்தம் ரூ. 47.70 இலட்சம் செலவாகும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. வேளாண்மை பொறியியல் துறையின் உதவியோடு இந்தத் திட்டம் நிகழ்த்தப்பட இருக்கிறது.

(6) 1989-90 ஆம் ஆண்டில் தாய்லாந்து நாட்டிலிருந்து இறக்குமதியாகும் 2×100 கிலோ வாட் திறன் கொண்ட வளியாக்கிகள் (Gassifiers) நிறுவப்பட இருக்கின்றன.

(7) 1989-90 ஆம் ஆண்டில் தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டாரத்தில் உத்தேசமாக ரூ. 5 லட்சம் செலவிம் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி செயல் முறை திட்டங்கள் துவங்கப்பட்ட இருக்கின்றன. (Integrated Rural Energy Programme)



## XI. தமிழ் வளர்ச்சி பண்பாடு.

மொழி வளர்ச்சியும், கலை வளர்ச்சியும் ஒரு நாட்டின் பல்வேறு வளர்ச்சிகளுக்கு அடிப்படையாக அமைகின்றன. மொழி வளர்ச்சியோடு பண்பாட்டு மலர்ச்சியும், கலை வளர்ச்சியும், இலக்கிய எழுச்சியும், எப்போதும் இணைந்தே உரம் பெறும். மொழியால் உணாவும், கலையால் கனிவும், பண்பாட்டால் பெருமிதமும், இலக்கியத்தால் உய நோக்கும் முறையாக அமையும் என்பர். இவ்வகையில், தமிழ் மொழி வழக்கினை ஆட்சியிலும், நடைமுறையிலும் பரபபுதல், கலை, இலக்கிய வாழ்வியல் மரபுச் செல்வங்களைக் காத்தல், படைத்தல், கற்பித்தல், வளர்த்தல், முதலிய நிலைகளில் மொழி, கலை, பண்பாடு அளாவிய துறைகளும், பிரிவுகளும் ஒருங்கிணைந்த தன் பயனாக வேளாண்மைத் துறை, நல்வாழ்வுத் துறை முதலிய வாழ்வியல் துறைகளைப் போலவே தனி முதன்மை பெற்ற துறையாகத் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை மிளிர்கின்றது.

2. இத்துறையின் பொறுப்பிலுள்ள நிறுவனங்கள் தமிழ் நலம் பேணுதல், தொன்மரபு காத்தல், வளர்கலை ஊக்குதல் என முத்திறப்பட்டுத் தம் பணிகளையாற்றுகின்றன.

தமிழ் நலம் பேணுவன :

1. தமிழ்வளர்ச்சி இயக்ககம் ;
2. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம்.
3. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
4. மொழி பெயர்ப்புத் துறை.

தொன்மரபு காப்பன :

5. தொல்பொருள் ஆய்வுத் துறை.
6. அரசு அருங்காட்சியகம்.
7. கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம்.

வளர்கலை ஊக்குவன :

8. அரசு இசைக் கல்லூரிகள்.
9. தமிழ்நாடு இயலிசை நாடக மன்றம்.
10. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு.
11. சவகர் சிறுவேர் இல்லம்.

[1989 ஏப்ரல் 7

## (i) தமிழ் வளர்ச்சி இயக்ககம்.

அரசு நிருவாகத்திலும், கல்வி, அறிவியல் போன்ற பிற
துறைகளிலும் தமிழ் மொழியின் பயன்பாட்டினை மேம்படுத்து
வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலே
இத்துறையின் முதன்மையான பணியாகும். தமிழ் வளர்ச்சித்
தொடர்பான பிற பணிகளையும் இத்துறை மேற்கொண்டுள்ளது.

### ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கம் :

2. ஆட்சிமொழித் திட்டச் செயலாக்க முன்னேற்றம் குறித்து
துறைத் தலைமையலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்
கள் ஆகியவற்றைத் தமிழ் வளர்ச்சி இயக்குநரும், மாவட்டங்
களில் அமைந்துள்ள சார்நிலை அலுவலகங்களை மாவட்டத்
தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்களும் ஆய்வு செய்து வரு
கின்றனர். ஆட்சிமொழித் திட்டத்தை முழு அளவில் அரசு
அலுவலகங்களில் செயற்படுத்த முனைப்புத் திட்டம் தொடங்கப்
பெற்றுச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. துறைத் தலைமை
அலுவலகங்களிலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும்
தமிழ் ஆட்சிமொழித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்குப்
பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும்
தலைமைச் செயலகத் துறைகளில் இத்திட்டத்தினை உரிய
வாறு செயற்படுத்தாத நிலையில், எதிர் நோக்கும் முன்
னேற்றத்தைச் சார்நிலையலுவலகங்கள் காணவியலாது
என்பதை உணர்ந்து தலைமைச் செயலகத்தில் தமிழ் ஆட்சி
மொழித் திட்டத்தினைச் சீரிய முறையில் செயற்படுத்த அரசு
ஆணையிட்டுள்ளது. தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனங்
களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படுட்டுள்ளது.

3. தமிழ் ஆட்சிமொழித் திட்டத்தை விரைவுபடுத்தும் நட
வடிக்கைகளுள் ஒன்றாகத் தமிழ்த் தட்டச்சுகள் வழங்கும்
திட்டம் அமைந்துள்ளது. ஆங்கிலத் தட்டச்சுகளுக்கு மாற்றா
கத் தமிழ்த் தட்டச்சுகளை அனைத்து அலுவலகங்களுக்கும்
வழங்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு
வருகின்றன.

### சிறப்பிலக்கிய மொழி பெயர்ப்புத் திட்டம் :

4. பிற மொழிகளிலமைந்த சிறந்த இலக்கியங்களைத்
தமிழிலும், தமிழ் மொழியிலமைந்த சிறந்த இலக்கியங்களைப்
பிற மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிட வகை செய்யும்
முறையில் மொழியாக்கக் குழுக்கள் இரண்டு முறை தோற்று
விக்கப்பட்டுள்ளன. பதிற்றுப்பத்து, அணிலாடு முன்றில், ஞான
ரதம் முதலிய ஆங்கிலப் பெயர்ப்புகளும், சிவானந்த நடனம்,
சோவியத்துக் கவிஞர் நூற்றுவர், பேரரசர் ஜோன்சு, வேக்கு
வீல்டு பாதிரியார் முதலிய தமிழ்ப் பெயர்ப்புகளும் முன்னர்
வெளியிடப்பட்டன. பின்னர் குழுவினரால் நற்றினை



1989 ஏப்ரல் 7]

நானூறும், கம்பராமாயணம்-பாலகாண்டமும் ஆங்கிலத்தில்
வெளியிடப்பட்டுள்ளன. இப்பணி மேலும் சீரிய வகையில்
தொடர வல்லுநர் குழுவின் வடிவமைப்புப் புதுப்பிக்கப்பட
வுள்ளது.

### அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கு திட்டம் :

5. இத்திட்டம் 3-1-1978ஆம் நாளிட்ட கல்வித் துறையின்
அரசாணை (நிலை) எண். 1இன் வாயிலாகத் தோற்றுவிக்கப்
பட்டது. இத்திட்டத்தின்படி 58 வயது நிறைவடைந்து திங்கள்
வருவாய் ரூ. 400-க்கு மிகாமல் நலிந்த நிலையிலுள்ள
தமிழறிஞர்களிடமிருந்து ஆண்டுதோறும் மார்ச்சு 31 ஆம்
நாளுக்குள் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. இதற்கென
அமைக்கப்பட்ட குழுவினர் நிதியுதவிக்குரிய விண்ணப்பங்களை
ஆய்ந்து தேர்வு செய்கின்றனர்.

6. ஆண்டுதோறும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள்
முப்பதின்மர் இத்திட்டத்தின் மூலம் நிதியுதவி பெறுகின்றனர்.
நிதியுதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொருவரும் திங்கள்
தோறும் ரூ. 250 நிதியுதவி பெறுவர். இதுவரை 301 தமிழறி
ஞர்களுக்கு இந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 1988 ஆம்
ஆண்டு மேலும் 22 தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்க
அரசு ஆணையிட்டுள்ளது.

### சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கு திட்டம் :

7. நிலையான மதிப்பும் தகுதியும் வாய்ந்த நூல்களை
வெளியிடுவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் நூலாசிரியர்களுக்கு
அரசு நிதியுதவி வழங்குகிறது. இத்திட்ட விதிகளில் குறித்த
தலைப்புகளுக்கிணங்க நூல் வெளியிட நிதியுதவி வேண்டி,
நூலாசிரியர்களிடமிருந்து வரப் பெறும் விண்ணப்பங்கள் இத்
திட்டத்தில் ஏற்கப் பெறுகின்றன. இதற்கென வல்லுநர்
குழுவை அரசு அமைத்துள்ளது. குழு உறுப்பினர்கள் ஆய்ந்து
தெரிவு செய்து பரிந்துரை செய்யும் நூல்கள் நிதியுதவிக்கு
உரியனவாக ஏற்கப் பெறுகின்றன. இத்திட்டத்தின்படி
நூலாசிரியருக்குப் பெரும் அளவாக ரூ. 8,000 அல்லது நூல்
வெளியீட்டிற்காக ஆகும் செலவில் 50 சதவிகிதம் இதில்
எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக வழங்கப் பெறு
கிறது. உதவிக்குரிய தொகையில் பாதித் தொகை முதல்
தவணையாக வழங்கப் பெறுகிறது. நூலை அச்சிட்டு வெளி
யிட்ட பின்னர் எஞ்சிய தொகை வழங்கப் பெறுகிறது. இத்
திட்டத்தின்படி 1988-89இல் 30 நூல்கள் வெளியிட
நிதியுதவியாக ரூ. 69,333 வழங்கப்பட்டுள்ளது.

[1989 ஏப்ரல் 7

**தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கு திட்டம் :**

8. தமிழ் வளர்ச்சி இயக்கத்தால் சிறந்த நூல்களுக்குப் பரிசுகள் வழங்கப் பெறுகின்றன. இத்திட்டத்தின்படி 21 தலைப்புகளில் சிறந்த நூல்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கப் பெறுகின்றன. ஒவ்வொரு தலைப்பிலும் முதற் பரிசாக ரூ. 2,000-மும், இரண்டாம் பரிசாக ரூ. 1,000-மும் வழங்கப் பெறுகின்றன. பரிசுக்குரிய நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்குப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப் பெறுகிறது. திருவள்ளுவர் திரு நாளன்று இப்பரிசுகள் வழங்கப் படுகின்றன.

**தமிழாராய்ச்சிப் பணிகளுக்காகவும், தமிழிருக்கை நிறுவவும் பிற மாநிலப் பல்கலைக் கழகங்களில் தமிழில் பட்டய வகுப்புகள் நடத்தவும் நிதியுதவி வழங்கு திட்டம் :**

9. அயல் மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கைகள் நிறுவவும், தமிழில் பட்டய வகுப்புகள் நடத்தவும் நிதியுதவி வழங்கப்படுகிறது. தமிழ்ப் பணி புரிந்து வரும் நிறுவனங்களுக்கும் அரசால் அவ்வப்போது உரிய வகையில் நிதியுதவி வழங்கப் பெறுகின்றது. கல்கத்தா தேசிய உயர்நிலைப் பள்ளி, மைசூர் இந்திய மொழிகள் நிறுவனம், திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளி முதலியன நிதியுதவி பெறுகின்றன. 1988—89 இல் இவ் வகையில் இதுவரை ரூ. 3,11,900.00 நிதியுதவி வழங்கப் பட்டுள்ளது.

**தமிழ் நூல் விவர அட்டவணைத் திட்டம் :**

10. தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் ஓர் அங்கமாகத் தமிழ் நூல் விவர அட்டவணை தயாரிக்கும் பணி 1960 முதல், தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின்படி இது வரையில் 23 ஏடுகள் வெளியிடப்பட்டுள்ளன. தற்போது 1936 முதல் 1945 ஆம் ஆண்டு வரையில் வெளியிடப்பட்டு நூல்களுக்கு விளக்கக் குறிப்புகள் அணியமாக்கப்பட்டுள்ளன.

**விழாக்களும் விருதுகளும் :**

11. திருவள்ளுவர் திருநாள் தமிழ் வளர்ச்சி இயக்ககத் தால் ஆண்டுதோறும் அரசு விழாவாக நடத்தப்பட்டு வருகிறது. திருக்குறள் பற்றிய ஆராய்ச்சி நூல்களை எழுதும் அறிஞர்களுக்கு விருது வழங்க அரசு முடிவு செய்ததை யொட்டி 1987 ஆம் ஆண்டுக்குரிய திருவள்ளுவர் விருது முதுபெரும்புலவர் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர் களுக்கு 16—1—1988 இல் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் வழங்கப் பெற்றது. திரு.வி.க. பிறந்த நாளில் திரு.வி.க. விருதும், வழங்கப்பட்டு வருகிறது. விடுபட்ட ஆண்டுகளுக்கும் சேர்த்துக் கவிஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் இவ்வாண்டில் விருதுகள் வழங்கப்படவுள்ளன.



1989 ஏப்ரல் 7]

12. பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளில் கவிஞர் ஒருவருக்குப் பாவேந்தர் பாரதிதாசன் விருதும் வழங்கப் பெற்று வருகிறது.

13. இளங்கோவடிகள் விழா சித்திரைத் திங்களில் பூம்புகார்க் கலையரங்கில் அரசு விழாவாகக் கொண்டாடப் பெறும்.

14. கம்பர் விழா ஆண்டுதோறும் மார்ச்சு திங்களில் தஞ்சாவூர் மாவட்டத்தில் தேரழுந்தூரில் அரசு விழாவாக நடத்தப்படுகிறது.

**சங்க காலப் புலவர்களுக்கு நினைவுத் தூண் நிறுவுதல் :**

15. சங்க காலப் புலவர்களின் நினைவைப் போற்றும் வகையில் நினைவுத் தூண் நிறுவக் கருதப்பட்டுள்ளது. சங்க காலப் புலவர்களில் சற்றேறத்தாழ 200 பேர் பிறந்த இடங்கள் தெரிய வந்துள்ளன. நாடு நன்கறிந்த சங்கச் சான்றோர்கள் பிறந்த ஊர்களில் அரசின் சார்பில் நினைவுத் தூண் நிறுவப் பெறும். சங்கப் புலவர்களின் பாடல்களும் வடிவமைக்கப் படும். செங்கை—அண்ணா மாவட்டத்தில் இடைகழி நாட்டு நல்லூரிலும், தஞ்சை மாவட்டத்தில் மாங்குடியிலும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கரூரிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒக்கூரிலும் நினைவுத் தூண்கள் நிறுவப் படும். உலகத் தமிழ்ச் சங்கம் 1986 ஏப்ரல் திங்களில் தொடங்கி வைக்கப் பெற்றது. இச்சங்க வடிவமைப்பையும் செயற்பாட்டினையும் குறித்து அரசு ஆய்ந்து வருகிறது.

**நிலவியற் பெயர்கள் :**

16. நகர், ஊர்ப் பெயர்களுக்குரிய தமிழ் எழுத்துக் கூட்டல் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தால் வழங்கப்படுகிறது. மைய நிலவியல் துறை, இருப்பூர்தித் துறை, அஞ்சல் துறை ஆகியவற்றால் வேண்டப்படும் ஊர்களுக்குரிய நிலவியற் பெயர்களுக்கு எழுத்துக் கூட்டல் அமைக்கப் பெறுகின்றன. இதற்காக மாநிலப் பெயர் ஆணைக் குழு என்னும் அமைப்பை அரசு இத்தொடர்பில் அமைத்துள்ளது. இலக்கணப் பிழை களுடனும், பொருட் பிழையுடனும் அமைந்துள்ள ஊர்ப் பெயர்களை, உரியவாறு திருத்திச் சரியான பெயர்களைக் குறித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மொழிக் காவலர்களுக்கு நிதியுதவி :**

17. தமிழ் மொழியைப் பேணிக் காப்பதிலும், எல்லையைக் காப்பதிலும் உடல் வருத்தம் பாராது தொண்டாற்றியவர்களை ஊக்குவித்துச் சிறப்பிக்கும் வகையில் "மொழிக் காவலர் உதவித் தொகை" திட்டத்தை அரசு

நடைமுறைப்படுத்தியுள்ளது. மொழிக்காகவும், எல்லைக்காகவும் சிறை சென்றோரின் தியாகப் பாங்கைப் பாராட்டும் வகையில் இத்திட்டம் தோற்றுவிக்கப்பட்டது. மொழிக்காப்பு எல்லைக் காப்பு தொடர்பாகச் சற்றேறக் குறைய 3 திங்கள் சிறையில் இருந்தவர்கள் குண்டடியால் காயம் பட்டோர் குண்டடி பட்டு இறந்தவர்களின் குடும்பத்தார் என 379 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 1987 ஏப்பிரல் முதல் திங்கள் ஓய்வூதியமாக ரூ. 250 வழங்கப்படுகிறது. மேலும் விண்ணப்பித்துள்ளவர்கட்கு ஓய்வூதியம் வழங்குவது குறித்து இத்துறை பரிசீலித்து வருகிறது.

<u>தமிழ்நாட்டு வரலாற்று நூல் வரைவுத் திட்டம் :</u>

18. தமிழ்நாட்டு வரலாற்றைத் தொகுதிகளாகத் தொடர்ந்து வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இது வரை இரு தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. மூன்றாம் தொகுதியான பல்லவர்—பாண்டியர் காலம் அச்சுக்குத் தரப்படவுள்ளது. இத்திட்டத்தை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துக்கு மாற்றுவதோடு வரலாற்று உண்மை வடிவை ஆராய்ந்து எழுத ஆய்வறிஞர் குழுவும் அமைக்கப்படவுள்ளது.

<u>தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் தயாரிப்புப்பணி :</u>

19. தமிழ்ச் சுருக்கெழுத்து நூலின் முதற்பதிப்பு 1964-லும் இரண்டாம் பதிப்பு 1974-லும் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இரண்டாம் பதிப்புக்குரிய படிகள் முழுவதும் விற்றுவிட்டதால் மூன்றாம் பதிப்பு அண்மையில் அச்சிட்டு வெளியிடப்பட்டு விற்பனையில் உள்ளது.

20. தொன்மையும், மேன்மையும் வாய்ந்த பழந்தமிழ்க் கலைகளைப் போற்றிப் பாதுகாத்து ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும் வகையில் அமைந்த தமிழ்ப் பழங்கலை இயக்ககம் பண்பட்ட பெருமை வாய்ந்த பழந்தமிழர் கலைகளுக்குப் புத்துணர்ச்சியும், புதுப்பொலிவும் ஊட்டுவதை நோக்கமாகக் கொண்டது. தமிழ் வளர்ச்சி இயக்ககமே, தன் பணிகளோடு பெரிதும் இயைபு கொண்டதாகவிருந்த பழங்கலைக் காப்புப் பணிகளையும் இப்போது மேற்கொண்டுள்ளது.

21. திருக்குறளின் அருமை பெருமைகளைப் படித்தவர்களும் மட்டுமன்றிப் பாமர மக்களும், குறிப்பாக மாணவமணிகளும் அறிந்துணர்ந்து ஒழுக வழிவகை செய்ய வேண்டுமென்னும் நோக்கத்தில் வள்ளுவர் கோட்டத்தில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை தோறும் மாலையில் திருக்குறள் வகுப்பு நடைபெறுகிறது. தமிழ் வளர்ச்சி இயக்ககமே திருக்குறள் நெறிபரப்புப் பணியையும் தன்னோடு இணைத்து மேற்கொண்டுள்ளது.



செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம் :

22. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியை மடலங்களாகத் தொகுத்து வெளியிடக் கருதி 1974 ஆம் ஆண்டு '' செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககத்தை '' அரசு தோற்றுவித்தது.

23. 1985 ஆம் ஆண்டில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியின் முதன் மடலத்தின் முதற் பகுதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. அகர முதலியின் முதன் மடலத்தின் இரண்டாம் பகுதியும் தொகுக்கப்பட்டுள்ளது. பாவாணர் காட்டிய சொற்பிறப்பியல் நெறியை விளக்கும் வகையில் பாவாணர் வேர்ச்சொல் வரிசையைத் தனி இணைப்பாகக் கொண்ட மடலங்களை வெளியிட ஆய்வு செய்யப்படுகிறது. சொற்பிறப்பியல் அறிஞர், ஆர்வலரைக் கொண்ட ஆய்வுக் குழுவும் அமையவுள்ளது.

(ii) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

24. சிறப்பு நிலையில் தமிழாய்வுப் பணியை வளப்படுத்த பிரெஞ்சு அகாதமி போன்ற தனி நிறுவனம் தேவை எனக் கருதப்பட்டு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1970 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. 1988–89 ஆம் ஆண்டுக்கு ரூபாய் 8.5 இலட்சம் நிதியுதவியாக அரசு வழங்கியுள்ளது. முனைவர் (டாக்டர்) பட்ட நிலையிலும், முதுமுனைவர் (டாக்டர் பட்டத்திற்கு மேலான) நிலையிலும் ஆராய்ச்சிப் பணிகள் இங்கு நடைபெறுகின்றன. ஆய்வாளர்கள் முப்பதின்மர் என்ற அளவில் முழு நேர, பகுதி நேர ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளனர். தமிழரல்லாதவர்களுக்கு ஒலிப்பதிவு முறையில் தமிழைக் கற்பிக்கும் ஏந்துகள் இந்நிறுவனத்தில் அமைந்துள்ளன. பிற நாட்டினரும் இந்நிறுவன மொழிப்பயிற்சிக் கூடத்தில் நடத்தப்பெறும் தமிழ் வகுப்புகளால் பயனடைந்துள்ளனர். புதிதாகத் தமிழ் பயிலும் பிற மொழியினருக்குத் தேவையான பாடநூலுடன் பதிவொலிச்சுருள்களைக் கொண்ட '' தானே தமிழ் கற்கும் '' முறைமை உருவாக்கப்பட்டுள்ளது. மொழிப் பெயர்ப்பியலிலும் கையெழுத்துப் படிப்பியலிலும் பட்ட மேற்படிப்புப் பட்டய படிப்புகளும் இந்நிறுவனத்தில் நடத்தப்படுகின்றன. இந்நிறுவனம் வெளியிட்டுள்ள நூல்களில் தமிழிலக்கியம், மொழியியல் வரலாறு, கலை மற்றும் பண்பாடு ஆகியவற்றைச் சார்ந்தவை பெரும்பாலானவையாகும். சிறந்த ஏட்டுச் சுவடிகளும், ஆராயப்பெற்று அச்சிடப்பெற்றுள்ளன. ஆராய்ச்சி அறிஞர்களும், தமிழார்வலர்களும் பங்குபெறும் வகையில் உயர் தமிழாய்வுக்குப் பொருந்திய தலைப்புகளில் அவ்வப்போது கருத்தரங்குகள் நடைபெறுகின்றன. உயராய்வு நிலையில் மதிக்கப்பெறும் பதிப்பு நூல்கள், ஆய்வு நூல்கள், உரை நூல்கள் என்ற வகையில் 150 நூல்கள் இந்நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

[1989 ஏப்ரல் 7

## (iii) மொழிபெயர்ப்புத் துறை.

25. தலைமைச் செயலகத்தில் அனைத்துத் துறைகளிலும் அலுவல் நடவடிக்கைகள் தமிழில் நடைபெற வேண்டுமென்பது அரசின் முடிவாகும். இதற்கு உறுதுணையாக மொழிப்பெயர்ப்புத் துறை பணியாற்றுகின்றது. இத்துறை ஆங்கிலத்தில் எழுதப் பெறும் இன்றியமையாக் கோப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்துத் தருகின்றது. ''தமிழாக்கம் தமிழுக்கு ஆக்கம்'' என்ற வகையில் திறமையாகப் பணியை இத்துறை ஆற்றுகின்றது.

26. தலைமைச் செயலகத்தில் பல துறைகள் தத்தம் கோப்புகளில் ஆங்கிலக் குறிப்புகளை இத்துறைக்கு அனுப்பித் தமிழாக்கம் பெறுகின்றன.

27. சட்டமன்றத்தின் வரவு-செலவுக் கூட்டத் தொடர் நடைபெறுகையில் அவையில் வைக்க வேண்டிய அனத்து ஆவணங்களும், மானியக் கோரிக்கை, கொள்கை விளக்கக் குறிப்பு சாதனை அறிக்கைகள் தமிழாக்கம் செய்யப்பட்டுச் சட்டமன்றத்தில் வைக்கப்படுகின்றன. நிதித்துறை வெளியிடும் அனைத்து வரவு-செலவு அறிக்கை ஆவணங்களும், இத் துறையில் ஒரு பிரிவினரால் மொழிபெயர்க்கப்பெற்று வெளியிடப்படுகின்றன தமிழகத்தில் வாழும் பிற மொழி பேசும் சிறுபான்மையினர் நலன் கருதி மலையாளம், தெலுங்கு முதலிய மொழிகளில் அரசு அறிவிக்கைகள் மொழிபெயர்த்து வெளியிடப்படுகின்றன. அவ்வப்போது அரசு வெளியிடும் தகவல் விவர அறிக்கைகளும் வழிகாட்டிக் குறிப்பு நூல்களும் இத்துறையால் மொழிபெயர்க்கப்படுகின்றன.

## (iv) தொல்பொருள் ஆய்வுத் துறை.

தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறை ஒரு பழம் பெரும் துறையாகும். தமிழக வரலாறு, கலை, இலக்கியம் ஆகிய பல பிரிவுகளில் சிறந்த பணிகளையும், புதிய தகவல்களையும் இத்துறை திரட்டியுள்ளது. இத்துறை மாநிலத் தொல்பொருள் வரலாற்றுச் சின்னப் பாதுகாப்புச் சட்டத்தைச் செயற்படுத்தும் வகையில் தனது பணிகளை நிறைவேற்றுகிறது. காலத்தால் சாலப் பழமை வாய்ந்த பழம்பொருள்களையும் கலைச் சின்னங்களையும் கண்டறிவதோடு, வரலாற்றுச் செய்திகளையும் இத் துறை ஆய்வு செய்கிறது. கல்வெட்டுப் பிரிவு, தொன்மைச் சின்னங்களைப் பாதுகாக்கும் பிரிவு, வரலாற்றுக்கு முந்தைய காலப் பிரிவு, தொல்பொருள்களைப் பதிவு செய்யும் பிரிவு, அச்சுப் பிரிவு, வேதியற் பிரிவு, ஒளிப்படப்பிரிவு, நூலகப் பிரிவு, அகழ்வாய்வுப் பிரிவு, நூல்வெளியீட்டுப் பிரிவு, தொன்மைமிக்க வரலாற்றுச் சான்றுகளையும், கலைப்பொருட்களையும் அகழ் வைப்பகங்களில் காட்சியாக்கும் கலைப்பிரிவு ஆகியவை இத்துறையில் செயற்படுத்தப்படுகின்றன.



1989 ஏப்ரல் 7]

2. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை, தஞ்சாவூர் அரண்மனை, தரங்கம்பாடி கோட்டை, இராமநாதபுரம் இராம லிங்க விலாசம் போன்ற வரலாற்றுச் சின்னங்கள் இத்துறையின ரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவையன்றித் தமிழக மெங்கும் பரவியுள்ள தொன்மைச் சின்னங்களையும் இத்துறை தேடியறிந்து பாதுகாத்து வருகிறது. தொன்மைச் சின்னங்களை கண்டறிவதோடு பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கும் நடவடிக்கையையும் இத்துறை மேற்கொள்கிறது. கல்வெட்டுக் கள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், பழங்காசுகள், புதைகலங்கள் ஓவியங்கள் போன்ற பல்வகைத் தொல்பொருள்கள் இத்துறை யால் கண்டறியப்பட்டன.

3. தொன்மைச் சிறப்பு வாய்ந்த தமிழகத்தின் பழம் பெருமை மையை நினைவு கூறும் வகையில் கரூர், கங்கைகொண்டசோழபுரம் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), கோவலன் திடல் (மதுரை மாவட்டம்), கொற்கை (சிதம்பரனார் மாவட்டம்), போளுவாம் பட்டி (கோயம்புத்தூர் மாவட்டம்), வசவமுத்திரம் (செங்கை அண்ணா மாவட்டம்) அழகன் குளம் (இராமநாதபுரம் மாவட்டம்) போன்ற இடங்களில் அகழ்வாய்வுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன. பாண்டிய மன்னர்களின் தலைநகரமாகிய கொற்கை யில் மேற்கொண்ட அகழ்வாய்வு சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகம் எவ்வாறு சிறப்புற்றிருந்தது என்பதை வெளிப் படுத்துகிறது. சோழப் பேரரசர்களில் ஒருவரான முதலாம் இராசேந்திர சோழன் நிறுவிய கங்கைகொண்ட சோழபுரம் முற் றிலுமாகப் புதையுண்ட நிலையில், அரண்மனைப் பகுதிகள் அகழ் வாய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. போளுவாம்பட்டி என்ற இடத்தில் பல அரிய தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. அண்மையில் இராமநாதபுரம் மாவட்டம் அழகன் குளத் தில் நடைபெற்ற அகழ்வாய்வில் தமிழகம் உரோம நாட்டுடன் கொண்டிருந்த வாணிகத் தொடர்பினை வெளிப்படுத்துகின்ற வகையில் உரோமநாட்டு மன்னன் வேலன்டைனின் பழங்காசும் உரோமநாட்டினரின் பானையோடுகளும், மதுச்சாடிச் சில்லு களும் கிடைத்துள்ளன. இத்தகைய அகழ்வாய்வுப் பணிகளை இவ்வாண்டும் தொடர்ந்து நடத்த இத்துறை திட்டமிட்டுள்ளது.

4. கல்வெட்டுத் தொகுதிகள், சுவடித் தொகுப்புகள், தொன் மைச் சின்னங்களின் சிறப்புகள், ஆய்வுக் கட்டுரைகள் முதலியன நூல் வடிவில் அச்சிடப்பட்டுள்ளன. மேலும் 'கல்வெட்டு' என் னும் காலாண்டு இதழும் இப்பிரிவால் வெளியிடப்படுகிறது. இத் துறையின் வெளியீடுகள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப் படுகின்றன.

5. தொல்பொருள் ஆய்வுத் துறையின் வளர்ச்சிப் பணிகளை மேம்படுத்தும் வகையில் இந்நிதியாண்டிலும் பல்வேறு திட்டங் களைச் செயலாக்க அரசு முடிவு செய்துள்ளது. அச்சுப் பிரிவினை மேம்படுத்தித் துறையின் வெளியீட்டை அதிகரித்துப் பொது மக்களும், ஆராய்ச்சியர்ளர்களும் பயன்பெறும் வகையில் திட்ட

மிடப்பட்டுள்ளது. துறையின்கீழ் இயங்கிவரும் 15 அகழ்வைப்பகங்களை மேம்படுத்தும் வகையில் முதற்கட்டமாக புதிய காட்சிப்பேழை அமைத்தல், பீடங்கள் அமைத்தல், பல்வகை விளக்குகள் அமைத்தல் போன்ற பணிகளைக் கொற்கை, குற்றாலம், கங்கைகொண்ட சோழபுரம், கரூர், கோவலன் திடல், இராமேசுவரம் ஆகிய இடங்களில் இத்துறை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. இவ்வாண்டு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்களில் அகழ்வாய்வினை மேற்கொள்ள இத்துறை திட்டமிட்டுள்ளது. அதன்பொருட்டு புதிய கருவிகள் வாங்கவும் முடிவு செய்துள்ளது.

கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம் :

6. சென்னைப் பல்கலைக் கழக வளாகத்திலுள்ள ''கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகத்தை'' தொல்பொருள் ஆய்வுத்துறை நிருவகித்து வருகிறது. சுமார் 70,000 சுவடிகள் இந்நூலகத்தில் உள்ளன. இதுவரை வெளியிடப்பெறாத சுவடிகளை வெளியிடும் முயற்சியினையும் இத்துறை மேற்கொண்டுள்ளது.

## (v) அரசு அருங்காட்சியகத் துறை..

இந்தியாவிலுள்ள அனைத்து மாநில அருங்காட்சியகங்களிலும் மிகப் பழமையானதாகவும், பெரியதாகவும் திகழ்வது சென்னையிலுள்ள அரசு அருங்காட்சியகமே. கலை, தொல்பொருளியல், மானிடவியல், இயற்கையியல், விலங்கியல், அஞ்சல் தலைப்பிரிவு, தாவரவியல் பிரிவு, ஊரகக் கலைக்காட்சிக்கூடம், சிறுவர் அருங்காட்சியகம் ஆகிய பிரிவுகள் இவ்வருங்காட்சியகத்தில் முதன்மை பெறுகின்றன.

2. கலை, தொல்பொருள், மானிடவியல், இயற்கையியல், தொடர்பான பொருள்களைப் போற்றிக் காத்து வருவதில் இவ்வருங்காட்சியகம் புகழ்பெற்று விளங்குகிறது. நமது மரபுமாட்சியைப் பாதுகாக்கும் கலைக் களஞ்சியமாக இவ்வருங்காட்சியகம் திகழ்வதுடன் வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய காலப் பொருள்கள், சிலைகள், கலைநயம் மிளிரும் கலைப் படிமங்கள், தொல்படிவங்கள் முதலியவற்றையும் காத்தோம்புகிறது. இந்தியாவிலேயே மக்கள் பலர் கண்டு களிக்கும் இடமாகத் திகழ்வதில் இவ்வருங்காட்சியகம் சீர்மை வாய்ந்தது. ஒவ்வோராண்டும் ஏறத்தாழ ஆறு இலட்சம் மக்கள் இவ்வருங்காட்சியகத்தைக் கண்டு களித்து வருகின்றனர்.

3. நம் நாட்டின் பழம்பெருமையையும், பண்பாட்டுக் கூறுகளையும், உணரவைக்கும் வகையில் இவ்வருங்காட்சியகம், தமது சேகரிப்புகளையும், செயல்முறைகளையும் விரிவுபடுத்தி வருகின்றது ஒவ்வொரு மாவட்டத் தலைமையகத்திலும் மாவட்ட அருங்காட்சியகம் தொடங்க வேண்டுமெனத் திட்டமிட்டு, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு ஆகிய





மாவட்டங்களில் அருங்காட்சியகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இவற்றின் தொடர்ச்சியாகக் கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தருமபுரி ஆகிய இடங்களில் மாவட்ட அருங்காட்சியகங்கள் நிறுவ இவ்வாண்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

4. இத்துறையில் அமைந்துள்ள சிறுவர் அருங்காட்சியகம் அண்மையில் தொடங்கப்பெற்ற அறிவரங்கமாகும். மாந்தர் வரலாறு, பல்வேறு ஆடையணிகளுடன் கூடிய ஒப்பனை வடிவங்கள், இயற்கை, இயற்பியல், அறிவியல் ஆகியவற்றைப் பற்றிய கூடங்கள் இங்கு அமைந்துள்ளன. இயற்கையியல் தொடர்பான பொருள்களைப் பற்றிச் சிறார்கள் அறிந்து கொள்ளும் வகையில் செயல்முறை அறைகளும் இவ்வாண்டு அமைக்கப்பட உள்ளன. சிறுவர் அருங்காட்சியகத்துடன் சிறுவர்கள் நெருங்கிய தொடர்பு கொள்ளும் வகையில் 'சிறுவர் குழு' ஒன்று நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

5. சென்னை அரசு அருங்காட்சியகத்திலும் புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்திலுமுள்ள சில கூடங்களைத் திருத்தியமைக்கும் பணி நடைபெறுகின்றது. சென்னை அரசு அருங்காட்சியகத்திலுள்ள வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய கால காட்சிக் கூடம், மானிடவியற் கூடம், தாவரவியல் கூடம், மரச் சிற்பக் கூடம், ஆகியவற்றையும் இவ்வாண்டு புதுப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

6. இசை, நாடகம், ஆடல் இலக்கியம் முதலிய அருங்கலைத் துறைகளில் புகழ்பெற்ற அறிஞர்கள், அவ்வப்பொது வரவழைக்கப்பட்டுத் தம் அனுபவங்களைக் காட்சியுரைகளாக வழங்குகின்றனர். திங்கள்தோறும் பண்பாட்டுப் பலகணி என்னும் பெயரில் இந் நிகழ்ச்சி நடைபெறுகிறது. மாவட்ட அருங்காட்சியகங்களிலும் இந் நிகழ்ச்சியைத் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. கல்விப் பணியாகத் திரைப்படச் சுருள்கள் வாங்கி அவற்றை அனைவரும் கண்டு மகிழத் திட்டமிடப்பட்டுள்ளது. அருங்காட்சியக வளாகத்தினுள் அரிய மரஞ்செடி கொடிகள் அடங்கிய பூங்காவுள்ளது. பயிரியல் அறிவியலின் மாட்சியை விரிவாக்கும் வகையில் இப் பூங்காவினை வளப்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

## (vi) அரசு இசைக் கல்லூரிகள்.

சென்னையிலும், மதுரையிலும் உள்ள அரசு இசைக் கல்லூரிகள் இசையையும் நாட்டியத்தையும் தொடர்ந்து பயிற்றுவித்து வருகின்றன. மேலும் கடம், கஞ்சிரா, நுகர் சங்கம் மற்றும் நட்டுவாங்கம் ஆகிய புதிய வகுப்புகள் இக் கல்லூரிகளில் தொடங்கப்பட்டுள்ளன. இந்த வகுப்புகளில் சேர்ந்து பயிலும் மாணவ மாணவியர்களுக்கு உதவித் தொகையும் வழங்கப்படுகிறது

[1989 ஏப்ரல் 7

2. சென்னை இசைக் கல்லூரியில் கருவியிசை பயிலும்
பிரிவில் 35 மாணவர்கள் அரசின் உதவித் தொகை பெறுகின்ற
னர், கல்லூரியில் 456 மாணாக்கர் மாலை நேரக் கல்லூரிகளில்
135 மாணாக்கர் இசை பயின்று வருகின்றனர். புகழ்வாய்ந்த
இசைப் பேராசிரியர்களை விருந்துநிலையில் அமர்த்துவது, இசை
ஆராய்ச்சியாளர்களை நியமனம் செய்து ஆராய்ச்சிக் குறிப்புரை
களைப் பெறுவது, மாலை நேரக் கல்லூரி மையத்தில் புதியதாக
நாட்டியம் மிருதங்கம், வகுப்புகள் நடத்துவது ஆகிய புதிய பணி
களை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் மின்னி
யல் இசைக்கருவிகள், மாணவர்களின் பயனபாட்டிற்கான இசைக்
கருத்தரங்குகள், இசைப் போட்டிகள் ஆகியவை உள்ளிட்ட
விழாக்கள் தொடங்கவும் இவ்வாண்டுத் திட்டமிடப்பட்டுள்ளது.
மதுரையில் உள்ள இசைக் கல்லூரியில் குரலிசை, கருவியிசை
இசையியல் ஆடற்பயிற்சி மற்றும் இசை ஆசிரியப் பயிற்சி ஆகிய
துறைகள் அமைந்துள்ளன. தமிழிசையின் தனி மாட்சியையும்
கருதியும் இசையில் பழந்தமிழ்ப் பண்கள் கலந்து நிலவும் அமைதி
யையும் இசையிலக்கண விளக்கங்களையும் மாணாக்கர்கள்
அறிந்து கற்கும் வகையில் புத்தூட்டமும் ஆக்கமும் அளிக்க
அரசு முடிவெடுத்துள்ளது.

## (vii) தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மைய அரசின் சங்கீத
நாடக அகாதமியின் திட்டங்களை மாநில அளவில் நிறைவேற்று
வதற்காக அமைந்த கலை நிறுவனமாகும். இது நமது மாநிலக்
கலை மரபுப் பாங்கைப் பேணி வளர்ப்பதற்காகவும் இயல்,
இசை நாடகம், நாட்டியம் ஊரகக் கலைகள் ஆகியவற்றின் கலை
நலன்களையும் வடிவங்களையும் காப்பதற்காக இயங்கி வருகிறது.

2. இதுவரை மன்றம் 688 புகழ்பெற்ற கலைச் செம்மல்
களுக்குக் கலைமாமணி விருது வழங்கியுள்ளது. விருது வழங்கு
விழாவில் 186 கலை மேதைகளின் திருவுருவப் படங்களை
மன்றம் திறந்து வைத்துள்ளது. மேலும் அவ்விழாவில் கலை
மாமணி விருது பெற்ற 147 கலைஞர்கள் ரூ. 1,000 வீதம்
பொற்கிழியும் பெற்றுள்ளார்கள்.

3. மாநிலங்களிடையே கலைப் பரிமாற்றத் திட்டத்தின்படி
30 கலைஞர்கள் கொண்ட இரு கலைக் குழுக்களை அசாம்,
உத்திரப் பிரதேசம் மிசோரம் ஆகிய மாநிலங்களுக்கு அனுப்
பியது. மிசோரம் மாநிலத்தின் கலைக் குழு அண்மையில்
தமிழகத்திற்கு வந்து திரும்பியது. 1988 அக்டோபர்
திங்களில் மணிப்பூரில் ஜெனகமரூப் என்ற கலைக் குழுவினர்
தமிழகத்தில் கலை நிகழ்ச்சிகளை நடத்தினர்.

4. வாழும் கலைஞர்கள் '' யார், எவர் '' என்ற தலைப்பில்
கலை மணிகளைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புரை வரையப்
பட்டு வருகிறது. இயலிசை நாடக மன்றம் தனித்தும் உரிய
வர்க்கு நிதியுதவி வழங்கியும், கலை இலக்கியப் பண்பாட்டு



1989 ஏப்ரல் 7]

நூல்களை வெளியிட்டுள்ளது. ஊரகக் கலைகளுக்கு ஊக்கு
மளிக்க ஊரகக்கலைப் பயிற்சி மையங்கள் உருவாக்குவதற்கு
முன்னோடியாக வல்லுநர் குழுவின் வழியாகப் பாடப்பயிற்சித்
திட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. கருநாடக இசைக்
கருவிகளைத் தயாரிப்பதற்காக 1988-89 ஆம் ஆண்டில்
மாணவர்கள் நால்வர் பயிற்சி பெற ஓராண்டுக்கான படிப்புத
வித் தொகை வழங்கப்பட்டுள்ளது. அரசு திரைப்படக் கல்லூரி
யில் நாடக நடிப்பிலும் திரைப்படக் கலைகளிலும் பயிற்சி
பெறும் நான்கு மாணவர்களுக்கு மாதம் ரூ. 75 முதல் ரூ. 100
வரை படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. புதிய நாடகங்
களைப் புனைய 1988-89 ஆம் ஆண்டிலிருந்து இரு நாடகக்
கலைக் குழுக்களுக்கு ரூ. 10,000 வீதம் நிதியுதவி வழங்கப்பட
வுள்ளது. பழம் பெரும் கலை மேதைகளான கலைவாணர்
என். எஸ். கே., பாபநாசம் சிவன், நாடகப் பேராசிரியர் சங்கர
தாச சுவாமிகள், நாயண வேந்தர் டி. என். இராசரத்தினம்
ஆகியோரின் பிறந்த நாள் விழாக்களை திருவையாறு, திருநெல்
வேலி, பொள்ளாச்சி, கரூர் ஆகிய இடங்களில் சிறப்புற நிகழ்த்
தியது. நலிந்த கலைஞர்கள் முப்பதின்மரும், கலைக் குழுக்
களும் ரூ. 1,000 வீதம் பண முடிப்பும் பெற்றனர்.

5. நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் மாநில
அரசின் திட்டத்தின்படி இதுவரை 2166 கலைஞர்கள் பயன்
பெற்று வருகின்றனர்.

6. தமிழகக் கலைகளுக்கு ஊக்கமும் எழுச்சியும் ஊட்டும்
பெரு நோக்கத்தோடு இயலிசை நாடக மன்றம் இத்தகைய
திட்டங்களை நிறைவேற்றுகிறது.

## (viii) தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு.

ஓவியம், சிற்பம், வரைவு, பதிப்போவியம் ஆகிய நுண்
கலைகளின் வளர்ச்சிக்காக மாநில அளவில் செயற்படும்
கலை மன்றமாகிய ஓவிய நுண்கலைக் குழு,
கைவினைக் கலைகளின் வளர்ச்சிக்காகப் பல திட்டங்களைச் செயற்
நுண்கலைகளின்
படுத்துகிறது.

2. தமிழ்நாட்டில் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில்
பணியாற்றும் ஆசிரியர்களுக்காகத் தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி
பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து ஓவிய ஆசிரியர்கள்
பயிற்சியைக் குழு செயற்படுத்துகிறது. மாநிலங்களுக்கிடையே
நுண்கலைக் காட்சிகளை நடத்துகின்றது. '' நுண்கலை'',
என்னும் அரையாண்டு இதழைக் குழு வெளியிடுகின்றது. இக்
குழு ஓவிய சிற்பக் கலைஞர்கள், அவர்களின் படைப்புகள் ஆகிய
வற்றைப் பற்றி ஒரு விழிப்புணர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்த
அனைத்து மாவட்டங்களிலும் கலைக் காட்சிகள் மற்றும்
வல்லுநர்களின் செயல் விளக்கச் சொற்பொழிவுகளையும்

நடத்துகிறது. ஆண்டுதோறும் ஓவிய, சிற்பக் கலைஞர்களின் கலைப் படைப்புகளைக் காட்சியாக அமைத்து அக்காட்சி யில் சிறந்து விளங்கும் படைப்புகளை உருவாக்கிய கலைஞர் களுக்கு விருதுகள் வழங்கி ஊக்குவிக்கிறது.

3. ஆண்டுதோறும் சிறந்த ஓவிய, சிற்பக் படைப்பாளர் களில் இருவரைத் தேர்ந்தெடுத்துக் 'கலைச் செம்மல்' என்ற விருது வழங்கப்படுகிறது. மாவட்டங்களில் கலை மையங்களை அமைத்து நிதியுதவியளிக்கப்படுகிறது. இராசத்தாணிலுள்ள பனஸ்தாளி என்ற இடத்தில் சிறப்புப் பயிற்சி பெறுவதற்காகப் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. ஓவிய சிற்பப் படைப்பாளர்கள் தம் கலைப்படைப்புகளைக் காட்டும் தமியர் கண்காட்சியை நடத்தித் தங்கள் திறமைகளைப்புலப்படுத்த உதவும் வகையில் ஆண்டுதோறும் கலைஞர்கள் பதின்மருக்கு ஒருவர்க்கு ரூ.1,000 என்ற அளவில் நிதியுதவி அளித்து வருகிறது.

4. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வளரும் கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக அனைத்து மாவட் டங்களிலும் பயிற்சி வகுப்பு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. முதற் கட்டமாகத் தெனனார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த 100 கலைஞர்களுக்கு கடலூர் நகரில் ஒரு பயிற்சிக் களம் நடத்தப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து இவ்வாண்டிலும் செயற்படுத்தப்படுகிறது சிறந்த ஓவிய மற்றும் சிற்பக் கலை வல்லுநர்களின் உரைகளையும், செயல் விளக்கங்களையும் காணொலிப் பதிவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஏற் கெனவே இத்திட்டத்தின்படி புகழ்வாய்ந்த கலைச் சிற்பவாண ராகிய திரு. தனபால் அவர்களைப் பற்றிய காணொலிப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## (ix) சவகர் சிறுவர் இல்லம்.

இந்நிறுவனம் 1979 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பாரதப் பிரதமர் சவகர்லால் நேரு நினைவு நிதியிலிருந்து மைய அரசு வழங்கிய தொகை ரூ. 15.73 இலட்சத்தைக் கொண்டு இந்நிறுவனம் இயங்கி வருகிறது. இத்தகைய சிறுவர் இல்லங் களைத் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. பள்ளிச் சிறுவர்பால் படிந்துள்ள ஆக்கத் திறமைகளைக் கண்டறிந்து வளப்படுத்தும் வகையில், பள்ளிச் சிறுவர்கள் ஏட்டுக் கல்வி பெறும் நேரத்திலன்றி ஓய்வுப் பொழுதைப் பயன்படுத்தும் பல்வேறு வகையான செயல்முறைத் திட்டங் களையும் கலைப் பயிற்சிகளையும் இந்நிறுவனம் மாணவர் களுக்கு இலவசமாகக் கற்றுத் தருகிறது. 1988-89 ஆம் ஆண் டில் சென்னையிலுள்ள தலைமை நிறுவனத்தில் 1,150 சிறுவர்





களும், மதுரை, புதுக்கோட்டை, நிறுவனங்களில் முறையே 150 சிறுவர்களும் உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன்பெறு கின்றனர். புதுக்கோட்டை மாவட்டம் பொன்புதுப்பட்டிச் சிற்றூரிலும் எழுமூர் மாநில மகளிர் மேனிலைப் பள்ளியிலும் சவகர் சிறுவர் இல்ல ஊரக மையங்கள் செயற்பட்டு வருகின் றன.

3. சவகர் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த பள்ளி மாணவ மாணவியர் அசாம் மாநிலத்தில் நிகழ்ந்த தேசிய ஓரங்க நாடக, ஓவியப் போட்டியில் பங்குபெற்று ஓவியத்தில் முதற் பரிசையும் நாடகத்திற்கும், நடனத்திற்கும், பேச்சுப் போட்டிக் கும் இரண்டாம் பரிசுகளையும் சிறந்த நடிப்பிற்கான சுழற் கேடயத்தையும் பெற்றுள்ளனர். பல்கேரிய நாட்டின் தலை நகரான சோபியாவில் நடைபெற்ற உலகக் குழந்தைகள் மாமன்றத்தின் உலக நல்லமைதி விழாவிற்கு இந்தியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 10 சிறார்களில் இந்நிறுவனத்தைச் சார்ந்த சிறுமியும் ஒருவர் என்பதில் இந்நிறுவனம் பெருமை அடைகிறது.

4. ஆண்டு தோறும் நிகழும் குடியரசு நாள் அணி வணக்க நிகழ்வில் சவகர் சிறுவர் இல்லம் கடந்த 7 ஆண்டுகளாகத் தொடர்ந்து பரிசுகளைப் பெற்று வருகிறது. இவ்வாண்டும் முதற் பரிசைப் பெற்றுள்ளது. மாஸ்கோ கலை ஓவியப் போட்டிக்கு இவ்வில்லச் சிறார்களின ஓவியங்கள் அனுப்பப் பட்டன. தென் மண்டலக் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் இந்நிறுவனத்தைச் சார்ந்த மாணவர் ஒருவர் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். ஆவடியில் சுற்றுப்புறத் தூய்மை விழிப்புணர்ச்சி பற்றிய கருத்தரங்கு நடத்தப்பட்டது.

5. சென்னையில் அசோக நகர்ப் பகுதியிலும், திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் நிலக்கோட்டை என்ற சிற்றூரிலும் சவகர் சிறுவர் இல்லக் கிளைகளையும், அருங் காட்சியகம் ஒன்றையும் தில்லி பாலபவனின் நிதியுதவியோடு தொடங்கவுள்ளது.

6. சவகர் சிறுவர் இல்ல மையங்கள் இல்லாத மாவட்டங் களைச் சார்ந்த ஆர்வமிக்க சிறார்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் கோடை விடுமுறைப் பயிற்சிக் களம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும், இளங்கலைஞர்களை ஊக்குவித்துத் தம்மளவில் தாமாக அவர் கள் தொழில் செய்திடும் திறம் பெற வளர் கலைஞர் பயிற்சிக் களம் நடத்தவும் கருதப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆட்சிமொழிச் செயலாக்கம், கலைநலம், மரபு, பண்பாட்டுக் கூறுகளை வளர்த்துக் காத்தல் முதலிய பணிகளை இத்துறைகள் முறையாக நடத்தி வருகின்றன.

## இணைப்பு I.

### பள்ளிக் கல்வி பற்றிய விபரங்கள்.

| (1) | 1984–85 (6-வது திட்ட முடிவு) (2) | 1987–88 (3) | 1988–89 (4) |
|---|---|---|---|
| | (மாணவர்கள் இலட்சத்தில்) | | |
| **அ. வெவ்வேறு வயதுத் தொகுதி சிறார் மொத்த எண்ணிக்கை.—** | | | |
| **வயதுத் தொகுதி 6–11:** | | | |
| சிறுவர் .. .. .. .. .. | 36.11 | 37.45 | 37.94 |
| சிறுமியர் .. .. .. .. .. | 35.28 | 36.58 | 37.06 |
| மொத்தம் .. | 71.39 | 74.03 | 75.00 |
| **வயதுத் தொகுதி 11–14:** | | | |
| சிறுவர் .. .. .. .. .. | 16.25 | 16.87 | 17.12 |
| சிறுமியர் .. .. .. .. .. | 15.88 | 16.48 | 16.73 |
| மொத்தம் .. | 32.13 | 33.35 | 33.85 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| **வயதுத் தொகுதி 14–16:** | | | |
| சிறுவர் .. .. .. .. .. | 9.08 | 9.42 | 9.57 |
| சிறுமியர் .. .. .. .. | 8.87 | 9.21 | 9.34 |
| மொத்தம் | 17.95 | 18.63 | 18.91 |
| **வயதுத் தொகுதி 16–18:** | | | |
| சிறுவர் .. .. .. .. .. | 8.56 | 8.89 | 9.02 |
| சிறுமியர் .. .. .. .. .. | 8.37 | 8.68 | 8.81 |
| மொத்தம் .. | 16.93 | 17.57 | 17.83 |
| **ஆ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை—** | | | |
| **வயதுத் தொகுதி 6–11:** | | | |
| சிறுவர் .. .. .. .. .. | 38.11 | 40.39 | 40.89 |
| சிறுமியர் .. .. .. .. | 32.33 | 34.35 | 34.86 |
| மொத்தம் | 70.44 | 74.74 | 75.75 |

| (1) | 1984–85 (6 வது திட்ட முடிவு.) (2) | 1987–88 (3) | 1988–89 (4) |
|---|---|---|---|
| | (மாணவர்கள் இலட்சத்தில்) | | |
| **வயதுத் தொகுதி 11–14.** | | | |
| சிறுவர் .. .. .. .. .. | 13.95 | 16.26 | 16.91 |
| சிறுமியர் .. .. .. .. | 9.24 | 11.50 | 12.13 |
| மொத்தம் .. | 23.19 | 27.76 | 29.04 |
| **வயதுத் தொகுதி 14–16:** | | | |
| சிறுவர் .. .. .. .. .. | 5.42 | 6.32 | 6.57 |
| சிறுமியர் .. .. .. .. .. | 3.10 | 3.89 | 4.05 |
| மொத்தம் .. | 8.52 | 10.21 | 10.62 |



| (1) | 1984–85 (6 வது திட்ட முடிவு) (2) | 1987–88 (3) | 1988–89 (4) |
|---|---|---|---|
| வயதுத் தொகுதி 16–18: | | | |
| சிறுவர் .. .. .. .. .. | 1.99 | 2.29 | 2.47 |
| சிறுமியர் .. .. .. .. .. | 1.33 | 1.66 | 1.05 |
| மொத்தம் .. | 3.32 | 3.95 | 4.22 |
| இ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் சதவிதம்—. | | | |
| வயதுத் தொகுதி 6–11: | | | |
| சிறுவர் .. .. .. .. .. | 105.53 | 107.85 | 107.79 |
| சிறுமியர் .. .. .. .. .. | 91.64 | 93.92 | 94.07 |
| சிறுவரும் சிறுமியரும் .. .. .. | 98.66 | 100.96 | 101.01 |
| வயதுத் தொகுதி 11–14: | | | |
| சிறுவர் .. .. .. .. .. | 85.82 | 96.42 | 98.77 |
| சிறுமியர் .. .. .. .. .. | 58.21 | 69.78 | 72.53 |
| சிறுவரும் சிறுமியரும் .. .. .. | 72.18 | 83.26 | 85.80 |

| | | | |
|---|---|---|---|
| **வயதுத் தொகுதி 14–16:** | | | |
| சிறுவர் .. .. .. .. | 59.69 | 67.07 | 68.65 |
| சிறுமியர் .. .. .. .. | 34.93 | 42.23 | 43.34 |
| சிறுவரும் சிறுமியரும் .. .. .. | 47.45 | 54.79 | 56.14 |
| **வயதுத்தொகுதி 16–18:—** | | | |
| சிறுவர் .. .. .. .. | 23.19 | 25.73 | 27.35 |
| சிறுமியர் .. .. .. .. | 15.90 | 19.13 | 19.93 |
| சிறுவரும் சிறுமியரும் .. .. .. | 19.59 | 22.47 | 23.68 |
| **(ஈ) பள்ளிகளின் எண்ணிக்கை :** | | | |
| முதல் நிலைப் பள்ளிகள் .. .. | 28,847 | 29,319 | 29,359 |
| நடுநிலைப் பள்ளிகள் .. .. .. | 5,691 | 5,749 | 5,707 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. .. .. | 2,476 | 2,819 | 2,923 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. .. .. | 1,474 | 1,710 | 1,787 |
| மொத்தம் .. | 38,488 | 39,597 | 39,775 |



மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் எண்ணிக்கை, மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர்-மாணவர் விகிதம் போன்ற வகையில் பின் தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில் (10ஆம் வகுப்பும் கீழும்) அப்பள்ளிகளில் பயின்று வந்த மாணவர்கள் பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஆகியோரையும் உள்ளடக்கியவையாகும்.

(உ) ஆசிரியர்கள் எண்ணிக்கை.

| | | | |
|---|---|---|---|
| (1) முதல் நிலைப் பள்ளிகள்.. .. .. | 1,16,305 | 1,17,345 | 1,18,009 |
| நடுநிலைப்பள்ளிகள் .. .. .. | 66,849 | 66,091 | 65,716 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. .. .. | 38,328 | 41,122 | 41.597 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. .. .. | 62,932 | 68,597 | 69,017 |
| மொத்தம் .. | 2,84,414 | 2,93,155 | 2,94,339 |

(ஊ) சராசரி ஒரு ஆசிரியருக்கு மாணவர் எண்ணிக்கை. —

(1) பள்ளிவாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும் ஆசிரியர் தொகையில் சேர்த்து).

| | | | |
|---|---|---|---|
| முதல் நிலைப் பள்ளிகள் .. .. | 42 | 45 | 45 |
| நடுநிலைப் பள்ளிகள் .. .. .. | 42 | 46 | 45 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. .. | 28 | 31 | 33 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. .. | 28 | 30 | 32 |

(2) வகுப்புத் தொகுதி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும் ஆசிரியர் தொகுதியில் சேர்த்து).

| | | | |
|---|---|---|---|
| முதல் நிலைப் பள்ளிகள் .. .. | 41 | 46 | 47 |
| நடுநிலைப் பள்ளிகள் .. .. .. | 36 | 38 | 38 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. .. | 26 | 27 | 28 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. .. | 21 | 19 | 20 |

1988–89இல் (1988 அக்டோபர் மாதம் 1ஆம் நாள் நிலவரப்படி) தமிழ்நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் குறித்த எண்ணிக்கை.

| பள்ளிகளின் வகைகள். | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்கள், (இலட்சத்தில்). | ஆசிரியர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| முதல் நிலைப் பள்ளிகள்.— | | | |
| அரசு .. .. .. .. | 1,472 | | |
| நகராட்சி/மாநகராட்சி .. .. | 1.127 | 53.63 | 1,18,009 |
| ஊராட்சி ஒன்றியம் .. .. | 21,692 | | |
| தனியார் .. .. .. .. | 5.068 | | |
| மொத்தம் .. | 29,359 | | |
| நடுநிலைப் பள்ளிகள்.— | | | |
| அரசு .. .. .. .. | 225 | | |
| நகராட்சி/மாநகராட்சி .. .. | 423 | 29.80 | 65,716 |
| ஊராட்சி ஒன்றியம் .. .. .. | 3,106 | | |
| தனியார் .. .. .. .. | 1,953 | | |
| மொத்தம் .. | 5,707 | | |
| மொத்த தொடக்கப்பள்ளிகள் .. | 35,066 | 83.43 | 1,83,725 |



| | | | |
|---|---|---|---|
| உயர்நிலைப் பள்ளிகள்—சாதாரணம் | | | |
| அரசு .. .. .. .. | 1,795 | | |
| நகராட்சி மாநகராட்சி .. .. | 80 | 12.29 | 34,394 |
| தனியார் .. .. .. .. | 418 | | |
| மொத்தம் .. | 2,293 | | |
| ஆங்கிலோ-இந்தியன் .. .. .. | 13 | 0.11 | 3.01 |
| மெட்ரிகுலேஷன் .. .. .. | 515 | 1.04 | 4,493 |
| சி.பி. எஸ். ஈ. போன்ற பள்ளிகள் .. | 101 | 0.49 | 2,406 |
| மொத்த உயர்நிலைப் பள்ளிகள் | 2,922 | 13.93 | 41,597 |
| மேல்நிலைப் பள்ளிகள் சாதாரணம் : | | | |
| அரசு .. .. .. .. | 758 | | |
| (தொழில் நுட்பம்) அரசு .. .. | 11 | | |
| (தொழில் நுட்பம்) தனியார் .. .. | 3 | 20.06 | 60,058 |
| நகராட்சி .. .. .. .. | 62 | | |
| தனியார் .. .. .. .. | 692 | | |
| மொத்தம் .. | 1,526 | | |

| பள்ளிகளின் வகைகள். | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்கள் (இலட்சத்தில்.) | ஆசிரியர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகள் .. .. .. | 29 | 0.37 | 1,064 |
| மெட்ரிகுலேசன் பள்ளிகள் .. .. .. | 155 | 0.97 | 4.225 |
| சி.பி.எஸ்.ஈ. போன்ற பள்ளிகள் .. .. .. | 77 | 0.87 | 3,670 |
| மொத்தம் மேல்நிலைப் பள்ளிகள் .. | 1,787 | 22.27 | 69,017 |
| மொத்தம் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள். | 4,709 | 36.20 | 1,10,614 |
| மொத்தம் (அனைத்துப் பள்ளிகளும் சேர்த்து) .. | 39,775 | 119.63 | 2,94,339 |

சிறுவர் .. 66.84 இலட்சம்.

சிறுமியர் .. 52.79 இலட்சம்.



நிருவாக வாரியாக பள்ளி ஆசிரியர்களின் விவரங்கள்—1988-89.

| பள்ளிகளின் வகைகள். | அரசு. | | | | | ஆசிரியர் விவரங்கள். | |
|---|---|---|---|---|---|---|---|
| | அரசுப் பள்ளிகள். | ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள். | நகராட்சி. | தனியார். | மொத்தம். | ஆண். | பெண். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| முதல்நிலைப் பள்ளிகள் .. | 7,923 | 70,516 | 9,477 | 30,093 | 1,18,009 | 72,291 | 45,718 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 3,244 | 26,807 | 7,094 | 28,571 | 65,716 | 33,957 | 31,759 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 25,537 | .. | 1,597 | 14,463 | 41,597 | 24,892 | 16,705 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | 29,535 | .. | 3,721 | 35,761 | 69,017 | 41,376 | 27,641 |
| மொத்தம் .. | 66,239 | 97,323 | 21,889 | 1,08,888 | 2,94,339 | 1,72,516 | 1,21,823 |

பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை வகுப்பு வாரியாக.

| வகுப்புகள். | 1988–89. ஆசிரியர்களின் எண்ணிக்கை. ஆண். | பெண். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1—5 | 93,613 | 68,744 | 1,62,357 |
| 6—8 | 41,858 | 30,869 | 72,727 |
| 9—10 | 24,652 | 13,819 | 38,471 |
| 11—12 | 12,393 | 8,391 | 20,784 |
| மொத்தம் | 1,72,516 | 1,21,823 | 2,94,339 |



1988–89-ல் பள்ளிகளில் படித்து வந்த மாணவ மாணவியர் எண்ணிக்கை வகுப்பு வாரியாக:—

| வகுப்புகள். | மேல்நிலை பள்ளிகள். | உயர்நிலைப் பள்ளிகள். | நடுநிலைப் பள்ளிகள். | முதல்நிலைப் பள்ளிகள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (மாணவர்களின் எண்ணிக்கை இலட்சத்தில்.) | | | | |
| 1—5: | | | | | |
| மாணவர் | 0.87 | 0.74 | 10.28 | 29.00 | 40.89 |
| மாணவியர் | 0.79 | 0.60 | 8.84 | 24.63 | 34.86 |
| மொத்தம் | 1.66 | 1.34 | 19.12 | 53.63 | 75.75 |
| 6—8: | | | | | |
| மாணவர் | 6.05 | 4.67 | 6.19 | .. | 16.91 |
| மாணவியர் | 3.97 | 3.67 | 4.49 | .. | 12.13 |
| மொத்தம் | 10.02 | 8.34 | 10.68 | .. | 29.04 |
| 9—10: | | | | | |
| மாணவர் | 4.09 | 2.48 | .. | .. | 6.57 |
| மாணவியர் | 2.28 | 1.77 | .. | .. | 4.05 |
| மொத்தம் | 6.37 | 4.25 | .. | .. | 10.67 |

### 1988—89-ல் பள்ளிகளில் படித்து வந்த மாணவ மாணவியர் எண்ணிக்கை வகுப்பு வாரியாக—தொடர்ச்சி.

(மாணவர்களின் எண்ணிக்கை இலட்சத்தில்.)

| வகுப்புகள். (1) | மேல்நிலைப் பள்ளிகள். (2) | உயர்நிலைப் பள்ளிகள். (3) | நடுநிலைப் பள்ளிகள். (4) | முதல்நிலைப் பள்ளிகள். (5) | மொத்தம். (6) |
|---|---|---|---|---|---|
| **11—12:** | | | | | |
| மாணவர் .. | 2.47 | .. | .. | .. | 2.47 |
| மாணவியர் .. | 1.75 | .. | .. | .. | 1.75 |
| மொத்தம் .. | 4.22 | .. | .. | .. | 4.22 |
| **1—12:** | | | | | |
| மாணவர் .. | 13.48 | 7.89 | 16.47 | 29.00 | 66.84 |
| மாணவியர் .. | 8.79 | 6.04 | 13.33 | 24.63 | 52.79 |
| மொத்தம் .. | 22.27 | 13.93 | 29.80 | 53.63 | 119.63 |



## இணைப்பு-II.

### கல்லூரிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்.

| விவரங்கள். (1) | 1984–85 (2) | 1987–88 (3) | 1988–89 (4) |
|---|---|---|---|
| **1. மொத்த மாணவர்களின் எண்ணிக்கை—** | | | |
| (1) பி.ஏ. .. .. | 61,802 | 57,908 | 58,850 |
| (2) பி.எஸ்சி. .. | 82,596 | 83,486 | 84,426 |
| (3) பி.காம். .. | 32,028 | 34,046 | 35,086 |
| (4) பட்ட மேற்படிப்பு | 15,858 | 17,827 | 18,236 |
| மொத்தம் .. | 1,92,284 | 1,93,267 | 1,96,598 |
| **2. ஆசிரியர்களின் எண்ணிக்கை—** | | | |
| (1) அரசுக் கல்லூரிகள் | 4,347 | 4,515 | 4,564 |
| (2) தனியார் கல்லூரிகள் | 9,540 | 10,143 | 10,344 |
| மொத்தம் .. | 13,887 | 14,658 | 14,908 |
| **3. கல்லூரிகளின் எண்ணிக்கை—** | | | |
| (1) அரசு .. .. | 53 | 54 | 54 |
| (2) தனியார் (மானியம் பெறுபவை). | 134 | 133 | 133 |
| (3) தனியார் (மானியம் பெறாதவை). | 6 | 16 | 23 |
| மொத்தம் .. | 193 | 203 | 210 |

[1989 ஏப்ரல் 7

## கல்லூரிகளின் எண்ணிக்கை.

| வகை. | கல்லூரிகளின் எண்ணிக்கை. | | | மாணவர்களின் எண்ணிக்கை. 1988–89. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. 1988–89. |
|---|---|---|---|---|---|
| | அரசு. | தனியார் (மானியம் பெறுபவை). | தனியார் (மானியம் பெறாதவை). | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| பிற கல்லூரிகள்— | | | | | |
| (1) கல்வியிற் கல்லூரிகள் | 7 | 15 | .. | 3,012 | 235 |
| (2) உடற்பயிற்சி கல்லூரிகள் | .. | 3 | .. | 342 | 30 |
| (3) புலவர் கல்லூரிகள் | .. | 9 | 6 | 1,518 | 175 |
| (4) சமுதாயப் பணிப்பள்ளி | .. | 2 | .. | 276 | 21 |
| மொத்தம் .. | 7 | 29 | 6 | 5,148 | 461 |



1989 ஏப்ரல் 7]

## இணைப்பு-III.

## தொழில் நுட்பக் கல்வி.

| | 1984–85 | 1987–88 | 1988–89 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| (அ) கல்வி நிலையங்களின் எண்ணிக்கை— | | | |
| 1. பொறியியல் கல்லூரிகள்— | | | |
| (1) அரசு .. .. .. | 4 | 4 | 4 |
| (2) தனியார்.. .. .. | 3 | 3 | 3 |
| (3) சுயநிதி நிறுவனம் .. | 17 | 26 | 28 |
| (4) தன்னாட்சி பெற்றவை .. | 7 | 7 | 7 |
| மொத்தம் .. | 31 | 40 | 42 |
| 2. பாலிடெக்னிக்குகளும் சிறப்புப் பட்டயப் படிப்பு நிலையங்களும்— | | | |
| (1) அரசு .. .. .. | 23 | 23 | 23 |
| (2) தனியார்.. .. .. | 35 | 35 | 35 |
| (3) சுயநிதி நிறுவனம் .. | 53 | 74 | 74 |
| மொத்தம் .. | 111 | 132 | 132 |
| 3. தொழிற்பாட மேல்நிலைப் பள்ளிகள்— | | | |
| (1) அரசு .. .. .. | 11 | 11 | 11 |
| (2) தனியார்.. .. .. | 3 | 3 | 3 |
| மொத்தம் .. | 14 | 14 | 14 |

இணைப்பு-III—தொடர்ச்சி.

தொழில் நுட்பக் கல்வி—தொடர்ச்சி.

| (1) | 1984-85 (2) | 1987-88 (3) | 1988-89 (4) |
| --- | --- | --- | --- |
| 4. பயின்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கை—* | | | |
| (1) பொறியியற் கல்லூரிகள் | 16,295 | 25,115 | 25,650 |
| (2) பாலிடெக்னிக்குகள் .. | 39,215 | 65,855 | 65,855 |
| (3) தொழிற்பாட மேல்நிலைப் பள்ளி .. .. .. | 1,560 | 1,320 | 1,320 |
| மொத்தம் .. | 57,070 | 92,290 | 92,825 |

144831

*தன்னாட்சி பெற்ற கல்வி நிறுவனங்களைத் தவிர்த்து.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrafts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamamn Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9|31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3|1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B. B. Gandhi Street, Calcutta-17.

---

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.